உ

சிவமயம்.

# திருக்கடவூர் புராணம்.

இஃது,

திருக்கடவூரிலிருக்கும் கும்பகோணம்

பிரம்மஸ்ரீ சர்ஜ்வெங்கட்டராம தீக்ஷிதரவர்கள்

குமாரர்,

பாலகிருஷ்ண தீக்ஷிதரவர்களால்,

மொழிபெயர்த்தருளியதை

மேற்படியூர்,

...மஸ்ரீ முத்துவையரவர்களால்

தெரிந்து,

மேற்படியூர,

மிர்த்யுஞ்செய தேசிகர்,


சென்னை,

மஹாலக்ஷ்மி விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

[Registered Copy right.]



# அட்டவணை.


| சருக்கம். | பக்கம். |
|---|---|
| ரமதேவன் சருக்கம் ... ... ... .. | 13 |
| முதலிங்கச் சருக்கம் ... ... ... . | 18 |
| பிராமியமமன் சருக்கம் .. ... | 22 |
| முதுணைட சருக்கம ... ... . ... | 28 |
| தவசர்மா சருக்கம் ... ... .. ... | 38 |
| கிரபூஷணன் சருக்கம் ... ... ... .. | 42 |
| லன் சருக்கம் ... ... .. ... | 45 |
| ருணைய சருக்கம் ... ... ... ... | 50 |
| கண்டு தவம்புரி சருக்கம் ... .. ... | 52 |
| ாக்கண்டேயர் உற்பத்திசருக்கம் . ... ... | 54 |
| ஷ ஸ்தலவாச சருக்கம் .. ... ... ... | 59 |
| பூசித்த சருக்கம் ... ... . ... | 64 |
| ஷி காலனுடன் சம்வாத சருக்கம் . ... | 68 |
| ாலசம்மார சருக்கம் ... ... ... ... | 78 |
| ங்கை சருக்கம ... ... ... ... | 84 |
| சில சருக்கம் ... .. .. .. | 89 |
| ர விரதன் சருக்கம் ... ... .. ... | 96 |
| மராசன் சருக்கம் ... ... .. ... | 99 |
| ாமதிராசன் சருக்கம் ... ... .. ... | 111 |
| இரதிஞகரன் சருக்கம் .. ... ... ... | 116 |
| சிபிச்சரவர்த்தி சருக்கம் ... ... .. .. | 122 |
| ஞ்சரவிச் சருக்கம ... ... ... ... | 130 |
| ரமபுரீசச் சருக்கம் ... ... ... ... | 137 |
| சோமசர்மா சருக்கம் ... .. ... ... | 140 |
| வசாமா சருக்கம் ... ... ... ... | 142 |
| ஹேமகிரீடன் சருக்கம் ... ... ... ... | 144 |
| வதூக்கை சருக்கம் ... ... ... ... | 146 |
| கதினையுடன் சருக்கம் ... .. .. | 150 |
| ந்திதலதீர்த்த சருக்கம் ... ... ... | 154 |



# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 4 | பக் | பாதக் |
| 6 | 13 | மருப்ப | மருமப்ப |
| 8 | 10 | ரைத்தா | ரைத்தர |
| 20 | 8 | வில்வண | வில்லவண |
| 22 | 8 | ஷபூஜை | பூஷஜை |
| 23 | 14 | ருட்சை | ருஷை |
| 25 | 2 | பீரர | பிரா |
| 26 | 11 | ரேசமா | ரேசகமா |
| | 20 | பிராணை | பிரணை |
| 30 | 10 | நிற | நிறை |
| | 21 | வாயில் | வாபியில் |
| 50 | 5 | க்ஷ | பக்ஷ |
| 52 | 14 | முகன் | கன் |
| 58 | 5 | யற்றுன் | யாற்றுன் |
| 64 | 2 | மாத | மதா |
| 77 | 19 | ததுபி | ததும்பி |
| 82 | 16 | யேக | யோக |
| | | சசன | சகன |
| | 17 | ஷரி | ரிஷ் |



உ

சிவமயம்.

உபயபாதம் துணை

# திருக்கடவூர் ஸ்தலப்புராண வசனம்

## காப்பு.

உலகெலா முணர்வா மபிராமியோ
டுலவியுள் ளுறையு மமுதீச்சுரன்
னிலகுவில்வ நெடுவன மான்மியஞ்
சொல விநாயகன் றாவடி யேற்றுவாம்.

## வில்வாரண்யேசுவரர் துதி.

அன்பருக் கன்ப போற்றி
யடியவர்க் கெளியாய் போற்றி
யென்பிழை பொறுத்தான் போற்றி
யெங்குமாய் நிறைந்தாய் போற்றி
மின்பொலி சூலபோற்றி
வில்லுவாரண்யா போற்றி
பொன்பொலி சடையாய் போற்றி
போற்றி நின் சரணம் போற்றி.

# திருக்கடவூர் புராணம்.

## அமுதீசர் துதி.

நீர்பூத்த தாமரையோ னெமியரி தேடரிய
நிகரிலாத
சீர்பூத்த நிறைவாகிக் குறைவின்றி
மறையகத்திற் சேர்ந்தென்றாளும்
பார்பூத்த பொய்ப்பொருளைப் பொய்த்தார்க்கு
வைப்பாய பலத்தை நல்கு
மேர்பூத்த வில்வவனத் தமுதகடத்துறை
யொருளை யேற்றி வாழ்வாம்.

## அபிராம சுந்தரி துதி.

நிலவுகதிர்மண்டலத்தை நெருங்க வோங்கி நெட்டொன்றிற்ற ளிர்மூன்று கொடிமிகானத், தலைகவி லண்டர்களுக் கமுதமாகுந் தாணுவின் முனிடத்துதித்துக் கீழ்நோக்காயும், உலகெவையு மூன்றி யினில் விளங்கவன்பர்க் கொளிரமுத மூற்றவதன் மேல்பாற்றங்கி, யிலகிவளர் குண்டலியா மபிராமித்தா யிணையடியை யெப்போதுமே ற்றிவாழ்வாம். (௧)

## காலசம்ஹாரமூர்த்தி துதி.

சீரொரு மார்க்கண்டன் செய்பூசனைக்காகச் சினந்து கூற்றைப் பாராரும் வி[illegible] வருமபன்னகருங் காணவிடப்பாதத்தாலே, காரா நங் களைந்தரவி னுலகில்விழ வுதைத்தருளிக் கடவூர் வாழும் வாரா ந முலைமடந்தை யொருபாகனிருதாளை மனத்துள் வைப்பாம். (௨)

## வாலாம்பிகை துதி.

பாலன்மார்க்கண்டற் கன்பமை பாலதந்த கருளாய்த் தோன்றிக், காலனைக் காலான் மாய்க்குறுங் கடவுடன் றருமைக் காட்ட, நீலவே ணண்டத்தோர்பால் நிறைந்திரு மலர்மே லுறாநந்த, வாலையாம் பசும்பொற் கொம்பை மனத்தினு ளமைத்து வாழ்வாம். (௬)

## சபாபதி துதி.

அடல்காளி முடிநாண வெடுத்த மடிதாழ வயனேத்தி பணிந்திரவே, கடலேக பறையோத கணநாத துதிசெப்ச கலைவாணி மறையோதவே வினை - யே வல் ஜனகாதி தவயோகி ரிஷிகாண வெளியிதி லுமையாளுடன், நடமாடு நடராஜ னிருதாளை மறவாது நமனேக நினைவாமரோ. (எ)

## தக்ஷிணாமூர்த்தி துதி.

சீலமுனிநால்வர்மதி சிவமேபற்றிச சின்மய மும்மூலமதிற் றிரும்பி யொன்றாய், லைவுயர் மால்வரையில் வலக்காற் றொங்க விடக்காலை மடக்கியதி லேற்றிநீண்ட, தாலவிரல் மேலுறவங்குட்டந் தன்னைத்தர்ச்சனியி னுனிதீண்ட மிச்சங் கூட்டிச், சாலவள ராலடியிற முனேதானோர், தக்ஷிணாமூர்த்தி பதச் சலசம்போற்றி. (அ)

## சோரவிநாயகர் துதி.

உண்ணும்பொழுது முறங்கும்பொழுது மொருதொழிலைப்
பண்ணும்பொழுதும் பகரும்பொழுது நின்பாதத்திலே.

நணுகுகருத்துத் தீயேனுக்கென்றைக்கு நல்குவையே
விண்ணும் புகழ் கடவூர் வாழுங்கள்ளவிநாயகனே. (௯

## சுப்பிரமணியர் துதி.

மதிரயிமுடி தோய்ந்து மன்னுமேற்கடலிற்றோயப்
படியதேனருவியென்றும் பூதிமிகதமரவோங்கும்
பொதிகைமாமுனிக்கு ஞானப்பூரணப்பொருளைக் காட்டிக்
கதிதருங் கந்தவேளைக் கருத்தினி லிருத்தி வாழ்வாம். (௰

---

## திருமால் துதி.

அமலனாதியென மெண்ணி யவாபதம்
விமலராகத் தொழுது விண்ணோருடன்
சமலனீங்கி நதியமுந் துணைவோடு
கமலநாதன கழலிணை யேற்றுவாம்.

## சதுர்முகன் துதி.

அலைபுனல் மதியர வணியு நாதனே
தலைவனென் றெண்ணிமிகத் தவமியற்றுகால்
மலைமக ளொடுமரன் வழங்கி யவனம்வாழ்
கலைமகள் கொழுனனற்கழ லிறைஞ்சுவாம். (௰௨

## நாமகள் துதி.

இலக்கணவிலக்கியங்களிமைப்பொழுதேனுங் கல்லா
தலக்கணுர் புலக்குறும்ப மைமுதமேயிலிங்கமாகுந்
தலத்துயர் மான்மியத்தைச் சற்குருவருளா லோதக்
கலைக்குயர் வாணிபதங் கருத்தினி லிருத்தி வாழ்வாம். (௰௩)

## திருநந்திதேவர் துதி.

சித்தர்களிருடிகட்குச் சிரேஷ்டமாயுதித்துநித்தம், சுத்தியஞ் சாந்தமாதித் தனிப்பதினாறுபேறும், அத்தனை லளிக்கப்பெற்றோ யனுதின மவர்முன்றங்கும், கத்தனை நந்திநாதனைக் கருத்தினி லிருத் திவாழ்வாம். (௰௪)

## நால்வர் துதி.

கற்பனையுலகமெல்லாங் கடந்தரன் பதத்தின்மேவி
விற்பனவடியாராக விளங்குசம்பந்த ரப்பர்
பற்பலயேவலாகப் பதம்புரி சுந்தரேசர்
நற்பொருள் வாதவூரர் நறுமலர்ப்பதங்கள் போற்றி. (௰௫)

---

## மார்க்கண்டேயர் துதி.

ஈரெட்டை யபனற் பெற்றேயென்றென்றுமீரெட்டாக, வீரட் டத் தமுதையேற்றி விதியினை மதியால் மாற்றி, யீரெட்டுப் பணிரெண்டெட்டி லீரிரண் டழியா தொன்றாய்ச், சீரிட்டமுனி மார்க்கண் டன் செய்யசிற்றடியைத் தாழ்வாம். (௰௬)

## அடியார்கள் துதி.

திருமாலு மயன்வாணியிந்திரன் சசி யும்பர் சித்த ரிஷிமுனிவ ரசுரர், திக்குளோ ரிதுக்களும் பூதேவி துர்க்கையுஞ் சித்திரன் சப் தகன்னி, குறுமுனி புலஸ்தியர் சாம்பவான் வாசுகி குங்கிலியர் பஞ் விரவி, கூத்தனும் பிரமதி யனுமா னிராமனுங் குணவதி தரும சீலன், மிருகண்டு வாயசம் மார்க்கண்டன் காரியும் மின்னுமதி சர்ம்ம சிவியும், மிருகாசனைகடவன சந்திரபூஷணன் சிவமேலான சர்ம்மாவுடன்; தருமாத்துமகான் எமனீடன் பொனித்சண்டுறைவர் மாபாரதி, தமிழிலவலவென் குருவுய்யவந்தான் முதற்றுள மலரபணிந்து வாழ்வாம். (௰௭)

## ஸ்ரீ விருக்ஷத் துதி.

இந்தரியொளியே மும்மூன் றிலைகளாய்த் தழைந்து வானோர் வந்தனஞ் செய்ய நீண்டு வனசனுக் குயர்ஞானந்தான், றந்தர பாற் றங்கித தணையடைந்தவர்கட் கெல்லாம், என்ன தயார பதத்தை நல்கு மெழில் வில்வ மிறைஞ்சி வாழ்வாம. (௰௮)

## பிஞ்சிலஸ் துதி.

அலகி லுயிரெவையிடத்துமமருப்பனடிகள் மார்க்கண்டயர்க் காயுழைத்த ஞான்றில், உலகெவையுந் தன்னகத்திலமைத்த வம்மை யொன்றுமுதல் நவதளிரார் சொடிகளாகிச், சலசநிறை கங்கை யுடன் றிருமயானர்தனிலுதித்துத் தணையடைந்தோர் பவத்தை மாற்றப், புலவர்தொழு மருதசெடமிடையிலோங்கும் பிஞ்சிலத்தை யென்றுஞும் போற்றிவாழ்வாம். (௰௯)

# திருக்கடவூர் புராணம்.

## விநாயகர் துதி.

மூர்த்தியாகிய முழுமுதலமுதிடையனமைச்
சத்தியா மபிராமியின் குட்டிணையிலன்பினன்
பித்தை வாகடமந்திர மிரசவாதமுநம்
சித்தியாவுமாய்த் தெருட்டிய சித்தனைப் பணிவாம்.

## திருக்கடவூர் ஸ்துதி.

தருக்கலை யானினந் தருகண் மாபுலி
திருக்கடையாதுயர் நீந்தணைட்டினில்
இருக்காவனுதி யோர்க்களிமைநல்கிய
திருக்கடவூரினைத் தினமும் போற்றுவாம்.

## நூற்பயன்.

விண்டயனிந்திரன் முதலோர் வியந்து சூழும்
வில்வவனமான்மியத்தை விளக்குமுன்னூல்
கொண்டவாசனை மண்டலங்கன் மூன்றுங் கூடக்
கொண்டாடக் குவலயத்தி லென்றும்வாழ்த்தே
யண்டர்களுக் கரியகதை யதன்மேலாகு
மந்தமிலா வதிற்படிந் தந்தகனைமாற்றிப்
பண்டையமார்க்கண் டெனப் பதினாறுண்டாய்ப்
பகலிரவற் றருள்மயமாய்ப் பல்குவாரே

## நூல் வழி.

புண்ணியவியாதனோதும் புராண மூவாறு தம்முள்
எண்ணிய காந்த மேற்று மீசசங்கிதையினேழு
நண்ணிய வரண்யத்தொன்றும் நளிர்வில்வ வனத்தின்மேன்மை
பண்ணெழு நாலொன்றாய படலமன்றுரைத்தார் சூதர். (உ௬)

## மொழி பெயர்த்தோர்.

நறைகமழும் வில்வவனத் தமுதமாக
நடந்துறையும் பெருங்கருணை நாதன்கீர்த்தி
மறைபுகழூர் திருக்குடந்தை பாலகிருஷ்ண
மறைமுனியா யுதித்தவயர் மதிசூழ்மேகம்
நிறைதவறு வடமொழியாம் பரவைதன்னை
நிறையவுண்டு தமிழ்மழையாய் நிரைத்தாலே
சிறைபடு மெச்சீவனுளருஞ் சென்றேபக்திச்
செழும்பயிராய்ச் சித்திமுத்தி விளைக்குமன்றே. (உ௭)

ஸ்ரீ கணேசாய நம:

சிவமயம்.

# திருக்கடவூர் புராணம்.

திங்களும் கதிரும் திகழும் எவ்வுலகங்களிலும் இரவுபகலாய்ப் பரந்து உணர்வு நல்கி அவ்வுணர்வால் பெருகும் அன்பனவாய் அமுதளிக்கும் மாதாபிதாவாகிய அபிராமசுந்தரியும் அமுதீசுவரனும் திருவுருக்கொண்டு விளங்கும் பிரமமாந்திரமாகிற வில்வவனமான்மியத்தைக் கூறும்பொருட்டு சர்வாசாரமூலமாகும் கள்ளவாரணமென்னும் பிள்ளையாரது உபயபாதம் சிரசிற் பொருந்த முன் பணிந்தேற்றுவாம்.

## புராண வரலாறு.

ஆதியில் சர்வரிஷிகளுக்கும் வாசஸ்தானமாய் அனேகம் பூங்கொத்துகளையுடைய கொடிகளும் உத்தமவிருக்ஷங்களும் ஹம்சமுதலிய பக்ஷிக்கூட்டங்களும் அமுதம் போன்ற தீர்த்தங்களும் உடைய பரிசுத்தமான நைமிசாரண்யத்தில் அனேகம் இருடிகள் பரமசிவனைச் சிந்தித்து இஷ்டகாமியார்த்தமாய் பனிரெண்டு வருட நியமத்துடன் செய்யக்கூடிய ஒருயாகம் நடத்தினார்கள். அதை பார்க்கும்பொருட்டு மஹாத

போதனர்களாகிற காசிபர் அத்திரி பாரத்துவாசர் கௌதமர் காலவர் புலத்தியர் புலகர் சனகர் சனந்தனர் சனாதனர் சனத்குமாரர் சுக்கிரர் குஸ்தவர் வாமதேவர் ஆங்கிரசர் வைசம்பாயினர் வால்மீகர் பிருகு அகஸ்தியர் சத்தியபூதர் வசிஷ்டர் விசுவாமித்திரர் ஜாபாலிகர் தேவலர் ததீசி சுபாலர் துர்வாசர் பராசர் சுகர் முதலிய ரிஷிகள் அங்குவந்து வசிக்குங்காலத்தில் ஒருநாள் பிராதக்கால அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சூதனைநோக்கி பராசைபுத்திரமாகிய ஹே பிரபுவே தங்கள் திருவாக்கினின்றும் பெருகாநின்ற அமுதம் போன்ற புராணங்களை எங்கள் கர்ணங்களாகிற வாய்களாலுண்டும் வில்வவனமான்மியத்தை சவிஸ்தாரமாய்க் கூறுததால் எங்கள் மனமென்னும் வயிற்றில் அவாவென்னும் அனல் ஓங்கித் தாவுகிறது இதற்குமுன் கௌஜாரண்யம் என்கிற மூலாதார மகிமைகளையும் வேதாரண்யம் என்கிற சுவாதிஷ்டான விசேஷங்களையும் நைமிசாரண்யம் என்கிற மணிபூரகத்தின் நிலைமையும் தில்லைவனம் என்கிற அநாகதத்தின் பெருமையும் தண்டகாரண்யம் என்கிற விசுத்தியின் செம்மையும் சுவேதாரண்யம் என்கிற ஆக்ஞையின் அருமையும் சவிஸ்தாரமாய்த் தெரிந்தபடியே வில்வாரண்யம் என்கிற பிரமரந்திரத்தின் இரகசிய உண்மையை அறியப்பெற்றால் எங்கள் மனமாகிற வயிறு பூரணமாகும் ஆனதால் அதையும் சவிஸ்தாரமாய் உரைத்தருளவேண்டும் என்று மற்றைய இருஷிகள் பிரார்த்தித்தார்கள்.

அம்மொழி கேட்ட சூதமுனிவர் உரோமாஞ்சலிர்த்து ஆனந்தபரவசராய் ஒருமுகூர்த்தகாலம் வரையில் சித்தியானமுற்று தனது குருவாகிய வேதவியாசா ஞானதார சோரசண பதி வாக்கின் அதிஷ்டான சரஸ்வதியையும் கைகூப்பி மறதியென்கிற மிருத்புவில்லாத ஜீவன்களுக்கு அமுதாய் விளங்கும் சுதாகடேசுவரரையும் அருளை விடாது பற்றும் ஜீவன்களுக்கு அமுதின் சுவையாய் விளங்கும் அபிராமியம்பாளைம் உள்ளத்தமைத்து இருஷிகளைநோக்கி நாத்தழுதழுப்ப வேரிஷிகளே நீங்கள் தபசிரேஷ்டர்களானதால் அதிரகசியமாயள்ள பிர்ம்மரந்தரத்தின் உண்மையைச் சிலது தெரிந்திருப்பீர்கள் ஆயினும் என் குருவாகிய வேதவியாசரால் தெரிந்தசிலவையுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள் மனதை வேறுவிதத்தில்விட கேட்டயாவர்க்கும் சகலபாபங்களும் நீங்கி புண்யம் பெருகி ஞானந்தோன்றிசித்திகள் வளர்ந்து முத்தியிளையும் ஞானமியாகிற பிர்ம்மரந்திரத்தின் மகிமையை அளவிடற்கு பிர்மதேவராலும் அரிதாகும். ஞானசாதனமாயுள்ள அந்தக்ஷேத்திரத்தின் உண்மையை ஞானசத்தியன்றி யாராலும் அறிய முடியாது. மிகப்பரிசுத்தமுள்ளது. தபசிரேஷ்டராகிய சர்வரிஷிகளாலும் தியானிக்கப்பட்டது. சகலகலைகளின் ஆதாரமாயுமுடிவாயுமுள்ளது அகஸ்தியாதிமஹாரிஷிகள் ஞானசக்தியால் அத்தலத்தையடைந்து பூரணமாய் விளங்குகிறார்கள் அனேகமிருஷிகள் அதன் மகிமையைத் தெரிந்து அதைக்கண்டடையும்படி நெடுநாளாய் முயல்கிறார்கள். அதன் அருகி

சென்றால் வேதாங்காதங்களும் திரிகாலச்சுடர்களின் ஏகப்பிரகாசமும் நிமிர்ந்துதோன்றும். காமக்குரோதாதி நசித்துவிடும். சாந்தம் உதிக்கும். ஆனந்தம்பெருகும். சர்வசித்திகளும் சூழும் அந்தவில்வவனமத்தியில் உள்ள ஞானாமுதபுஷ்க்கரணியின் விசேஷத்தையாரும் உரைப்பதருமை. அதன் முத்துறைகளிலும் பகிர்முகமாய்வீசும் அலைகளால் கருமமும் அந்தர்முகமாய் அடங்கும் அலைகளால் ஞானமும் உதிக்கும். சர்வஜீவஜடாதாரமாயுள்ள அத்தீர்த்தம் பகிர்முகமாய்வீசும் அலைகளால் முற்றும் சுவறிவிடப்பெற்ற ஜீவனுக்கு உடல் உடனே நழுகி ஜனனம் கிடைக்கும். பரகுருவின் அருட்பெற்ற சிரேஷ்டர்கள் அதன் துறைகளினிடத்தில் அலைகள் சிதறாமல்படிந்து பக்தி ஞானம் ஆயுள் இவைகளை வளர்ப்பார்கள். அதன் மேல்பாகத்தில் ஞானாமுதமருளும் வில்வநாத சுதாவாய் விளங்கும் சிவம் அன்பர்கட்கு அமுதருளும் ரந்திரம் அக்ஞானிகட்குத்தோன்றாது. சில ஞானிகளுக்குக்கோடிசூரியப்பிரகாசத்துடன் ஆனந்தாமுதம்பெருகும்சப்தமபெருகத்தோன்றும். அந்தாந்திரத்தின்வழியாய் ஞானாமுதைப்பூரணமாயடைந்தவர்கள் பிர்ம்மக்ஞானியாவார்கள். அவர்கள்பெருமையை பரமசிவனொற்றான் ஓதலாம்.

அமுதலிங்கத்தின் மகிமையை எக்காலத்திலும் பிரியாது வேறாய் அதன் முன்னும் இடமாயும் விளங்கும் அபிராமசுந்தரியென்னும் சக்தியாலேனும் சோமவிநாயகராலேனும் அறி

யலாகும். பிர்ம்மரந்திரம் என்கிற கைலையில் உமாசமேதராக விளங்கும் இவ்வமுதலிங்கத்தை அடைந்தால் சர்வப்பிரளயத்திலும் மரணம் உண்டாகாது. நினைத்துத் துதித்தால் அபமிருத்யு உண்டாகாது. தெரிசித்தால் சகலசௌபாக்கியங்களும் உண்டாகும். அபிஷேகித்தால் சகலபாபங்களும் ரோகங்களும் நீங்கும். அர்ச்சித்தால் பக்திசித்திமுக்திவிளையும். அவ்விலிங்கம்விளங்கும்தலம் சுவேதாரண்யத்தின் அருகு காவேரியின் ஐந்துகடிகைதூரம்தெற்கும் பிர்ம்மஸ்மசானத்தின் மேல் பக்கமும் மாயூரத்தின்பத்துகடிகைதூரம் கிழக்கும் திருநள்ளாற்றின் பத்துகடிகைதூரம் வடக்கும் பெருமுலையின் ஈசான்யமுமாக வில்வாரண்யமென்று திரிலோகப்பிரசித்தியாய் வழங்குகிறதென்று சூதர் உரைத்தார்.

# 1 பிர்ம்மா ஞானஉபதேசம் பெற்ற சருக்கம்.

நைமிசாரண்யவாசிகள் சூதரைநோக்கி வில்வாரண்யம் என்ற பெயர்உண்டான காரணத்தைக்கூறவேணும்என்று மிக்கஅன்புடன் வினவினார்கள் அப்போது ஹேரிஷிகளே ஆதியில் சர்வதேவதைகளாலும் வணங்கப்படும் கைலையங்கி

ரியில் பிர்ம்மதேவன் ஈசுவரனை விதிமுறை பூஜித்து அடி-
யேற்கு சிவஞானம் அருளவேண்டும் என்று பிரார்த்தித்து
வணங்கினர். ஈசன் ஹேபிர்ம்மதேவரே சிவஞானம் தம்பா
பூமியிற்சென்றுதபம்செய்தாலொழிய அமராது. சீக்கிரம் சித்
தியாகும்படி ஓருபாயம்தெரிவிப்போம் கேண்மின்என்று
நமது சுவரூபமாகிற ஞானத்தை விதைரூபமாக ஸ்மரித்து
பிர்ம்மாவின் கையிற்கொடுத்து மத்தியஉலகத்தில் உதிக்கும்
காவேரி சமுத்திரத்தில்சங்கமமாம்வரையில் இருபுறத்தும்உ
ள்ள தலங்களில் இவ்விதயை பயிராகும்வகை இடுவீர். இடு
வதில் எவ்விடத்தில் ஒருமுகூர்த்தத்துள் முளைத்து விருக்ஷ
மாகிறதோ அங்குதங்கி எம்மைதியானிக்கின் ஞானம்பெற
லாம். என்றருளிய பரமசிவனை பிர்ம்மதேவன் மும்முறைவல
ம்வந்து நமஸ்கரித்து உத்தரவுபெற்றுக்கொண்டு பூவுலகம்
வந்து காவேரிஎன்கிறதக்ஷணகங்கையின் உற்பத்திஸ்தான
மாகிய சகியாமலகத்தில் நின்று கணபதியைத்துதித்து தினம்
பிராதக்காலத்தில் காவேரியில் விதிமுறைபடிந்து சிவனருள்
அளித்தவிதையை காவேரியின் இருபுறத்தும் உள்ள அனேக
தலங்களில் இட்டு ஒவ்வொருநாள்கிரமித்து எடுத்துவருகை
யில் தக்ஷிணகங்கை பூர்வசமுத்திரசங்கமம் ஆகும்அருகில்
மூக்கணையின் எல்லையில் முளைக்கும் பருவமாய்க் கண்டு மறு
தினத்தெடுத்து இவ்விடத்தில் அருள் கிடைக்கும் என்று
மகிழ்ந்து பொன்னியின் ஐந்து கடிகை தூரம் தெற்கில் சிவ
த்தியானத்துடன் அவ்விதையை இட்டார் ஞானமயபிர்ம்மா

திரயாகிய அந்தானத்திட்டவிதை உடனே விசிரய்பித்து குருஎன்கிற முளையாய்த் தோன்றி சிவம் என்கிற மரமாயும் சக்தி யென்கிற பட்டையாயும் மாயை யென்கிற கவையாயும் தத்துவ புவன வர்ண பத யந்திரங்களாகிற கொம்புகளாயும் ஜீவன்களின் ஸ்தூல சூக்ஷும காரண சரீரங்களாகிற முகுளமாயும் வினைகளாகிய மொட்டுகளாயும் மனம்என்கிற காம்பில் அசைந்து போகங்களையும் அசையாது சித்திமுத்திகளையும் அருளும் திரிசத்திசுவரூபமாய்விளங்கும் முத்தளமாயும் அறிவெனகிறகாம்பில மேல்விரியாக்கரணங்களாகிற அரும்பாயும் அன்பால்நிமிர்ந்து அந்தர்முகத்தில் ஞானத்தையும் பகிர்முகத்தில்தாழ்ந்து கர்மத்தையும் விளைக்கும் கரணங்களாகிற உள்வெளுத்துவெளிபசந்துத்தேனூறும் நான்கிதழ்மலராயும் அன்பிற்கவையுங்கரணங்களாகிற தேனில் ஒட்டிச்சுருங்கும் இதனோடுபெருக்கும்காயாயும் சர்வாதாரப்பதியாகிற வித்தும பற்றியதிற்பந்தப்படுத்தும் பாசமாகிற பசையும் நுண்ணறிவால்பதியையும் மந்த அறிவால்பாசத்தையும் பற்றும் பசுவாகிறகோதும் உள்ளகனியாயும் ஞானவித்தின் அங்குரத்தினின்றும் விளங்கி இடக்கைபொருந்த வலக்கையால் ஞானவிதையைப்பற்றி இட்ட பிர்ம்பாவின் கரம் உபருமபடி வளர்ந்தது. அதைக்கண்டபிர்ம்மதேவன் பேரானந்தமஅடைய ஞானப்பிழம்பாகிறஅன்பென்னும் தீர்த்தம் பெருகிற்று. அத்தீர்த்தத்தால் ஸ்ரீவிருக்ஷமூலத்தில்சிவபூஜைசெய்து அபிஷேகித்து ஆயிரந்தேவவருஷம்வரையில் விதிமுறைபூஜித்து தபம்

செய்தார். அதனால் சர்வஜீவதயாபரன் ஜடாமகுடதாரியா
ய் திரிநேத்திரமும் புலித்தோலுடையும வரதாபயஸ்த
மும் விளங்க அர்த்தநாரீசுவரராய் புன்சிரிப்புடன் சிவலிங்க
மதில் தோன்றினர் பிர்மமதேவன் தேகம் புளகாங்கிதம்கொ
ண்டு கண்ணீர்சொரிய சிரமேற்கைகூப்பி ஆனந்தபரவசமு
ற்று சற்றுநின்று உமாசமேதா தேவதேவா சங்கரா சந்திரஜ
டாதரா பக்தப்பிரியா மாணிக்காபரணு மேருதனுத்தாரணு
பாபநாசனு பார்வதிபதே போற்றி போற்றி என்று துதித்
துப் பணிந்தார். சிவபிரான் பிர்ம்மதேவரைநோக்கி உமது
அன்பிற்கு இரங்கினும் விரும்பியதருள்வோம் கேண்மின்
என்று திருவாய்மலர்ந்தார்.

பிர்ம்மதேவர் கோடிசூரியப்பிரகாச கங்காஜடாதரனைப்
பணிந்து தயாநிதே சத்யலோகாதிபத்தியத்துடன் சிவஞான
ம் அருளவேண்டும் என்று அஞ்சலியஸ்தராய் நிற்க காரிபா
கன் பிர்ம்மதேவரே ஒளியிருளற்ற ஞானம் யோகத்தின் முடி
பாகும். யோகம் கிரியையால் அமரும். கிரியை சரிதையின்
முதிர்ச்சி. சரிதையென்பது பதி உண்டென்றும் அதை அ
டைய வேண்டும் என்றும் அடையும்வழியையும் உணர்த்தும்
நற்றொழில். கிரிகையென்பது யோகநிலைஅமா ஸ்தூலசரீரத்
தால் சூக்குமம் பொருந்த இலிங்கதர்ச்சித்தல். யோகம் என்
பது மும்மலம் ஏகமாகும்படி சூக்குமத்திடம் அடங்கி காரண
த்தில் கரையப்பழகல். ஞானம் என்பது ஏகபரிபூரணகாரண

மாகும், மூலம் என்கிற நிகில ஆதாரம என்கிற இடத்தால் சர்வமும் ஒடுங்கி உதிக்கும். நாம அளித்த ஞானவிந்சால் பிரம்மரந்திரமாகிய இடத்தைக்கண்டு கொண்டு இடையறாது ஏகாராய்ப் பூஜித்தமையால் குருவாய் உதித்தோம். நாமய சிவஞானம அடைந்தீர என்று அருளினார்.

விஸ்வநாதர்.

பிரம [illegible] பண்ணிக்க பரிபூரண மிக [illegible] பரிசுத்தமா [illegible] கஸ்தூரி வில்வமூலத்தில பிர [illegible] விஸ்வநாதர் [illegible] வசிக்கும் இவ்விலிங்கத்தில் [illegible] உண்மை தரிசிப்பவர்களின் [illegible] சிவஞானத்திற்கு [illegible]வாய் [illegible] ஞானப்பிரியமாகிய தீர்த்தத் திருக்குள [illegible] விநாயகரும் அதைத்தரிசித்தோர் [illegible] பக்தர்களோடு ஞானசம்பன்னராகவும் வில்வவனம் என்கிற இத்தலம் பதினாறுகடிகை அளவில் எந்தப் பிரளயங்களிலும் அழியாதிருக்கவும் இத்தலத்திலும் பூவுலகில்மற்றைய தலங்களிலும் இன்னும வில்வம் பயிரிடுவோர் மறுபிறப்பிலாத ஞானம அடையவும் இத்தலத்திற் செய்யும் தானம், ஜபம், தியானம், பூஜை, ஹோமங்களின்

பலன் ஒன்று கோடியாகவும் அருள்தர வேண்டும் என்று பிரார்த்தித்தார். ஈசன் அளித்தோம் என்று அருளி இலிங்கத்தில் மறைந்தருளினார் பிர்மதேவர் சிலகாலம் கிரமித்து சத்திய உலகம்சென்று சிருஷ்டித்தொழிற்குச் சாக்ஷிமாத்திரமாயிருந்து சிவஞானத்தை அடைந்தார் வில்வநாதரின் சன்னியாபாகத்தில் அமுதகடேசுவரர் அபிராமவல்லி என்னும் சர்வலோகமாதாபிதாவாய் விளங்கும் சுதாலிங்க தெரிசனம் மிகவிசேஷமுள்ளதென்று சூதர் புகன்றார்.

வில்வநாதச் சருக்கம் முற்றும்.


# 2 அமுதலிங்கச் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகள் சூதரைநோக்கி அத்தலத்தில் ஈசன் அமுதலிங்கமாய் விளங்கும் காரணத்தை விளம்பவேண்டும் என்று வினவினார்கள். ஹேருஷிகளே பூர்வகல்பத்தில் சுராசுரர்கள் அமுதபானம்பண்ண விரும்பிய காலவைகுந்தநாதன் அவ்விருகூட்டங்களின் படைகளைத் ததீசிமஹாரிஷியிடம் ஒப்புவிக்கச்செய்து க்ஷீராப்தியில் மந்தரகிரியை அமைத்து வாசுகியைக் கயிறாய்ப்பூட்டி அண்டர்கள் வாற்

புறத்தும் அசுரர்கள் தலைப்புறத்தும் பற்றி மதனம்பண்ணும் படிசெய்து தாம் மலையகியமத்தைப்பற்றி ஆயிரம்வருஷம் வரையில்கடைந்தபோது வாசுகி சொலிந்துவிஷத்தைக்கக்கியது அதனால் அங்குள்ளபாவரும் கரிந்துபயந்து பரமேசுவரா அபயம் அபயம் என்றார்கள். அப்போது சர்வஜீவஜீவனாகிய சிவபிரான் அவர்கள்முன் திருவுருக்கொண்டு தோன்றி அவ்விஷத்தைப் புஜித்து மறைந்தருளினார் பின்பு சர்வத்திராளும் கணபதியைதுதித்து முன்போல மதனம் பண்ணினார்கள் பாற்கடலில்ஐராவதம் உச்சைச்ரவம் கற்பகவிருக்ஷம் காமதேனு ஆறுகோடி அப்ஸரஸ்திரீகள் கௌஸ்துபம் இலக்குமியும் அமுதகடத்துடன் தன்வந்திரியும் தோன்ற ஐராவதம்முதலிய ஐந்தை இந்திரனும் கௌஸ்துபம் முதலிய இரண்டை விஷ்ணுவும் அடைந்து அமுதகடத்தை மஹாசந்தோஷத்துடன் மஹாவிஷ்ணு பற்றித்தாங்கினார் சுராசுரரவர் இருவரும் இந்திரனிடத்தும் யோஜித்து மூவருமாய்பிர்மாவினிடம் சென்று மிகப்பிரயாசத்தால் உண்டாகிய அமுதை சர்வத்திராளும் வைரமின்றி சமமாயிருந்து புஜித்தற்கான இடமே வேண்டுமேயென்று கேட்டார்கள். பிரம்மதேவன் தேவர்களும் அசுரர்களும் நிர்வைரமாயிருந்து புஜிக்கும்படியான உத்தமஸ்தலம ஒன்றிருக்கிறது அதில் சத்ருத்துவத்தை நீக்கிக்கொள்ளும்படியான நர மிருக பக்ஷி ஊர்வனவும் மித்ருத்துவமாய் விளையாடும். குளிர்ந்த சோலைகளும் அமுதப்போன்ற தீர்த்தங்களும் உள்ளது. யான் பாத்மகல்

பத்தில் ஈசனால் அத்தலத்தில் மேலான ஞானம் பெற்றிருக்கி றேன். அத்தலத்திற்கு ஈடு திரிலோகங்களிலும் இல்லை. அத்த லமேப் பூமியில் காவேரி சங்கமசமீபத்தில் வில்வாரண்யமெ ன்றுவிளங்குகிறது. என்று புகன்றுவிஷ்ணுவிடத்தும் கைக் கூப்பிக் கூறினர். உடனே மறைவிட்டு அமுதகடத்து டன் வில்வவனத்தை நோக்கிப்புறப்படவே சர்வதேவர்களும் திருமாலின் பின் அமுதகடமும் ஓங்கிவருவதுபோல குதூக லத்துடன் வந்தார்கள். வைகுந்தநாதனவர் வில்வவனத்தை யடைந்து சித்திரைமாசம் சித்திரை நக்ஷத்திரம் பௌர்ணமி திதியில் வில்வநாதரின் நிருதிமூலையில் வெகுதியானத்துடன் அமுதகடத்தை அமைத்தார். அத்தலத்தில் சுராசுரர்களும் சுத பத்னியுடன் வந்தார்கள் அப்சரசுகள் ரிஷிகள் முதலிய வைகளும் வந்தமையால் தென்றல் முதலியசுகங்கள் விரிவா யுண்டாயிற்று. வைகுந்தநாதன் சர்வத்திரளையும் கண்ணு ற்று நீங்கள் எல்லோரும் ஸ்நானம்முதலிய நித்தியகாம்யங்களை முடித்துக்கொண்டு அமுதபானம் பண்ண விரைவில் வாருங் கள் என்று ஆக்ஞாபித்து ஞானவாபியில் அறுபத்தாறாயிரம கோடி தீர்த்தங்களை ஆகருஷித்து நித்தியகர்மங்களை முடித்த னர். மற்றெல்லோரும் மந்திரபலத்தால் தங்கள் வாசஸ்தா னங்களிலுள்ள தீர்த்தங்களை வருவித்து ஸ்நானனுஷ்டானங் களை முடித்துக்கொண்டு அமுதகடத்தையும் மஹாவிஷ்ணு வையும் நோக்கியபடி உட்கார்ந்தார்கள். அப்போது நாரா யணன் அமுதை எடுத்து பரிமாறும்படி அமுதகடத்தருகில்

சென்றகாலையில் அமுதகடத்தினின்றும் வெண்மையாய் உயர்ந்து இலிங்காகாரமாய் விளங்கிறது.



அமுதகடேசுவரர்

அவ்வதிசயத்தைக்கண்டு வியந்து அமரர்களை நோக்கி அயர்ந்து சிவசெபலையாராதியர்கள் அமுது இலிங்கமாயிற்று அவ்விலிங்கத்தை அசைத்தால் சர்வாண்டபிண்டங்களும் அசைகிறது ஆகிலும் சிவஸ்துதி செய்தால் ஏதாவது வழியுண்டாகும் என்று எல்லோரையும் சிவஸ்துதி செய்யும்படி ஆக்ஞாபித்து சாகரத்துவனியுடன் சங்கத்துவனியும் உண்டானதுபோல சிரத்தங்கைகூப்பி ஹரா ஓம ஹரா வெ

ன்று ஆனந்தபாஷ்பம் பொழிய பரவசமாய் தேவதேவாபோ ற்றி ருத்திரரூபாபோற்றி நீலகண்டாபோற்றி பிர்ம்மபதே போற்றி அம்பிகாபதேபோற்றி தத்புருஷரூபாபோற்றி ஹேமவர்ண்ணாபோற்றி பீதாம்பரோத்தரீயாபோற்றி கோடி சூர்யப்பிரகாசாபோற்றி வில்வாரண்யேசுவராபோற்றி உமா சமேதாபோற்றி பக்தரக்ஷகாபோற்றி போற்றி யென்று கீழ் புறத்தினின்றும் தக்ஷிணாமூர்த்திரூபா சர்வரூபா திரிநேத்திரா பாசுகபாலஹஸ்தா பன்னகபூஷணா உக்கிரரூபா சர்வஜீவஸ்வரூபா ஞானகிருபாகராபோற்றிபோற்றிஎன்று தென்புறத்தி னின்றும் வாமதேவரூபா அர்த்தநாரீசுவரா ரக்தவஸ்திரா ரக்தசெந்தாரணா சர்வசிருஷ்டிகரா க்ஷேத்திரபதே ஸ்தாபரபதே பூபதே வேதபதே வேதஸ்வரூபா வேதாந்தா சர்வதேவதாஸ்வரூபா போற்றி போற்றி என்று வடபால் நின்றும் ஸத்யோஜாதரூபா சுவேதவர்ண்ணா ஸ்படிகமாலிகாபரணா வர்தாபயஸ்தா சர்வசிரேஷ்டா நிர்மலசித்தவாஸா ஜனனமரண துக்கநாசனா தாளசத்ரா வேதாந்தஞானஸ்வரூபா ஸ்வயம் பிரகாசா சுதாகடேசுவரா போற்றி போற்றி என்றுமேல்பால் நின்றும் வெகுகாலம் துதித்தார்கள் என்று சூதபுராணிகர் கூறினார்.

அமுதம் கடைந்த சருக்கமுற்றும்.

# 3 அபிராமியம்மைச் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே கேளுங்கள். அவ்வாறு விஷ்ணுமுதலியதேவர்கள் துதித்தபோது ஓர் அசரீரி உண்டாயிற்று. அதைக்கேட்டு மகிழ்ந்து மேல் இன்னதுசெய்யலாமென்றுதோற்றாமல் ஒருமுகூர்த்தகாலம் சிவமாயைபிறகட்டுண்டு விஷ்ணுவானவர் பிர்மாமுதலியவர்களைநோக்கி அமுதகடத்தினின்றும் ஈசன்பிரசன்னமாகும்வரையில் நாம் எல்லோரும் ஒவ்வோர் ஆசிரமம் உண்டுபண்ணிக்கொண்டு தினம் அமுதலிங்கத்தைப் பூஜித்து தபசுசெய்குவோம் என்றுரைத்தார். அவ்வார்த்தையைக்கேட்ட எல்லோரும் தனித்தனி பன்னசாலை உண்டுபண்ணிக்கொண்டு சிவதியானமும் வேதாத்தியயனமும் செய்தார்கள் பிர்மா கீழ்புறத்தும் விஷ்ணு நிருதிபாகத்தும் ஆசிரமம அமைத்து தினம் ஞானவாபியில் மூழ்கி அனேக முனிக்கூட்டங்கள் சூழ பிர்மா சிவபூஜைக்கான சிசிருட்சை செய்ய விஷ்ணு மூன்றுகாலத்திலும் காமிகாகமவிதிப்படி பூலோக சுரலோக சத்தியலோக நவலோகங் களிலும் மேன்மையாயுள்ள பூஜா நைவேத்திய சாமான்களை அபரிமிதமய் வருவித்து அபிஷேக அலங்கார நைவேத்திய ஆராதனங்களும் நவலோகாந்தர கைலையினின்றும் ஈசனாற்றரப்பட்ட சந்திரசூர்யாக்கினிஸ் வரூபமாகிறவி

ல்வதளங்களால் ஸகஸ்திரநாமம் கூறி அர்ச்சனையும் அமுதலி
ங்கத்திற்குச்செய்து பூஜாகாலத்தில் சன்னிதியில் அமர்ந்து
சிவத்தியானமுற்று வருங்காலத்தில் ஆயிரம் வருஷஞ் சென்
றபின் அரக்கர்கள் சுக்கிராசாரியரிடம் சென்று நாங்கள் புர
சுத பத்னிகளைப்பிரிந்து நெடுநாளாய் மிகப்பிரயாசப்பட்டும்
எங்கட்கு அமுதம் கிடைக்காதென்று தோற்றுகிறது தேவர்
கள் அமுதத்துண்டான இலிங்கத்தை வெண்மையென்று மா
றுபாடாய் உரைப்பதைப்போலவே மற்றவிசத்தும் எங்களை
வஞ்சித்து அவர்களே புஜிக்கும்படி நாளோட்டுகிறார்கள் நாங்
கள் எங்கள் உலகத்திற்குச் செல்கிறோம் என்று அயர்ந்து
உரைத்தார்கள். அதற்கு சுக்கிராசாரியர் மாயையுள்ளாக
கு அமுதம் மாறாய்த்தோன்றும் நீங்கள் எல்லோரும் மிகப்
பிரயாசப்பட்டும் அமுதைப் பெறும் சமயத்தில் புரசுதப
த்னிகளை இச்சித்துச் செல்லவேண்டாம் சீக்கிரத்தில் அமுத
ம் கிடைக்கும்படி இன்னும் முயர்ச்சித்துப்புஜித்துத் தங்க
ள் நகரை அடையலாம் என்று அமைத்து தேவகுருவாகிய
வியாழபகவானிடம் சென்று அரக்கர்கள் ஆற்றியதை வின
வி அவ்விருதரவரும் பிரணவரிஷியிடம் சென்று பணிந்
து அமுதகடம் இலிங்கஸ்வரூபமானதும் அவ்விலிங்கத்தை
மஹாவிஷ்ணு முதலானவர்கள் நெடுநாளாய்ப்பூஜித்தும் ஈசன்
பிரசன்னமாகாததும் இன்னதினால் என்றும் ஈசன்பிரசன்ன
மாகும்படி விஷ்ணு முதலியவர்களால்செய்யவேண்டியது இன்
னதென்றும் திரிகாலமுணர்ந்த மஹாரிஷியாகிய தாங்கள் எங்

கட்கு உணர்த்தி சர்வத்திராநும் அமுதன்னூர்ப்படி கிருபை செய்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தாள். அதற்குப் பிரணவரிஷி குருவர்களோ கோடானகோடி நிர்மலமான ஞானதலத்தில் பக்தசிரேஷ்டரான நாராயணன் சிவதத்யானத்துடன் அமுதைத அமைத்ததனையால் இவிதகமாயிற்று. சர்வாதாரமாய் விளங்கும் சக்தியன்றியில் சிவதனைப்பூஜித்தல் திருவருட்பிரகாசிக்காது. சக்தியைக் கூட்டிப் போற்றினால் ஆனந்தாமுதம் பெருகும். சக்தியே சிவ உருவமாவதால் சக்தியினருட்கொண்டே சிவத்தைப் பூஜிக்கவேண்டும். என்றும் இவ்வாறு வைகுந்தநாதன வழியாது பூஜித்தால் அமுதமகிடைக்கும் என்றுமுரைத்தனர்.

அதைச்சேட்ட சுராசுரகுரவர்கள் இருவர்களும் சிவபூஜைசெய்து வெளிவந்தவிஷ்ணுவைப்பணிந்து பிரணவமுனி உரைத்த விஷயங்களைக் கூறினார்கள் உடனே ஸ்திதிகர்த்தன் மிகக்களித்து பிரணவரிஷியை திரிகாலம் உணர்ந்தவர் என்று புகழ்ந்து அவர் உரைத்தது முக்கியமான ஆதாரம் என்று கொண்டு சர்வலோகமாதாவாகிய தேவி மஹத்துவமான சிவத்தை வசப்படுத்தும் ஸ்வரூபமும் சிவம் என்கிற நாமமும் கிருபையும் உள்ளவள் என்று தேகம்புளகாங்கிதமாய்த்துதித்துத் தேவசிற்பிகளால் ஆலயம் அமைப்பித்து செர்ப்பக்கிரசமத்தியில் அணுவிற்கணுவாகும் அம்பிகையை அமைத்துப் பிராணாயாமம் கரநியாசம் அங்கநியாசம் ஸ்தா

லைபூதசுத்திசெய்து ஈராறுதலத்தின் ஆதாரமாகும் ஷோட சாக்ஷரநாதம் பேதித்து நான் கிழிந்து முன்னுன்காய்மாறி நான்கையழித்து இருநான்காகி நான்கைக்கொன்று நான்காய மூந்தி மூன்றைப்பெருக்கி இரண்டும்கெட்டு மூன்று ஐந்து ஒன்பது நாற்பத்துமூன்று அன்பத்தொன்று எழுகோடி சதகோடியாகி யலைக்காது மூலத்திற்கூட்டி ஆனந்தாதீதமுற் றுப் பின்னும் ஆனந்தமயமாய் ஹிருதய குஹிய புருவில் பூஜா ஹோம சமாதியுற்று அகண்டமாய் பிரம்மம் என்பதிற் கூட்டிக்கூடும் ஞானமயமாய் சிவசீவகலையாய் பிரமரந்திராந் தரத்தில் நிஷ்களமாயும் புருவில் சகளநிஷ்களமாயும் இருத யத்தில் சகளமாயும் விளங்கும் சர்வகாரணி ரேசமார்க்கமாய் வெளிவந்து சூரியசந்திராதி சர்வமும் பரந்து விளங்கும்படி அழுதீசனோக்கமாய் நிற்கக்கண்டு ஆனந்தபரவசமுற்று மிகக் காருண்ய சௌந்தர்யமாய் விளங்கிய அம்மையை அபிராம சுந்தரி என்று துதித்து பேரன்புடன் காமிகாகமமாய்ப் பூஜி த்து முன் அஞ்சலியஸ்தராய் நின்று தேவி சர்வதேவகார ணி கௌரி சர்வதேசவரூபி முத்தொழிற்கு ஆதாரகாரணி பஞ்சப்பிர்ம்மஸ்வரூபி மாயாஸ்வரூபி கர்ம்மாதார அசைவுஸ் வரூபி பிர்ம்மஸ்வரூபி ஞானாதார நிர்ச்சலஸ்வரூபி ஆசார்யஸ் வரூபி பிராணவார்த்தஸ்வரூபி ஞானத்தையும் சித்தியையுந்த ரும் குருஞானஸ்வரூபி ஈசுவரப்பிரியரூபி ஞானபூரணஸ்வரூபி போற்றி போற்றி என்று துதித்து மஹாதேவி அருள்செய்ய வேண்டும் என்று கண்ணீர்சொரியப் பிரார்த்தித்தார்.





அபிராமசுந்தரி. மஹா விஷ்ணு.

அபிராமியம்பிகை கிருபாநோக்கமுற்று ஜீவன்களின் வினைப்படி போகம்ஊட்டிக்காற்கும் ஹேவிஷ்ணுவே நீர் சர்வத்திராளுடன் அமுதகடமாய்விளங்கும் சிவலிங்கத்தினிடம் சென்று எம்மைக்கூட்டித்தபம் செய்குவீராயின் சிவத்தோடும்பிரசன்னமாகி, அமுதளிப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வமுதவசனத்தைக்கேட்ட வைகுந்தா

திபதி மஹாசந்தோஷத்துடன் மற்றையரிஷிகள் முதலியவர்களிடம் அம்பிகையின் உத்தரவைப்புகன்று ஆனந்தித்தனர். என்று சூதபுராணிகர் புகன்றார்;

(3) அபிராமியம்மைச்சருக்கம் முற்றும்.

# 4 அமுதம் உண்டசருக்கம்

நைமிசாரண்யவாசிகளை நோக்கி ஹேரிஷிகளே நாராயணன் சர்வதேவதைகளுடன் அமுதலிங்கத்தினிடம்சென்று அஞ்சலிபஸ்தராய்நின்று ஜகதீசுவரா கிருபாகரா துக்கசாகரஹராஈசானதிசாவாஸா கஜசர்மஉத்தரீயா கெங்காதரா சந்திரசூர்யாக்னிநேத்ரா சுதாகடேசுவரா பக்தபவாசனு சிந்திதமனோரதவரதா திரிகுணரஹிதா திகம்பரா உமாசமேதா திக்தேசகாலரஹிதா தீனரக்ஷகா பக்தபயஞ்சஹரா வேதாந்தஞானகிருபாகரா லலாடநேத்ரா ஆகாசவஸ்திரா கபாலஹஸ்தா கும்பஸ்வரூபா நித்தியகல்யாணு சார்த்தூலசர்மதாரணு சந்திரஜடாதரா சுந்தரரூபா பக்தாபராதக்ஷமகா அபிராமிநாதா போற்றிபோற்றி என்றுதுதித்து அனேகபுஷ்பங்களால் அர்ச்சித்து இரண்டுபக்ஷம் ஏகமாகத்தியானம்செய்ததும் ஸ்ரீ அபிராமசுந்தரியோடும் தயாமூர்த்தியாய் சித்திரைமாதம் சித்திரைநக்ஷத்திரம் கூடிய பௌர்ணமியில் அனேககணங்கள்புடை

சூழ விடைதாங்க சங்கத்துவனிக்க கோடிசூர்யப்பிரகாசமாயும் கோடிசந்திரசீதளராயும் சர்ப்பாபரணபூஷிதராயும சிவபிரான் மேல்நோக்காய் சர்ப்பம்போல கிழ்சிறுத்து மேல்பருக்கஇலிங்கத்திற் றோன்றினா.

MAHAMAHOPADHYAYA DR. U.V. S... IYER LIBRARY BESANT NAGAR MADRAS



நெடியோன்முதலியசர்வத்திராளும் ஹராஹராவென்று கண்ணீர்சொரிய உரோமஞ்சிலிர்ப்ப சிரமேற்கைகூப்பி ஆனந்தபரவசமாய் சிவபிரானைநோக்கியபடி சித்திரப்பிரதமை

போல என்றார்கள். கைலாயபதி ஹேதேவர்காள் குணாமரூபம் இல்லாது பூரணமாயுள்ள எம்மை யாரும் அறிவது அரிதாகும். ஜீவன்களை நிர்ம்மலமாக்கும்படி எம்மைப்பிரியாது யாவுமாம் சீவசீவமாயுள்ள எமது சத்தியின் வியாபகத்தால் செய்யும்பஞ்சகிருத்யநடனத்தில் விளங்கும் பிர்ம்மாவின் சிருஷ்டிக்கு ஆதாரமாகியநினைப்பைத்தரும் மதியேறிக்கரைந்து விஷ்ணுவின் திதித்தொழிற்கு ஆதாரமாகிய விதிநீறிப்பொருந் ருத்திரசதாம்சத்தொன்றுபிரிந்துவிதிமுறைசங்கரித்தற்கு ஆதாரமாகிய மறப்பைத்தரும்முத்தொழிற்காரணகதியூறிநிறந்து மேல்ஒருநெல்நாக்கின் கோடியில்ஒருபங்கின் நூற்றில்ஒருபங்கின் பத்தில்ஒருபங்கின் மூன்றில் ஒருபாகமாயுள்ள நாடியின் ரந்திரவழியாய் சப்தகோடிமந்திரங்களின் ஆதாரமூன்றக்ஷரம் கூடியஒன்றால் விராட்சுவரூபத்தின்பிர்ம்மரந்திரமாயும் சுவராட்டின் புருமத்தியாயும் சம்விராட்மூலாதாரமாயும் உள்ள இடத்துஅமர்ந்த நிர்ம்மலஆத்மாவிற்கு நித்தியானந்தஞானமுதம் ஊற்றும் சதாசிவகுருவாய் விளங்கி அளவிற்குஅடங்காப்பூரணம் கடாக்ஷிக்கும்எம்மை இவ்வில்வனத்தில் மந்திரமயசர்வதேவாளுடன் சிருஷ்டித்திதிக்கர்த்தர்களாகிறநீங்கள் இருவரும் ஒருமித்து ஏகாக்கிரசித்தராய் பதினாயிரம்வருடம் பூஜித்தமையால் நீங்கள்விரும்பிய அமுதிலும் மிகவிசேஷமாயுள்ள ஞானாமுதை ஞானவாயில் உண்டாகும்படி அருளினோம் சர்வத்திராளும் பூஜிக்கலாம் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அத்திருவாக்கைப்பெற்ற கண்ணாகியதேவர்கள் ஆனந்தம்மேற்கொண்டு சிவஸ்மரணைசெய்து அமுதீசாபோற்றி என்று நமஸ்கரித்து ஞானவாபியைச்சூழ்ந்தபோது அமுதம் தோன்றாமையால் பின்னும் சிவசன்னிதியை அடைந்து மஹா தேவாநமஸ்காரம் தாங்கள் அருளிய ஞானமுதம் எங்கள் அஞ்ஞானத்தால் தோன்றவில்லை தோன்றும்படி அநுக்கிரஹிக்க வேண்டும் என்று பணிந்தார்கள், சிவபிரான் அன்பர்காள் முன் பாத்மகல்பத்தில் ஞானத்தின்பொருட்டு சதுர்முகன் ஸ்கந்த கணபதியுடன் எம்மைப் பூஜித்திருப்பதால் அது முதல் அவர்கள் யார்க்கும விரும்பியதளிக்கும்படி இங்குவசிக்கின்றார்கள் அவர்களில் கணபதியைச்சிந்தித்துத் தபஞ்செய்தால் அமுதம்தோன்றும் என்றமொழிகடாக்ஷித்தார்.

தேவாதிகள் ஈசன் அளித்தகட்டளைப்படியே நிருதிமூலையில்தங்கி உள்ளத்திற்காந்தகணபதியைச்சிந்தித்துத் தபம் செய்தார்கள்.



சோரகணபதி.

அத்தபத்தால் மறைந்தகணபதி பிரசன்னமாகி ஹரி அயனை நோக்கி எம்மைமறந்ததால் யாம்மறைந்தோம் அதனுல் ஈசன் உங்கட்கு அளித்த அமுதம் தோன்றவில்லை யாம் தோன்றியபடியே அமுதம் தோன்றும் சந்தோஷமாய்ப்புஜியுங்கள் என்று அருளினர் உடன் அனைவருமகணபதியைப்பணிந்து ஐங்கரப்பிரபோ தாங்கள் சோரகணபதியென்றநாமம்வஹித்து அன்பர்கள்முன் மறையாது இவ்விடத்தில் சாந்நித்தியமாய் விளங்கி இஷ்டசித்திகளை அருளவேண்டும் தாங்கள அருளும அமுதத்தைத்தேவர்கள்சன்னிதானமே அமர்ந்துபுஜிக்க நாங்கள்இரசித்திருப்பதால் ஞானவாபியின பூர்வ எங்களாலே புஜிக்கும் பிம்பத்தில் சாந்நித்தியமாகவேண்டும் என்றும் பிரார்த்தித்தார்கள். சோரகணபதி நீங்கள்விரும்பியவாறும் தந்தோம் என்றருளினர். பின்பு பங்கயனுமயன் கணபதியைப்பணிந்து சிவசன்னிதியில அஞ்சலியஸ்தராய்நின்று சிவபெரு அனுக்ஞைபெற்று ஞானவாபியின்மேலபால விமோசகணபதிப்பிரதிஷ்டைசெய்து பூஜிந்து அமுதகணபதே என்றுதுதித்து ஞானவாபியில் ததும்பும் அமுதைக் கண்டுகளிக்கண்டு தேவாகள் திக்குப்பாலகாள் அஷ்டவசுக்கள் ஸப்தருத்துக்கள ஏகாதசருத்திராள் துவாதசஆதித்தியாள் அசுவினிதேவதைகள் பிதிர்க்கள் கணங்கள் சித்தாள் சாத்தியாள் அகஸ்தியாதிரிஷிகள் நாரதாதிமுனிகள் ஆதித்யாதிநவக்கிரகங்கள் நக்ஷத்திரங்கள் பாலகில்யாள் ஜனகாதியோகிகள் ரோமசர் சௌனகர் முதலியதபசிகள் ரிதுக்கள் அப்சரசுக்கள் கின்னரர்களும்

கூசுமாண்டன் லோஹிதாக்ஷன் கும்போதரன் மஹோதரன் மஹாகாயன் நமுசி குக்ஷிவக்கிரன தந்தவக்கிரன் முதலிய அரக்கர்கள் பிரகஸ்பதி சுக்கிராசாரியர் முதலியசர்வத்திராளும் பந்திபந்தியாய் யோஜனைதூரத்தப்புறத்தும் மஹாசநதோஷத்துடன் உட்கார்ந்தார்கள், உடனே பொற்குடத்தில் அமுதை எடுத்துவரும்படி பிர்மதேவனுக்கு ஆக்ஞாபித்து தமது கரத்தால் சர்வத்திராளுக்கும் பரிமாறி பிர்ம்மாவிற்கும் சாப்பிடும்படி அளித்து சித்திரைமாதம் சித்திராபௌர்ணமியில் மஹாவிஷ்ணு சிவாருகமாகப் புஜித்துப் பின்னும் சர்வத்திராளுடன் சிவசன்னிதியில் சிவநாமத்தையுரைத்து அங்கைகொட்டி சிவானந்தக்கூத்தாடிப்பணிந்து பூரணானந்தமருளும் கிருபாசாகா சுதாகடேசுவரா போற்றி போற்றி என்று அனேக பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து அஞ்சலியஸ்தர்களாய் சர்வத்திராளும் பின்று கிருபையாகிற அலைகளை வீசும் ஆனந்தக்கடலே யாங்கள் தமதருளால் கிருதார்த்தராளோம் சர்வஜீவன்களும் அத்தியர்ப்புத புத்தமுதைப்பெற்று சிவானந்தமாகும்படி சுதாலிங்கத்தில் சாணித்தியமாயிருந்து தம்மை தரிசிக்கும்பக்தர்கட்குப் பேரானந்தஞானமும் சித்திமுத்திகளும் அருளவேண்டுமெ பக்தியாய் இத்தலத்தில் வசிப்பவர்களின் பாபம்நசித்துப் புண்யம்பெருகவும் அமுதம்பெருகும் ஞானவாபியிற்படிந்தார்கட்கு இஷ்டசித்திகளைத் தந்தருளவும் அத்தீர்த்தத்தைப்பருகினோர்களின் ரோகங்கள்நீங்கவும் அந்த நாயில்தில நர்ப்பணம்செய்வோர்களின் இருபத்தொருத

லெமுறைவரையில் உள்ள வம்சபிதிர்க்கள் திருப்தியடையவும் அதன்கரையிலிருந்து தியானம் ஜபம் பூஜை செய்பவர்கள் சர்வசித்திகளுடன் ஞானம்பெறவும் இத்தலம் சர்வசம்ஹாரகாலத்தும் அழியாமலிருக்கவும் அருள்புரியவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். ஈசன் அவ்வாறு அளித்தோமென்று திருவாய்மலர்ந்து பூர்ணகிருபாநோக்கமாய் விஷ்ணுவைப் பார்த்து ஹே விஷ்ணுவே ஞானவாபிதீர்த்தத்திற்கு அமுதபுஷ்க்கரணி என்ற நாமமும் தந்தோம் நமதிடமாயிருக்கும் ஞானாமுதம் பூரணமாக சக்கரணம்பிரியாது அன்பாயுண்டு சர்வஜீவஸ்தூல சூக்கும காரணமாயும் அவைகட்கு அதீதமாயும் சக்திசகிதமாய் உள்ளுலவும் எம்மை அடைந்தவர்கள் நிகரிலாச் சித்திகளுடன் அழியாதநித்யர் பெறுவர்கள் பக்தியிற்சிறந்த நம்முன் இடமாயமர்ந்த விஷ்ணுவே உமக்கீடியாரும் இல்லை எமதருள் நம்மிடம் பூரணமாயிற்று என்று வலக்கரத்தாற்றழுவி தமதிடமாகும் ஞானாஸ்திரத்தை அருட்சத்தியிருந்து ஆயுகோடிமாயாரூபங்காட்டி மறைக்காவண்ணம் ஒளியிருளற்ற ஞானபூரணசக்கிரமாக்கி தாங்குவீரென்று அருளி இச்சக்கரத்தால் மாயாவிருள் ஒடுங்கும் இராக்ஷதப்பகைவர்கள் வசமாவார்கள் என்றும் அருளியவுடன் விண்ணவர்கள் பூரணகிருபாகரனைப்பணிந்து தீனரக்ஷகா சுராசுராதிய சர்வத்திரளும் தமதருளால் ஞானாமுதம் உண்ணப்பெற்றிருக்கிறார்கள் அஹங்கார இராக்கதர்கள் அமுதுண்டபலத்தால் எங்களை ஹிம்சியாவண்ணம் அவர்களின் பலம் அழியும்படி அனுக்கிரஹிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

சர்வாண்டங்களும் உதரத்தில்விளக்கும் அநந்தரூப அபிராமிராமன் அவர்களைநோக்கி வானுலகில் உண்டாகிய பலமை கொள்வாராயினும் உணருரு அகங்காரங்கொண்டார்கட்கு அழியும் என்று திருவாய்மலர்ந்து மேலும் சித்த விசேஷிகட்கும் விசேஷிட்டரான அஸ்திபமா முனிவரை அருகாரப் நோக்கிப் பாபமிழிக்கும் புண்ணியமாயெமது நாமம் தரித்திருந்து உரித்தாவார் நீர் பாபவிமோசனலிங்கமும் புண்ணியவர்த்தனலிங்கமும் பிரதிஷ்டைசெய்து பூசித்திருக்கக்கடவீர்கள் என்று ஆக்ஞாபித்து அமுதகடத்துடன் அங்ககார் என்று ருத்ரர் கூறினர். உடன் சிலர் தங்கள் மானஸ்தலத்தில் அமுதுண்டமை அரக்கர்கட்கு அறியவொண்ணமை என்று சந்தேகத்தை வகிக்கவேண்டிய மேலோர்கள் பிரத்தியக்ஷமாகவும், அவ்வாறே அருளியது உசிதமாகுமோ என்று விண்ணவர்கள் அவர்களைநோக்கி பிரம்மானந்தத் தலத்து அன்புள்ளாரும் நிர்வைரமாவர் என்பதற்கு ஐயம் வேண்டாம் அரக்கர்களை ஜயித்தற்கு விரும்பி அமுதுண்ணா முயன்ற சிலவிண்ணுலகர் கூட வில்லவணத்தைத அகன்றபின் அமுதால் மிகுப்பலம்பெற்ற அரக்கர்கள் வதைப்பார்களோ என்றபயத்தால் அவ்வாறு கேட்டுக்கொண்டதாம பின்னும் சிலர் தாம் என்னும் அகங்காரஇராக்கதர்களாகி காமாதிகளால் அலைத்தற்கியலும் மனமாதிகள் பிரிந்து அவ்வகையுறுவண்ணம சர்வாதாரமாகும் அமுதபலத்தைக் கிரகிக்க, விரும்பியதும் ஆகும், விதியாலுதிக்கும் புத்தி இழிந்து

விதியைவளர்த்து விரிந்து அழியாது அவ்விரண்டின் மூலநடு மேல்கரைந்து நாதபோதமாய் விருப்பு வெறுப்பு முதலிய இரண்டற்ற பேரறிவாளர்க்கு ஆனந்தாதீதமாயும் வெறுப்புறும் விருப்பறத்தமதிடம்ஓங்கும் அன்பர்கட்கு அவ்வளவாய் சுனைபெருகப் பொங்கித் ததும்பும் அமுதஅருவி உதித்தற்கு இடமாகும் அமுதகடவுளாயும் மதியாலுதிக்கும்விதியுளும் விதியாலுதிக்குமமதியுளும் கட்டுண்டு அவைகளைவிரித்து அழியும்ஜீவன்கள் முன் அறியாதுநினைந்ததையும் விரும்பி மறந்ததையும் உணர்த்தி பற்றின் ஊட்டுவிக்கும் ஒளியுள்ஒளியாய் அச்சீவன்கள் அறியாது எங்கும் உலவும் சிவபிரான் இல்லையென்றது அளிப்பார். அவரளிப்பதில் திரணமும் தவறாது. இடுவான் பெறுவான் இவ்விரண்டில் இசைவானும் விருப்பியபடி நீதியே அருளுவர். தான் என்னும் அஹங்காரங் கொண்டவர்களே அரக்கர்களாவர் அவர்கள் அமுதுண்ணப் பெறார் முன் உண்டிருந்தாலும் பலம் குறைவுபடும் ஆதலால் வானோர் விரும்பியபடி ஈசன் அருளியதாகும் என்றும் முன்னொருகாலத்தில் மார்க்கண்டேயர்என்னும் முனிவர் அமுதலிங்கத்தைப்பூஜித்துநித்யத்துவம்பெற்று சிவத்தோடு ஒன்றிவிளங்கினர். அவர் அனேகபிரளயங்கள்வரையில் இருந்தும் சிருஷ்டியின் விதத்தைத் தெரிந்துகொள்ளாததால் ஒருசர்வப்பிரளயகாலத்தின்முன் ஈசுவரனைப்பணிந்து லயஉற்பத்தியின்விதத்தை அடியேன் அறியும்படி கடாக்ஷிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார் அதற்கு ஈசன் பக்தியிற்சிறந்தமார்க்கண்டே

யரைநோக்கி எந்தப்பிரளயங்களிலும் அழியாத நித்யத்வத்தை நம்மால் பெற்றிருப்பதால், யார்க்கும் அறிய அரிதென்பதான அதை நீயே அறிந்துகொள்ளலாம் என்று கடாக்ஷித்தார். பின்பு, சர்வமும் அழியும்படி பிரளயம் உண்டானபோது மார்க்கண்டேயர் லயவுற்பத்தியைத் தெரிந்துகொள்ளும்படி நின்றார் அக்காலத்தில் ஜலம் அனல் காற்றுகள் விரிந்து அலைத்ததனால் களைத்து சற்று நிச்சிந்தையை அடைந்தவுடன் பிரளயமாகி பின்புசர்வமும சிருஷ்டிக்கப்பட்டு இருப்பதைக்கண்டு சிவரகசியத்தையும் அறிந்துகொள்வது அருமையென்று சிவசிந்தையாயிருந்தார் ஆனதால் முற்கூறிய விஷயங்கள் எவ்வாறுளதோ அஃது அன்பளவாய் விளங்கும் சிவரகசியத்தை நாம் அறியத்தக்கதன்று பிர்ம்மரந்திரதலத்தில் பிர்ம்மதேவர்க்கு ஈசனாற்றரப்பட்ட ஞானவித்தினின்றும் விளங்கிய ஸ்ரீ விருக்ஷத்தின் மகிமையை நான்முகனாலும் உரைத்தற்கரிதாகும் என்றும் சூதரோதினர்.

அமுதுண்டசருக்கம் முற்றும்.

# 5. தேவசர்மா சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே கேளுங்கள் இந்தவில்வவனவிசேஷங்களைக் கோடி வருஷம் கேட்டாலும் பின்னும் கேட்கவே அன்பர்கள் இச்சிப்பார்கள். என்றாலுமாகிய வியாசராம் தெரிந்தவரையிற் சொல்கிறேம் என்று நதிகளிற்கங்கையும மந்திரங்களிற் பஞ்சாக்ஷரமும் மனிதர்களில் பிராம்மணரும பக்ஷிகளில கருடனும மிருகங்களிற் பசுவும தானங்களிலன்னதானமும் ஸ்மிருதிகளில் மனுஸ்மிருதியும உலகங்களிற் சத்தியஉலகமும் சுகபதவியில்வைகுந்தபதவியும பெண்களில அருந்ததியும் மணிகளில்ருத்திராக்ஷமும் புற்களில் குசமும் விருக்ஷங்களில் அரசும் யாகங்களில அசுவமேதமும் தீர்த்தங்களிற்சமுத்திரமும் பக்தர்களில்நாராயணரும வேதத்தையில ஜனனமரணமும அவுஷதத்தில்அவலவேதனையசமுத்திரமும ஸ்தலங்களில்அவ்வமுதேஇலிங்கமானதலமும் அர்ச்சனையில்வில்வார்ச்சனையும் சுகந்தபுஷ்பத்தில்ஜாதியும் சிரேஷ்டமாகும். அணுவிற்கணுவும் அண்டங்கட்கண்டமுமாகவிளங்கும் சதாசிவலிங்கமகிமையை அளவிடற்கரிதாகும். அதை பக்தியுடன் சிந்தித்தால் தபத்திற்கு இடமும் சர்வசித்திகளும் உதிக்கும். மானிடலிங்கங்களில் பிராசீனம் உத்தமம். அதிலும் இராக்ஷதர்களால் பூஜித்தது உத்தமம். தேவர்களால்

பூஜித்தது அதிலும்மேன்மையாரும். அதிலும்சிரேஷ்டம்
சுவயம்புலிங்கம். அதிலுமுயர்வு வில்வவனத்தில் விளங்கும்
சுதாசுவயம்புலிங்கமாகும். ஆனதால் அதன்மகிமையை யா
ரும் அறிவது அருமையென்று யார்க்கும்விளங்கும். அவ்வி
லிங்கவாடையால் சுற்றிலும் உள்ள ஓடு கல் மணல் எல்லாம்
இலிங்கமயமாய் அன்பர்களுக்கு விளங்கும். அந்தக்ஷேத்தி
ரத்தை அடையவேண்டும்என்று மூன்றடி தளராது எழுந்து
நடந்தால் எமவாதை நீங்கும். அமுதபுஷ்கரணியில் ஸ்நா
னம்செய்து அமுதலிங்கத்தைத்தெரிசித்தவர்கள் பூர்வத்தில்
நூறுஜன்மம்வரையில் புண்யரேஆவார்கள் பின் ஏழுஜன்மத்
தில்பக்தியளவாய்ச்சிவகடாக்ஷம் பெறுவார்கள். அபிராமி
யம்மனைத்தெரிசித்தால் நிறைகலைப்பேறு பெறுவர்கள். சோ
மசண்பதி தியானத்தால் எக்கார்யங்களிலும் விக்னம் உண
டாகாது. ஸ்கந்ததரிசனத்தால் அறிவேகுருவாகும். வில்வ
நாத தெரிசனத்தால் ஞானம் உதிக்கும். பாபவிமோசன
புண்யவர்த்தன தரிசனத்தால் பாபம்நீங்கிப் புண்ணியம் வள
ரும். அத்தலத்தில் சிவனால்அளித்த ஞானவிருக்ஷத்திற்றோன்றிய
பிரகாசஞான ஸ்ரீவிருக்ஷஸ்பரிசக்காற்று எட்டியவரையில்
உள்ளவர்களின் சர்வரோகங்களும் நீங்கும். சிவத்துரோகத்
தால் உண்டானரோகமாயின் விமோசனகாலத்தில் அக்காற்று
அவர்கள்மேல் ஸ்பரிசமாகித்தீரும். ஆதேனெனில் குருத்
துரோகி சிவத்துரோகிகளின் உடலில் நற்காற்று அமராது.
அவ்விருக்ஷசாயல்பட்டால் பஞ்சமாபாதகங்களும் நீங்கும்,

அவ்விடத்தில் லோகபாலாள் சனகாதியோகிகள் அகஸ்தியா திரிஷிகள் காலாங்கிமுதலியசித்தர்கள் வசிக்கிறார்கள் எங்கிரு ந்தேனும் மரணகாலத்தில் அத்தலத்தை ஏறநோக்கி மிருத்யு ஞ்ஜயமஹாமந்திரத்தை ஜபித்தால் காலபாசம் கண்டத்திற்சி க்கி வருத்தாது. அவ்வில்வமூலத்திற்றங்கி ஜபம்செய்தால் ஒன்று கோடியானபலனைத்தரும். சமாதிகூடும். அங்குதீர்த் தம்பானம்பண்ணத் தானம்செய்தால் பக்திவளரும். இந்த வில்வவனத்தைப்பற்றிய ஒருகதை சொல்கிறேன் கேளுங்கள் முற்காலத்தில் சந்திரபூஷணன் என்கிற கோளதேசத்தரசனி டத்தில் தீர்த்தயாத்திரையாகப்புறப்பட்ட தேவசர்மாவென் னும் ஒரு பிராமணன் அன்னம்கேட்க அரசன் இன்றையத்தி னம் எம்மனையில் பிதிர்சிராத்தம் செய்வதால் காலதாமசமா கும் விரைவிற்புஜிக்கும்படி எனதுகுருவின்கிரகத்தில் நியம னம் செய்கிறேன் நித்யவிதிமுடித்து வாரும் என்று உரைத் தார். பிராமணன் உமதுகிரகத்தில் எனக்கு அன்னமிட வேண்டும் என்றார். அதற்கு அரசன் சிரார்த்தபக்ஷத்தில் த ன்தேகத்தினின்றும் உரோமம் இரத்தம் முதலியதும் பிரியப் படாது சிராத்ததினத்தில் அதற்குமுன் அக்கிரகத்தில் இரு ந்த புல் சாம்பல் விறகு வராட்டி முதலியதும் கொடுக்கப்ப டாது தவறிச்செய்யின் சிராத்தம் நஷ்டமாவதுடன் பிதிர்க் கள் சாபம்இடுவார்கள் என்று ஸ்மிருதிவசனம் கூறுகின்றது. அல்லாது பிராம்ஹணார்த்தத்தில் வரிக்கலாமென்னிலோ சிராத் தவிதிப்படி நேற்றையத்தினமே வரித்துவிட்டேன். எனது

கிரகத்தில் உமதுபசிமீருவண்ணம் அன்னம் இடும் எது என க்கு ஒன்றும் தோன்றவில்லை என்றார். அதைக்கேட்டபிரா மணன் அரசனை அபஸ்மாரியாககடவதென்று சபித்தார் நியாயங்களை உரைத்தும் கேளாத பிராமணனை அரச ன்யக்ஷசாகும்படி திட்டினார். அவ்விருவரும் உடனே சாபப்படி ரூபம் அடைந்து அனேககாடுகளில் செயத்த கா இழிதொழிற் புரிந்து நெடுநாள்திரிந்து பூர்வபுண்யவ சத்தால்சீர்காழியில் ரோமசரிஷி ஆச்ரமவாசலில்ரோமசர் வைசுவதேவத்தை முடித்துக் காகபலியிட வெளியில்வருஞ்ச மையத்தில் அவ்வன்னத்தைக்கண்டு பற்றும்படி அவ்விருவ ரும் நெருங்கினார்கள். அவர்களை ரோமசர் கண்ணுற்றார். அப்புண்யவசத்தால் அவ்விருவர்களும் நற்சிந்தையுற்று ரோம சரை வணங்கினார்கள். இருஷி காகபலிபிட்டு அவ்விருவரை யும்நோக்கி உங்கள் சாபம் நீங்கும்படி ஒருபாயம் உரைப்பே ன் கேண்மின்கள், இதன் தென்பால் வில்வாரண்யம் என் ெருரு தலம் இருக்கிறது. அதில் பிர்ம்மா ஞானம்பெறும்படி உதித்த ஸ்ரீ விருக்ஷம் ஒன்றிருக்கிறது. அதன்காற்று உட லில் அமர்ந்தால் சர்வரோகங்களும் பாபங்களும் நீங்கும் அ தன்மகிமை மிகவிசேஷமாகும். அங்கு ஏகுவீர்கள் என்று இரக்கமாய்க் கூறினார். கூறிய மஹாரிஷியைப் பணிந்து வில் வவனத்தை நோக்கிப்புறப்பட்டுக் காவேரியின்தென்கரையில் வருகையில் ஸ்ரீ விருக்ஷத்தின் காற்று தென்னலாய் அவர்கள் உடலில் உலவுவதைக்கண்டு உட்கொண்டமாத்திரத்தில் அவ

ர்களைப்பற்றிய அபஸ்மாரமும் யக்ஷசும் நீங்கி அறிவொடுமகிழ்வோங்க வில்வவனம் அடைந்து பரிசுத்தமாகிய ஞானவாபியிற்படிந்து நித்தியகர்மங்களைமுடித்து அங்குதபம்செய்யும் பெரியோர்களைப்பணிந்து வில்வவிருக்ஷத்தை பதினறு பிரதக்ஷணம் செய்து சத்தி சிவத்தை தரிசித்து பிராமணன் ஐந்து தினமளவையில் திரிகாலஸ்நான பஞ்சாக்ஷர ஜபமும் வித வழுவாதபூஜையும் நூறுபிரதக்ஷணநமஸ்காரமும் தினமசெய்து திவ்வியதேகத்துடனே சிவபதம் அடைந்தார். அரசன் தனது பாரியபுத்ராதிகளை வரவழைத்து தீர்த்தக்கரையில் சிராத்தங்களை முடித்து அனேக தானதிகளும் ஆலயத்திருப்பணிகளும் செய்து வந்தானென்று சூதர் கூறினர்.

தேவசர்மா முத்திபெற்றசருக்கம் முற்றிற்று.

## ௬. சந்திரபூஷணன் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகள் சந்திரபூஷணன்சரித்திரத்தை முற்றும்புகலவேண்டும் என்று சூதரைவினவ ரிஷிகளே அவ்வரசன் அமுர்தலிங்கபூஜைக்காகவேண்டிய திரவியங்கள் உண்டாகும்படியான பூமிகளும் நந்தவனங்களும் ஏற்படுத்திவிசே

தேவலோகத்தை அடையும். முக்தியைவிரும்பி இத்தலத்தில் மரணகாலம்வரையில் வசிக்கின் முக்திகூடும். அத்தலத்தில் அன்னதானஞ்செய்யின் சக்கரவர்த்தியாய்ப்பிறந்து விசேஷ தானாதிகளைச்செய்யும் ஏதுவுடன் நற்கதியடைவர். ஆனி ஆடி மாதத்தில் தீர்த்தஸ்நானமும் மார்கழியில் விறகும் ஆவ... புரட்டாசியில் வஸ்திரமும் கார்த்திகையில்தாம்பூலமதிலப்கா... பளம்இரும்புப்பாத்திரமும் அத்தீர்த்தக்கரையில் தானஞ்செய்யின்மஹாபாபங்களும் நீங்கும். ஞானவாபியின்வடபா... உள்ளவில்வவிருக்ஷத்தின்கீழ் சிவபூஜைசெய்யின் ஒன்றுகோடியானபலன்விளையும் என்றுசூதர்ஓதினார்.

சந்திரபூஷணன் முத்திபெற்றசருக்கம் முற்றும்.

# தருமசீலன் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகள் சூதரைநோக்கி மசாம்முதலி சுவல்பஜந்துக்களும் அத்தலத்தில் இறக்கின் முக்திபெறு என்பதைப்பற்றிய ஒரு பூர்வசரித்திரம் எங்கட்கு உரை... வேண்டும் என்று வினவினார்கள். அதற்கு அமுதபுஷ்கரயின் விசேஷங்களைத் தெரிந்துரைக்க யாராலும்முடியாது வதேவாதிகளும் அதன்கரையில் சந்தியாவேளையில் தபம்செ

கிறார்கள். சந்திரனுகிய அமுதபுஷ்க்கரணி சூரியனுகிய சண்டபுஷ்க்கரணி அக்னியாகிய ஞானபுஷ்க்கரணி என்னும் முத்துறையுடைய சர்வாதாரதீர்த்தம் அனேக ஜன்ம சத்கிரியாவான்கட்கு பாத்திரம் உத்கிருஷ்டமாயும் மஹாபாபிகட்கு நிகிர்ஷ்டமாயும் விளங்கும். உருத்திராக்ஷம்பூண்டு அதன்கரையில் பஞ்சாக்ஷரம ஜபிக்கின் மேலானபலனைத்தரும். ஸ்படிகம் முத்து குசமுடிச்சு ருத்திராக்ஷம் பவளம இவைகளின் ஒன்றின் மாலையால் எண்ணி நூறு ஆவர்த்தி பஞ்சாக்ஷரம ஜபிக்கின் நான்குவேத பாராயணபலனும் அசுவ கஜ கபில கன்னிகாதான பலன்களும் அடைவார்கள் விராஜஹோமம் அக்னிஹோத்திரம் தாபதிரீஹயக்ஞியனோடு சிவசன்னிதி குருவினிடத்திற்பெற்றனோவது விதிமுறை இட்டேனும் அல்லது கலாசுத்திசெய்தனோவது அதன் கரையிலன்று பெறுதியில் அணியின் அசுவமேதபலனும சிவஞானமும் அடைவார்கள். தானம் தயை சாந்தம் அஹிம்சை இந்திரியநிக்ரஹம் பக்தி பரோபகாரம் பரதிரவியநிக்கிரஹம் பரஸ்திரீநிக்கிரஹம் மாதாபிதாகுருவாக்கியபரிபாலனம் சதயம் மஹாமந்திரஜபம் ஆனந்தம் என்னும் தீர்த்தங்களின் ஸ்நானத்தின் பின்றான் அமுதபுஷ்க்கரணி ஸ்நானம் கிடைக்கும். ஞானமுதபுஷ்க்கரணியில் தோயப்பெற்றோர் பெருமையை அளவிடற்கரிதாகும். நதிஸ்நானத்திலும் தடஸ்நானம் விசேஷம நதத்தில் தக்ஷணவாகினியும் நதியில உத்தரவாகினியும் விசேஷம். அவைகளில் சமுத்திரவாகினி விசேஷம். நதம் நதி தடாகம் கூபம்

ஷ ஆபரணங்கள் செய்வித்திட்டு வேதாத்தியயன பிராமணரு
க்கும் பரிசாரகர்கட்கும் ஐந்நூறு கிராமங்கள் தானம் செய்
து பன்னீராயிரம் பசுவும் பசுக்களின் ஜீவனார்த்தம் வடபா
ல் புல்லாரண்யமும் விட்டு நித்யத்திருப்பணிக்கான நியமன
மும் செய்து சித்திரைமாதம் சித்ராபௌர்ணமி அமுதபுஷ்
க்கரணியில் புஷ்பமெடுத்த அத்தினத்தில் மகாதீர்த்த
பருவமடி பதினெட்டு நாளும் பிர்மமோத்ஸவமும் அவ்வுத்
ஸவகாலங்களில் தினம் ஆயிரம் பிராமணருக்கு ஷட்ரசா
ன்ன திருப்திபோஜனமும் உத்ஸவதரிசனிகட்கு அன்ன வஸ்
திர கெந்த புஷ்ப தாம்பூலங்களும் கூன் குருடு நொண்டி க
ருத்தர்பவரினர் பாலர்கட்கு அன்னம் பக்ஷணவகைகள் பா
யசம் ராக்ஷை முதலிய விருப்பம் பதார்த்தங்களை அங்
ங்கு சென்று உபசரித்து அளித்தர்ப்பு ஏற்படுத்தி அநேக
கிராமங்களை தானஞ்செய்து தனது மூத்தகுமாரனாகிய ரத்னபூஷ
ணனுக்கு அரசளித்து தான் பத்னியுடன் வில்வவனத்தில்
வசித்து தினம் அமுதபுஷ்கரணியில் முக்காலம்படிந்து சத்
திசிவத்தைப் பரிபாலித்தவைதைகளுடன் விதிப்படி பூஜித்து வி
ல்வதளத்தால் அர்ச்சித்து ஒவ்வொருதினமும் ஹராசம்போ
மஹாதேவா பார்வதிபதயே சங்கரா கைலாசவாசா கருணா
ர சூலகபாலஹஸ்தா காமதஹனா கௌமாரிற்றேசா பக்தவ
த்ஸலா பிர்ம்மஸ்வரூபா பாபநாசா போற்றிபோற்றி அடியேன்
அனேக அபராதியாயினும் மாதாபிதாவாகிய தாங்கள் க்ஷமி
த்து கிருபைசெய்யவேண்டும் என்று துதித்து வருங்காலத்தி

செங்கோளின்பின் வைகாசிமாதம் விசாகபௌர்ணமிமாத்தியான வேளையில் இராஜா துதிக்கும்போது ஸ்படிகவர்ணமாகிய சுதாலிங்கத்தில் உமையோடு சிவன் தோன்றி மகாஹாசமாய் அரசனே உனது பக்தியை மெச்சினோம் உனக்குவேண்டியது அருள்வோம் என்று திருவாய்மலர்ந்தார் அரசனும் இராஜபத்னியும் ஐந்துபிரதக்ஷணம் நமஸ்காரஞ்செய்துகிருபைக்கடலே எங்கள்வம்சவிர்த்தியுமெங்கட்குநல்லவாழ்வும்முக்தியுங்கடா க்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அரசன் அளித்தோம் என்று அருளிசிவலிங்கத்துள் அமர்ந்தார் பின்பு இருவரும் இலிங்கத்துக்குத்த கோடிசூரியப்பிரகாசனை சிலகாலமதியானித்திருந்து சிவபதம அடைந்தார்கள்.

வைசாகபௌர்ணமியில் இன்னும் அனேகர்சுதாலிங்கத்தைப்பூஜித்து முத்தியடைந்திருக்கிறார்கள் அத்தலத்துள்ள அமுதபுஷ்க்கரணியில் மார்க்கநடையின்சிரமபரிகாரநிமித்தம் ஸ்நானம் செய்தாலும் சர்வபாபங்களுமநீங்கும்பசுபக்ஷி மிருகங்களும் அத்தீர்த்த ஸ்பரிசமாயின் முக்தியடையும் அத்தலத்தில் ஜலம் ஆயுதம் விஷம் துர்வியாதி சத்துரு முதலியதால் பூர்வசோடக்கின்படி துர்ம்மரணம் ஏற்பட்டாலும்அக்காலத்தில் அமுதீசனது அன்பர்களைத்தியானித்தால் பிசாசத்துவம் அடையாமல் மறுஜனனகாலம்வரையில் ஏகாதசருத்திரர்களால் காக்கப்படுவார்கள். ஈமுதலிய சுவல்பஜந்துக்களும் அத்தலத்தில் இறக்கின் திவ்யசரீரமாய்

துங்கவேணியில் மூழ்கும் புண்யவிசேஷத்தை பிர்ம்மதேவனு
ற்றான் உரைக்கலாம் மாசி சிவராத்திரியிலும் பங்குனி பௌர
ணமியிலும் மூழ்கின் சௌபாக்ய முக்தியடைவார்கள்;

கலிங்கதேசத்தில் தருமசீலனென்ற ஒருபிராமணன் பொருளிச்சையால் பிறர்க்காக ருத்திரஜபஞ்செய்தும் பொருள்பெற்றுவேதம் ஓதுவித்தும் பரான்னம்புஜித்தும் திரணமேனுந்தர்ம்மமில்லாமல்சிரார்த்தபோஜனத்தையேவிரும்பிப்புஜித்துவரும் ஓர்தினத்தில் வில்வவனஸ்தலயாத்திரியாய்வந்த ஒருபிராமணன் புஜித்த சேஷான்னத்தைச் சாப்பிட்டு அஜீர்ணமுண்டாகி மரணவேதனையடைய காலதூதுவர்கள் பயங்கரவுருவத்துடன் தோன்றி மிகவருத்தி யமலோகங்கொண்டுபோய கும்பிபாகம்முதலிய நரகங்களில் நெடுநாளிருத்தி கோடிசண்டாளஜன்மங்களும் அனேகநாய்ஜன்மங்களும் ஒருகாகஜன்மமும் அளிக்க அக்காகஜன்மத்துடன் ஆயிரவருஷம் பலவித துக்கத்தாலும் பசியாலும் வருந்தி ஒருநாள் பெருங்காற்றில் அடிபட்டு இரவில் ஓர்வனத்துள்ள கோட்டான்களால் கொத்தித்துரத்தப்பட்டு சூரியவுதையத்தில் பறக்கமாட்டாமல் பூர்வஜன்மத்தில் ஸ்தலயாத்திரியின் சேஷான்னத்தைப் புஜித்த புண்ணியவசத்தால் [illegible]க்ஷேத்திரத்தில்வீழ்ந்து உயிர்விடும்போது தேவலோகத்திலிருந்து சிவதூதர்கள் விமானங்கொண்டுவந்து சுவர்ணக்காக்கைரூபசம்படிசெய்து இரதத்திலே ஏற்றிக்கைலையையடைந்தார்கள், இவ்வகை நான் மஹரா

பாபி எனக்கு இந்ததீர்த்தத்தால் பாபம்போய் புண்யதேகம் கிடைத்தது சற்றிருங்கள் வருகிறேன் என்று தீர்த்தத்தால் பிதிர்தர்ப்பணஞ்செய்து பூகிருத்திராக்ஷம்பூண்டு தேவதூதர்களுடன் சிவதரிசனஞ்செய்து விமானமேறி தேவவுலகஞ்சென்றது. என்று சூதபுராணிகர் மொழிந்தனர்.

தருமசீலன் முத்திபெற்றசருக்கம்முற்றும்.

# 8வது காலநிர்ணயச்சருக்கம்

நைமிசாரண்யவாசிகள் சூதரைநோக்கி பிரளயகாலங்களிலும அழியாதிருங்களென்று முன்னுரைத்த மார்க்கண்டேய முனிவரது சரித்திரத்தை யாங்கள் அறியும்படி புகலவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். ஹேரிஷிகளே கண்ணிமையிரண்டு கைநொடி. கைநொடிஇரண்டு மாத்திரை. மாத்திரையிரண்டு குரு. குருவிரண்டு லகு. லகுவிரண்டு துரிதம். துரிதமிரண்டு காஷ்டை. காஷ்டையிரண்டு விநாடி. விநாடி அறுபது கடிகை. கடிகையிரண்டரை முகூர்த்தம். முகூர்த்தம்இருபத்தினொன்று நாள். நாள்ஏழு வாரம். வாரமிரண்டு பக்ஷம். பக்ஷமிரண்டு மாதம். மாதமிரண்டு ரிது. ரிதுமூன்று அயனம். அயனமிரண்டு வருஷம். இவ்வருஷம் நூறுசென்றால் மானி

களிலும் ஈசுவராருகமாம்படி தேவாதிகளாலாக்கியது உத்த மம். அதிலும் ஈசனாற்றாப்பட்டது உத்தமம். ஆனதால் ஞானப்பிழம்பாய் ஈசனருளிய தீர்த்தம் மிகவிசேஷமு ள்ளதென்பதைத் தெரிந்து ஒவ்வொரு மாதப்பிரவேசத்தி லும் அமுதபுஷ்கரணியில் நின்று சிரசில் அறுகும்பூவு ம் கூட்டி பதினாறு பன்னிரெண்டு எட்டெனும் ஒரேஆவ ர்த்தியாக அமுதலிங்க விமானநோக்கமாய் அலைகள்சிதறாது மூழ்கின் பிர்ம்மஹத்திமுதலிய பாதகங்களும் மித்ருத்துரோ கதோஷமும் நீங்கி முத்திபெறுவர்கள். சித்திரைமாதம் ஞாயிற்றுக்கிழமையில் முன்சொன்ன விதிப்படி மூழ்கிச் சிவ தரிசனம் செய்தால் சர்வபாபமும் நீக்கும் வைகாசிமாதம் மு ன்போல்மூழ்கித் தர்ப்பணங்கள்செய்தால் பிதிர்க்கள்எல்லோ ரும் திருப்தி அடைவர்கள். அதன் கரையினின்று அம்மா தத்தில் தயிரன்னமும் ஜலத்துடன்பாத்திரமும் தானம்செய் யின் மரணகாலத்தும் ஐம்பெருக நாயிர்குன்றாது. ஆனிமாத ம் பௌர்ணமியில் விஷ்ணுக்கிராந்திசைச் சிரசில்வைத்துக்கொ ண்டு அசுவக்கிராந்தை என்னும் ருத்திரமாவது பஞ்சாக்ஷர மாவது ஜபித்து ஸ்நானஞ்செய்து வில்வநாதரைத் தரிசித்தா ல் பன்னிரெண்டு தலைமுறைவரையில் சந்தோஷசந்தானவிரு த்தியை அடைவர்கள். ஆடிப்பௌர்ணமியில் ஸ்நானஞ்செ ய்து வில்வநாதருக்கு நெய் பாலுடன் அபிஷேகித்து சர்க்க ரைப்பொங்கல் நிவேதித்து தாமரையாலர்ச்சித்தால் காராவி ன் நெய்விளக்கிடின் குன்மம் நீங்கும். ஆவணிமாதம் ஸ்தி

வாரம் படிந்து அபிராமியம்மனுக்கும் அமுதீசர்க்கும் அபி ஷேகித்து காலகாலசன்னிதியில் கம்பளம் அல்லது கறுப்பு வஸ்திரம் இருப்புப்பாத்திரம் தானஞ்செய்தால் சனீசுவர தோஷம்நீங்கி சுகமபெறுவர். ஆவணிஞாயிற்றுக்கிழமையி ல் அருணோதயஸ்நானம்பண்ண பாபிகட்குக்கிட்டாது. புர ட்டாசிமாதம் அஷ்டமியில் தோய்ந்து அமுதலிங்கத்திற்கு அபிஷேகித்துத் திலான்னம் நிவேதித்து நான்கு அல்லது மூ ன்று பிராமணருக்கு இடுபவர்களின் வம்சபிதிர்க்கள் அமு தபானம்பண்ணின திருப்தி அடைவர்கள். அற்பசிமாதம் முழுதும் துலாத்தில் சூர்யனுதிக்கும்வேளையில் மூழ்கி தர்ப்ப ணங்கள் செய்யின் காவேரிஉற்பத்திமுதல் சங்கமம்வரையில் தினம் மூழ்கி தர்ப்பணஞ்செய்தபலனை அடைவர்கள். கார் த்திகைமாதல் திங்கள் ஞாயிற்றில் படிந்து சக்திசிவதரிசனம் செய்யின் சாரூப்பியத்தை அடைவர்சள். சிவத்தை பஜித்து நெய்விளக்கிட்டு மூன்றுபிரதக்ஷணம்செய்து முன்பணிபவர் சாயுச்சியத்தை அடைவர்கள். கார்த்திகைமாதம ஞாயிறு தி ங்களில் அமுதபுஷ்க்கரணியைத்தியானித்து எந்ததீர்த்தத்தி ல் படிந்தாலும் தனதான்ய புத்திர பௌத்திராதிகளைப் பெ றுவர்கள். அந்தத்தலத்தில் அன்று பாலகில்ய தீர்த்தங்களி ல் எதில்மூழ்கினும் மகிழ்வோங்கும். மார்கழிமாதம்பௌர் ணமியில் சுதாதீர்த்தத்தில் மூழ்கி அமுதீசர்க்கு நெய் பால முதலிய அபிஷேகித்து தேன்கலந்த சர்க்கரைப்பொங்கல் நி வேதித்தால் மஹாதனவான்களாவார்கள். தைமாதம் பிரஹ

டர்க்கு ஆயுள் முடிவாகும். மேற்கூறிய அயனம் இரண்டு கொண்டது தேவர்கட்கு ஒருநாள். அப்படியாகிய நாள் முன்னூற்றறுபத்தைந்து சென்றால் ஒருவருஷம் அவ்வருஷம் நூறுசென்றால் தேவர்களின் ஆயுள் முடிவாகும். இந்த தேவவருஷம் பன்னீராயிரம் சென்றால் பிர்ம்மதேவனுக்கு ஒருபகல். பிர்ம்மாவினுடைய ஒருபகலில் பதினான்கு இந்திரர்கள் இறக்கிறார்கள். அவர்கள் இறக்கும்போதெல்லாம் ஒவ்வொருபிரளயம உண்டாகும். அதற்கு நைமித்யப்பிரளயம் என்று பெயர், பிர்மமாவின் பகல்முடிவில் நடக்கும் பிரளயத்திற்கு நித்தியப்பிரளயம என்று பெயர். இப்படிப்பட்ட நாள் முப்பது கொண்டது பிர்ம்மாவிற்கு ஒருமாதம். மாதம்பனிரெண்டு வருஷம். இவ்வருஷம் நூறு சென்றால் பிர்ம்மாவின் ஆயுள்முடிவாகும். அக்காலத்துண்டாகும பிரளயத்திற்குப் பிரம்ம பிரளயம் என்றுபெயர். பிர்மமாவின்முடிவுகாலம விஷ்ணுவிற்குஓர்பகல். இவ்விதம, நாள் முந்நூற்றறுபத்தைந்துசென்றால் ஒருவருஷம். அவ்வருஷம் நூறுசென்றால் விஷ்ணுவின் ஆயுள் முடிவாகும் விஷ்ணுவின் முடிவுகாலம் ருத்திரனுக்கு ஒருபகல். இம்மாதிரியாகிய நாளின்படி நூறுவருஷம் சென்றால் சர்வசங்காரஞ்செய்து லயமாவர். எவ்வளவுகாலம உலகம் இருந்து விளங்குகிறதோ அவ்வளவுகாலம் சூனியமாயிருந்து நித்யவஸ்துவினிடத்தில் அபின்னமாயுள்ள சத்தியின்வீயாபகத்தால் பின்னும் ஒடுங்கியதுபோல் சகலமும உண்டாகும். அப்படிஉண்டாவதில் விஷ்ணுவின் ஒருபகலில் ஒருபிர்ம்ம

கல்பம்முடிந்து மறுபகலின் உதயத்தில் விஷ்ணுவின் உந்தியில் பின்னும் பிர்ம்மா உதிப்பார். பிர்ம்மா உதிக்கும் கல்பத்திற்கு பாத்மகல்பம் என்று பெயர். பின் ஜலத்தில் அமிழ்ந்த பூமியை விஷ்ணு வராகரூபமாய்த் தாங்குவதற்கு வராககல்பம் என்றுபெயர். இவ்விதமாகும் ஒரு வராககல்பத்தில் ஆதிகிருதயுகத்தில் ரிசியசிருங்கரென்றவரின் குமாரர் மிருகண்டேயர். அவர்குமாரர் மார்க்கண்டேயர் என்பவர் முன்சொல்லிய பிரளயகாலங்களிலும் அழியாத நித்தியத்துவம் அடைந்திருக்கிறார். மாஹான்கள் சர்வஉபாதிகளையும் அந்தம் என்பதையும் இராப்பகல் என்னும் காலங்களையும் தான்என்பதையும் லயமாக்கி நித்தியமாவர்கள். அவர்களின் மகிமையை யாராலும் அளவிடமுடியாது. அவர்கள் ருத்திரப்பிரளயத்திலும்அழியார்கள். என்று சூதமுனிவர் உரைத்தார்.

8 வது காலநிருணயச்சருக்கம் முற்றும்

# 9 மிருகண்டு தவம்புரிசருக்கம்

நைமிசாரண்யவாசிகளே மார்க்கண்டேயரென்னும் பக்தசரித்திரம் உள்ளம்என்னும் தலத்தில் மதியென்னும் வித்தாய்த்தங்கி சித்தியென்னும் பயிராய்வளர்ந்து முக்தியென்னு

ம் கதிராய் விளையும். சாவதானமாய்க் கேளுங்கள், மிருக
ண்டுவென்பவர் தன்பிதாவாகிய ரிஷியசிருங்கரென்பவரின் ம
ரணாந்தத்தில் வேதவிதிப்படி உத்தரக்கிரியைகளை முடித்து
தனக்குப் புத்திரன் இல்லையென்று கவலைமேற்கொண்டு ஆலோ
கவிரதங்களை அநுஷ்டித்து புத்திரகாமேஷ்டி செய்தும் புத்
திரன் உண்டாகாததால் மிகவியாகுலமுற்றுக் காசியில் சி
க்குங்காலத்தில் நாரதமுனிவர் அவரிடமடைந்து ஹே மிருக
ண்டுவே நீர் புத்திரன் இல்லையென்ற விசனம் உடையவேண்
டாம் மூவுலகும் வியக்குமபடி சுலக்ஷணமுள்ள புத்திரன் செய்
வாதினத்தால் உண்டாவான் நீர் பத்தினியுடன் வில்வவனஞ்
சென்று சிவபிரானைக்குறித்துத் தபம்செய்யும் என்று புகன
று சென்றார். பின்பு இருவரும் நாரதர் உரைத்த வண்ணம்
வில்வவனத்துள்ள மணிமேட்டில் தபம செய்யும்போது உமா
ஸகேதசமேதராய் ஈசன் விடைமேற்றோன்றி மிருகண்டுவே
உமது பத்தினியோடும் செய்யும் தபத்தால் மகிழ்வுற்றோம் உம
க்கு வேண்டியதருள்கின்றோம் என்று அருளியவுடன் மிருகண்
டுவும் மருத்துவதியும் சிரமேற்கைகூப்பி தேவதேவா ஜக
ந்நாதா பிருகிருதிஸ்வரூபா கல்யாணஸ்வரூபா மாயாஸ்வரூபா
சுவர்ணமாலிகாபரணா ஜகன்மாதா ஜகத்பிதா ஜகத்குரு ஜ
கத்ஸ்வரூபா விராட்சுவரூபா சுவராட்சொரூபா சம்விராட்சு
வரூபா திரிஸ்வரூபா திரிமூர்த்திஸ்வரூபா உற்பத்திலயா
தாரா பஞ்சகிருத்யசுவரூபா பஞ்சகிருத்யசாக்ஷிணீ பஞ்சகி

ருத்யருடனு உமாஸ்கந்தசமேதா போற்றிபோற்றி என்று துதித்து கிருபாநிதே உமது திவ்யதேஜோன்மயஸ்வரூபத்தைத் தரிசித்துப் பேரானந்த முற்ற எங்களுக்குப் புத்திரம் அனுக்கிரகிக்கவேண்டும் என்று பணிந்தார்கள். சிவபிரான் மிருகண்டுவே சற்குணனைப் பதினாறுவயதுள்ளவனாகவே பக்தியீனமாய் நூறுவயதளவிலோ உமதபேக்ஷயாதென்றார்.

பக்தப்பிரியா உம்மைபக்திபண்ணும்படியான சத்புத்திரனை கடாக்ஷிக்கவேண்டும் என்று இருவரும் பிரார்த்தித்தார்கள். சோமாஸ்கந்தமூர்த்தி ஈரெட்டுவயதளவாய் உள்ள புத்திரன் தந்தோம் என்று திருவாய்மலர்ந்து கணங்களோடும் மறைந்தருளினார். மிருகண்டுவும் மருத்வதியும் அபிராமிசமேத அமுதலிங்கத்தை மூன்றுதினம் விதிப்படி விசேஷபூஜைசெய்து எங்களுக்கு நல்வரம் அளித்த மகாபௌர்ணமியில் உம்மைப்பூஜித்துத் தெரிசிப்பவர்கள் சுபுத்திரனை விரும்பின் அடையவேண்டும் என்று பிரார்த்தித்துப் பூரண சந்தோஷத்துடன் அங்குள்ள ரிஷிக்கூட்டங்களையும் வில்வ விருக்ஷங்களையும் பணிந்து கங்காதீரம்சென்று வாழ்ந்தார்கள். என்று சூதபுராணிகர் மொழிந்தனர்.

மிருகண்டு தவம்புரி சருக்கம் முற்றிற்று.

# மார்க்கண்டேயர் உற்பத்திச்

# சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே மிருகண்டு பத்னியுடன் தன்னாச்சிரமமடைந்து சிலநாள் வசித்துவருங்காலத்தில் பங்குனி மாதம் சதையநக்ஷத்திரம் கும்பலக்கினத்தில் குருபகவான்கேந்திரிக்ககிரஹமாலிகாயோகத்தில் மருத்துவதியின்கருப்பத்தினின்றும் மார்க்கண்டேயர் உதித்தார் உலகில்உள்ள சர்வஜனங்களுக்கும் அகஸ்மாத்தாய் மகிழவோங்கிற்று மிருகண்டு விரைதானம்முதலிய புத்ரோத்ஸவமகொண்டாடி வேதவியாசரால் குழந்தையின் ஜாதகத்தை வரைந்திடப்பெற்று எல்லோருள்ளத்தும் சுகுணம் இலக்ஷணம் முதலியதால் மகிழ்வோங்கச்செய்யும் மார்க்கண்டேயரை நலுங்கு போனகமுதலியதால் வளர்த்து வேதவிதிப்படி மற்றும்கடந்திவித்தியாப்பியாசம செய்விக்கும்போது தெளிந்து அசையாத நீரின் பூரணசந்திரப்பிரதிபிம்பம்போல குருமுன்னால் மார்க்கண்டேயருள்ளத்தில் வேதம்முதலிய அமர்ந்து வேதவிதிப்படி அறம் பொருள் இன்பம் அன்பு மதிப்பு பொறுமை முதலிய நல்லொழுக்கம் வாய்ந்து அமர்ந்துவருங்காலத்தில் திரிகாலமுமுணர்ந்த நாரதமஹாமுனி விஞ்ஞானத்தோடு சிவஸ்மரணை செய்துகொண்டு

மிருகண்டுவின் ஆசிரமத்திற்கு வந்தார். அம்மஹாமுனியை மிருகண்டு மருத்வதி மார்க்கண்டேயர் மூவரும்பணிந்து ஆசனம அளித்தல் முதலியபதினாறுஉபசாரமும் செய்து பாதபிரக்ஷாளனம்செய்த தீர்த்தத்தை சிரசில்புரோக்ஷித்து ஆசமனம்பண்ணி நாரதர்முன்னின்று மார்க்கண்டேயரின் மாதாபிதா இருவரும் கிருபைநிறைந்தமஹாமுனியே பாபியாகிய எங்களுக்குப் புத்திரனுண்டாகும்படி மிகஇரகஸியமான உண்மையை உரைத்ததால் புத்திரன்கிடைத்தான் வயதுபதினாறளவாய் ஈசன் அளித்திருக்கிறார் என்றார்கள். நாரதர் மார்க்கண்டேயரின் சாமுத்ரிகாலக்ஷணங்களைப் பார்த்து பூர்ணாயுள் உண்டாகும் என்றுரைத்து மார்க்கண்டேயரைத் தமதாகரத்தால் சிரமுதற்றடவி மார்க்கண்டேசத்குரு பிர்ம்மரந்திரத்தில் ஞானஜோதிமயமாய் விளங்கும் சுதாவை நயனஜோதியினிடை அழியாதேறி அடைந்த மஹான்களின் அருள்பெற்று அங்குற்றால் பூர்ணாயுளைப்பெறலாம் என்று திருவாய் மலர்ந்தவுடன் மார்க்கண்டேயர் நாரதரின் பாதத்தில் பணிந்தார் நாரதர் தீர்க்காயுஷ்மான்பவவென்று ஆசிர்வதித்துத் திருநீறிட்டு சப்தரிஷிகளையும்பணியும்விதத்தையுரைத்துத் தமதாச்சிரமம்சென்றார். மார்க்கண்டேயர் நாரதமஹாமுனியருளியபடி சித்தாதிகளைக்கண்டு பணியச்செல்லும்பொருட்டு மாதாபிதாவினிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு பிராம்மணாளையும் தபசிகளையும் பணிந்து ஆசிபெற்று சப்தரிஷிகள் சேர்ந்திருக்கும் சபையிற்சென்று சாஷ்டாங்கமாய்ப்ப

ணிந்தார். வசிஷ்டர் தவிர மற்றைய ஆறுரிஷிகளும் தீர்க்காயுஷ்மான்பவவென்று ஆசிமொழிந்தார்கள். வசிஷ்டர் மௌனமாயிருந்து ஆசியளித்த ரிஷிகளைநோக்கி இம்மிருகண்டுசுதனுக்கு ஈசன் பதினாறுவயதளித்திருக்க பூர்ணாயுள் அடைவாயென்று உரைத்தீர்களே இனியிதற்கென்செய்வது ஆயினும் இம்முனிசுதனுக்கு பாதுகாசித்தி ஆகாசகமனம் குளிகாசித்தி முதலியவை அளித்து சத்யவுலகம் செல்வோம் என்று அவைகளைத்தெரிவித்து மார்க்கண்டேயரை அழைத்துக்கொண்டு மற்றைய ஆறுரிஷிகளுடன் சத்தியவுலகம்சென்று சபதப்பிரகாரங்களிலுமுள்ள ரிஷிகூட்டங்களைப்பணிந்து அவர்களால்ஆசிபெறுமபடிசெய்து அழைத்துக்கொண்டு பிர்மதேவரை சபதரிஷிகளும் நமஸ்கரித்தார்கள். அவர்களுடன மார்க்கண்டேயரும் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தார். பணிந்த மார்க்கண்டேயரின் சீலம் நறகுணம் சிவசின்னம் முதலியவைகளைக்கண்ட அம்புயனும் தீர்க்காயுஷ்மான்பவவென்று ஆசீர்வதித்தார். வசிஷ்டர் அஞ்சலியஸ்தராய் நின்று சத்யலோகாதிபதி ஓர்விண்ணப்பம் மிருகண்டுபுதல்வனாகிய இம்மார்க்கண்டேயருக்குச் சிவபிரான் பதினாறுவயது அளித்திருக்கத் தாங்களும பூர்ணாயுள் அடைவாயென்றீர்கள், சர்வரிஷிகளும் அவ்வாறே உரைத்திருக்கிறார்கள் என்றார். சதுர்முகன் இதற்கென் செய்வது நமக்குச்சமானமானவயதை பரமசிவனாற்றான் தரலாம் என்றெண்ணி மார்க்கண்டேயரின் சிரசில் தன்வலக்கரம் வைத்து நான்வசிப்பது சத்யலோகமாயும் என்

வார்த்தை சத்யமாயும் ஈசுவரனை பக்திபண்ணி நித்யம்முத லிய வேண்டியதைப்பெறலாம் என்பதும் சத்யமாயின் இந்த மார்க்கண்டேயன் பூர்ணாயுள் அடைவன் என்று பிரதிக்கினை செய்து நானசிவனை மறவாதவனாயின் நான்சொல்வது பொய்க்காது ஹேகுழந்தாய் மார்க்கண்டா மந்திரசக்தியற்றுன் சிவத்தை அடையலாம் அகஸ்தியாதி மஹாரிஷிகளும் மந்திரசக்தியைக்கொண்டே சர்வசித்திகளையும நித்யத்துவத்தை யும் அடைந்திருக்கிறார்கள். இந்தயந்திரசக்தியால் காலம கடக்கலாம் உன்னிடம்கொள்ளென்றுபதேசித்துஅந்தத்திரி யாக்ஷரங்களின் சந்தி ஆரோகண அவரோகண பலன்களைக் காட்டி ஜம்பூத்வீபில் காவேரியின்தென புறத்துள்ள வில்வார ண்யம் என்கிற திவ்யக்ஷேத்திரத்தில் பாத்மகல்பத்தில் நான சிவனால்ஞானம்பெற்ற அதிரகசியமாயுள்ள பிர்ம்மரந்திரத்தி ல்விளங்கும் அபிராமிசுந்தரியையும் அமுதீசரையும் பூஜித்து நீவேண்டிக்கொள்ளும்படியவனாய் நின்வயது வளரப்பெறு வாய். என்று உரைத்து வழுஆவர்த்தி தீர்க்காயுஷ்மான்பவ வென்று ஆசிர்வதித்தார்.

மார்க்கண்டேயர் நன்மதியருளிய நான்முகனை வழுபிர தக்ஷிண நமஸ்காரஞ் செய்து அங்குள்ள சர்வரிஷிகளையும் ப ணிந்து பிர்ம்மதேவரிடம் உத்தரவுபெற்றார்.

சப்தரிஷிகளும் நான்முகனைப்பணிந்து அவ்வாறு தங்க ள்தங்களாச்சிரமம்செல்லும்படிவிடைபெற்று மார்க்கண்டே

இடையறாது ஏற்றும் அன்பர்களை அறிவர்கள் இவைவிற்க அமுதமிருத்யுஞ்செயமென்கிற மஹாமந்திரத்தை மார்க்கண்டேயர் ஏற்றி உள்ளத்தமைத்து இரவு பகல் சந்தி என்கிற முக்காலமும் தோற்றாது சதாதியானமாய் வருகையில் ஜனனித்துப் பதினைந்தாண்டாயிற்றே காலன்வரு நம்நாள்நெருங்கிற்றே என்று எண்ணி மாதாபிதாக்கள் மார்க்கண்டேயரைத் தங்கள்மடிமீதமர்த்தி முத்தமிட்டு புத்திரன் இல்லையென்று அறுபதாண்டின்பின் அரியதவஞ்செய்த எங்கட்கு ஈசன் அளித்த நல்லருந்தவமணியே நாங்கள் பாபியாகின்றோமோ புத்திரனில்லாவிடில் சர்வசுகமும் அழிந்துவிடுமே புத்திரனில்லாவிடில் துக்கம் அதிலும் துஷ்டபுத்திரனால் பெருந்துக்கம் அதிலும் சுபுத்திரனாகிய உன்னை இழந்திருப்பது அபாரமானதுக்கமாகுமே எங்கட்கு ஈசன்வரமளிக்கும்போது பூர்ணாயுளாய் கேட்கத் தவறினோமே பதினாறாண்டில் உன்னை இழக்கும்படி வரங்கேட்கும் ஈனபுத்தி அடைதற்கான என்னபாதகம் செய்தோமோ சிவாபராதம்செய்தோமோ சிவதனங்கவர்ந்தோமோ பிராம்மணாபராதம்செய்தோமோ பரபொருள்கவர்ந்தோமோ ஏழைகளிடத்தில் துர்க்கசுஷிபேசினோமோ தீர்த்தயாத்திரிகள் பசித்திருக்கப்புசித்தோமோ அதிதிகளைநிந்தித்தோமோ இராவில்அன்னங்கேட்ட பசியாளர்க்கில்லையென்றோமோ குழந்தைபால்குடிக்கும்போது தடுத்தோமோ நற்புத்திரனைப்போல் பரபுத்திரனைப்பாராமற்போனோமோ தன்னியரையும்புத்திரர்களுள்ளவர்களையுங்கண்டு பொறாமையுற்றோமோ குழந்

தைகளை உங்காரத்துடன் அதட்டினேமோ அங்கயீனர்பபித்
தியக்காரரைநிந்தித்தோமோ யதிகளசிவயோகிகளை அலக்ஷிய
ஞ்செய்தோமோ உத்தமர்களைவசைசொன்னேமோ அன்றன்
றுசெய்யுந்தவத்தையிச்சையாற்பரான்னம்புஜித்து இழந்தோ
மோ கன்றுக்குப்பால்விடாமற்கறந்தோமோ மாதாபிதாகுரு
வின்முன்நாங்கள்மாத்திரமபாலைக்குடித்தோமோ கறக்கப்பா
லகொடாப்பசுவின்கன்றைக்கட்டிப்பசுவைத்துரத்தினேமோ
பால்மாறுப்பசுவையாவது கன்றையாவதுபிரித்துவிற்று அ
ல்லது வாங்கிவிற்கலாங்கத்தூதாவாதானேமோ கருப்பத்தை
அழித்தவர்வம்சம் அழியுமுன் அககுலத்தில்புஜித்தோமோ
மிருகபக்ஷிகளின் குஞ்சைத்தாய்பரதவிக்கும்படி பிடித்தோ
மோ பசுநீர் அருந்தற்கு இடர்செய்தோமோ போஜனவேளையி
லும்பூஜாஜபதபகாலத்திலும்ராஜதண்டனைமுதலிய துக்கசமா
சாரம்சொன்னேமோ தீர்த்தயாத்திரி ஸ்நானதலவாசிகளின்
சிவவிஷ்ணுதரிசனத்திற்கு இடர்செய்து அவர்களால்வசைபெ
ற்றேமோ உத்தமதர்மத்தைத்தடுத்தோமோ நாகத்தைக்கொ
ன்று அல்லது தடைகட்டினேமோ முன்ஜன்மத்தில் இப்பேர்ப
பட்ட பாதகங்களில் ஒன்றாவது செய்திருந்தாற்றான் புத்திர
நாசம் உண்டாகும்என்று கண்ணீர்தாரைதாரையாய்பெருக
புத்திரனில்லாவிட்டாலும்அவ்வளவில்லை சத்குணவானாகிய
உன்னைப் பதினாறுவயதில் இழப்பதற்கு என்ன கொடியபாதக
ஞ்செய்தோமோ அடா கண்மணி குழந்தாய் சத்புத்திரா மார்க
கண்டா உன்னை இழந்து என்செய்வோமடா கண்ணே யென்

உரையமைத்துக்கொண்டு காசிக்ஷேத்திரத்தில் மிருகண்டுவினிடம்வந்து சத்யவுலகத்தில் நடந்த விசேஷங்களை உரைத்து மகிழ்ந்தார்கள். என்று சூதபுராணிகர் கூறினார்.

மார்க்கண்டேயர் உற்பத்தி சருக்கமுற்றும்.

---

# மார்க்கண்டேயர் ஸ்தலயாத்திரை சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே மார்க்கண்டேயசரித்திரத்தை மிகக்கவனமாய்க்கேளுங்கள். பக்தியாய்க்கேட்டவர்கள் புத்திரபாக்கியத்துடன் ஆயுள்விருத்தி யடைவார்கள். மார்க்கண்டேயர்க்குப்பிர்ம்மா உபதேசித்து ஆசியளித்ததைக் கூறிய சப்தரிஷிகளையும் மிருகண்டு பிரதக்ஷிணநமஸ்காரஞ்செய்து கந்தமூலபலவர்க்கங்களால்உபசரித்து எங்கள் புத்திரன் பூர்ணாயுள் அடையும்படி கடாக்ஷித்த பூரணகிருபாஸ்வரூபிகளே போற்றிபோற்றியென்று துதித்தார்கள். சப்தரிஷிகளும் மார்க்கண்டேயர் அடையப்போகிற வைபவத்தை ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு தங்கள்தங்களாச்சிரமம் சென்றார்கள். ஹேரிஷிகளே பிர்ம்மதேவரால் மார்க்கண்டேயர்க்குபதேசி

த்த மூன்றெழுத்தாகிற மந்திரவிசேஷத்தைச் சொல்கிறேன் கேளுங்கள். முன்னொருகாலத்தில் பார்வதி ஈசுவரனைப்பணிந்து ஜீவன்களை மிருத்யுவை ஜயிப்பதற்கான ஏதுவுண்டோ என்று வேண்டியபோது நித்யகல்யாணி நீகேட்டவிஷயம் மிகவும் இரகசியம் அதனையில் அருமை. ஆயினும் சுலபமாய் ஜயிக்கும்படியான மிருத்யுஞ்ஜயமென்று பதினெட்டுவகையுள்ளது அதில் ஒன்றேனும் தெரிந்தவுடன் சர்வபாபங்களும் ரோகங்களும் நசிக்கும். சர்வலோகங்களிலும் ஜயமுண்டாகும். சாந்தம் சௌக்கியம் சௌபாக்கியம் வளரும் ஈனர்களுக்கு உரைக்கலாகாது ஈனர்களுக்கு உரைப்போரும் ஈனரேயாவர். மஹாமிருத்யுஞ்செயமென்னும்மந்திரத்திற்கு நந்திகேசுவரர் ரிஷி காயத்திரி சந்தசு பிரணவம் பீஜம் சும் சக்தி: ஸஹ சீலகம் கோடிசந்திரசீதள அர்த்தசந்திரதாரண பொற்குன்றவர்ண்ண செஞ்சடாமகுட அமுதம் வரம் அக்ஷமாலிகை பாத்திரமுத்திரை தாங்கிய சதுஷ்கர வெண்கோவண புலித்தோல்வஸ்திர ஸர்வலோகாந்தரசிசப்பாத பிரம்மரந்திரவாஸ திரிநேத்திர மஹாமிருத்யுஞ்ஜயம் அதிதேவதை. இதைதியானிப்பவர்கள் களங்கமற்றுத் தியானிக்கவேண்டும். களங்கமற முன்னம்தியானிப்பது காரண பஞ்சாக்ஷரமென்னும் இருதலைமாணிக்கமாகும். என்றும் இதுபோல் இன்னும் பதினெழுவகை மிருத்யுஞ்செயத்தையும் விவரமாயுரைத்து இப்பதினெட்டும் காலங்கடத்தற்கு ஏதுவென்று உமைக்கரன் உரைத்திருக்கிறார். அதன்மகிமையை

று கலங்கி அழுதார்கள். அப்போது மார்க்கண்டேயர் மா
தாபிதாவை நமஸ்கரித்து என்னை அன்பாய் ஈன்று அரணடி,
க்காளக்கும்கலைகளைப் புகட்டிய தாய்தந்தைகளே விசனப்பட
வேண்டாம் நான் சர்வஜீவன்களிடம் ஞானசூர்யாக்னியாயும் உ
ள்ள கடவுளின் அருளை என்னிடம் நிமித்துக்கொள்ளும்படி
பிர்ம்மதேவரால் உபதேசித்த திரியாக்ஷரத்தை வழுவாதேற்
றி நரைதிரைமூப்பிலாநித்யனாகிறேன் காருண்யராகிய சிவன்
மூன்றுகண்ணுள்ளவர் விரும்பியது அளிப்பவர் காலபாசத்
தில் கட்டுண்ட சுவேதகேதுவை விடுவித்தும் திருநந்திதேவ
ர்க்குத் தன்பதத்தைத் தந்தும் மிருத்யுவடைந்தஎட்டுவயது
ள்ள சிலாதபுத்திரனை உயிர்பெற்றெழச்செய்தும் க்ஷீராப்தியி
ல்வாசுகியால்கக்கியவிஷத்தைப்புஜித்தும் சலந்தராசுரனைக்
கால்விரலால்பிளந்தும் விஷ்ணுவிற்குச்சக்கரமளித்தும் திரி
புரதகனம்செய்தும் அந்தகாசுரனைசூலத்திற்குத்திபதினாயி
ரம்வருஷம்சூரியனால்வெதுப்பித்தகித்தும் மன்மதனைத்தகித்
துப்பின்னுமஇரதிவேண்ட உண்டாக்கியும் இன்னும் அநேகவி
தமாய் ஜீவகோடிகளை யிரக்ஷித்தும் பக்தர்களுக்கு அநேகவ
ரங்களைக்கொடுத்தவர் எனக்கும் அருள்செய்வார் என்று சொ
ல்லியதைக்கேட்டு மிகமகிழ்ந்தமாதாபிதாவைப்பணிந்து பிர்
ம்மதேவனருளியபடி வில்வாரண்யமடைய விடைபெற்றுக்
கொண்டு அகஸ்தியாச்சிரமஞ்சென்று பணிந்து சிவபூஜாவி
தியைத்தெரிந்து கங்கையிற்படிந்து துண்டிவிநாயகர் விசாலா
க்ஷியம்மாள் சமேதவிசுவநாதர்ஆலயம் சென்று பூஜித்து அ

ப்பதியில் உள்ள தபசிகளைப் பணிந்து தெற்குநோக்கிப்புறப்பட்டு கோதாவரி நிர்மாதா கிருஷ்ணை முதலிய நதிகளிற்படிந்து மஹாகாளரைப்பூஜித்து ஜகந்நாதம ஸ்ரீவிருத்தாஜலம் காளஹஸ்தி கச்சி அருணை சிதம்பரம் பஞ்சநதம் கும்பகோணம் மாயூரம் ஸ்ரீராமேச்சுவரம் வேதாரண்யம் ஆரூர் சீர்காழி சுவேதாரண்யம் முதலியதலங்களைப் பூஜித்துத் தினம்அபரான்னகாலத்தில் உத்தமபிராமணவீதியிற்சென்று மௌனத்தியானமாய் பிக்ஷைவாங்கி அவ்வன்னத்தைத்தீர்த்தத்தால்அலம்பி பூதிகூட்டிப்புஜித்துத் தலயாத்திரியாய்சுவேதாரண்யத்தில் இருந்துவில்வாரண்யத்திற்குப்புறப்படும்போது சுகிபவவென்று அசரீரிஉண்டாயிற்று அவ்வமுதப்போன்றவார்த்தையைக்கேட்டு திருவருளைவியந்து ஆனந்தபரவசராய் அதிசீக்கிரமாக வில்வாரண்யம்வந்தாரென்று சூதமஹரிஷர்,

11. மார்க்கண்டேயர் உற்பத்தி சருக்கம் முற்றும்.

# 12. மார்க்கண்டேயர் பூஜித்த சருக்கம்.

ஹேரிஷிகளே உந்தியின்அளவளாவும் முந்நூலை வலக்கைஅங்குஷ்டையிற்றுங்கி மிடறுவரையில்தொங்காமல் வலசெவியிற்சுற்றி உஷாகாலத்தின்முன் இருவிழியும் நாசிநுனி

கடுமேல் நாட்டமுற மலமோசித்தல். பதினாறு நாழிகைய
ளவாம் இரவில் சாக்கிரம்குன்றாது துயிலல் மாத்தியானத்
தில் ஏழு உத்தமப்பிராமணமனைமுன் னின்று மௌனபிக்ஷை
பெற்று உண்ணல். என்னுமமூன்றைமட்டும் விடாது மற்
றைய உடல்பற்றற்று வில்வவனமடைந்தமார்க்கண்டே
யர் இராப்பகல் முன் பின் என்றும் தோற்றமல் சதாபூஜிக்
கும் அன்பின் பெருக்கு உரைக்கடங்காது ஆயினும் அவர்
பூஜித்தவிதத்தைக் கூறுவேன் கேண்மின்கள். மேகமண்ட
லம்வரையில் வியாபித்து பூங்கொத்துகளுடன் தழைந்த வில்
வவிருக்ஷத்தின்கீழ் பிரம்மாவினால் பூஜித்த இலிங்கத்தைச்
சூழ அனேகரிஷிகள் தபம்செய்வதையும் அதன்நிருதியில்
உள்ளசுதாலிங்கம் அதன்நிருதியில் சோரகணபதி அதன்நிரு
தியில் அபிராமிசுந்தரி அமுதலிங்கத்தின் கீழ்பால் ஞானவா
பியையும் கண்டு ஆனந்தமேற்கொண்டு நானாவிதபூங்கொத்து
களையும் மதுரக்கனிகளையும் தாங்கித்தழைந்த விருக்ஷங்க
ளின். கீழ் தபஞ்செய்வர்களைநமஸ்கரித்து சிவஸ்மரணையு
டன் அமுத புஷ்கரணியில்தேய்கது பூகிருத்திராக்ஷம்பூ
ண்டு நித்தியகர்ம்மம்முடித்து த்திருப்பூங்குடலையைத்தாங்கி
ஆகாசகமனமாய்க்காசியிற்சென்று கங்கையும் அபிஷேகதிர
வியங்களும் வனங்களில்சென்று புஷ்பம் முதலிய பூஜாநை
வேத்தியசாமான்களும் கொண்டுவந்து பஞ்சசுத்திகள்செய்து
கலைகளைக்கூட்டி துவாரபூஜைசெய்து ஆனந்தமய அமுதலிங்
கத்தையடைந்து காமிகாகமவிதியால் இருக்காதிநான்கையும்

வழுவாதேற்றி கங்கையாதிய அபிஷேகதிரவியங்களை கோசி
ருங்கம் சங்கம்சகஸ்திரதாரசததார பொற்பாத்திரங்களாலும்
அபிஷேகித்து வஸ்திர கந்த புஷ்பாக்ஷதை அறுகும் அனேக
நவரெத்தினாபரணங்களும் சூட்டி அர்க்கியதூபதீபம்முதலிய
பஞ்சஉபசாரத்துடன் ஷட்ரஸஸஹிதபதார்த்தங்களையும்சித்தி
ரான்னங்களையும் நிவேதித்து ஷோடசஉபசாரம்செய்து முன்
விஷ்ணுவாலாக்கியசகஸ்திரநாமம்ஓதி திரிதளவில்வங்களால்
அர்ச்சித்து மனோரம்மியமான கனிகளுடன்வாசனைதாமபூல
மும். நிவேதித்து கற்பூரஆரத்திசெய்து நீரோதார்க்கியம்
தந்து அபிராமசுந்தரியையும் அதுவிதமேபூஜித்துச் சிவசன்
னிதியில் சிரமேலிருகையுங்கூப்பி ஹர ஹராபோற்றி சம்
போ மஹாதேவா பார்வதிநாயகா நீலகண்டா திரிநேத்திரா
மலாஹிதா ஆனந்தரூபா தேவதேவா ஜகந்நாதா விருஷபுத்து
வஜா மாயாதீதா குணாதீதா மாயாரூபா பூரண அனந்த
குண அனந்தரூபா ஏகரூபா சூன்னியரூபா சச்சிதானந்தா
லலாடநேத்ரா சல்பாதீதா பாவனாதீதா மனாதீதா பக்ததுக்
கஸாகரஹரா திரிமூர்த்திஸ்வரூபா திரிகிர்த்தியசாக்ஷிசுவ
ரூபா பஞ்சகிருத்யநடனா காலாத்மஸ்வரூபா குணாதரா
பசுபதே கோரரூபா பராபரா அகோரரூபா சாந்தரூபா
வேதாந்தா வேதரூபா திரிபுரசம்ஹாரா திவ்யதேஹா நித்யா
நித்யரூபா ருத்ரரூபா கங்காஜடாதரா தாக்ஷாயணிபதே ஆத்
மபதே ஆத்மரூபா சர்வரூபா சர்வவியாபகா அகாரரூபா ஓங்
காரரூபா அர்த்தநாரீசுவரா வீரவீரா திரிசக்திசஹிதா

வேதஸ்வரூபா திரிசந்திஸ்வரூபா திரிசந்திவாசா திரிகாலஸ்வ ரூபா விந்துஸ்வரூபா நாதஸ்வரூபா சதூமம்நாஸ்வரூபா அமு தஸ்வரூபா சர்ப்பாபரணு சர்ப்பகுண்டலா சர்ப்பகங்கணுதிரி சூலா போற்றி போற்றி என்று துதித்து ஐந்துதினமளவுமை யிலும் வேதவிதிவழுவாமல் மூன்றுகாலம் இராப்பகல் ஏகத் தியானமாய் பிர்ம்மாவினுல் உபதேசித்த மந்திரஉருவேற்றிக கொண்டு அமுதலிங்கத்தைப் பூஜித்து ஆறுநாள் பூஜையின் பொருட்டு உதையத்தின்முன் ஐந்துநாழிகையளவில் திருப்பூ ங்குடலையுடன் ஆகாசகமனமாய்க் காசியில்சென்று கங்கையி ல்படிந்து கங்கைதிரட்டிக்கொண்டு நந்தவனம்அடைந்து மந் தாரம் மல்லிகை வெள்ளெருக்கு தாமரை தும்பை புன்னு கம் சண்பகம் கருஊமத்தை முதலிய அஷ்டபுஷ்பங்களுட ன் பின்னும் அனேக புஷ்பங்களும் கொய்து சுதாலிங்கத்தை அர்ச்சிக்கும்படி வில்லம்எடுக்கும் சமையத்தில் காலதூதுவா ள் வந்தார்கள் என்றுசூதர்மொழிந்தார்.

12. மார்க்கண்டேயர் பூசித்தச் சருக்கம்முற்றும் மதரு



மார்க்கண்டேயர்.



தர்மராஜா.

# ௯. தருமராசன் சம்வாதச் சருக்கம்.

ஹேரிஷிகளே திரிநேத்திரமாகிற வில்வதளங்களைக் கீழ் நின்றுவளைத்தும் அதன்கிளையில்தங்கியும் தாழ்த்தாமல் ஆகாசமாய்நின்று எடுத்து அமுதலிங்கத்தைப் பூஜிக்கும் மார்க்

கண்டேயர்க்கும் அவரைப்பிடிக்கவந்த தர்மராஜனுக்கும்
நடந்தசம் வாதத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள், கால
தூதர்கள் மார்க்கண்டேயர்முன் தோன்றி சிவச்சின்னங்க
ளுடன் விளங்கி வில்வம் எடுக்கும் மார்க்கண்டேயரின் தபோ
மஹிமையால் சமீபத்தில் நெருங்கமாட்டாமல் நடுநடுங்கி ஒரு
வர்கொருவர் தோழர்களே இந்தமார்க்கண்டன் தனதுசரீரத்
தில பூதிருத்திராக்ஷங்களைக் கவசம்போல்தரித்து ஹரஹர
வென்று இடையறாது ஏற்றுகின்றமையால் இவன்பூர்ணாயுளை
அடைவான் இவனை நாம் பிடிக்க நெருங்குவோமாயின் அவ
னுடைய தபாகனி நம்மைத் தகித்துவிடும் நமது தர்ம்மராஜா
வினாலும் இவனைப் பிடிக்கமுடியாது என்று பேசிக்கொண்டு
திரும்பி எமலோகம் சென்றார்கள். அந்தச்சமையத்தில் சர்வரி
ஷிகளுடன் பிரம்மதேவன் கைலைக்குச்சென்று நந்திகேசுவர
ரைப்பணிந்து விடைபெற்று உட்சென்று உமாசமேதனைப
பணிந்து சுவாமி மார்க்கண்டேயர்க்குப் பதினாறுவயதளித்த
தை அறியாமல் பூர்ணாயுளடையும்படி ஆசியளித்து பின்பு
தமதாக்ஞை மதியளவென்று வசிஷ்டரால் தெரிந்து தமதரு
ளைப்பூரணமாகத்தியானித்து பூரணாயுள் பெறுவாய் என்று
ஏழுதடவை பின்னும் உரைத்திருக்கிறேன் மற்றையரிஷிகள்
முதலியரும் தீர்க்காயுஷ்மான்பவவென்று ஆசியளித்தார்கள்
விசேஷபக்தியுடைய மார்க்கண்டேயர்க்கு அருள்செய்யவே
ண்டும் என்று பிரார்த்தித்தார். சந்திரசூடன் பிரமதேவனை
நோக்கி மிருகண்டுவிரும்பிய மதியளவளித்தோம் விதியையா

ற்றிக்கொள்ளுதல் நுண்மதி அளவேயாகும் ஆனதால் இடை யறாது எம்மைப்பூஜிக்கும் மார்க்கண்டன் அவ்வாறே ஆவன் என்று சிவபிரான் பக்தியிற்கட்டுண்டு முன்விதித்தவிதியைக கூடயாற்றியருளினூர்.

பூவுலகத்தில் மார்க்கண்டேயரைப் பிடிக்கும்படிவந்த காலதூதுவர்கள் ஈவவசுவதம் அடைந்து தர்ம்மராஜனைப்பணிந்து மார்க்கண்டேயரின் வரலாற்றை உரைத்து அவனைத் தங்களாலும் பிடிப்பதருமை யென்றும் கூறினுர்கள். அதைக்கேட்ட தருமராஜன் மிகக்கவலைகொண்டு சித்திரகுப்தரை அழைத்துமார்க்கண்டேயரின் ஆயுட்கணக்கைக் கூறுமென்று விசாரித்தார், அதற்கு அவர் மார்க்கண்டேயர்கணக்கில் இன்றோடே ஆயுள்முடிந்ததாய் வரைந்திருக்கிறது தர்ம்மசுவரூபியே தமக்குநமஸ்காரம் என்றுரைத்தார்உடனேகாலன் நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தெட்டுபடைகளுடன் சதகோடிகிங்கரர்கள் புடைசூழ மகிஷம்ஏறி வில்வவனம் அடைந்தார். பிராதக்காலபூஜைமுடித்து த்தோத்திரம் செய்யப்புகும் மார்க்கண்டேயர் பூதிருத்திராக்ஷதாரணராய்நிற்கும் தர்ம்மராஜனை நமஸ்கரித்தார். காலன் சீக்கிரம் எமதுலகம் வந்து பின்புகைலேயிற்சென்று சிவகணங்களோடு வசிப்பாய் என்று ஆசீர்வதித்தார். மார்க்கண்டேயர் அவ்வார்த்தையை அங்கீகரிக்காமல் அமுதலிங்கத்தை அணுகி அஞ்சலியஸ்தராய் நின்று தோத்திரம் செய்தார். தர்ம்மராஜன் ஹே

முனிசுதா உன்னால்செய்யப்படும் பூஜையை விட்டு சீக்கிரம் என்னுடன் வைவசுவதபட்டணம் போவதற்குப்புறப்படு வாய்என்றுரைக்க அதைக்கவனிக்காமல் தோத்திரம்பண்ணு கிற பாலனுடைய பக்திப்பெருக்கைகண்டு இவனை எப்படிப் பிடிக்கிறதென்றசஞ்சலம்அடைந்து சிவத்தை அடைந்தவர்க ட்குஒருகுறையும்வாராதுஇத்தமஹாதபசியைநமதுதூதுவர்கள் நெருங்கமுடியாமல் திரும்பினார்கள் நாம்புறப்படும்போதும் அபசகுனமாய இருந்தது இப்போதும் இடக்கண்துடிக்கிறது ஆயினும் கடவுள அனுக்கிரஹப்படிநடக்கும் என்று சஞ்சலம்நீங்கி சிவாதவைதமார்க்கண்டனைப்பாசத்தால்கட்டினால ன்றிப் பிடிக்கமுடியாதென்றும் யோஜித்துக் கோலாகலத்துட ன் கெம்பீரமாக ஹேமார்க்கண்டமஹாப்பிராக்ஞா உன்கால ம்முடிந்துவிட்டது என்உலகத்திற்குச்சீக்கிரம்புறப்படுவாய் என்ற சண்டனை மார்க்கண்டேயர் பார்த்து ஹே தர்மராஜ னே நீர் தர்ம்மசுவரூபியாயிருந்தும் சிவபூஜைசெய்வதைவிட் டுச் சீக்கிரம் புறப்படென்கிறீரே பூஜையின்மத்தியில் வேறெ தையுங் கெவனிக்கலாமா பூஜை ஜபம் துதி செய்வதைத்தடுக் கலாமா என்றஉடன் காலன் ஹே முனிபுத்திரா யாரும் அவ ரவர்களின் ஆயுள்முடிவில் எல்லாவற்றையும விட்டுவிடுவார்க ள் நீயோ உன்ஆயுள்முடிவில் சர்வசுதந்தரமாய்ச் சிவபூஜை செய்துகொண்டு மத்தியில்தடுக்கவேண்டாம்என்றும்உரைக்கி றாய் பிரஜைகளினுடையபிராணனை ஒருநிமிஷங்கூட தாமதி க்காமல்பிடிக்குந்திறம் எனக்குஉண்டு ரோகங்களாகிற அப

மிருத்யுவை மணி மந்திர அவுஷதங்களால் மாற்றலாம் காலமி
ருத்யுவாகிறஎன்னை ஜயித்தற்கு யாராலும்முடியாது மழைக்
குக்குடைபிடிக்கலாம் இடிக்குக்குடைபிடிக்கலாமா எந்தக்கா
லத்தில் எதையடையலாமோ அதைத்தான் ஈசன் அளிப்பார்
பலவிதமாய்விரும்பும் குறைமதியாளர்கள்முன் தோன்றார் பி
ர்ம்மாவின் ஓர்பகலில் பதினான்கு இந்திரர்களும் விஷ்ணுவின்
தினத்தில் பிர்ம்மாவும் ருத்திரனுடையதினத்தில்விஷ்ணுவும்
லயமடைகிறார்கள் என்பதை நீயறிந்திலையோ ருத்திரனுக்கு
ம்லயமுண்டு நானும்அவருடன்ஒடுங்குவேன் குலிசத்தாலும்
பிளக்கமுடியாததை ஊசியால்பிளக்கமுடியுமா ஈசுவராதிகளா
லும்காலங்கடக்கமுடியாதே ஜடம் அனித்தியம் காலபாசக்க
ண்டத்திலிருக்கும்போது உலகவிவஹாரம் எதுக்கென்று யா
ரும்சொல்லுவார்களே ஹேமிருகண்டுபுதல்வா சாவகாசம்இ
ல்லை சரீரமாகிற சட்டையைநீக்கி என்னுடன்வருவாய நீஜ
னித்துப்பதினாறுண்டாகிற இன்றிரவுடன் ஆயுள்முடிந்துவி
ட்டதாய் எனக்கு எனதுகணக்கன் உரைத்தான். அவன் உ
ரைக்கும்கணக்கில் திரணமேனும்தவறாது சூரியஉதயத்தி
ற்குள்வந்துவிடு இல்லாவிடில் என்பாசத்தால் நெருங்கக்கட்
டி அக்னிமயதண்டத்தால் நசுக்கிப் பிடிப்பேன். நீஎல்லாந்
தெரிந்தும்மூடன்போலுரைக்கின்றாய், என்வார்த்தையைத்
தள்ளாதென்னுடன்புறப்படுவாயென்றுகூறினார். கூறியசண்
டனை மார்க்கண்டேயர் ஹே தர்ம்மராஜனே பிர்ம்மாங்கிரமா
கிற இத்தலத்தில் விளங்கும் அமுதலிங்கத்தைப் பூஜித்தபல

ஞுகிற நான்குவிதபதவிகளைத்தரும் பொருட்டன்றோ ஈசன்
கைலையில் உமாசமேதராய் விளங்குகிறார். கரும்புபயிரிடு
வோர் குருத்து இலைகரும்பைப்பிடுங்கித்தின்பார்களா வலி
யோர் முதுங்கரும்பையும் தின்று அழிக்காது முத்தைக்கிர
ஹிப்பர்கள். நான் எத்தனையோகோடிஜன்மமாய் செய்தத
ன்கால் அமுதலிங்கத்தை அடையப்பெற்றேன். சாலோக
சாமீபத்தை அனுபவித்து பின்னும் இருவினைக்காளாகாது
சாரூப்யாதீத சாயுஜ்யத்தைக் கடாக்ஷிக்கும்படி எம்பெருமா
னை பூஜிக்கிறேன். அனாதிதொட்டு எடுத்தஜன்மங்கள்தோ
றும் ஒவ்வொருமின்னேரத்துள் அம்மின்னொளிவியாபிக்கும்
எல்லை அனேக ஆவர்த்தி விரிந்தெழுந்த ஆகாம்யத்தால் ஜனமி
த்தது அணுவளவும் பிராரத்துவமாய் அனுபவித்ததுபோக
சஞ்சிதமாய் இன்னும் ஜனனத்தைத்தரும்படி தங்கியிருப்
பது அனேக அண்டஅளவாயும் இருக்கிறது. அச்சஞ்சிதத்
தை தகிக்கும்படியான லலாடநேத்திர அமுதலிங்கத்தை அ
[illegible]யும்படி கிருபைவாய்ந்த நாரதாதிமஹாமுனிகளாலும் பி
ர்ம்மதேவராலும் நுண்மதியருளப்பெற்ற இந்தஜன்மத்தைவி
ட்டுப் பின்னும்ஜன்மித்து முன்போல் சஞ்சிதத்துடன் சஞ்சி
தத்தைப்பெருக்கிக்கூட்டும்படி முன்கூறியவகை ஆகாம்யத்
தைவிளைப்பதோடு பிராரத்துவகர்மங்களையனுபவிக்கவும் மா
ணைப்படுந்தோறும்சர்வசஞ்சித அனுபவகால அளவுவரையில்
உம்மால்விதிக்கும் வேதனையுறவும்நித்யானந்தம் அளிக்கும்
அமுதலிங்கத்தைப்பிரியவும் இணங்கி உம்மோடுவரமாட்டே

ன்; என்றதபசியை எமன் ஹே முனிசுதா காலன் கண்டத்தி
ருக்கிறான் முடிவில் புல்நுனியால் இறக்கவரும் முடிவில்லாவி
டில் அனேகபாணங்களாலும் இறவார்கள் என்று உலகோர் சொ
லவதையுங் கேட்டதில்லையா அடாபித்தா எத்தனையோ கோடி
இந்திரர்களை ஒருக்ஷணங்கூடத் தவக்கமன்னியில பிடித்தயா
ன் மிகச்சிறுவனாகிய உன்னைப்பிடிப்பது அரிதன்று ஆயினு
ம் மிகச்சிறுவயதில் பக்தியிலசிறந்தவனென்பதைப்பற்றிமா
த்திரம் யோஜிக்கிறேன். உன்னை விட்டுப்போகேன என்ப
தைத் திண்ணமாய் அறிந்துகொள் பிரதிவுபாசத்தில் கட்டு
ண்ட ஆத்மாக்கள் அந்தியத்தில் சிவத்தைமறப்பார்களாயி
ன் இரும்புமுதலிய உலோகங்களையும் நிமைப்பொழுதில் நீரா
யுருக்கித் தன்மயமாக்கும் விஷத்தைக்கக்கும்படியான முன்
வளைவாயுள்ள அனேகமுட்களையுடைய மூன்றரைக்கோடிப்பு
ழுக்கள் அவர்களுடைய மாமிசத்தில் மிகவேகமாய் உலவுவ
தோடு அனேகவிததுன்பங்களை விளைவிக்கும் ஜாலப சமிட்
டேனும் பின்னும் மூன்றுலகங்களையும் வறட்டும் விஷத்தை
ஒருமயிரின் நுனியால் கக்கும்படியான முன்வளைவும் வலுவு
முள்ள ரோமங்களையுடைய எழுகோடிவட்டப்புழுக்கள் விர்ற்
ர்ற்என்று தொனித்துச்சுழலும்பம்பரத்தினும் வேகமாய்
ஒன்றுவிட்டொன்று இடமவலமாய் அவர்களுடைய நரம்பெ
ன்புகளின் புழையுள் சுழன்று ஹிம்சிப்பதுடன் அனேகவித
கஷ்டங்களை விளைவிக்கும் அக்னிபாசமிட்டேனும்.* ஒரு [illegible]
[illegible]ன்று இழியும் விஷச்சுவாலையால் உலகங்கள்யா[illegible]

ஜீரணப்படுத்தும் மூன்றைக்கோடி வகபிரவசிகள் நெருங்கிய எழுகோடி வசிககொததுகள் பிறைபோல்வளைந்தமைந்த நூறு கோடி தண்டங்கள் மிகதுரிதமாய் மூர்த்நாவில் மோதிமோதிச்சுழல்வதுடன் இன்னும் அநேகவித வதம்செய்விக்கும் வாயுபாசமிட்டேனும். அவர்களைப்பற்றி மனம என்னும் எனது தோட்டிகைப்படுத்தி வலச்செவி கண் வாய் குறி வழி செல்லச்செய்குவேன். சதயம்தவறி இச்சையின்வழி சிவாபராதம் பராபராதங்கள் செய்தவர்களுக்கு யான் விதிக்கும் தண்டனைகளைத் தெரிந்தபிரஜைகள் உடனே விலால் அபமிருத்யுவை அடையும். பூதாபராதிகட்கு அச்சென்ம அந்தியத்திலும் ஜீவாபராதிகட்கு அங்கியம் முதல் பின் பலஜன்மத்துள்ளும் சிவாபராதகட்கு அச்சென்மத்திலுள் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளாதவரையில் பிரளயம்வரையிலும். மிகவருத்தும் கொடுந்தண்டனைகளை விதிப்பேன். சிவாபராதிகளைப் பிரளயகாலவரையில் மாற்றிமாறிக்கருநரகிலும். ஜீவாபராதிகளைப் பலதடவை கருநரகிலும். பூதாபராதிகளைச் சிலகாலம் கருநரகிலும். அமிழ்த்தச்செய்குவேன். இச்சையால் சிவாபராதம்முதலிய செய்ய எண்ணியவர்களை முன்சொல்லியவைகளிம்சித்துப் பின்பு அவர்கள் முன்பு இச்சித்தவண்ணம் சிலது அடையும்படி. எழுவிதநரகின் ஐந்துமடுக்களில் ஆழ்ந்து ஜன்மித்து அஹங்காரராஜாவாகும்படி செய்து மனமாகிற எனது தோட்டி புத்தியாகிறதுதுவர்கள் சித்தமாகிறகணைக்

ன் முதலானவர்கள் மந்திரிமுதலியவர்களாய் முன் இச்சி த்ததில் சிலவகை காட்டவும் அதில் அடைதற்கான சில ஏதுவைக்கூட்டவும் செய்குவேன். அவர்கள் இதசத்ருவாய் அமர்ந்து அலைக்குங்காலத்திற்சிரேஷ்டதரகையடைந்தபோது அவ்வபராதங்களை செய்ய எண்ணிய அச்சென்மத்திலேயே குருலிங்கசங்கமமென்னபதிலொன்றையேனும் விரும்பி அவ்வப ராதமன்னிப்புக்கேட்டிருந்தால் கேட்டஅளவாய் நல்லறிவு தோன்றும்படி மனர்முதலியவர்கள் இசைவார்கள். உடன் அவ்வழிபற்றி அச்சமும்பக்தியும் விளைந்தால் அவர்கட்கு மரா ஞவஸ்தை ஜாஸ்தியின்றியும்ம றுஜன்மங்களில் அன்புஉதிக் கவும் மனம்முதலியவர்களால் கூட்டுவிப்பேன். சத்கர்மங்க ளைப்பற்றாயின் மேலும்மேலும் அபராதியாகும்படி உபகர ணங்களைக்கூட்டி முடிவில் எண்ணெணவதம் செய்விப்பே ன். ஹேமார்க்கண்டா நீ சிவாபராதம்முதலியசெய்யாததால் உன்னை பாசத்தால் கட்டப்படாது என்று பரிதாபப்படுகி றேன். நான்சொல்லும்புத்தியைக்கேட்டு என்னுடன்வா. எ ன்று சாந்தசித்தமாய் உரைத்தார்.

அவ்வார்த்தையைக் கேட்டமார்க்கண்டேயர் சஞ்சலம் அடைந்து நான்ஜனனித்தபின் வேதவிதியைத்தவிர்த்து நிஷித்தகாரியங்களைச்செய்யவில்லை சிவாபராதம் ஜீவாபரா தங்களைச் செய்யவில்லை. தபசில் அலக்ஷியமா யிருக்கவில்லை சிவபூஜையில் தவறவில்லை சிவபக்தர்களுக்கு அடிமையாகி

அவர்களால் ஆசிபெற்றிருந்தும் எனக்குக் காலபயம் உண்டாயிற்றே. என்று கலங்கி மனதொடுங்கிப் பின்னும் பிர்ம்மாஉபதேசித்த அக்ஷரசக்தியைப் பூரணப்படுத்தி அமுதலிங்கத்தை யடைந்தால் காலஜயம் பெறலாம என்று தைரியங்கொண்டு கெம்பீரத்துடன் ஹே காலா சிவபக்தாகளுக்குவிக்னம்செய்பவர்கள் சீக்கிரம் நசித்துவிடுவார்கள் என்பதை நீ அறிந்திலையோ. சிவபக்தர்களை நின்பாசத்தால் கட்டுவது மதயானையைத் தாமரை நூலால் கட்டுவதையொக்கும். பாற்கடலில் விஷ்ணுவாதியதேவர்களால் கடைந்தெடுத்த அமுதில் தோன்றிய சுயஞ்சுதாலிங்கபூஜைக்கு விக்னம்செய்து சிவாபராதம் பெறாமல் சீக்கிரம் உன்புரம செல்லென்று தூங்கும் கரும்பாம்பைத் தட்டிஎழுப்புவதுபோல் சொன்னார்.

சொல்லும்வார்த்தை முடியுமுன் காலன் அத்யுக்கிரகோபத்துடன் கருமலைபோன்ற ரூபங்கொண்டு சிரசில் காலாக்கினியும கண்காதுவாய்மூக்கில் பூதாக்கினியும் ஓங்கிவிரிந்து சிதற கைகளில் சூலம் பாசம் கட்கம் தண்டமும் நவலோகமலைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஆவர்த்திகொடுக்கால் தீண்டி நீராளமாய் உருக்கும் தேள்மாலைகளும். ஒருபல்லின்வழி துமிச்சிந்தும் விஷத்தால் நவலோகம்வரையில் கறுக்கச்செய்யும் பாம்புகளும் மார்பில்விளங்க. ஒருகண்ணிமையளவில் சர்வவுலகங்களையும் பஸ்மீகரமாக்கும் பிரளயாக்கினிபோல் கோரரூபம் அடைந்தார். என்று சூதபுராணிகர் புகன்றார்.

# காலசம்ஹாரச்சருக்கம்.

ஹே ரிஷிகளே நீதியில் தவறின் மெய்யென்னும மயிர்க்காம்பில் ஓட்டித்தொங்கும் பெரியமலை உடனே சிரசில் விழுந்து அனலாழியுள் அமிழ்த்தப்பொருந்தும் சிம்ஹாசனாதிபதியாகிய காலனை ஈசன் மார்ககண்டனால் மாய்த்த விதத்தைக்கூறுவேன்கேளுங்கள். மஹாகோபத்தையடைந்த தர்ம்மராஜன் மார்க்கண்டனைநோக்கி அடாமிருகண்டு புதல்வா நீ சிவனைப் பூஜித்தால் காலததை மாற்றிவிடலாம் என்ற துர்புத்தியை அடைந்து எனனைக் கேவலமாய் எண்ணினாய் பூமியிலுள்ள மணலை எண்ணி முடிந்தாலும என்னால் பிடித்த இந்திரன்களை எண்ணிமுடியுமா அளவற்ற பிரமன்களும், அனேகம் விஷ்ணுவும் என்மூலமாய் லயமடைந்திருக்கிறார்கள். என்பராக்கிரமத்தைப்பார்க்கிறாயா தமது அடியிடத்தன்பு ஊறிய எளியார்க்குள் விளங்கும் சிவனால் உன்னை இரக்ஷிக்க முடியுமா உருத்திரனுடைய நூற்றொருகலைகளிலொன்றாய்ப் பிரிந்து ஜீவதண்டனையளிக்கும் நான் என்றும்பிரியாது ஒன்றாகில் பூரணமாக விளங்கி உனக்கு அருள்தர ஏதுவாகும் நீ பக்தியில் சிறந்தவன் என்று இரங்கினேன் சிவன் உனக்குள் வசப்படுவானென்று எண்ணி என்னையும் அச்சிவனைப்போல் கேவலமாய் எண்ணிப் பூஜைசெய்கின்ற

அரற்றி சிரமேற்கைகூப்பி ஒருமுகூர்த்தகாலம் சிவசக்தியை
ப் பார்த்தபடி சித்திரப்பிரதமைபோல் நின்று பின்பு சரீரப்
பிரக்ஞையுண்டாகி பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து திருமுன்
னின்று திரிபுரம் எரித்துத் தேவர்களைக்காத்தசந்திரசேகரா
போற்றி பத்மபாதாபோற்றி லலாடநேத்திரா காமதகனா
பஸ்மோத்தூளிததேகா துக்கசாகரஹரா ஏகநாதா வேஜசர்
ம்மதாரணா பிர்ம்மபூஜிதபாதா விஷ்ணுநேத்திரார்ச்சிதபாதா
கெங்காதரா நாகதுண்டலா ரிஷபவாகனா நாரதாதிமுனிசே
விதபாதா புவனேசுவரா அந்தகாசுரஸம்ஹாரா ஆசிருதரக்ஷ
கா குபேரேசா ஸஹஸ்ரநேத்திரா இந்திரனுக்கு ஸஹஸ்
ராக்ஷன் என்றநாமம் அளித்ததயாபராநாகாபரணா சண்டிகே
சுவரபூஜிதபாதா நீலகண்டா மான்மழுஹஸ்தா துக்கசம்ஸார
ஸாகரதீரக நாசனா சர்வாபத் நாசனா தக்ஷயக்ஞ நா
சனா திரிகுணாதமஸ்வரூபா பந்த சித்தி முக்தி யனுக்கிரகா
சர்வசத்ருநாசனா பக்தானுக்கிரஹா முருந்தார்ச் சிதபாதா
ராசலிக்கிரஹா ஆகாசஸ்வஸ்திரா பூதநாதா பராபரா அந்திய
க்கிரஹா வேதப்பிரக்ஞாதீதா சந்திர சூர்யாக்னிமண்ட
ல மத்தியவாசா சிருஷ்டித்திதிசம்ஹாரகிருத்தியா சர்வலோ
கவாசா மாயாஸ்வரூபா மாயாரஹிதா ஸ்கந்தகணபதிடாகா
தேவதேவா ஈசுவராபரமேசுவரா கிருபாகரா ஜகந்நாதா ஆன
ந்தரூபா பரிபூரணா அனந்தரூபா அனந்தருத்திரரூபா அனந்த
சக்திரூபா ஆத்மதத்வானுக்கிரகா வித்தியாதத்துவஸ்வரூபா
சிவதத்துவஸ்வரூபா திரிதத்துவபதே அஷ்டகலாசகித அஷ்ட

ரரூபா பஞ்சகலாசகித ஈசனரூபா சதுஷ்க்கலாசகிதரத்புரு ஷரூபா ஷட்கலாசகித சத்தியோஜாதரூபா திரயோதசகலாசகி தவாமதேவஸ்ரூபா பஞ்சாக்ஷரசரீரா சதுஷ்டஷ்டிப்பிரகார அகாரரூபா துவாத்திரிம்சதத்துவஸகித உகாரரூபா ஷோ டசதத்துவஸஹிதமகாரரூபா அஷ்டதத்துவஸஹித ஏகரூபா ஓங்காரஸ்வரூபா பிரணவார்த்தஸ்வரூபா அஷ்டப்பிரகாரஷோ டசமூர்த்தி ஸ்வரூபா பஞ்சவிம்சதித்துவஸ்வரூபா அஷ்ட குணானுக்கிரகா ஷாட்குண்யஸ்வரூபா நாசாரஹிதஸ்தானவா சா கூர்மமண்டலவாசா கண்டஸ்தானவாசா புருமத்தியவாசா சூலஹஸ்தா சம்விராட்கு ஹிடஸ்தானவாசா நாதமத்தியவா சா சந்திரபிம்பவாசா சர்வமங்களானுக்கிரஹா சிவஸ்வரூபா குண்டலிஸ்வரூபா திரிசக்திஸ்வரூபா திரியாக்னிஸ்வரூபா சதாசிவஸ்வரூபா சாந்த மஹேஈவரா பிஞாகதரா அனந்தாஸ னுதிபதே வியாஹாஸனுதிபதே பத்மாஸனுதிபதே ஆகாச ஆ ஸனுதிபதே மலரஹிதா ஆத்மஸ்வரூபா யோகிஹிருதயகமல வாஸா போகத்தால்அறியும்ஸ்வரூபா தாரணாயகதர்சகனகிரு பாகரா அனந்தபாதா அனந்தமூர்த்திஸ்வரூபா தேவாஷ்ரிடநாச னு பஞ்சரிஷ்டநாசனு காலசம்ஹாரா அகண்டரூபாபோற் றிபோற்றி என்று துதித்தனர். காலசரீரத்தைப்பிளந்து ஸர் வத்தையுந்தரும் தூலஸ்தூல சூக்குமசூக்கும நித்யகல்யாணரா ணசிவபிரான் ஹே முனிசுதா நீஏழுஜன்மம் சிவபூஜை வழுவா துசெய்தும் பிர்ம்மதேவனால் தீர்க்காயுஷ்மான் பவவென்று ஏழு ஆவர்த்தி ஆசீர்வதித்து உபதேசிக்கப்பெற்று அவ்வு

உன்னை இனிவிடேன், என்று அண்டங்கள் அதிரக்கர்ச்சித்து அனல்சிதறும்படியான வட்டமான கண்களை நிமையாது விழித்து சந்திரனைப்போன்றவளைவாயுள்ள கோரதந்தங்களை நறநறவென்று கடித்து அக்னியைப்போல் சிவந்த நாக்கை மடித்துமுன் காட்டி மலைபோன்றபக்ஷத்திருந்து விரைவாய் மார்க்கண்டேயர் முன் நெருங்கியவுடன் மார்க்கண்டேயர் அதிவிரைவாயோடி, அமுதலிங்கத்துடன் ஒன்றாய்ப்பிடித்து தயாநிதே அடைக்கலம் என்று நிர்ச்சிந்தையாயினார். அத்யுக்கிரகோபங்கொண்ட சண்டன், அமுதீசன் விளங்கும் கெர்ப்பக்கிரகத்தினுள் செல்லமாட்டாமல், புருஎல்லையாகிய நந்திவிளங்கும் தலத்தில் நின்றபடி சற்றேனும் சஞ்சலமடைந்தமையால் என்னால் தண்டிக்கப்படுவாயென்று மார்க்கண்டேயருடன் சிவலிங்கத்திலும் பாசத்தை சர்வப்பிராணிகளும் மூர்ச்சித்துச் சகல உலகங்களும் நடுங்கும்படி வீசினார். வீசும்போதே ஸ்தூலசூக்குமம் என்னும இருபுரியும் காரிய காரணம் என்னும் ஒருபுரிமட்டும் உட்சென்றது. சர்வஜீவன்கட்கும் போகமோக்ஷங்கட்கும் சர்வாண்டங்கட்கும் சிவத்திற்கும் ஆதாரமாயுள்ள அபிராமசுந்தரியென்னும் சக்தி நமதன்பன் மார்க்கண்டனைப் பிடிக்கும்படி காலன், நப்பேரிலும் பாசத்தைவீசிய குற்றத்தைமுன்னிட்டு காலனை லயமாக்கி மார்க்கண்டேயனுக்கு அருள்தரும் தருணம் இதன்று அமுதீசர்க்கு உணர்த்த அக்ஷணமே ஈசன் காளமேகப்போன்ற சரீரமும் எரிகிறதீப்போற்கேசங்களும்

தோஷமடைந்து கற்பகத்தைச்சார்ந்தார்க்கு எதுகிடைக்கா
து சிவத்தைப்பூஜித்தால் சகலமும். கிடைக்கும் சிவபூஜாப
லத்தினுல் பிர்ம்மா சத்தியலோகாதிபத்தியத்தையும் விஷ்ணு
வைகுந்தாதிபத்யத்தையும அஷ்டபாலர்கள் அஷ்டதிசாதிபத்
தியத்தையும் பெற்றிருக்கிறார்கள். அகஸ்தியர் சாகரபான
ம் விந்தியகெர்வபாசனம்முதலிய அனேக அருஞ்செய்கை
செய்து பொதிகாசலத்தில் கும்பமுனியென்று ஸர்வவியாப
கத்துடன் சித்தியமாயிருக்கிறார். அஷ்டவக்கிரமுனி சிரஞ்
சீவத்துவம் பெற்றிருக்கிறார். சிவப்பிரஸாதம் எதைத்தரா
து எல்லாம்தரும். சிவபூஜாபலனை யாரால அறியமுடியும்
யோகிகள் தானென்பதை சிவாய்க்கியமாக ஸதா ஏற்றி சா
லாதீதமாக இருக்கிறார்கள். பாஞானிகள சராசரம் எல்லா
ம் சிவமாய்க்கண்டு அதை யடைந்திருக்கிறார்கள். ஞானம்
சிவபூஜையால் கிடைக்கும். ஞானசூனியர் சிவபூஜைசெய்ய
ப் பெறார்கள். சிவபூஜையால் சர்வசுகமும் கிடைக்கும். சி
வபூஜையின் பக்தியளவாய் விரும்பிப்பெறுதனவும் அல்லதன்
றி விரும்பிப் பெறுவனவும் இல்லை. என்றுசிவபூஜாமகிமை
யையும் பிராம்மணாசீர்வாத விசேஷத்தையும் சிவத்தையும்ப
லவாறாய்ச் சிந்தித்துத் தமது புத்திரனைப் புகழ்ந்து அரு
தலிங்கத்தையும் அபிராமியம்பாளையும் தெரிசிக்கும்படி அத்
தியந்தப்பிரியத்துடன் வில்வவனத்திற்குப் புறப்பட்டார்கள்
என்றுசூதமுனிவர்சாற்றினார்.

காலசம்ஹாரச் சருக்கம் முற்றிற்று.

# 15 கங்கை சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே கங்கை யமுனை ஸரஸ்வதி என்று பிரிந்துகாணப்படும் தீர்த்தத்தைத் தினம் காசியில் சென்று கொணர்ந்து ஆட்டும் மார்க்கண்டேயரிஷிமுன் ஈசன் தோன்றி அவைகளின் ஆதியாயுள்ள கங்கையைக் காணும்படி அருளிய பரசிவாக்ஞையால் கங்கை வந்தவிதத்தைச் சாற்றுகிறேன் கேளுங்கள்.

ஈசனால் காலன் மடிந்து சன்னிதியில் முப்பது விற்கடைதூரம் பதிந்து ஒழிந்தசூலமும் அறுந்தபாசத்துடன மலைபோல்பிரேதமாய்க்கிடப்பதையும் காலனையுதைத்த அதிர்ச்சியால்பாதாளத்திருந்து பெருகுஞ்ஜலத்துடன் பிணத்தில்பெருகும் உதிரம் பேராறாய்ச் செல்வதையும் மார்க்கண்டேயர் கண்டு தர்மராஜனே நான் சிவகடாக்ஷம்பெறும்படி ஈசன்பாதத்தில் மடிந்தீரேஎன்று சிந்தித்து அமுதலிங்க பூஜையின்பொருட்டு அவ்விடத்தைச் சுத்திசெய்து அமுதபுஷ்கரணியில் மூழ்கித் தினம் உஷக்காலத்தில் புஷ்பங்களும் பூஜாநைவேத்திய சாமான்களும் சேகரித்துக் காமிகாகமவிதிப்படி ஆறுகாலபூஜை செய்துவருகையில் சிலகாலம் சென்றபின் அமுதலிங்க தரிசனார்த்தமாய் மூன்று வருஷத்திற்குமுன் புறப்பட்ட ம

ருத்துவதியும் மிருகண்டுவும் பத்தியிலுள்ள தீர்த்தங்களில் மூழ்கிச் சிவதரிசனம் செய்துகொண்டு வில்வவனம் வந்து சேர்ந்தார்கள். மார்க்கண்டேயர் ஆத்மபிதாமாதாவாகிய அமுதீசுவர அபிராமியம்பாளையும் மாத்தியானபூஜைசெய்து சண்டிகேசுவரபூஜை செய்யுமுன் ஸ்தூல மாதாபிதாவாகிய மருத்துவதியையும் மிருகண்டேயரையும் கண்டுவணங்கி மிக்க அன்புடன் சிவதெரிசனஞ்செய்விக்க அழைத்துவரும்போது அகஸ்தியபுலஸ்தியர் மிருகண்டுவைப் பத்னியுடன்நோக்கி பக்தியிற்சிறந்த உங்கள்புத்திரனால் திரிலோகப்பிரஸித்தியும் மாருமகிழ்வும் பெற்றீர்கள், ஈசன் அமுதலிங்கத்தில் திருவுருக்கொண்டு அருளியபோது தமது ஸ்வரூபமாகிய அமுதலிங்கத்தைப் பாபம்நீங்கிப் புண்ணியம்ஓங்கித் தரிசித்தல் முறையாதலால் அகஸ்தியர்புலஸ்தியர் பாபவிமோசன புண்ணியவர்த்தன லிங்கப்பிரதிஷ்டைசெய்து இங்கு வசிக்கவென்று ஆக்ஞாபித்தபடி நடத்தியிருக்கிறோம் அவைகளை முன்பு தெரிசித்தபின்மேல் அங்கு செல்லுங்கள். என்று உரைத்தார்கள். அம்முனிவர்களைத் தம்பதி அன்போடுபணிந்து அவ்விரு லிங்கத்தையும் முன்பு தெரிசித்து அமுதலிங்கத்தைப் பரிவாரதேவதைகளுடன் விதிமுறை தெரிசித்துப் பணிந்து போற்றி தங்கள் புத்திரன் சண்டிகேச பூஜைசெய்யத் தாங்கள் தரிசித்துப் புத்திரனை யழைத்துக்கொண்டு சந்நிதியில் மூவரும் பணிந்து புத்திரனை மிக அன்புடன் தழுவி முத்தமிட்டு அருமைக்குழந்தாய் கண்மணி நீ எட்டாக்கனியை எட்டி

யுண்டு இனித்தாய். நாங்கள் உன்னால் இருதார்த்தரானோ மென்று புகழ்ந்து மணமேட்டில் முன்னமேயுள்ள தமதாச்சிரமம் சென்று ஆத்மார்த்தபூஜையாகிய மரகதாம்பாள்சமேத மிருகண்டேசுவரரை அங்கு ஸ்தாபித்து விதிமுறை பூஜித்து ப்புத்திரனுடன் பூஜித்து வசித்து வருகையில் மார்க்கண்டேயர் அபிராமியம்பாளையும் அமுதலிங்கத்தையும் தினம் மூன்றுகாலபூசைசெய்து சதா சிவத்தியானமாய் இருந்தார். ஒரு நாள் பிரதோஷகால பூஜாந்தரத்தில் அன்பில்கட்டுறும் ஈசன் அமுதலிங்கத்தில் உமையோடுந் தோன்றி மார்க்கண்டேயமுனியே உனதுபக்தியை மெச்சினோம் உனக்குவேண்டியது அருளுவோம் என்று மந்தஹாசத்துடன் திருவாய்மலர்ந்தனர். மார்க்கண்டேயர் உடனே நமஸ்கரித்துச் சிரமேற்கைகூப்பி சுவாமிதமது பூரணகிருபை என்னிடத்துள்ளதால் சம்பூர்ணமானேன் லோகோபகாரார்த்தமான சிலவரம் அருளவேண்டும் என்றால் ஏமன் தமது உருவிலும் பாசம்வீசிய குற்றத்தை மன்னிக்க வேண்டும். இத்தலம் தபசித்தி சீக்கிரந்தருவதாயும் புண்யம் வளர்வதாயும் இருக்கவேண்டும், இங்கு வசிக்கும் ஜந்துக்கள் இருபத்தொரு ஜன்மத்திற்குள் முக்தியடையவேண்டும், சுதாமயமான உம்மை வில்வம் அறுகு புஷ்பம் அக்ஷதையால் அர்ச்சிப்பவர்களின் ரோகம் நீங்கிப் பூரணாயுளாகவேண்டும். உமது அருள்மயமாகிற மிருத்யுஞ்செய மஹாமந்திர மூன்றக்ஷரத்தை உள்ளத்தில் கூட்டுவோர்கள் தீர்க்காயுளும் ஞானமும் எளிதாய் அடையவேண்டும்,

வாயுவேககுளிகையால் தினம் கொண்டுவரும் கெங்கையை அன்பர்கள் யாரும் சுலபமாய்ப்பெற்று உமக்காட்டும்படி அருள்செய்யவேண்டும். என்று பிரார்த்தித்தார். பார்வதிசமேதன் இதன்பூர்வம் இருகூப்பிடுதூரத்தில்எமது அபிஷேக கெங்கை ஜாதிக்கொடியுடன்உதிக்கும் உதையகாலத்தில் தெரிசிக்கலாம் நீ விரும்பிய யாவும்தந்தோம் என்று அருளி இலிங்கத்தமர்ந்தனர். உதையகாலத்தில மார்க்கண்டேயர் மிருகண்டேயர் முதலிய அனேகமிருஷிக்கூட்டங்களுடன் பூரணன் குறித்த இடத்தடைந்து சிவத்தியானம் செய்தார்.

ஹேரிஷிகளே ராதந்திரகல்பம் திரேதாயுகம் பவவருஷம் பங்குனிமாதம் கிருஷ்ணபக்ஷம் அசுபதிநக்ஷத்திரஉதையத்தில் சர்வகணங்களுடன் விருஷபாரூடராய் இடத்தமர்ந்த மாதுவிளங்கப் பரமன் உதித்தார். பாதாளத்தில் இருந்து கெங்கையும் அம்பேறும்எல்லை உயர்ந்து தோன்றி ஜாதிக்கொடியுடன் கூபமயமாய் பரிமளவாசனை கமழ விளங்கிற்று. தேவர்கள் அஷ்டாதசவாத்தியகோஷம்செய்து பூமிமுழுதும்மறையும்படி பூமாரிபெய்தார்கள். பிரஜைகளெல்லாம் பேரானந்தம் அடைந்தார்கள். சர்வரிஷிகள் முனிகள் பூசுரர்கள் தபசிகள் சித்தாதிகளும் அங்குகூடி ஆனந்தித்தார்கள் மார்க்கண்டேயர் அத்தியர்ப்புதத்தையும் விடையுடையானையும் கண்டு ஏகாக்கிரசித்தமாய் நின்றார். என்றுசூதபுராணிகர் கூறினார்.

கங்கைச் சருக்கமுற்றும்.

# 16 பிஞ்சிலச் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே முற்கூறிய கெங்கையின் விசேஷத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். பிர்ம்மா முதலான தேவர்களும் சனகாதி முனிவர்களும் வியாசாதிரிஷிகளும் விசுவதேவர் வசுக்கள் பிதிர்க்கள் மருத்துக்கள் ரிதுக்கள் கணங்கள் தும்புரு நாரதர் பிரணவர் முதலியவர்களும கங்கையின் பிரவாகத்தைக்கண்டு ஆச்சரியமடைந்து மாதுகூறுடையானைப் போற்றி நின்றார்கள் கைலாசபதி மார்க்கண்டேயரையும் மற்றையரிஷிகள்முதலானவர்களையும் அருட்கண்ணுற்று அண்டங்களின் உள்ளும் புறம்புமாகும எமது ஜடையிலும் இடையிலுமுள்ள சக்தியே அபூதமயமாகிய கெங்கையும் ஜாதிக்கொடியுமாய் எமது அன்பர்கள் யாரும் சுலபமாய்ப்பெற்று எமக்காட்டி அர்ச்சிக்கும்படி வந்திருக்கிறது இவைகளின் தெரிசனத்தால் தர்ம்மார்த்தகாம்பமோக்ஷா பெறலாம் என்று அமுதூறும் தன் திருக்கரத்தால் அறுபத்தாறாயிரக்கோடி தீர்த்தங்களையும் ஆகர்ஷித்து அக்கூபத்தில் ஸ்தாபித்து அப்யுக்ஷணஞ்செய்து இத்தீர்த்தம் மிகசிரேஷ்டமுள்ளது புண்யத்தையும் தபத்தையும் வளர்க்கும் இதில் அறுபத்தாறாயிரங்கோடி தீர்த்தத்தையும் எமதுகரத்தால் கூட்டித் தந்திருக்கிறோம் ஆனதால் அத்தீர்த்தங்களின் பலனையும் அபூதபல

லேயும் தரும் மார்க்கண்டேயபக்தசிரேஷ்டன் இதுமுதல் உத்தரகாசிக்குப் போகவேண்டுவதில்லை இக்கங்கையால் அபிஷேகிக்கலாம் இந்த ஜாதிக்கொடியை என் கன்னிபாகத்தில் ஸ்தாபித்து அதன்புஷ்பததால் எம்மை அர்ச்சிக்கலாம். இக்கொடி எப்போதும் எம்மிடத்துள்ளது. இந்ததீர்த்தத்தை எமது சொரூபமாகிற அமுதலிங்கத்திற்கும் அதன் முன்னும் இடமாயும் உள்ள அபிராமசுந்தரிக்கும் அபிஷேகிக்கலாம். வேறு உபயோகம் செய்யில் ஆயுளைகுறைக்கும். இத்தீர்த்தம் மார்க்கண்டேயர் கேட்டுக்கொண்டபடி எம்மால் அசுபதிதினத்தில் வந்தமையால் இதற்கு மார்க்கண்டேயதீர்த்தம் என்றும் மிருத்யுஞ்செயதீர்த்தம்என்றும் அசுபதிதீர்த்தமஎன்றும் பெயர் விளங்கும். நித்யம் அடைநத மார்க்கண்டேயதீர்த்தத்தில் பக்தியோடு படிந்து ஜாதிக்கொடியைத்தெரிசித்து எம்மைச்சிந்தித்து ப்பணிபவர்க்கு நிததியமுதல் வேண்டிய எல்லாவற்றையும் தருவோம். பங்குனிமாதம் அசுபதிநக்ஷத்திரம். கூடிய அத்தினஉதைபத்தில் சர்வஜனங்களும் ஸ்நானம்பண்ணலாம் அன்று இத்தீர்த்தால எந்தத்தலத்திலுள்ள இலிங்கங்களுக்கேனும் ஆத்மார்த்தபூஜைக்கேனும் அபிஷேகித்தால் ஆத்மலாபமும் ஆயுள்விர்ததியும் அடைவார்கள். இத்தீர்த்தத்தில் விளாமிச்சம்வேர் ஏலத்தூள் சந்தனம் சகூப்பம் கலந்து அமுதலிங்கத்திற்கு ஆட்டினல் அஷ்டைசுவரியபுத்திரபோகபோக்கியமும் ஞானமும் பெறுவார்கள். கிருஷ்ணபக்ஷம் அசுபதிதினத்தில் அருணோதயகாலஸ்நானம்செய்தால்

டவர்கள் ஐந்தில் ஒன்றாய் எண்ணுவர்கள். பூர்வஜன்மங்களில் சொற்பபுண்யமும் இல்லாத மஹாபாபிகள் இதில் படிந்து பருகினோர்களை தெரிசிக்கப்பெறவும் மாட்டார்கள். இத்தீர்த்தக்கரையில் தபம் யக்யம் தானம் சிவபூஜை முதலியசெய்யின் பலன் ஒன்றுகோடியாகும். இதன்ஊறலாய பக்கத்தில் உள்ள பனிரெண்டுதீர்த்தத்தில் இத்தீர்த்தம் வருஷாகாலத்தில் எறிப்பொருந்துமாயின் நான்கு இதோடொத்து அமுதயாக நிமிர்ந்தும் எட்டுதோன்றாது ஏகநிரந்தரமாகும். என்றும் கிருபையோடும் மார்க்கண்டேயர் அறியும்படி அருளிய சிவபிரானை மார்க்கண்டேயர் பணிந்து சுவாமி இத்தீர்த்தத்தில் ஆயிரம்உரு மிருத்யுஞ்செயம்ஜெபித்துக் கலசத்தில் நிரப்பி உமக்கு அபிஷேகிப்பவர் நித்தியானந்தம்பெறவேண்டும். அந்தநிர்ம்மால்யத்தைப்புஜிப்போர் அபமிருத்யுஇல்லாதிருக்கவேண்டும். ஜன்மவருடம் மாதம் வாரம் நக்ஷத்திரதினங்களில் உமது உருவாகிற அமுர்தலிங்கத்திற்கு அபிஷேகித்தால் நவக்கிரகதோஷம் நீங்கவேண்டும். சங்காராந்தி அயனம் விஷு கிரஹணம் பிதிர் தினம் முதலிய காலங்களில்அபிஷேகிப்பவர் நித்தியசந்துஷ்டியடையவேண்டும். தினம் உமக்கு அபிஷேகித்து நிர்மால்யத்தைச் சாப்பிட்டால் க்ஷயம் குன்மம் குஷ்டம் ஜ்வரம் முதலிய ரோகங்கள் உறாது ஞானம் அடையவேண்டும். இத்தீர்த்த ஸ்தாபிதமாயுள்ள இத்தலத்தில் நந்தவனம் நீலோத்பலம் செங்கழுநீர் அம்புயத்தடாகங்கள் அமைத்து அப்புஷ்பங்கள் உமது அர்ச்சனைக்காயின்

அவர்கட்குவாதபித்தசிலேத்துமநாடி முறைபிசகாதாடிச்சகத்தைவிளைவிக்கவேண்டும் அன்னியதீர்த்தசதால் உமக்கு அபிஷேகிப்பவர் சர்வபலன்களையும் இழந்து அபராதியாகவேண்டும். பங்குனிமாதம் அசுபதிதவிர மற்றையகாலத்தில் உமக்கபிஷேகிக்காது உபயோகப்படுத்துவோர் கண்கள் மூளை குடல்கள் வீறி அல்ப ஆயுளராகி மறுஜன்மத்தில் முயலகண்டன் குமரகண்டன் முதலியவலிப்புகளை யடையவேண்டும். தங்களிடத்திருந்துவந்த இந்த ஜாதிக்கொடியில் உண்டாகும் புஷ்பங்களால் உமக்கு அர்ச்சிப்போர்கள் சர்வசித்திகளையும் அடையவேண்டும். இந்தஜாதிக்கொடியின் ஒருபுஷ்பார்ச்சனையினால் மற்றைய புஷ்ப சகஸ்திரார்ச்சனை பலன்கள் அடையவேண்டும். சர்வபதியாகும் உமக்கு அன்பிலா மஹாபாபிகள் உமக்கு அர்ச்சிக்காது வேறுஉபயோகித்தாலும் இக்கொடியின் மகிமை அறியாது அழித்தற்கு எண்ணி முயன்றாலும் அனேக ரோகங்களை அடையவேண்டும். அதன் வேரில் உள்ளமண்ணைக்கிண்டல் அதைத்தகர்த்தல் அதன் அருகில்தீயுண்டாக்கல் முதலிய ஹிம்சைசெய்வோர்களின் வம்சம் நாசமாகவேண்டும்.

[illegible]

அர்த்தஜாமத்தில்இதன்ஒருபுஷ்பார்ச்சனைக்குக் கோடிப்புஷ்பார்ச்சனையின்பலன் தரவேண்டும், மற்றகாலங்களில

ஆயிரம்கோதான பலனும் நூறு அசுவமேதபலனும் பெறுவார்கள். அத்தினம் அருணோதயத்தில் இதன்சார்புள்ள தடாகத்தில் படிந்து கணநாதரையும் பைரவரையும் தியானித்து இந்தத்தீர்த்தத்தைக் கலசத்தெடுத்து திரியம்பகம் பஞ்சப்பிரம்மம் ஷடங்கம் காயத்திரி ருத்திரம் இவைகளில் ஒன்றேனும் அபிமந்திரித்து ஸ்நானம் செய்தால் பிரம்மஹத்தி முதலிய மஹாபாதகங்கள் நீங்கும். இதில் ஸ்நானம்பண்ணக்கிடைக்காவிட்டாலும் இதை ஓர்மையாய் தியானித்தால் அதுவரையில் ஆகாமியம் உதிக்காமல் மஹாதபோபலனை அடைவார்கள். பங்குனிமுதல் சொல்லிய காலத்தைத்தெரிந்து அக்காலத்தில் இதைப்பானம்பண்ணினால் ஆயுள்வளரும். ஞானம்கூடும் சகலசௌபாக்கியங்களும் உண்டாகும். மற்றைய காலம் புஜித்தால் மண்டைவெடித்துக் கண்கள்பிதுங்கி குடல்வீறி சண்டம்பிளக்கும். இந்ததீர்த்தபானம்பண்ணுங்காலம் மீனவாசியாகும். இடம் எமதுசன்னிதியாகும். கொள்வதுமஹான்களால்ஆகும். பெரும்முறைவலக்கால்முன்னின்கீழ் இடக்கால்முன்னயமாநிற்பதும் கைவிரல்கள் ஐந்தாய்விரியாது கோகரணமாக வலபின்னடியை இ-முன் ஊனிதாங்கி குருமுன் நிமிர்த்து நீட்டி தீர்த்ததாரைசிந்தாது தாரையையும் குருவையும் எம்மையும் பார்த்தபடி தாங்குதலுமாகும் மனம்ஒன்றி நாடுவதாகும். மனம்கரைய அன்புருகிக்கூடுவதாகும் கங்காதேவியைப்போற்றுவதாகும். மஹாமிருத்யுஞ்செயமந்திரம் ஜபித்துஏற்றுவதாகும். இத்தீர்த்தத்தைப் பருகுங்காலம்

இடம் சொளல் பெறும்முறையாகும்புறத்திலகுவாய் இண ங்கும் முன்னுன்கைக்கூட்டி அகப்பின்னுன்கையும் வழுவா து அமர்த்தும்திறமற்று பங்குனி அசுபதிதீர்த்தமாயும் மார் க்கண்டேயதீர்த்தமாயும் மிருத்யுஞ்செயதீர்த்தமாயும் மூன் ருகிற தீர்த்தத்தைச் சிந்தும் மதிகேடற்கு இலகுவாகும் முன் னுன்கும் இணங்க ஆசமனம்பண்ணும்படி தீர்த்தத்தை அல க்ஷியமாயெண்ணி அளிப்போர் இடர்உறுவார்கள். இத்தீர் த்தத்தை வலக்கையில் தாங்கி உண்ணுது தாகமித்தமேனும் இடக்கையால் உண்போர் மிக அபராதியாவார்கள். இத்தீர் த்தம் காசியில் கெங்கையமுனை ஸரஸ்வதி யென்று பிரிந்து காணப்பட்டு ஒன்ருய் ஊறும். பிர்ம்மரந்திரமாகிய இத்தல த்தில் அதிரகசியகூபமாய் விளங்குகிறது. இத்தீர்த்தத்தை அசுபதிதினத்தில் பெறும்படி நமது அன்பர்களுக்கு அளித் தோ அவர்கள் அன்போடு எமக்கு அபிஷேகிப்பர்களாயின் அவர்களுக்கு உண்டாகும் பலன் தீர்த்தம் அளித்தோர்க்கும் கிடைக்கும் தீர்த்தத்தைப்பெற்றுச் சிந்துதல்முதலான அப சாரம்செய்பவர்களுக்கு இடின் அவர்கள் அதனுல் அடையு ம் தண்டனைகளை அளித்தவர்களும் அடையும் தரமாவார்கள். நம்பால் பூரணஆனந்தம்பெற்ருேர் எனர்கட்கு ஒருசமயம் அளிக்கின் எனக்குவம நீங்கும் அசுபதிதினத்தில் தாகநிமி த்தம் பானம்பண்ணினுலும ஆயிரம் சாந்திராயணபலன் அ டைவார்கள். இத்தீர்த்தத்தைத் தர்ப்பணம்பண்ணுவோர் கல்பாந்தம்வரையில் இருப்பியடைவார்கள். பாசபந்தப்பட்

ஆர்ச்சிப்போர் கோடிநீலோல்பலார்ச்சனையின்பலன் அடையவேண்டும். கர்மசண்டாளர்தவிர மிக்கஅன்புள்ளயாவரும் இப்பூவால் இரவில் அர்ச்சித்துத் தீர்க்காயுள் அடையவேண்டும். இதன்வழியாய் இன்னும் பூவுலகத்திலுண்டாகும் ஜாதிப்புஷ்பங்களால் சிவஸகஸ்திரநாமம மிருதயுஞ்செயதிரிசதநாமம் அஷ்டோத்தரநாமம் அஷ்டாதசநாமம் இவைகள் உரைத்து ஆர்ச்சிப்போர்கள் ரோகம் தரித்திரம் கிலேசம் அபமிருத்யு காலபாசஇம்சைகளை ஒருபோதும் அடையாமல் தர்ம்மார்த்தஞானமோக்ஷத்தை அடையவேண்டும். என்றவரங்களைக்கேட்டார். மதிச்சடையார் தந்தோமென்று அருளி மறைந்தார். அப்போது கணங்கள் சங்கத்துவனி செய்தார்கள். தேவர்கள் துந்துபிமுதலியவாத்தியகோஷஞ்செய்து மலர்தூற்றினார்கள். நாரதாதிமுனிவர்களும் மார்க்கண்டேயரும் சிவநாமத்தைக்கூறி கரங்களைச்சிரமேல்கூப்பி நடித்தார்கள். தர்ம்மதேவதைகள் ஜயஜயவென்று ஒலித்தார்கள். என்று சூதர் கூறினார்.

(16) பிஞ்சிலச்சருக்கம் முற்றும்

# 17 சித்திரவிரதன் சருக்கம்.

ஹேமரிஷிகளே ஒன்றுமுதல் நவசத்திசுவரூபமாகிற தளிர்களையுடைய பிஞ்சிலத்தையும் பொற்குடத்தில் நிரப்பியதீர்த்தத்தையும் தாங்கி அமுதீசரையடைந்து ஸ்தாபித்துப் பூஜித்தவிதத்தைச் சொல்வேன் கேண்மின்கள். தேவர்கள்முதலிய எல்லோரும் தீர்த்தத்தையெடுத்து மிருத்புஞ்செயத்தைச் செபித்து ஸ்நாநப்பண்ணினார்கள். மார்க்கண்டேயர் மாதாபிதாவிற்கு ஸ்நாநம்செய்வித்துத் தானும்ஸ்நாநானுஷ்டானதர்ப்பணம்செய்து அமுதகங்கையை அஞ்சலிசெய்து சௌக்கியத்தைத்தரும்கங்காபோற்றி சிவப்பிரியே சர்வதேவதாசுவரூபி சர்வரோகஅதாவுஷதரூபி தாபந்தரியநாசனி அமுதஸ்வரூபி பக்திமுக்திமங்களம்தரும் சுவரூபி சர்வாரிஷ்ட்டநாசனி சர்வபோகாநுக்கிரகி சுவர்க்கந்தரும்மந்தாகினி திரிலோகாத்மசுவரூபி ஜகத்ஆதாரி ரேவதிசுவரூபி ஜீவபாசநாசனி சாந்தரூபி ஞானகிருபாகரி ஜகன்மாதா துக்கநாசனி மங்களாநுக்கிரகி மூலப்பிரகிருதிசுவரூபி பரமாத்மசுவரூபி போற்றிபோற்றியென்று துதித்து இருகையேந்தி ஹேமகெங்கா தாம்இவ்விடத்தில் சாந்நித்தியமாயெப்போதுமிருந்து உன்னுருவாகிறதீர்த்தத்தை அமுதலிங்கத்தில் அபிஷேகிப்பவர்கட்கு நித்தியமனோரதந்தத்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தார். சர்வத்திராணு

மகிழும்படி அநுஷ்டிக்குமென்று சாஸ்திரத்தினின்றுந் தொனிவி
ளங்கிற்று மார்க்கண்டேயர் சாவித்திரியுடன் கெங்கையைய
டைந்து பிரதக்ஷணம். ஐந்து நமஸ்காரஞ்செய்து சுகந்தபுஷ்பங்
களால் அர்ச்சித்து பொற்குடத்தில் தீர்த்தத்தையுஞ் ஜாதிக்
கொடியையும் எடுத்துக்கொண்டு வேதபாராயணத்துடன் அ
முதீசர்முன்வந்து குடத்தைப் பொற்பீடத்தமைத்து அமுதீ
சரின் நதியில் சித்தாந்தமுறைப்படி ஜாதிக்கொடியைஸ்தா
பித்து அபிராமசுந்தரியையும் அமுதீசரையும் காமிகா
கமவிதிப்படி இந்திரசேனையாட்டிய பூஜித்தார்.
ஹே ரிஷிகளே அக்ஷபதீர்த்தத்தைப்பற்றி வியாசராற்றெரி
ந்த ஒரு சரித்திரத்தை கூறுகிறேன் கேளுங்கள். பா
ண்டியதேசத்தில் மிகநற்குணவானாகிய சித்திரவிரதனென்ற
ராசன் வனத்தில் வேட்டையாடி. சிரமத்துடன்புண்டரீகரி
ஷியின் ஆசிரமமடைந்து அவ்விருஷிபுத்திரனாகிய புட்கல
னென்பவனைக்கண்டு பணிந்து அன்னங்கேட்டார். அதற்க
வர் எனதுபிதா சிவபூஜாநைவேத்தியான்னம் அமைத்து மாத்
தியானஸ்நானஞ்செய்யப் போயிருக்கிறார் வந்து சிவபூஜைசெ
ய்தவுடன் புஜிக்கலாமென்று உபசாரமாய்ச்சொல்லியும் அவ்
வார்த்தையை அங்கீகரிக்காமல் தமது தூதுவர்களால் அன்ன
ங்களையெடுத்துவரச்செய்து புஜித்து உட்கார்ந்திருக்கும்வே
ளையில் புண்டரீகர்வந்து அங்குநடந்தவிஷயங்களைச்சுதனால்
தெரிந்து அடா மூர்க்கஇராசனே என்சுதனையதட்டி பூஜா
நைவேத்தியத்திற்காகும் அன்னத்தைப்புஜித்து இம்மம்போ

கொர்ஜித்துவீற்றிருக்குமசீ சிம்மமாயப்பிறந்து மிகப்பசியால வருந்தி பின யக்ஷஸாய்வெகுகாலமலைந்து ரௌரவாதி நரகங்களையனுபவித்து அநேகநாய்ஜன்மமடையக்கடவாயென்று சபித்தார். உடனே அரசன ரிஷியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தங்களின் அடிமையாகியநான பசிபாறநெடி தவஞ்செய்துவிட்டேன் தாங்களறிய மெய்தாங்கள மன்னித்து சாபவிமோசனம அருளவேண்டுமென்று பலமுறைவேண்டினன். அதற்குப்புண்டரீகர அரசனை சாபப்படி அனுபவித்து முடிவில புண்ணியநதியில ஜோசாவரிஷிராஜிகள்பார்க்கவரிஷியின் கிருபாநோக்கமடைந்து அவருடைய சிஷ்யர்களுடன் வில்வவனம அடைந்து அங்குள்ள அபடதீர்த்தம் உனமேயரில் வாபிரப்பமிய புக்காலத்தில் உனறுடைய சாபமநீங்கி திவ்யாமயடைவாயென்று சாபவிமோசனம் கூறி பின்னும புண்டரீகர் இந்த வுனைத்து சிவபூஜைசெய்து புத்திரனுடன் பரசிந்தார். அரசன ரிஷியின்சாபப்படிகத்துன்புற்று நாய்ஜன்மத்துடன் பசியாலைதுறப்புகைவாசலைப்பற்ற பரமசிவாரமஞ்செய்யறத்துப பாபசகவரின்சிஷ்யர்கள் அந்தநாயைசகிப்பாறுமுகட பிடித்து இப்படி தார்கள அதைநாங்கள பார்க்கவரிஷிடாகனே இந்தநாயை இம்சிக்காது அழைத்துக்கொண்டு அநாதீர்த்தயாடுவா நாகளென்று கட்டளையிட்டார். அவர்களின்படி சிஷ்யர்கள நாயைககூட்டிக்கொண்டு வில்வவனம அடைந்து பங்குனி அபதிதீர்த்தமாடுகையில சிஷ்யர்களிலொருவர் வைமதிருந்ததைக

அந்தராபிலையேரில் விளையாட்டாகப் பிழிந்தார். உடனே நாயுரு பாறியப பூ சிசகிர ஒப்கதனை துருவாகிப் புண்டரீகரைத்தி ரனிருது அசசி சந்த்தில் விதிமுறைஸ்நானஞ்செயது பார் சகவ பா கஞ அபிராமிபடையுடையம அழுதவிச்சந் ந்தபநசரிசிருந்து வெ துரதாக்கள ரமணை வந்தவி ரணத்தில் ஆமோர ரைலிகதுச் சி மேலாகப ஆடை ரா. பிற்பாடு இந்த ராபதிதீர்த்தா பலபல விகவிசேஷமாகத்து அனேக யந்திகரிந்தியாகக லா லமுடாமுள ரூப ஆசா ரி ஞர்,

சிசகிருபிமனை பு ந நபுறமு.

---

# தருமராஜன் சருக்கம்.

லைபா சரண்யமசிகம் நகுலரககண் ரு யபர்கசன் யாகச்ருரமசப்பு மாம சாலஜைபாயகத்தீசன் பின் றுபகார னையுலைகிப மாரிரதைர அம்மெகுவவா பிறமறென்று ஸ்ருரிகசே ரரர. ந ர ப த ரிதிகளேதுகுகள் மார் ரரல்மே ட நிணாப கார பூமைசம துவநுப்ரைதீதில் ஆ பிரமதேவை நஷநபிரதுபிலா நிதவிசிர்பதேவைச்சரண ஸடநது லாவிபூவுல ல மாரகசன்மே யமென் ஷுட்ருபஷா தபசியால் ரசன் சருமரானசசயகரிகது பிரானீனபாய

தண்டனையற்று அகிருத்தியம்மேலாகி யென்னுற்பூபாரந்தாங்கப்படவில்லை தருமராஜனையுண்டுபண்ணி பாபதண்டனைகளை நடத்தும்படி செய்யாவிடின் பூபாரத்தை நான்வகிக்கேன் என்று முறையிட்டாள். பிர்மதேவன் இந்திராதிதேவர்களுடன் பூதேவியை அழைத்துக்கொண்டு வைகுந்தஞ்சென்று லோகரெக்ஷகனைநமஸ்கரித்து தாங்கள்சர்வபிரஜைகளையும் ரெக்ஷிக்கிறீர் காலனை யீசனுஞ் சங்கரிக்கப்பட்டு பிரஜைகள் எமதண்டனையைப்பெறாது பாபமயமாயிருப்பதால் பூதேவி பாரந்தாங்கமாட்டாமல் மிகவருந்துகிறாள் காலனையெழுப்பும்படியான உபாயஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். வைகுந்தநாதன் பூமிதேவிமுதலியவரை நோக்கி காலன்மடிந்தவிடத்திற்சென்று ஈசனைப்பிரார்த்தித்தால் விமோசனம்உண்டாகும் அங்குசெல்வோம் வாருங்களென்று அழைத்துக்கொண்டு வில்வவனம்வந்தார்கள். மார்க்கண்டேயர் விஷ்ணுமுதலியவர்களைப்பணிந்து சிவசந்நிதிக்கழைக்க அவர்கள் நந்திகேசுவரனைப்பிரார்த்தித்து உட்சென்று சுதாலிங்கத்தைப்பூசித்து சுவாமி ஏகவஸ்துவாகிற உம்மைத்தவிர வேறுபொருளில்லை சர்வஜீவன்களிலும் உள்ளும்புறம்பும் ஜகத்காரணரூபமாயும் இந்திரியரூபமாயும் சர்வகாரணமாயும் சச்சிதானந்தமாயும் பிராணிகள்ரூபமாயும் திரிகாலரூபமாயும் விளங்கும் சிவமே போற்றிபோற்றியென்று அஞ்சலிசெய்து பஞ்சகிருத்தியஆதாரபோற்றி சிவமேபோற்றி குருவேபோற்றி ஜோதிரூபா ஏகா நித்தியா பசுபதே சர்வஜீவா சர்வலோகாதீதா

வேதாக்கிர வேதநாதா தியானரூபா தியானானுக்கிரகா சத்
திரூபா தத்துவரூபா ஸ்தூலரூபா அன்னரூபா தாரகரூபா ஜக
த்பதே ஆகாசகேசா ஆகாசசரீரா ஸ்தோத்திரப்ரீதே வீரவீரா
பைரவா விரூபாக்ஷா அக்ஷரநாசனா கிருபாகரா சூட்சுமச்
சூட்சுமா ஸ்தூலஸ்தூலா போற்றி போற்றியென்று விஷ்ணு
வும் நீலகண்டா பிரணவஸ்வரூபா பக்தப்பிரியா தசதத்கால
ரூபா தண்டபாசஹஸ்தா பாகநிரவிக்கிரகா சர்வரூபா பக்த
துக்கநிவாரகா ஹரிஹரிநுதபவா சா ஆனந்தரூபா சிருஷ்
டிஸ்திதிசம்ஹாரா ரக்ஷிதை சர்வசம்ஹாரா பராபரா அதிக
ஸ்வரூபா போற்றியென்று பிர்மாவுந்துதித்து ஹே பிரபுவே பூ
மிதேவிநிமித்தம் காலனைப் பண்ணவேண்டும் என்று
பிரார்த்தித்தார்கள் பூமிதேவி சிவசன்னிதியில் பஞ்சாங்கமா
யப்பணிந்தாள் ஈசனை சாந்தருத்ரருடனே ஜடாமகுடராய் கோ
டிசூரியப்பிரகாசமும் கோடிசந்திரசீதளமும் விளங்க உமாச
மேதராய் இலிங்கசதிற்றோன்றி விஷ்ணுமுதலியவர்களை நோக்
கி எம்மைப் பக்திபண்ணும் மகாத்மாக்களை யிம்சைசெய்பவர்
கள் ஹரி அயனையும் எமக்குத் துரோகஞ்செய்தவர்கள்
அதையான் சகிக்கேன் எனக்கபராதஞ்செயயின் பொறுப்பே
ன் எமது பக்தர்களுக்குத் துரோகஞ்செய்யின். சீக்கிரம் நசி
ப்பார்கள் ரூபரஹிதமாகிய எமது சர்வரூபங்களும் பக்தர
க்ஷார்த்தமாகவே ஏற்பட்டிருக்கிறது என்று திருவாய்மலர்
ந்த சிவபிரானை எல்லோரும் நமஸ்கரித்து தயாநிதே காலன்
இல்லாமையால் பிரஜைகளின் பாபரூபத்தைப் பூமிதேவியால்

தாங்கமுடியவில்லை எண்பத்துநான்கு லக்ஷயஜீவபேதங்கட்கு இருபத்தொருகோடிநரகங்களுமொருகோடிவிமானங்களும் பாபபுண்ணிய அநுபவார்த்தமாய் அமைத்து ஜநநமரணங்களைவிதிக்கப்பட்டு மரணஜநநமில்லாமல் நின்றிருப்பதால் பாபதண்டனையற்று சொர்க்கநரகங்கள் உள்ளதுள்ளபடியிருக்கிறது பிரஜைகளையாளுஞ்சர்வபிரளயகாலம் ஆகுஞ்சமையம்போல தெய்வபக்தியற்று அகங்காரஇருளில் அகப்பட்டிருக்கிறது ஹேமஹாதேவா கிருபைசெய்து காலனையுண்டுபண்ணவேண்டும் இனி சிவபக்தர்களுக்கு யாதொருஅபராதமுஞ்செய்யான், எங்கள்பேரிலகிருபைசெய்து ரக்ஷிக்கவேண்டுமென்றுபணிந்தார்கள். மார்க்கண்டேயரும் சிவசந்நிதியிற்பணிந்து போற்றிபோற்றியென்று அஞ்சலிசெய்து காலகாலேசுவரா தருமராஜனையெழுப்பி தம்மையடையுந்தேற்றியடைந்த அன்பர்களுக்குஞ் ஞானத்தைக்கடாக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். தயாநிதியாயும் காலகாலனும் ஜீவகலையாயும் உள்ள கடவுள் தருமராஜனையுண்டுபண்ணும பொருட்டுசக்தியம்சமாகிற தமது இடதுபாதத்தைச சண்டன்மேல் ஸ்பரிசமாகும்படிநீட்டி அந்தகா என்றுதிருவாய்மலர்ந்தார் உடனே தருமராஜன் நித்திரை நீத்தவர்போல்எழுந்து சிரசின்மேல்கைகளைக்கூப்பி பிர்மாவினால். உபாசிக்குப் உமதுபாதம்போற்றி விஷ்ணுவின்-கண்சங்கும்-பாதம்போற்றி மகாபிரளயகாலத்தில்- க்ஷீராப்தியில்யோகநித்திரையிலிருந்தவிஷ்ணுவைக்கொல்லவந்த மதுகைடவர்களை பிர்மாகே

ம டுக்கொண்டபடி நாசப்படுத்திய உமதுபாதம்போற்றி ஒருபுஷ்பத்தால்அர்ச்சித்தாலும் சாரூப்பியத்தைத்தரும் உமதுபாதம்போற்றி பத்திபண்ணுர்தேவாதிகளைத்தகிக்கவந்த காளகூடவிஷத்தைத உண்டிரக்ஷித்தஉமதுபாதம்போற்றி பாததூளியைத் தாங்கும்அடியார்கட்குஜநநமரணமில்லாதுசித்திமுத்தியளிக்கும்உமதுபாதம்போற்றி சரணடைந்தார்வம்சமுழுதிற்கும்பக்தியைவளர்க்கும் தேனூறும்பாதம்போற்றி யென்றுஸ்துதித்துப்பணிந்தார். பணிந்ததருமராஜனை யீசன் கிருபாநோக்கமாய் ஏமா யாம் எமதுபக்தர்கள் எதைக்கேட்டாலு கொடுப்போம் வில்வதளத்தால் அர்ச்சித்தால் சர்வாபீஷ்டங்களோடு முத்தியும் அருளுவோம் வில்வவனமென்கிற இந்தப்பிரமராத்திரஸ்தலத்தில் பக்தியோடு ஒரு நாள்வசித்தாலும் எங்கிருந்தாவது என்னை ஸ்பரித்தாலும் அவர்களுக்கு அபமிருத்யுசாராது பிரமராத்திரமாகும் தலத்து அன்பாய் எம்மைஅடைந்தாரிடத்து யமனுகவேண்டாம். சர்வஜீவன்களிடத்தும்ஏழுகோடி ஐம்பத்தொன்று பதினாறுபனிரெண்டு எட்டு ஐந்து மூன்று அக்ஷரவடிவாய்ப்பொருந்தாதுறைவோம் மிருத்யுஞ்செயமாகிறமூன்றெழுத்தைச்சேர்க்கும் பக்தர்களிடத்தில் இரண்டற்றபூரணாநந்த அத்விதவிரதாண்டவஞ்செய்குவோம். மிருத்தியுஞ்செய மூன்றெழுத்தைக்கூட்டும்நுண்மதியமர்ந்து எம்மையடைந்தோருடைய முத்திகாலத்தில் உருவுருது பிரமவிஷ்ணுக்களுடன் எம்மையடைகுவாய். எமதுபக்தர்களை மமதையால் உபத்திரவம்செய்யும் துஷ்டர்

கலைச் சூலந்தாற்றத்தி பாசத்தாற்கட்டி தண்டத்தாற்சுழல
ஹிம்சித்து இருபத்தேழுகோடி நரகங்களிலும் பலபலகால
ம்அமிழ்த்தி நரகமாற்றும்போதெல்லாம் நின்படையாளாற்பு
கர்ப்பாய். சுதாலிங்கத்தை அக்ஷதை அறுகு வில்வங்களா
ல் அர்ச்சித்தடைந்தவர்களுடைய ரோகங்களைமாற்றிச சர்வ
சம்பத்துகளையும்அளித்து அன்பளவாய்விளங்குவோம். அவ
ர்களிடம் நீயணுகவேண்டாம், மரணகாலத்தில் இத்தலத்தை
நினைப்பவர்கள்முன் சொரூபங்கொள்ளவேண்டாம். கோதா
ணம் எடக்கிநிவராயின் அவர்கட்கு நரகாவஸ்தையில்லாது
கைலாசவாசநிநான்கிவொன்றளிப்போம் அன்னதானஞ்செ
ய்பவர்களை மரணகாலத்திலும இடிசிக்கவேண்டாம். உனது
ஆயுதங்களையும் வைவசுவதாதிபத்தியத்தையும் தந்தோம் எ
ன்றுஅருளியகர்த்தனைத் தருமராஜன் பக்தியோடுபணிந்து பி
ரபுவே எனதுசரீரத்தில் பசுபதிபாசமும்முனைச்சூலத்தாற்று
ச்சி அருள்மயமாகிய இடதுபதத்தால்உதைத்துச் சோதிமய வ
லப்பதம்அமர்த்தியதால் நான்என்பதடங்கி ஆனந்தாதீதமுற்
ற அடியேனை நாற்றென்றில்ஒன்றுய்ப்பிரித்துப பிரஜைகளி
ன் துஷ்கர்மதண்டனைசெப்பும்படி விதித்தீர். ஸஜீவன்
களுள்ளும்அமர்ந்து பஞ்சகிருத்தியநடனம்புரிந்து பக்தர்களி
ன் அன்பளவாய்விளங்கிச் சித்திமுத்தியளிக்கும் உமதுபாதத்
தாறும் அமுததாரைகளிற்பிரிந்து பிரஜைகளின்வினைக்கீடா
யிருண்டமர்ந்து அவர்களது வினைக்கீடாய்ப்பிரித்தனுபவித்த
ற்களித்தபிராரத்தவார்த்தியத்தில் உருக்காட்டி கல்பகோடிகால

ம்வரையில்செய்யவேண்டியதண்டனைகளை செந்நாளாய்க்கா ணும்படி ஒவ்வொருநிமிஷத்தில் நடத்திவாரித கற்பூரப்புகை யின்நிறையளவாகும் பிராரத்துவானுவர்த்தம் மறுஜனன த்திற்கனுப்பியும் பசிமுதலியநோய்களால்வருத்திக்கொண் டேஆத்மபோதிகளுக்கு உடமாலவிதித மரணகாலங்களை அ ங்கங்கமர்ந்துநோக்குமடியேன் உமதாக்ஞையேகதியாகவு டையேன் என்று பலமுறையாலித்து தமதுகாலனுலளித்த மும்முனைச்சூலத்தையும் முப்புரிப்பாசத்தையும் பெற்று சு வாமி சிருஷ்டித்திதிசெய்யும் பிரமவிஷ்ணுக்களின்கலைகள் மார்க்கண்டேயரிடம்அயர்ந்து தொழிலுறுது ஒன்றிலொன் றாய் என்னுள்ளடங்க அன்பர்களின் வினையகற்றும்தண்டமு ம் அருளைவிட்டகலாதுபந்தப்படுத்தும்பாசமும் மூன்றொன் றாம் சூலமும் தாங்கிசிதமுதிபருவும்சத்தியையும் சத்தி யம்சமாகியஇடக்காலையும்காட்டிமகுசிரத்துடன்விளங்கி நா னென்பதுமடுங்கும்படி எனவைதமறுதிருவடியாற்றீண்டிய அழுதமயவீரதாண்டவத்தை அன்பர்களியாரும் ஜனனமர ணதாரநினைப்புமறப்பற்று தரிசித்தானந்தமுற்றார்கள் அக் கோலத்தை யடிபேனும் நேத்திரோற்சவமுறும்படி தரிசித்த ற்கு அருள்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்ததர்மராஜ னையீசன் ஹே எமா நம்முன்னின்று தரிசிப்பாயென்று பக்த சிரேஷ்டமார்க்கண்டேயர் அஞ்சலியஸ்த்தராய் அருகில்நிற்க ச்சிவகிங்கரர்கள் பாசத்தால் மேல்பாலீர்க்கும்காலசரீரத்தில் தென்முகமாய் வாலாம்பிகையென்னும் சிற்சத்திதம்மிடத்த

மாநடித்தார். நமசிவயவென்றொலிக்கும பஞ்சபூதமுத
லிய அடக்குமபடி பிரணவாகாரமாகிய சங்கீத சல்லரிமுதலி
ய நாதங்களும அதாண்டாகாரப்பிரகாசமும் விளங்கிறது.

தருமராஜன் கண்டானந்தபரவசமாய் அனேககாலம் அ
ஞ்சலித்தபடி சித்திரப்பிரதிமைபோலநின்று பின்புஸ்மரணை
பெற்றுக கண்ணீர்சொரிய பிரதட்சண நமஸ்காரம்செய்து தி
ருமுன் நின்று நித்தியானந்தரூபா தமோகுணனாகிய அடியே
னிடங் கிருபைசொண்டெழுந்த கிருபாஸ்வரூபத்தை அடியே
ன் எப்பொழுதும தரிசிக்கும்படி அனுக்கிரகிக்கவேண்டும்
என்னைச்சங்கரித்த இத்தலம மிருத்யுஞ்சயக்ஷேத்திரமென்
றும் மார்க்கண்டேயபுரமென்றும விளங்கவேண்டும பிரஞ்ஞா
தார குஹியஸ்தானமாகிய பஞ்சதேவதாஸ்வரூப கர்ப்பக்கிர
க மத்தியில் கிழ்முகமாய் விளங்கும மூலகுண்டலியென்னும்
அபிராமசுந்தரி அமுதகடத்தினிடத்தருள்மயமாய்விளங்க
பிரமரந்திரமத்தியவாச அமுதலிங்கத்தினின்றும நந்திவாசபு
ரூவளையில் சத்திய வெளியில் சர்வலோகங்களிலும பிரகாசி
க்கும்படிபுரியும் அமுதவிரதாண்டவத்தை விஷ்ணுமுதலியோ
ருடன் தினம் அடியேனும் தரிசனைபெறும்படி யனுக்கிரகிக்க
வேண்டும். பிரமரந்திரமாகிற இத்தலத்தில் அமுதாய்விளங்கு
ம்தம்மை மரணகாலத்தில் மறவாதார்க்கு மறையாதொளிரும்
தமது ஆக்ஞையின்பிரகாரம் மார்க்கண்டேயரையொத்த அ
ன்பர்களிடம் எனது வைவசுவதாதிபத்தியத்தைச்செலுத்து

றதேயில்லை. தமதிடத்தில்முன்பு பக்தியுள்ள தேகாபிமா
னகண்டஸ்தானவியாபிகளை மரணகாலத்திற்பற்றி புண்ணி
யத்தீடாப் திரிலோகங்களில் ஜனனிக்கும்படி யளிக்கவும் தம்
மிடத்தன்பும சாதேப்புதலியவுமின்றி மாயாசகித மனோ
ரமாயுள்ள பாபிகளை பிரத்தகண்டித்து ஜனனநரகங்கட்குஆ
ளுப்பவும் அபமிருத்யுவைத்தீய்க்கும வலிபெற்ற சிவபக்தர்க
ளின் மகிமையை யறியாரு மூடனாகியயான் ஜீவன்களைப்
பற்றப்புகின முதலில் அபமிருத்யுவைவிடுத்து அது அவர்க
ளைப்பற்றின் பின்பு யானணுகிப்பற்றவும் அவ்வபமிருத்யு
நசிக்கின் அச்சீவனோடு வியாபிக்குட்னது சுவரூபாகலை தம்
மையடையவும் அனுக்ரகிதரவேண்டும். சம்மானுதைக்க
ப்பட்டு அடியேனுடைய சிரசு அழுந்தியஇடத்திற்பெருகும்
தீர்த்தம் சமானசீர்த்தம்என்றும் உடலழுந்தியஇடத்திற்பெரு
கும்தீர்த்தம் காயதீர்த்தமென்றும விளங்கி அத்தீர்த்தங்களில்
ஸ்நானம்பண்ணுவோர்கட்குச் சர்வாபிஷ்டமுந் தந்தருள
ல்வேண்டும். பானிகட்சத்திரதினம் காயதீர்த்தத்தில் இடை
யளவாய்த்தென்முகமாய்நின்று எமாதிபதினென்குமந்திரங்க
ளைஸ்மரித்துத் தோய்பவர்களை நான்ஹிம்சிக்கிறதேயில்லை. ஐ
ப்பசிமாசப்பரணியில் அவ்வாறதில் ஸ்நானம்செய்து தமக்குள
ள்ளன்னம்நிவேதிப்பவர்வம்சத்தை வழுதலைமுறைவரையில்
ஹிம்சிக்கவில்லை. மார்கழிமாதம் என்னை யுதைத்தமஹாவி
திபாதஅருணோதயத்தில் காய கபால தீர்த்தஸ்நானம்பண்ணு
வோரை ஒருகல்பபர்யந்தம் இம்சிக்கவில்லை. மஹாவியதிபா

த அருஞ்ஜயத்தில் அப்பிரமனென்னும் ரிக்கும் மிருத்யுஞ்
ஜய மந்திரமும்ஜபித்துத் தோய்ந்து தர்ப்பணம்செய்பவர்களை
என்னுலகிற்குக் கொண்டுபோகிறதேயில்லை. கபாலதீர்த்தத்
தில் அன்று அருஞ்ஜயஸ்நானஞ்செய்து பாரதிபதிரான்கா
தருப்பணம்செய்து மிருத்யுஞ்செயமஹாமந்திரம்ஜபித்து ரு
க்கு நீலோற்பலமாலைசூட்டி வில்வத்தால்அர்ச்சித்து உளுந்த
ன்னம்எள்ளன்னம் நிவேதித்துத் தமதுபாதத்துறும என்னை
யும்ஏகமாகத்தியானித்து என்சந்நிதியுன்னி தமதுபூரணகிரு
பாசுவரூபதரிசனஞ்செய்பவர்களின் குலத்தையும் உபத்துசா
க்ஷியாகத் தொடுகிறதேயில்லை.

[illegible]

அவர்களுக்குத் தமதுபரந்தந்தருளவேண்டும். தமத
ன்பர்களோடு அடியேனும் தமதுபதந்தொடங்கியபோரான
ந்தமுறுவதுடன் வைவசுதாதிபத்தியம நடத்தும்வலிமை
யருளல்வேண்டும். அடியேன் மார்க்கண்டேயர்பேரிலும்
உமதுருவிலும் பாசத்தைவீசிய குற்றத்தைமன்னித்து அவ்
வபராதநிவர்த்தியின்பொருட்டு அனுக்கிரகம்செய்யவேண்டு
ம். என்றும் பலமுறைபணிந்தார். பணிந்தஎமனையீசன் அ
ருட்கண்ணுற்று எமா எமதுசந்நிதியில் சிவலிங்கப்பிரதிஷ்
டைசெய்துபூஜிப்பாய். நாம் உமாஸ்கந்தசகிதமாய் விடையே
றி மகாவிபவிபாத அருஞ்ஜயத்தில் கபாலதீர்த்தத்தருகில்

விளங்குவோம். இத்தீர்த்தத்திற்படிந்து தரிசிப்பவர்கட்குவீர
தாண்டவதரிசனமும் முத்தியுந்தந்தருளுவோம், என்று திரு
வாய்மலர்ந்தார். தேவர்கள் புஷ்பவருஷஞ்செய்து அஷ்டாங்க
வாத்தியங்களைக் கோஷித்தார்கள். பிரமாமுதலியதேவர்க
ளுஞ்சிவத்தைவணங்கி ஏடணையுரைத்தகோலத்தை யெப்பொழு
தும் யாங்கள் தரிசிக்கும்படி யருளவேண்டும். பிரதோஷகால
த்தில் வீரதாண்டவதரிசனஞ்செய்பவர்கள் பாபம்நீங்கிப் புத்
திரமித்திரகளத்திரதனதான்யாதிகளுடன் துக்கமின்றிச் சர்
வபோகங்களும்அனுபவித்து மோக்ஷம்அடையவேண்டும் எ
ன்றவரங்களைக்கேட்டுப் பணிந்தார்கள். ஈசன் அருளுதுமெ
ன்றார். காலனையுதைத்தகாலத்தில் உதித்த பத்திரகாளி சிவ
னெதிரில்நின்று நமஸ்கரித்து சுவாமி அடியாளுக்கு ஒருஉத்
தரவும் அளிக்கவில்லையேயென்று பிரார்த்தித்தனள். ஈசன் பு
ன்னகையுடன் எமதுசாயலாகிய பத்திரகாளி நீ உனதுஉருவி
ற்கேற்ற பரிவாரதேவதைகள்சூழ எமதுவடபால் ஜலமயமா
யமர்ந்து எமடைந்தரிசிக்கவருபவர்களின்ரோகங்களையும் பூ
தப்பிரேதபைசாசங்களையும் நிவர்த்திசெய்குவாய். கன்னியா
மாதம் அபரபட்சநவமியில் இத்தீர்த்தத்தில்படிந்து எம்மைஸ்
மரித்தால்யாம் விடையிலாரோகணித்தங்குதித்துவேண்டுவத
ருளுவோம்என்றருளினார். பத்திரகாளியீசனருளியபடிவடபா
கத்தமர்ந்தனள். சிவபிரான்சர்வதேவாதியன்பர்கள்யாவருங்
காணும்படி தென்முகமாய் அவ்வவர்களின் பக்தியளவாய் ஹி
ருதயாந்தரபுருவெல்லையில் உருக்காட்டிநின்றார். மார்க்கண்

டேயரின் பக்தியென்னும் பாசத்தில் ஈசன் கட்டுண்டிருப்ப தைப்பற்றி சர்வத்திராளும் வியந்து மார்க்கண்டேயர்பெற்ற பேறுஅடியேங்கள் எக்காலம்பெறுவேமோ என்று சிவத்தைத் த்சிந்தித்தார்கள். தருமராஜன் அமுர்தீசர்சன்னிதியில் எதிர் முகமாய்காலேசுவரரென்ற இலிங்கமும் அகிலேசுவரியென்ற அம்பிகையையும் பிரதிஷ்டைசெய்து பக்தியுடன்பூஜித்து அநேகபிரதக்ஷணநமஸ்காரஞ்செய்து அஞ்சலியஸ்தராய்நின்று காலகாலா பிரளயாக்கினிரூபா சூலபாசஹஸ்தா பத்மபாதா போற்றிபோற்றியென்று துதித்தார். ஈசன் இலிங்கத்துதித்து ஹேகாலா யமபேரிலும்பாசம்வீசியஅபராதத்தை க்ஷமித்தோம் வேண்டுவதருளுவோம் என்று திருவாய்மலர்ந்தார். காலன்பணிந்து தமது பூஜையின்பொருட்டு அமைத்த வடபாலுள்ள காலதீர்த்தத்திற்படிந்து மஹாமுத்திரையுடன் காலேசுவரனென்றுதுதித்தவர்கள் பாபம்நீங்கித் தனதான்யாதிகளைப்பெறவேண்டும். அயனம் ஜென்மநக்ஷத்திரம் அமாவாசை பௌர்ணமி மாதவநடப் பிரவேசம் கிரஹணங்கள்முதலிய புண்ணியகாலங்களிற்படிந்து தம்மைத்தெரிசிப்பவர்கள் சர்வாபீஷ்டங்களையும் அடையவேண்டும். என்றுபிரார்த்திக்க ஈசன் அவ்வாறருளி மறைந்தனர் தருமராஜன் அகிலேசுவரியையும் காலேசுவரரையும் அநேகபிரதக்ஷணஞ்செய்து அமுர்தீசர் சன்னிதியில் உத்தரகோசமாய்ப்பணிந்து வில்வவனத்தப்பால்மஹிஷமேறிவைவசுதம் அடைந்து சதாகாலமுஞ்சிவத்தியா

னத்துடன் விரதாண்டவனோக்ஷமுற்றார். என்றுசூதபு
ராணிகர்கூறினர்.

18 நருபராசன் சருக்கம் முற்றும்.

# 19 பிரமதி ராசன் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகள் சூதா தீர்த்தமகிமையைச்சொல்ல வேணுமென்றார். அப்போது சூதரைவினவியதால் ஹேமாவதிக்கு ளே சுதாபுஷ்கரணிதீர்த்தத்தைப்பற்றிய ஒருபூர்வசரித்திரம் கேள்விப்பண்டு அதாவது விதர்ப்பதேசத்தில் வைதீரியனென்ற அரசன் சிலவதியென்றபார்யாளோடு கோமதீதீர்த்தக்கரையில் விசுவசித்தானென்கிறயாகத்தை நியமமாகச்செய்து தனது தம்பியாகிய பிரமதியென்பவனிடத்தில் இராச்சியத்தைஒப்புவித்து தானந்தபோவனமடைந்து தபத்திற்குச்சென்றார். பிமதிராஜன் இராஜநயமாகநடத்து அநேகதானங்களைநடத்துகிறபோது பார்க்கவரிஷிக்குடைய கபிலையைத்தானஞ்செய்தார்; அவ்விருஷியின்சிஷ்யர்கள் அப்பசுவை ஆச்சிரமத்திற்குக்கொண்டுபோகையில் பசு வெறித்து ஓடிப்போய்விட்டது பார்க்கவர் இத்துஷ்டப்பசுவைத்தந்தஅரசன் குஷ்டமடையக்கடவனென்றார் இக்கபிலை சத்தருமத்திற்குச்வாதாகவே

ண்டுமென்றும் சாபமிட்டு தன்னாச்சிரமஞ்சென்றார். அரசன் ரிஷியின் சாபத்தால் குஷ்டமடைந்து மிகவருந்தி தனதுகுருவாகிற தீர்க்கஜீவியிடஞ்சென்று இன்னோய்க்கென்னசெய்யலாமென்றுபணிந்துகேட்க தீர்க்கஜீவி சற்றுயோசித்து இந்நோய் பிரமசாபத்தால் ஏற்பட்டிருக்கிறது இதைநிவர்த்திக்கும்படியான வில்வவனத்திற்சென்று மாசிமாதம்முதல் அவ்வருஷமுடிவுவரையில் பிராதக்காலத்தில் இந்நான்குதீர்த்தங்களிற்படிந்து பின்புஅமுதபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய்து அபிராமிசமேத அமுதலிங்கத்தை அன்போடுதெரிசித்தால் சாபநீங்கி சுசரீரம் அடையலாம் என்றும் பிரமஹத்தி குருஹத்தி கோஹத்தி சிசுஹத்தி ஸ்திரீஹத்தி மாதிருஹத்தி பிதிருஹத்தி முதலியவைகளும அத்தீர்த்தஸ்நானத்தால்நீங்கும். அத்தீர்த்தவிசேஷத்தை ஆதிசேஷனாலும் கூறுதற்கரிதாகும், ஞாயிறுதிங்கள்விசேஷகாலமென்றும் அங்குள்ள காலதீர்த்தம் சக்கரதீர்த்தம் ஜென்மாந்தரபாபங்களைநீக்கும். அசுபதிதீர்த்தம் குலபிதிர்க்களைக் கரைசேற்றி சிவலோகங்கொடுத்து ஞானந்தரும். காளிதீர்த்தத்தில் புரட்டாசிஅமரபக்ஷம்நவமியில் ஸ்நானஞ்செய்தால் குன்மம் மகோதர முதலியநோய்கள்நீங்கும். சாகரங்களில்க்ஷீரப்விசேஷம் அதிலும் அதிலுண்டான அமுதம்விசேஷம் அவ்வமுதையீசனுற்பவித்த அமுதபுஷ்கரணிவிசேஷமென்பதை உமக்குயான்விரிவாய்க்கூறுவது அவசியமன்று சுகந்தபுஷ்பங்களில்ஜாதியுஞ்சிவார்ச்சனையில்வில்வமும் மிகச்சிரேஷ்டம் இவ்விரண்டும் ஈ

சனால் அத்தலத்தில் கைலையிலிருந்து வரப்பெற்றிருக்கிறது அதனாற்றான் பிஞ்சிலாரணியமென்றும் வில்வாரண்யமென்றும் திருநாமம் ஏற்பட்டது. இன்னும்பலகாரணங்களால் அனேகநாமம் அத்தலத்திற்குள்ளது அத்தலம் காவேரியின் தென்பால வானளாவிய வில்வவிருக்ஷங்கள்நிறைந்து பணங்கமழவிளங்குகிறது. அங்குசென்று சுகம்பெறுவீர் என்றுபுகன்றார் அவ்வுரைகேட்டஅரசன் குருவைப்பணிந்து கட்டளைபெற்று இராச்சியத்தை மந்திரிகளிடம்ஒப்புவித்து அனேகஒட்டகங்களில் திரவியம்எடுத்துக்கொண்டு சுதபத்தினிசஹிதமாய் அநேகபிராமணர்களுடன் காவேரிதீரம்வந்து கணபதியாலிங்குயக்த பொன்னிநதியென்று அஞ்சலிசெய்து அதில் சங்கல்பித்துவிதிமுறைப்படிமூழ்கி அநேகதானங்களைச்செய்து கொண்டு மூன்றுதினம்அங்குவசித்து பின்புவில்வாரண்யமடைந்து நகர்ப்புறத்தில் ஒட்டகமுதலியமிருகங்களைநிறுத்தி உத்தமப்பிராமணர்கள்சூழ அங்குள்ளதீர்த்தங்களிற்படிந்து பூதிருத்திராக்ஷமணிந்து ஆலயத்துட்பிரவேசித்து சங்கல்பித்து கணேசரையும் க்ஷேத்திரபாலகரையுந்துதித்து அமுதபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய்து விசேஷதானங்களைநடத்தி மும்முறைவலம்வந்து அபிராமிஅம்பாளைத்தெரிசித்து சிவசந்நிதியடைந்து வில்வவிருக்ஷத்தைப்பணிந்து பஞ்சாக்ஷர[illegible] ரிசித்து சிவதெரிசனார்த்தம்உட்செல்லற்காகளைத்தாப்பி[illegible] த்து சிவஸ்மரணையுடன் சிரமேற்கைகூப்பி [illegible] யாய் துவாரபாலகர்கள் சிவரூபமாயுள்ளமகாவிஷ்ணு [illegible]

மூர்த்தி பிஞ்சிலம் தர்மராஜா சோரகெணபதி அமுதகடே
சுவரர் வீரதாண்டவேசுவரரையுந்தெரிசித்து சிவசன்னிதியில்
நின்று அபிஷேகாலங்காரார்ச்சனைநைவேத்தியதூபதீப சாமர
ங்களைச்சேகரித்து சங்கற்பித்து அநுக்ஞைபெற்று ஸ்தல
புண்யாகஞ்செய்து பச்சிமதுவாரபூஜைசெய்து உட்செல
பிரதோஷகாலத்தில் இருபதினாயிரம்பாரம் வாசனைதைலமுப
அதற்கேற்க பஞ்சசூரண பஞ்சத்துவக் பஞ்சபல்லவ பால்த
யிர் தேன் சர்க்கரை கருப்பஞ்சாறு பஞ்சாமிர்தம் இளநீர்
பஞ்சகௌவியங்களாலும் ரெத்தங்களாலும் அபிஷேகித்து
சகஸ்திரதார சததார கைவசிருங்க சங்கங்களாலும் புஷ்
போதக வில்வோதக மந்திரோதகங்களாலுந் தாரையாகஅபி
ஷேகித்து கெர்தகவசமும் வஸ்திராபரணங்களும் இண்டை
முதலியசுகந்தமாலிகைகளுஞ் சூட்டி சித்திரான்னபக்ஷியவர்
க்க கனிவர்க்க ரஸவர்க்க தாம்பூலமும் நிவேதித்து சகஸ்திர
நாமத்தால்அர்ச்சித்து துதித்து நமஸ்கரித்து நைவேத்தியங்க
ளைவினியோகித்து தான் அன்றுஉபவாசமாயிருந்து மறுதினம்
முதல் உஷக்காலத்தில் கால காய கபால காளி தீர்த்தங்களி
ற்படிந்து பின்புஅமுதபுஷ்க்கரணியில்அன்போடுஸ்நானஞ்
செய்து சத்திசிவத்தைவிதிப்படிபூஜித்துபணிந்து அனேகதா
னங்களைச்செய்து மத்தியானத்தில்மாத்திரம்புசித்து வசித்து
வருகையில் தனதுசரீரம் சுவர்னமயமானதைக்கண்டு மிகக்
களித்து ஆலயத்தைவிசித்திரமாகஅமைத்து நித்தியபூசைக்
காக சிலகிராமங்களும் சுவாமிஅம்பாளுக்கு அர்த்தஜாமத்தி

ல் புழுகாப்புசாத்தும்படி புழுகாப்புகோட்டமென்றுசிலகிரா மங்களும் ஏற்படுத்தி தெத்தஞ்செய்து அமுதலிங்கத்தின்வா புதிக்கில் ஒருபாணஞ்செல்லுந்தூரத்தில் சிவலிங்கஸ்தாபனஞ் செய்து விதிப்பிரகாரம்பூசித்து அநேகநவரெத்னாபரணங்களை ச் சூட்டி தனதுநாமமாகிறபிரமதீசுவரரென்றர்ச்சித்து அமுத லிங்கத்திற்கு பதினெட்டுநாள் உத்சவம்சதையநக்ஷத்திரத்தில் துவஜாரோகணமும் தேவர்கட்கு அமுதளித்த மேஷசித்தி ரபௌரணமியில் பங்கனிர்த்தத்துவஜாவரோகணமும் அத ன்றுன்குநாள்முன்மஹா துவஜாரோகண ஆருத்திருநாள் கால சம்ஹாரமாகிய அத்தலமுக்கியஜதீகமும் மிகவிசேஷாலங்கிர்த மாய்நடத்திசித்திரைநக்ஷத்திரதீர்த்தமுந்தினமுதல் மௌனே த்சவமுதலியதும உத்சவகாலத்தில் சிவப்பிரீதியாய் சர்வஜன ங்களுக்கும் ஷட்ரஸான்னபோஜனமும் சுவர்னவஸ்திராபர ண தானங்கள்செய்யும்படியும் அநேககிராமங்கள்தெத்தஞ்செ ய்து நித்தியபூஜைக்கும் தன்னால்விசேஷமாயேற்படுத்தி த லப்பிரதக்ஷிணஞ்செய்து சுவாமிசன்னிதியில்நமஸ்கரித்து த னதுராச்சியஞ்சென்று சிலகாலங்களிப்புடன்வாழ்ந்து சதா சிவத்தியானத்தால்சிவனடியடைந்தார் ஹேறிஷிகளே இத்த லத்தில் தநுர் மாதம்திருவாதிரைநக்ஷத்திரத்தில் இரண்டுமாக் கால்தேன்வடிக்கட்டி அமுதலிங்கத்திற்குஅபிஷேகித்து உ டனே கலக்காராவின்பால் அபிஷேகித்து தெரிசித்தால் அநே க அற்புதங்களைக்காணலாம் கார்த்திகைமாதம்முழுதும் பிரா த்தில் அமுதபுஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து சத்தி

வசன்னிதியில் நெய்விளக்கிடுபவர்கள் சர்வசித்திகளுடன் ஞானம்பெறுவார்கள், வில்வாரண்யஸ்தலத்தில்யாரெனைதவிரும்பினுலும்பெறுவார்கள். ஆனதால்அத்தலத்தில்வசிக்கப்பெற்றுஎனசிந்தைகொள்ளாதுநற்சிந்தையே அடையவேண்ம். இந்தஅத்தியாயத்தைசிவபக்தர்களிடம் வாசிப்பவர் சர்வசித்திகளுக்கானதீக்ஷையும் ஞானமும்பெறுவார்கள் என று சூதமுனிபுகன்ருர்.

பிரமதிராஜன் சருக்கமுற்றும்.

# ரெத்நாகரன் முத்திபெற்ற சருக்கம்.

நைமிசாரண்யவாசிகள் பசுபக்ஷிமிருகங்களும் இத்தலத்தில் மரணமடைந்தால் முத்திபெறுமென்று முன்சொல்லியதை யாங்கள் கன்ருய் உணருர்படி உணர்த்தவேணுமென்று வினவியதற்கு ஷேறிகளே மிகவும் ஆச்சரியத்தைத்தரும்படியான வியாசராற்றெரிந்த பூர்வசரித்திரத்தைச் சொல்கிறேன் கேளுங்கள் விசாலாந்திரமென்றபட்டணத்தில் ரெத்நாகரனென்றவைசியன் மிதமான ஆகாரத்தையும் சமதிருஷ்டி

யையுங்கொண்டு இந்திரியங்களைஜயித்தவனாய் வாழ்ந்துவருங் காலத்தில பூர்வஜன்மபுண்ணியவசத்தினால் விரக்தியுண்டாகி சகத்தில்இச்சைவைத்தால் துக்கந்தனையேயுண்டென்றும் சம்சாரசாகரத்தால் எவ்வைசுவரியம் இருக்கிறது பாபாசக்தியில் என்னலாபம ஆதிமத்தியாந்தமில்லாதிருக்கிற பிரமாநந்தசௌக்கியத்தைக்கெடுக்கிற ஜகமாயையை எவ்விதமாய் ஜெயிக்கலாமென்று விசாரமடைந்து தன்னுடையதனங்களை அன்னதானமுதலியவற்றிற்செலவுசெய்து வைராக்கியஞானம அடைந்து சலயாத்திரையாய் அனேகதீர்த்தங்களிலஸ்நானஞ்செய்து சிவஆராதனஞ்செய்துகொண்டு வில்வாரண்யம் அடைந்து சுதாலிங்க மூர்த்தக்கண்டு மகிழ்ச்சியடைந்து ஆனந்தபரவசனாய் சிவசிதம்பரமென்றுதுதித்து சுதாபுஷ்கரணியிலஸ்நானஞ்செய்து சாகாபரணபூஷிதராயிருக்கிற அபிராமிசமேத அமுதலிங்கத்தை விதிமுறை பின்னுந்தெரிசித்து அநேகபிரதக்ஷணநமஸ்காரஞ்செய்து அங்குமூன்றுநாள்வசித்து இருக்கையில் அவனையழைக்கும்படி தேவஉலகத்திலிருந்து சிவதூதர்கள் விமானத்துடன் வர அதேசமயத்தில் வில்வவனத்தில் ஒருவேடன் ஒருபுலியையம்பாலடிக்க அப்புலி பிராணவியோகமாகாதஞ்சமயத்தில் சிவதூதர்கள் பின்னும்ஒருவிமானஞ்சருவிக்கு திவ்யதேகம்அளித்து இருவரையும் சிவலோகஞ்சேர்த்தார்கள். அந்தக்ஷேத்திரத்தில் எந்தஜெந்துக்கள் இறந்தாலும் சிவலோகத்தைச்சேரும். ஜனனமரணத்திற்குப்பயந்து முத்தியடையவேண்டியோர் அந்தக்ஷேத்திரத்தில்

ஸ்திரமாயிருந்து மரணாவஸ்தையன்னியில் முத்திபெறுவார்
கள் அதிதிகளுக்கும் தபசிகளுக்கும் அத்தலத்தில் ஒருகவளம்
அன்னங்கொடுத்தாற் கொடுத்த ஒரு அன்னத்திற்கு ஆயிர
வருஷமாக சிவலோகத்தில் வசிப்பார்கள் கிருஷ்ணஅங்கா
சதுர்த்தசியின்காலையில் அமுதபுஷ்கரணியிற்படிந்து சிவத்
தியானமாயிருந்து அபரான்னகாலத்திலுந்தோய்ந்து தென்மு
கமாய்நின்று திலம் அக்ஷதையுடன் ஏமாதிபதினுன்குமந்திரங்
களால் தர்ப்பணஞ்செய்து திலான்னத்தால ஏமனைஉத்தேசித்
து பெலிபோட்டால் சர்வபாபங்களும் நீங்கிச சிவலோகத்தை
யடைவார்கள். சுதாபுஷ்கரணியின் பக்கமிருக்கிற வில்வவி
ருக்ஷத்தின்கீழ் பாத்திரதானஞ்செய்தால் தேவலோகத்தை அ
டைவார்கள். ஹேரிஷிகளே ஆதியில் கலாநாதனென்ற ஒருபக்
தர் முத்தியடைந்த சரித்திரத்தை ஜனகாதியாசருக்குச்சொன்
னதாய் வியாசர்எனக்குரைத்தவண்ணங் கூறுவேன் கேளுங்க
ள். சோழதேசத்தில் ஸ்ரீவிருத்தியென்கிற ஆனையூரதில
கலாநாதனென்றஒருபிராமணன் உருத்திராக்ஷத்தினால் சிவலிங்
கம்போல் அமைத்துச் சிரசிலும் உருத்திராக்ஷத்தால் கவச
குண்டலங்களும் மாலைகளும் தேகமுழுதும்விபூதியும் அணி
ந்து மிகபக்தியுடன்தினம் திரிகாலஸ்நானஞ்செய்து அகில்சந்
தனக்கட்டைகளால் அமுதீசர்சன்னிதியில் தூபமிட்டுவந்தா
ர். அக்காலத்தில் ஈசுவரபரிக்ஷார்த்தமாய் நாளுக்குநாள் வ
றுமையடையும்படி நேரிட்டது. அக்காலத்தும் புகையிடுஞ்
சத்காரியத்தில் வழுவாது நிலமுதலியவற்றைவிற்று தூப

மீட்டுவரும்போது தன்னுடையகுழந்தைகளும் பத்தினியும்
இரண்டுநாள் உபவாசத்துடன் வருந்தி கலாநாதரிடம் அவர்
பத்தினி தன்திருமாங்கிலியத்தைக்கொடுத்து அடிசிலுக்கான
மான்வாங்கிவரும்படி கொடுக்க அதைக்கைபற்றி கடைவீ
திக்குச் செல்லுங்கலாநாதர்முன்பாக சாம்பிராணிவர்த்தகர்
போல் ஈசுவரன் பொதிமாட்டுடன் வர அவ்வர்த்தகரைக்க
ண்டு மிகக்களித்து அமுதுபடிசாமான் வாங்குவதற்குமு
ன் இவ்வர்த்தகர்வந்தது எம்மையாளுஞ் சிவகிருபையேயென்
று மாங்கில்யத்தை வர்த்தகர்கையில்கொடுத்து சாம்பிராணி
யைவாங்கி வீரதாண்டவர்சன்னிதியில் தூபப்பணிசெய்து
கொண்டிருந்தார். அவர்கிரஹத்தில் பத்னியும் குழந்தைக
ளும் கலாநாதரின் வரவை விரும்பிப்பசியால்வருந்துவதை
மாற்றும்பொருட்டு ஈசன் குபேரனையழைத்து நமதிடம்மிகப
க்தியுள்ள கலயன்கிரஹத்தை நின்னகருக்குச்சமமாகச்
செய்குவாயென்று ஆக்ஞாபித்து பசிக்களையால் நித்திரைய
டைந்த கலாநாதரது பத்னியின் சொற்பனத்தில்தோன்றி
உனது திருமங்கல்யத்தைத் தரித்துக்கொள்ளென்று கையில்
கொடுத்து உனக்குச்சர்வஐசுவரியமும் அளித்திருக்கிறோம்
என்று மறைந்தருளினர். உடனே சொற்பனங்கண்ட அந்த
அம்மை விழித்து எழுந்து கையில்திருமங்கல்யம்இருப்பதை
யும் வீடும் வீட்டிலும் நவரெத்னமயமாய்விளங்குவதையும்
அடிசிலுக்கானபதார்த்தங்கள் இருப்பதையும் கண்டு ஆச்சரி
யமடைந்து திருவருளைவியந்து திருவமுதுபாகம்பண்ணி மிக

ச்சந்துஷ்டியாய் கலாநாதரின்வரவை யெதிர்பார்த்திருந்தார் பரமசிவன் கலாநாதரே உன்வீட்டில்சென்று அமுதுண்டு பசியொழிப்பாய்என்று கலையநாயனார் அறியும்படி அசரீரியா யுரைத்தனர் அதைக்கேட்டகலையர் சிவாக்ஞையைமறுத்தற் கஞ்சி சன்னிதியில்பணிந்து தன்மனையில்சென்று அங்கு நி றைந்துள்ள நிதிக்குவைகளைக்கண்டு இவைகள்உண்டானவி தம் என்னென்று கேட்க மனைவி தான்கண்டசொற்பனத் தையும் விழித்தவுடன் நிதிகள்நிறைந்துள்ளதையுங் கூற அ தைக்கேட்ட நாயனார் சிறியேனை யாட்கொள்ளும்படி திருவ ருள் இவ்வகையாயிற்றோவென்று கடவுளைவணங்கி அடியார் களோடும் அமுதுசெய்து சிவசன்னிதியில் மிகமகிழ்வுடன் சிலநாள்தூபமிட்டுவருகையில் சீதளாபுரம்என்கிற திருப்பனை ந்தாளில் பக்தியில்சிறந்த ஓர்உத்தமமாது சித்தபூம்அரனைப் பூஜித்துவருகையில் ஒருநாள் புஷ்பமாலையைச்சாத்தப்புகு ம் வேளையில் தன்இடையுடை நழுகிற்று. அதைத் தன்முழங் கையால் அணைத்துக்கொண்டபடி சாத்தமுயன்றும் கூடா மையால் மிகவருந்தும் அம்மாதின் பக்திக்கிரங்கி ஈசன் குனி ந்து மாலைசாத்தப்பெற்றுக் கலையரின் பக்திவிளைவையும் அவ் வுத்தமியின் அன்புப்பெருக்கையும் மற்றுள்ள அடியார்கள் யாரும் அறியும் வண்ணம் நிமிராது இருந்தனர். அத்தேச த்தரசன் சுவாமி குனிந்திருப்பதைத் தெரிந்து அனேகயானை களால் கயிறுமாட்டி இழுத்து நிமிர்க்கமுயன்றும் அவ்விலி ங்கம் நிமிராமையால் மிகக்கவலையுற்று இருந்தனன், கலைய

அக்காரியங்களைத்தெரிந்து அவ்வூரையடைந்து இலிங்கத்தில் புஷ்பத்தின்டுகளையமைத்து அதிலும்தன்கழுத்திலும் கயிறுமாட்டி இழுக்கும்போது கிருபையுடன் சிவபிரான் நிமிர்ந்தார். பின்பு கலயர் சிவலிங்கத்தைப்பணிந்து வில்வவனமடைந்து சிலகாலம் தூபப்பணிசெய்துவருகையில் அங்கு திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் திருநாவுக்கரசுசுவாமிகளும் சிவதரிசனார்த்தம் எழுந்தருள அவர்கட்கு மிகவிருப்புடன் அமுதுசெய்வித்து அவர்கள் அருளைப்பெற்று அன்புமேன்மேலும்பெருக பத்னியுடன் அனேககாலம் வசித்து சிவபதம் அடைந்தார்.

சோழராஜன் அமுதீசர்சன்னிதியில் எப்போதும் தூபம்இருப்படி குங்கிலியக்காரையென்று சிலகிராமங்கள் தானஞ்செய்தனர். மஹரிஷிகளே சிவசிந்தனையுள்ளவர்களால்செய்த பணிவிடைகள் எக்காலத்தும் மாறாமல் அதைமாற்றமுயல்வோர்களைக் குறைத்து நடத்தமுயல்வோரை நிறைத்து வளரும். என்று சூதபுராணிகர்கூறி அத்தலத்தையடைந்த காரிநாதர்என்ற பக்தரின்சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். சோழநாட்டில் கெடபுரிஎன்னும்ஊரில் வேதசாஸ்திரங்களும் ஒவ்வொருதேசபாஷைகளும் முழுதும் உணர்ந்த காரிநாதர்என்ற பிராமணன் கவனமார்க்கத்தால் அனேகதேசங்களிற்சென்று அவ்வவ்வரசர்களும்மகிழும்படி கவிகளைச்சொல்லி விசேஷதிரவியங்களைச்சம்பாதித்து சுதாகடேசர்க்கு

அபிஷேகாதிகளும் ஆலயத்திருப்பணிகளும் அத்தலத்தில் விசேஷ அன்னதானமுஞ்செய்து அமுதபுஷ்க்கரணியில் திரிகாலமுந்தோய்ந்து நிருவிகற்பமடைந்து தேகச்சாயலற்று நெடுநாளிருந்து முக்தியைப்பெற்றார். என்று சூதபுராணிகர் கூறினார்.

20. இரத்னாகரன் கலையர் காரி சருக்கமுற்றும்.

---

# 21. சப்தகன்னிகள் சிபிச்சக்ரவர்த்தி சருக்கம்.

ஹேரிஷிகளே அந்தக்ஷேத்திரத்தில் தேவர்கள் அசுரர்கள் பூசுரர்கள் அரசர்கள் நரர்களாலும் அனேகலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது அவைகளின் தரிசனபலன்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள் அமுதலிங்கத்தின் எதிரில காலனால்பூஜிக்கப்பட்ட காலேசுவரர் எனகிற அவ்விலிங்கதரிசனத்தால் நரகவாதைநீங்கும். அதன் வடபால் உள்ள காலதீர்த்தஸ்நானத்தால் அபமிருத்யுவிற்கேதுவாகிற ரோகங்கள் நீங்கும். காலேசுரரின்ஈசானத்தில் வீரஹத்திவிமோசனத்தின்பொருட்டு தருமங்களை நடத்திக்காட்டும்படியவதரித்த ஸ்ரீராமரால் பூஜிக்கப்பட்ட ராமநந்தீசுவரரென்னும் அவ்

லிங்கதரிசனத்தால் கோடிபாதகங்கள் நீங்கும். அதன்மேற்புறத்துள்ள லக்ஷ்மிதீர்த்தஸ்நானத்தால் சத்ருக்ஷயமடைவார்கள் சித்திரைமாதம் ஸ்ரீ ராமநவமியில் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீ சூக்தம்ஜபித்து பர்வதவர்த்தனிசமேத ராமநாதரைத்தரிசித்தால் தரித்திரம்நீங்கும். தைமாதம் வெள்ளிக்கிழமை மத்தியானத்தில் அறுகுடன் கோமயந்தரித்துக்கொண்டுஸ்நானஞ் செய்தால் மஹாசௌக்கியத்தை அடைவார்கள், அப்புண்யகாலத்தில் வஸ்திரம் மடிஸஞ்சி வெண்பட்டு இவைகளை அத்தீர்த்தகரையில் தானம் செய்தால் தீர்க்க சுமாங்கல்யம் அடைவார்கள். ஸ்ரீராமநவமியில் பால் நெய் சர்க்கரையுடன் ராமநாதருக்கு அபிஷேகித்துப் பூஜித்து ஸ்ரீராமநவமிவிரதத்தை யனுஷ்டித்தால் சர்வகாமனுபலன்களையும் பெறுவார்கள். சுதலிங்கத்தின் வாயுதிக்கில் பிரமதீசுவரர்என்னும் இலிங்கத்தின் வடபால் உள்ள ரோகநிவாரணி என்கிற தீர்த்தத்தில் அற்பசிமாதம் அநபதியன்றுபடிந்து அவ்விலிங்கத்தைப்பூஜித்து சன்னிதியில் இரண்டிற்குறையாத நெய்விளக்கேற்றினல் அனேகவித சௌபாக்கியங்களையனுபவித்து சாலோகத்தை யடைவர்கள் அத்தீர்த்தக்கரையில் அன்னதானஞ்செய்தால் விசேஷபலனைத்தரும். சுதாலிங்கத்தின் அக்கினிதிக்கில் ஒருகுபோசதூரத்தில். ஸப்தமங்களேசுவரர் என்று ஒருஇலிங்கமிருக்கிறது அதைப்பற்றி யான் தெரிந்த பூர்வசரித்திரத்தைச் சொல்கிறேன் கேளுங்கள் ஆதியில் இமயகிரியில் பார்வதியோடு

இராந்த ஸப்தகன்னிகைகள் பூவுலகத்தில் மனுஷியஜன்மமெடு
க்கும்படி சாபமும் வில்வாரண்யத்தில் அமுதலிங்கத்தைப்பூ
ஜித்துப் பூர்வரூபம் அடையும்படி சாபவிமோசனமும் பார்
வதியினால் அளிக்கப்பெற்று பூவுலகமடைந்து மனுஷியஜன்ம
த்துடன் சிலநாள்வசித்துவருகையில் சாபவிமோசனகாலம்
வரப்பெற்று வில்வவனத்தில் அமுதலிங்கத்தைப் பூஜித்துப்
பூர்வரூபம்அடைந்து அனேகவிதமாய்த்துதித்துத் தபம்செ
ய்யும்போது ஈசுபரன் பிரத்தியக்ஷமாகி ஸப்தகன்னிகைகளை
நோக்கி எம்மைபூஜிந்தமையால் மனுஷ்யஜன்மங்கள் நீங்கிப்
பூர்வசுந்தரவடிவம் பெற்றீர்கள். இன்னும் உங்கட்கு வேண்
டியவைகளை அருளுவோம் கேளுங்கள் என்றார். கன்னிகை
கள் எழுவரும் ஆனந்தபரவசமுற்று அஞ்சலியஸ்தராய் பிர
தக்ஷிணநமஸ்காரஞ்செய்து சுவாமிங்களால் ஸ்தாபித்துப்
பூஜிக்கும் ஸப்தமங்கல இலிங்கத்தில் சதா சானித்தியமாயி
ருந்து எங்களாற் செய்யும் பூஜையைபேற்றருளி இவ்வுலகி
லுள்ள மனுஷியர்களுக்கும் இஷ்டசித்திகளை அருளவேண்டு
மென்று பிரார்த்தித்தார்கள். உமாசமேதன் நீங்கள் வே
ண்டியயாவும் தந்தோம்என்று அந்தரத்தியானமாயினர். எழு
கன்னிகளும் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து ஒருதீர்த்தமு
ண்டுபண்ணி அவ்விலிங்கசன்னிதியில் நின்று ஈசனைநோக்கி
புரட்டாசிமாதம் வெள்ளிக்கிழமைகளில் அருணோதயகால
த்தில் எங்களால்அமைத்த இக்கன்னியாதீர்த்தத்தில் ஸ்நான
ஞ்செய்து உமதுசன்னிதியில் மஞ்சள்தானஞ்செய்குவோர்கள்

தீர்க்கசுமங்கல்லியம் அடையவேண்டும் மூன்றுபக்ஷப்
ஸ்நானம்செய்து உம்மைதெரிசித்து உமது சன்னிதியில் மஞ்ச
ள் குங்குமம் சுகந்த வஸ்திரம் இவைகளை உத்தமர்களுக்கு
தானம்செய்பவர்கள் மிருதவத்சை காகவந்தியை கதலிவ
ந்தியை ஜன்மவந்தியைகளும் நீங்கி சுபுத்திரர்களை அடையவே
ண்டும், என்று அஞ்சலித்துப்பிரார்த்தித்தார்கள். உடனே
இலிங்கத்தினின்று அருளுவோமென்ற தொனியுண்டாகிற்று
ஸப்தகன்னிகைகளும் பலமுறைபணிந்து அபிராமசுந்தரியை
த் துதித்துத் தங்கள் உலகஞ் சென்றார்கள். அவர்கள் ஈசனை க
கேட்டுக்கொண்டபடி ஸ்நானம் தரிசனம்தானங்களைச் செய்
யின் அவ்வாறுபெறுவார்கள். அமுதலிங்கத்தின் திருநிழலை
யில் சாம்புவரால் உண்டுபண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்
து அவரால் பூஜித்த லிங்கத்தைத்தரிசித்தால் திடசரீரம் பெ
றுவார்கள் அமுதலிங்கத்தின் தெற்கில் அரைக்குரோசத்தில்
மிருகண்டேசுவரரையும் மரகதாம்பாளையும் தரிசித்தால் ஞா
னமுள்ளபுத்திரனைப் பெறுவார்கள் மார்க்கண்டேயர் மூன்
றேழுஜன்மத்திலும் அமுதீசரைச் சிந்தித்து ஆத்மார்த்தமாய்ப்
பூஜித்த அங்குள்ள மார்க்கண்டேயலிங்கத்தைத் தரிசனஞ்செ
ய்தால் ஆயுள்விருத்தி யடைவார்கள். அதன்தெற்கிலுள்ள
தீர்த்தத்தில் பௌர்ணமியில் ஸ்நானஞ்செய்து பிதிர்
க்குதர்ப்பணஞ் செய்தால் பிதிர்க்கள் மிக்கதிருப்தியடைவா
ர்கள் பங்குனிமாதம் சதையநக்ஷத்திரத்தில் மரகதாம்பா
சமேத மிருகண்டேசர்க்கு தைலம் பஞ்சாமிருதம் பஞ்சகவ

வியம் சர்க்கரை கனிவர்க்கங்களாலும் அபிஷேகித்துப் பூஜித்தால் அபமிருத்யுவன்னியில் திற்காயுசை அடைவார்கள் அமுதலிங்கத்தின் தெற்கில் ஒன்றரைக்கடிகை தூரத்தில் உள்ள சோளேசுவரர் என்ற அவ்விலிங்கதரிசனத்தால் சர்வபாபமும் நீங்கும். அதைப்பற்றிய ஒருசரித்திரம உண்டு அதைக்கூறுவேன் கேளுங்கள்.

சிபிசக்கிர வர்த்தி என்னும் ஓர் அரசன், பூர்வ ஜன்மங்களில் விளைந்த ஆகாமியத்தால் தொடரும் பிராரத்துவ சேஷ சஞ்சிதம் தீயும்படிக்கும் அச்சென்மத்தில் ஆகாமியம் உதிக்காமலும் சிவத்தியானத்துடன் அரச காரியத்தை நடத்தி வரும்போது ஒரு நாள் வேட்டையாடும்படி காட்டிற் சென்றார். அங்கு அம்பிகையைப் புறுவடிவெடுத்து வரும்படி ஈசன் ஆக்கிஞ்யாபித்துத் தாம் பருந்துவடிவாய்ப் புறுவைத்துரத்த அது அரசன்மடியில் மிகக்களைத்து அமர்ந்தது அரசன் அப்புறுவை தற் காக்கும்படி தாங்கிக் கொண்டிருக்கும் சமையத்தில் பருந்து ஹே அரசனே என்னால் துரத்தப்பட்ட இப்புறுவை என்னிடமாய் விடாது நீர் பற்றியிருப்பது நீதி யன்று எனது புறுவை என்னிடம் சேர்த்து அமர் வீராகில் யான் மிக மகிழ்வேன் என்றது. அதற்கு அரசன் நான் அபயம் அடைந்த புறுவை விட மாட்டேன் என்றரற்றியதைக் கேட்ட பருந்து ஓ அரசனே இப்புறு நான் வசிக்கும் கூட்டின்

முன்னுள்ளது இப்புறாவின் அங்கம் என் சரீரத்துறையு
ம், இதன் உருசியை நானே அறிகுவேன, ஒருபோதும் என்
னை விட்டுப் போய்விடாது என்று நெடுநாளாய்ப் பார்த்
திருக்கிறேன். இப்புறா எவ்விடங்களிலும் பறந்து வசிப்
பதுண்டு இது வசிக்கும் காடுகளில்யானும் உலவுவதுண்டு
என்னுருவைக்கண்டால் மறைந்து விடும் காட்டின் எல்
லையின் மேலுள்ள வெளியில் முற்றும் உடராது காட்டில் உ
லவி தலைநீட்டிக் குனிந்து எச்சரிட்டு உள் நுழையின்
யானும் அதைக்கண்டு மறைகுவேன் எந்தக்காட்டிலாவ
து அங்குள்ள, இரைகளையுண்டு விரல் நான்கும் கூடும் ப
டி காலைமடித்து தலை கீழுறாது பின்புறத்தில் மேலுற நின்
று தூங்குஞ் சமையத்தில் பற்றி புறவால் வளர்ந்த
என் அங்கத்துள். அடக்கிக் கொண்டு அக்காட்டில் இப்பு
றாவின் தொனியுடன் எனது தொனியையுங் காட்டி நி
றை மகிழ்வுடன் மிக உயர் வாயும் யாராலும் அறியப்ப
டாததாயும் உள்ள எனது கூட்டில் அடக்குவதாய் உறு
திகொண்டிருக்கும் நான் வசிக்கப்பெற்ற உம்முடையதான
இக்காட்டில் இன்று மடிந்துவிடாதுகார்க்கும் திறம் உம
க்கு உண்டென்று நீர் மகிழ்வுடன் காணும்படி கரணமிட்
டுயர்ந்து எனது ஆகாயவட்டத்தில் வியாபிக்க நான் அனுகி
ப்பற்றும் தருவாய் நீர் அதைப்பற்றியிருப்பதால் நான் உம்
மையல்லாது பிடிக்கும் அநீதியேன் அன்று நான் எங்கும்
வசித்தாலும் சினைப்புறுவன்றி வேறு பக்ஷிமாம் சத்தை

அருந்து கிறதேயில்லை. இப்புறா இந்த வில்வவனத்தில் என திடம்முன் பக்ஷமாய சமீபத்தில் அனேகமுட்டைகளையீன்று அவ்வண்டங்களைச் சிறகாலணைத்துக்கிழ்நோக்குற்று நெடு நாளாய் அடைகாத்திருக்கிறது. இதன் குஞ்சுகள் அநேகம் உண்டு அவைகட்கெனையெதிரி யென்று தெரிவிக்காதால் இப்புறாவைப் போலவே யானும் உலவுவேன்; யான் அவைகளின் பக்கத்திலே உலவப்புகும்சமயத்திலும அகலுஞ்சமயத்திலும் என்னுடன் சஹநேரம் சமமாயுலவும் அப்போதெல்லாம், சூழ்கொள்ளட்டும் என் றே, பார்த்திருந்தேன். குஞ்சுகளில் ஒன்றிற்கேனும என்னுருவைச் சத்துருவென்று காட்டித் தெரிந்த அக்குஞ்சு என்னுடையது தான் என்பதும் அப்படித் தெரிவிக்கின் எனது சம்பிரத்துவபுடன் இப்புறாவின் குலையும் இதன் சிறகு சிதறு பிரகாசத்தையும் காட்டுவேனே யொழிய உருக்காட்டேன் என்பதும் தெரிந்தே தன் குஞ்சுகட்கெல்லாம் வைரி என்று காட்டாத இப்புறா என்னைச் சத்துரு வென்று உமக்கறிவித்து நீர் முக்குறியிட்டெய்யும் அம்பிற் படும்படி செய்தற் கன்றோ என்பால் நெருங்கி ஓடிவந்து மடியில் அமர்ந்து, உம்மை விட்ட கலாதிருக்கிறது. எனது பக்கத்தில், கீழ் மேலாய்ப் பறந்தும் என்னுடன் வட்ட மிடும்போதெல்லாம், பற்றிப்பக்ஷிக்காது, பார்த்திருந்த என்முன் கரணமிட்டு நெருங்கி சூழ்கொண்டதை யறியும் படி நின்றதால் உருவமர்ந்தாய்க் கண்டு மிக்கவலாய்த்தாவினேன் நீர் சிவ

ரக்ஷகஞ்செய்து சிவஞானம்பெறலாமென்று அபய மிட்டு க்கார்க்கிறீர். சீவரக்ஷகம் செய்வதுண்மையாயின் என்பசியை நீக்குவது உமதுகடமையாகும் ஆனதால் இதனிறைக்குச்சரியா யுமதுசரீரத்தைத் தருவீர். பக்ஷிகள் இறகுடனோடிருக்குமாயின் அதன் சுய ரூபத்தைக் காணமுடியாது செய் நிறைந்தகளியில் இளகி யிட்டு அடுப்பேற்றித் தீமூட்டி யெடுத்துதறின் முட்டையினின்றுதித்ததுபோலவே சுத்தமாய்க்காணும். வேறுபக்ஷிகளின்செய்கை இவ்வாறாகும்- கொல்லப்படாதென்று நீர் அபயங்காக்கும் இப்புறு இறந்தாலொழிய இதனங்கத்தைப் பார்க்கமுடியாது அதற்குள் நீர இறந்தால்உடனே யிப்புறாவும் எனக்குள் அபிக்கியந்தான் என் பசைத்தெரிக்கும் காக்கிறீர் இதனுடனிறையைவடிவாய்க்காண் பிக்கும கிராமசை யந்தராயப் பற்றி நிற்கிறேன் அதில் புறாவோடு உமது சரீரத்தை யரிந்து வைப்பீராயின் திராசுக்கப்பியிலா நடுமேல் மையவட்டத்துள் இருமுனையும் ஒத்து நிற்கக்காட்டிய பெற்றுக்கொள்ளுகிறேன் என்றது. அதற்கு அரசன திராசிலொருதட்டில் புறாவைவைத்து மற்றொரு தட்டில தன்சரீரத்தை அரிந்துவைத்தும் இடைசரியாகாததால் தான் ஏறி உட்கார்ந்தார். அக்காலத்தில் இராஜனுடைய பக்ஷியைப்பருந்து [illegible] ந்து உருவாய் வந்த ஈசுவரனும் புறா உருவாய்வந்த [illegible] ம்பார்த்து மறைந்து விருஷபரூடராய்த் தோன்றி இரா[illegible] க் திவ்யசரீரமாகச்செய்து இலிங்க உருவாய் அமர்[illegible]

அரசன் புருவும் பருந்து மாய் வந்தது சக்தி சிவமே என்றுணர்ந்து முன்னமே அறிதற்குத் தவறி விட்டோமேயென்று மனம் வருந்துகையில் ஓ அரசனே நாம் இலிங்கமாய் அமர்ந்தோம் எம்மைப்பூஜிப்பாய் என்று அசரீரியுண்டாயிற்று இலிங்கம் தோன்றிற்று அரசன் ஆனந்த பரவசமுற்று ஆ-று னருகில் ஓர் தடாகமமைத்து அத்தடாகத்தில் மூன்றரைக்கோடி தீர்த்தங்களை ஈசனால் ஸ்தாபிக்கப்பெற்று நெடுநாள் பூசித்துத்தன் சரீரச்சாயலற்று சத்திரூடாடல் முதலிய சித்திகளையுற்று முத்தியடைந்தார் என்று சூதபுராணிகர் மொழிந்தனர்.

21. சிபிச்சக்கரவர்த்திசருக்க முற்றும்.

---

# 22. வாசுகியும் பஞ்சரவியும் பூசித்தசருக்கம்

நைமிசாரண்யவாசிகளை நோக்கி அந்த க்ஷேத்திரத்தில் சிபிசக்கிரவர்த்தியால் சிவபூஜையின் நிமித்தம் உண்டுபண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அங்கு உதித்த சோ

ளீசுவரரைத் தெரிசித்தால் சர்வபாபங்களும்நீங்கி ரிணத்திரயமும்விடுபடும். அமுதலிங்கத்தின்மேல்பால் ஒருகடிகையளவில் நாகநாதர்என்ற ஒரு இலிங்கமிருக்கிறது. அதன்விருத்தாந்தத்தைச் சொல்லுவேன் கேண்மின்கள் முன்னொருகாலத்தில் வாசுகியென்றபாம்பானது கண்ணுவருடைய ஆசிரமத்தில்சென்று அவருடையபுத்திரனைக் கடித்து அப்புத்திரன் இறக்கவே கண்ணுவரிஷி கடுஞ்சினமடைந்து வாசுகியை ஜலமில்லாதஉஷ்ணபூமியில்குருட்டு ஆடாகச் சென்மித்து நெடுநாளலைந்து துன்பப்படக்கடவாயென்று சபித்துந் தமது புத்திரனை மந்திரசக்தியால் உயிர்பெற்றெழும்படிசெய்தார். வாசுகி கண்ணுவரை நமஸ்கரித்து நான் புத்தியீனமாய்த் தமது புத்திரனைக் கடித்துவிட்டேன் மூடனாகிய என்பேரில் கிருபைசெய்து சாபவிமோசனம், அருளவேண்டும் என்று பணிய கண்ணுவமுனி ஹேவாசுகி காவேரியின் தென்புறம் வில்வாரண்யம்என்று ஒரு க்ஷேத்திரமிருக்கிறது அவ்விடஞ்சென்று அமுதலிங்கத்தைத்தெரிசித்து உன்பேரால் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்யின் சாபம் நீங்கும் என்றார். வாசுகி குருட்டு ஆடாகச்சென்மித்து ஜலமில்லாப்பாலை நிலத்தில் நெடுநாள் அலைந்துவருந்தி நற்காலத்தால் வில்வாரண்யம் அடைந்து கண்ணுண்டாகி அமுதலிங்கத்தைத்தெரிசித்து அத்தலத்தில சிவலிங்கப் பிரதிஷ்டை செய்துபூஜித்தது. உடனே அவ்விலிங்கத்தில் ஈசன் பிரசன்னமாகி ஹேவாசுகி உன்னுடைய சாபத்தை நிவர்த்தி செய்தோம் என்று மறைந்தருளினர்.

வாசுகி சுயரூபமடைந்து மிகமகிழ்வாய் அவ்விலிங்கத்தைப் பலகாலம்பூஜித்து அமுதலிங்கத்தைத் தெரிசித்துப் பணிந்து தன்னுலகஞ்சென்றது, நாகலிங்கதரிசனத்தால், சமஸ்தபாபங்களும்நீங்கி மஹாசௌக்கியத்தை யடைவார்கள், வில்வாரண்யத்தில் புலன்களொன்றுபட்டு அன்புறு அமுதலிங்கத்தில் வெள்ளிபொன் கூடிய நாகாபரணஞ்சூட்டி பெற்றோர் தாய்தந்தையர் என்றும்பிரியாதுயர்ந்து களிக்கும் புத்திரனைப் பெறுவார்கள், நாகநாதலிங்கத்தின் தென்புறத்தில் வாசுகியால் உண்டாகிய நாகதீர்த்தத்தில் ஆவணிமாதம் சதுர்த்தியில் ஸ்நானஞ்செய்து அமுதலிங்கத்தை நாகாபரண பூஷிதராய்த் தெரிசித்தால் சாரூப்பியத்தையடைவார்கள். அமுதலிங்கத்தின்வடபுறம் பஞ்சார்க்கரதிலுள்ள கைலாசநாதரைத் தெரிசித்தால் தேஜோவிருத்தியடைவார்கள். அவ்விலிங்கவிர்த்தாந்தத்தை வழுத்துவேன் கேளுங்கள் முன்னொருகாலத்தில் பனிரண்டு சூரியர்களில் ஐந்துபேர்களுடையபிரகாசம் குன்றியதால் அவர்கள் அதைவிருத்திசெய்துகொள்ளும்பொருட்டு சர்வஆதாரமும் அமுதந்தினின்று உண்டாகும் என்று யோஜித்து அவ்வமுதீசர்விளங்கும் வில்வவனத்தை யடைந்து அமுதீசனைத் தெரிசித்து அத்தலத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அதன்முன் தவம்செய்தார்கள். அவ்விலிங்கத்தில் ஈசன்உமாசமேதராய்த்தோன்றி பஞ்சஅருக்கர்களைநோக்கி நீங்கள்விரும்பிய தேஜோவிருத்தியைத் தந்தோம் என்றருளினர். அப்போது பஞ்சரவியும் பிரதக்ஷண நமஸ்கா

ரப்செய்து அஞ்சலிபஸ்தராய்நின்று சுவாமி தம்மைத்தரிசித்
தவர்களும் திவ்வியசரீரத்தோடு ஞானம் அடையவேண்டும் தம
து மேல்பாகத்தில் எங்களால் அமைத்த பிரபாகரதீர்த்தத்தில்
ஸ்நானஞ்செய்தால் மண்டைக்குத்தல் மார்வலி கண்ணோய்
க்ஷயம் வயிற்றுநோய்களும் நீங்கவேண்டும். ஆவணிமாசம்
பானுவாரஉதயத்தில் இத்தீர்த்தத்தில்படிந்து தம்மைச் சிவ
ந்தபுஷ்பத்தால் அர்ச்சித்து குளான்னம் நிவேதிப்பவர்கள்
சர்வசித்திகளும் பெறவேண்டும் அத்தினம் உதயஸ்நானஞ்
செய்து சிவந்தபுஷ்பத்தைத் தாம்பரபாத்திரத்தில்நிரப்பி உத
தயபிராமணனுக்குத் தானம்செய்தால் செய்பவர்முதல் பின்
இருபத்தொரு தலைமுறைவரையில் குருடுமுதலிய அங்கஹீ
னம் அடையாதிருக்கவேண்டும். அன்று அத்தீர்த்தக்கரை
யில் மாத்தியானவேளையில் தேவதர்ப்பணம் பிதிர்தர்ப்பணம்
முதலிய செய்யின் இஷ்டசித்திகளையடையவேண்டும். அத்
தீர்த்தத்தில் அன்று ஸ்நானஞ்செய்து இரும்புப்பாத்திரத்
தில் எண்ணெயைநிரப்பிஸத்பிராம்மணனுக்குத் தானஞ்செய்
தாலும் கறுப்புப்பசு தானஞ்செய்தாலும் அச்சென்மத்திலும்
பின்வருஞ்சென்மங்களிலும் அக்குலத்திலும் சனிபீடையுண்
டாகாதிருக்கவேண்டும். அச்சென்மத்தில் ஆறுஎட்டுப்
பனிரெண்டு ஜன்மஸ்தானங்களில் பாபக்கிரஹங்கள் இருந்
தாலும் பீடியாதிருத்தல்வேண்டும். அவர்களின் மறுஜென
னகாலங்களில் பாபக்கிரஹங்கள் அத்தானங்களில்அமையா
தும் நோக்காதும் இருக்கவேண்டும் அயனம் விஷு பானுவா

ரங்களில் அத்தீர்த்தத்தில் தோய்ந்து உம்மைத்தெரிசித்தால் நவக்கிரஹதோஷங்கள் நீங்கவேண்டும், என்று ஈசனைப் பிரார்த்தித்தார்கள். ஈசன் அருளுவோம் என்று இலிங்கத்தில் மறைந்தனர்.

கேட்டீர்களோ ரிஷிகளே அவ்விலிங்க தெரிசனத்தால் சூரியதோஷங்கள்நீங்கும். அமுதலிங்கத்தின் ஈசானத்தில் அனுமந்தரால் முன் ஸ்ரீராமர் இத்தலத்தில் பூஜித்த போது ஒருசிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூஜிக்கப்பட்டிருக்கிறது அதைத்தெரிசித்தால் சர்வசித்திகளும் பெறுவர்கள். ஹனுமந்தரால் உண்டாக்கிய அவ்விலிங்கத்தின் தென்பாலுள்ள அன்னபூரணியென்னும் தீர்த்தஸ்நானத்தால் திடசரீரம் பெறுவர்கள். கார்த்திகைமாதம் ஞாயிற்றுக்கிழமையில் அங்கு அன்னதானம்செய்வோர் குபேரசம்பத்தையடைவர்கள். வில்வவனத்தில் பாலகில்யர்களாலுண்டாக்கிய அனேகதீர்த்தங்கள் உள்ளது அவைகளில் கார்த்திகை மாதம் ஆதிவாரஉதையத்தில் அமுதபுஷ்கரணியிலும் மாத்தியானகாலம்வரையில் ஒவ்வொன்றாய் இயன்றஅளவில் அத்தீர்த்தங்களிலும் பின்னும் மாத்தியானத்தில் அமுதபுஷ்கரணியிலும் படிந்து அதன்வடபால தேவதர்ப்பணம் ரிஷிதர்ப்பணம் பிதிர்தர்ப்பணம் முதலிய செய்தால் அஷ்டஐசுவரியமும் சிவபூஜைசெய்தால் ஞானமும் உண்டாகும். சர்வஜன்மாக்களும் வினைப்போகங்களையனுபவிக்கும்படி இரக்ஷிக்கும்

அமுதநாராயணன் என்னும் வைகுந்தாதிபதி அமுதவல்லியெ ன்னும் அம்மையுடன் முன் அமுதமுண்டானகாலம்முதல் அமுதீசரின் கிருதியாகத்தில் உள்ள பன்னகசாலையில் சுரா ரநரர்களாலும் பூஜிக்கப்பட்டிருக்கிறார். அவரைத்தெரிசி த்தால் சர்வமங்களமும் உண்டாகும் சித்திரைமாதம் சித்திரா பௌர்ணமியில் அன்றுதிரட்டிய உத்தமப்பசுவின் வெண்ணெ யை நிவேதனஞ்செய்து சன்னிதியில் வினியோகித்துப் பருகி னல் சர்வதேவதைகளுடனும் அமுதம்உண்டபலனை யடைவர் கள். துளசியால் அர்ச்சிப்பவர்கள் மரணகாலத்தில் சிவஸ் மரணை செய்யப்பெற்று கபவாதையடையார்கள். சித்திரை மாதம் ஸ்ரீராமநவமியிலாவது சிரவணநக்ஷத்திரங்களிலாவது திருமஞ்சனமாட்டி சர்க்கரைப்பொங்கல நிவேதித்துத் தெரி சித்தால் வைகுந்தத்தையடைவர்கள். சித்திராபௌர்ணமி யில் வாழைபலா திராக்ஷை பேரீந்து பால் தேன் நெய் சர்க் கரை தெங்கு சேர்ந்தபஞ்சாமிருதம் அமுதீசர்க்கும் அமுத நாராயணர்க்கும் நிவேதிப்பவர்களின் மூலை கண்கள் நா மார்பு வயிறுவாளாது சுகத்தைத்தரும். வீரத்தன்மைபொருந் திய அரக்கர்முதலியவர்களால் பூஜித்த ஸ்ரீராமனைத் தெரிசி த்து ராமநாதீசர்க்கபிஷேகித்து ஸ்ரீராமநவமிவிரதத்தை யனு ஷ்டித்தால் நிராயுதன்முதலியவர்களுடன் போர்புரிந்த தோ ஷங்கள் நீங்கும். என்று சூதமுனிவர்சாற்றினார்.

## 22. வாசுகி பஞ்சார்க்கச் சருக்கமுற்றும்.

# 23. பிரம்மபுரீச சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளைநோக்கி ஹேரிஷிகளே அரு-
லிங்கத்தின் கீழ்புறத்தில் பிரம்மஸ்மசானம்என்று ஒருதலம் உள்ளது அதன்மகிமையைச் சொல்லுகிறேன் கேளுங்கள் அந்தஇடத்தில் பிர்ம்மாவினுடைய சரீரம் லயமானதால் பிர்மஸ்மசானம்என்றுவிளங்குகிறது என்றசூதரைநோக்கிப்பிர்ம்மதேவனேலயமானால் மிச்சம்ஒன்றும் இராதே தாங்கள்பிர்மாலயமானஇடம்என்றும் அதன்விசேஷங்களைச்சொல்வதாயும் கூறுகிறீர்கள் முன்னம் பிர்மாவினது லயஉற்பத்தியைத் தெரிவித்துப் பின்பு அத்தலவிசேஷத்தை உரைக்கவேண்டும் என்றுசிலரிஷிகள் கேட்டார்கள். அதற்கு சூதர் ஆயிரம் சதுர்யுகம்கொண்டது பிர்ம்மாவிற்குஓர்பகல் இவ்வகையாய் நூறுவருஷம் சென்றால் யோகாக்னியில் லோகநாயகனை சதுர்முகன் சரீரத்தை லயப்படுத்துவார். அவருடைய யோகாக்கினியானது சரீரத்தை லயம்பண்ணி சிவதேஜசாய் விளங்கி தத்போதம்உற்றூர் அறியாததான நிறைவஸ்துவாய் அமரும். சிருஷ்டிகாலத்தில் முன்லயப்படுத்தியஇடத்தில் தேஜசுண்டாகி தன்னுட்படுத்திய பஸ்மத்தை வெளிப்படுத்தும் அந்தபஸ்மத்தின் ஏகதூளியில் பிர்மாமுதலிய சர்வமும் உண்டாகும். அஃது உண்டாகிய அத்தானமே முதல்

பிர்ம்மாவின் ஸ்மசானமதும். அவ்வகைபாய் மூன்றாவது பிர்ம்மா லயமடைந்த இந்தஉத்தமகலத்தில் மறுசிருஷ்டி காலத்தின்பின் சர்வதேவர்களும் ஒருசிவலிங்கஸ்தாபனஞ் செய்து அதன் தென்பாகத்தில் பிர்மகுண்டமென்ற தீர்த்தமமைத்து பிர்ம்மபுரீசுவரரையும்அவர்தம் வாமபாகத்தில் அப்லானகுஜநாயகியையும் பூஜித்து அநேககாலம் தபஞ்செய்தார்கள்.

கேளுங்கள்ரிஷிகளே ஈசுவரன் பூதிதாரணராய் பிங்கலவர்ண்ணஜடையோடும் வெண்கௌபீனந்தரித்து கருணாமூர்த்தியாய் சிவகணங்கள்சூழத் தோன்றினர். தபசிகள் எல்லோரும் மஹாசந்தோஷத்துடன் நமஸ்கரித்து தேவதேவா புராண ஆதிரூபா குணாதீத சாவகுணசார திக்பதே விருக்ஷபதே அன்னபதே ஹிரண்யகல்ப்பபதே ஜ்யோதிபதே அம்பிகாபதே ஆத்மபதே திரிலோகபதே திரிநேத்திரபதே மேருதனுத்தர ரிஷபத்துவஜ காலஸம்ஹார கைவல்யகிருபாகர திரிகிர்த்திய ஆதார போற்றி போற்றி என்று தோத்திரஞ்செய்து ஸ்வாமி பிர்ம்மஸ்மசானமென்ற இந்த இடத்தில் எங்களால் பூஜிக்கப்பட்ட இலிங்கத்தில் சாநித்தியராயிருந்து பிரஜைகள்விருத்திபுவதைத்தந்தருளவேண்டும் என்று பிரார்த்திதார்கள். அவ்வண்ணம் ஆகுகென்று ஈசன் திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். அந்தலத்தில் மகரிப்பவர்கள் ஞானத்தையடைவார்கள். பிர்ம்பதீர்த்தக்கரையில்

பிதிர்கர்மங்களைச் செய்தால் பிதிர்க்கள் கல்ப்பபரியந்தம் தி
ருப்தியடைவார்கள். சிவஞானத்தால் முக்தியடைந்த மூன்று
வது பிர்ம்மஸ்மசானமானதாலும் மார்க்கண்டேயதீர்த்தம் உ
ள்ளதாலும் அவ்விடத்தில் பிதிர்கர்மங்களைச் செய்யின் கா
யில் செய்வதைப்பார்க்கிலும் அதிகபலனைத் தரும். பிர்ம்மகு
ண்டத்தின் தென்புறத்துள்ள முக்கோடி தீர்த்தங்கள் விரியா
டங்கியமார்க்கண்டேயதீர்த்தமென்றுஈசன் ஆக்கினையால்வந்த
அத்தீர்த்தத்தில் பங்குனிமாதம் கிருஷ்ணபக்ஷம் அசுபதியில்
ஸ்நானஞ்செய்தால் ஞானத்தை யடைவார்கள். பிர்ம்மகுண்
டஸ்நானத்தால் ஓர் அரசன் கருங்குஷ்டம்நீங்கிச் சர்வாபீஷ்
டங்களும்அடைந்த ஒருசரித்திரம் வேதவியாசரால் தெரிந்த
தைச்சொல்கிறேன் கேளுங்கள்.

சோழதேசத்தரசன் சிவபக்திபிராம்மணபக்தியில்சிறந்
து அனேகதானங்களைச்செய்து தீர்த்தயாத்திரையாகப்புறப்
பட்டுக் காவேரிதீரம்வந்து பொன்னிநதியில்படிந்து அனேக
தானங்களைச் செய்து அங்குவசிக்கும்போது ஒருநாள் ஓர்பி
ராம்மணன் மிகப்பசியுடன் அரசனை அன்னங்கேட்க அரசன்
பரிசாரகரையழைத்து அன்னம்இடும்படி உத்தரவளிக்க அ
வ்வேலைக்காரன் அன்னந்தருவதாய் பிராம்மணனையும் அவர்
மனைவியையும் அழைத்துக்கொண்டுபோய் அன்னங்கொடாம
ல் கெட்டபுத்தியால் பார்ப்பனியை இச்சித்தான் அதைத்தெ
ரிந்த அவ்வுத்தமபார்ப்பனி உடனேகோபங்கொண்டு ஆஹா

என்றிரைந்து இத்துஷ்டவேலைக்காரனைவைத்திருந்த அரசன் குஷ்டரோகமும் இத்துஷ்டபரிசாரகன் நாசமும் அடையவேண்டும் என்றுசபித்தாள். பரிசாரகன் பஸ்மீகரமாய்விட்டான். அரசன் குஷ்டரோகம் அடைந்து மிகத்துக்கத்துடன் தனது ஆசாரியரிடம்தெரிவிக்க அவர் வில்வாரண்யத்தில் பிரம்மகுண்டம்என்ற தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் தீரும் என்றார். அரசன் குருவருளின்படி பிரம்மகுண்டத்தில் மூழ்கி அம்லானருஜநாயகியோடு பிரம்மபுரீசுவரரையும் தெரிசித்து குருக்குஷ்டம்நீங்கப்பெற்று அனேகதானங்கள் சிவாலயத்திருப்பணிகள் ஆபரணங்கள் வாகனங்கள் இரதங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி மாசிமாசபௌர்ணமியில் தீர்த்தமாகும்படி உச்சவமும் தன்னால் நித்தியபூஜையும் ஏற்படுத்தி ஈசுவரனைச்சிந்தித்துத் தனதுநகரம் சென்றார். பிரம்மதீர்த்தக்கரையில் ஜெபம் தியானம் ஹோமம் முதலியவைகளைச் செய்யின் விசேஷபலனைத் தரும். என்று சூதர் புகன்றார்.

பிரம்மபுரீசச் சருக்கம் முற்றும்.

# 24. சோமசர்மா சருக்கம்.

ஹேரிஷிகேசே பிர்மஸ்பசானர் என்கிற அத்தலத்து பிர்மதீர்த்தத்தில் அமாவாசை பௌர்ணமி வியதீபாத மாதப்பிரவேசம் அயனங்கள் கிரஹணங்கள் அஸ்தோதயங்கள் பிதிர்தினங்கள் இவைகளில் ஸ்நானஞ்செய்து மார்க்கண்டேயதீர்த்தத்திற்கும் பிர்மகுண்டத்திற்கும் மத்தியில் தேவரிஷிபிதிர்தர்பணங்கள் செய்தால் பிதிர்க்கள் நித்தியதிருப்தியடைவார்கள். ஹிரண்ணியம் வஸ்திரம் தானஞ்செய்தால் தேவர்களாய் சொர்க்கத்தையடைவார்கள். அன்னதானஞ்செய்தால் ஒரு அன்னத்திற்கு ஆயிரம்வருஷமாக சிவலோகத்தில் வசிப்பார்கள். மார்க்கண்டேயதீர்த்தத்திற்குச் சமமாக மூன்றுலகத்திலும் வேறுதீர்த்தம் கிடையாது. அத்தலத்துள்ள பாலகிரியதீர்த்தங்களில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்நானஞ்செய்வது விசேஷம். ஆதியில் காம்போஜதேசத்தில் சோமசர்மாவென்கிற ஒருபிராமணன் தயை தர்மம் சீலம் சாந்தத்துடன் சிவபக்தியில் சிறந்தவராயிருந்தார். அவர் இரவில் போஜனஞ்செய்து சிஷ்யர்களுடன் நித்திரைசெய்யுங்காலத்தில் அவருடையகிரஹம் தீப்பற்றியதால் சிஷ்யர்கள் இறந்துவிட்டார்கள். சோமசர்மா அப்பிணங்களைப்பார்த்து மிகத்துக்கித்து வேதசாஸ்திரம்தெரிந்த

வர்களை யழைத்து இத்தோஷத்திற்கு என்செய்யலாமென்றனர். அதற்கு அவர்கள் பிர்மகத்திதோஷங்கள் நீங்கும்பொருட்டுத் தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்று கூறினார்கள். சோமசர்ம்மா அதைக்கேட்டவுடனே தீர்த்தயாத்திரையாகப் புறப்பட்டுக் காசிமுதலிய க்ஷேத்திரங்களில் தீர்த்தமாடிச் ஒரு தரிசனங்களைச்செய்து பிர்ம்மஸ்தானத்தைக் கண்ணுற்றதும் பிர்ம்மஹத்தி அப்புறம் நின்றுவிட்டது. அதனால் பூசுரர் ஆச்சரியமடைந்து மயிர்க்கூர்ந்து ஆனந்தப்படும்போது இத்தலத்தில் பிரம்மஹத்திமுதலியது வரமாட்டாதென்று அசரீரி புண்டாயிற்று, அதைக்கேட்ட சோமசர்ம்மா மிக மகிழ்ந்து பிர்ம்மதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஆறுநாள் அந்தலத்தில் சிவதெரிசனம்பண்ணிக்கொண்டு அங்குவசித்துப பின்பு தனதிருப்பிடஞ்சென்று சர்வசுகங்களையும் அனுபவித்து ஈசன் திருவடிநீழலை யடைந்தானென்று சூதபுராணிகர் கூறினார்.

24. சோமசர்ம்மா சருக்கம் முற்றும்.

# 25. சிவசர்மா சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளை நோக்கி பிர்ம்மஸ்மசானம் தலத்தில் பசுபக்ஷிகளும் முக்தியடைந்திருக்கிறதுஎன்று ஸூதர் கூற நைமி ரிஷிகள் கேட்க அதன் விர்த்தாந்தத்தைச் சவிஸ்தாரமாய்க்கூறவேண்டுமென்று வினவிய ரிஷிகளைக்கண்ணுற்று ஸூதர் ஓ ரிஷிகளே பாண்டியதேசத்தில், பிர்ம்மஸ்தலம் என்கிற ஊரில் சர்வப்பிராம்மணரும் வேதோக்தமாய் அக்னிஹோத்திரம் முதலிய குலக்கிரியைகளை நடத்த சிவசர்மாவென்ற ஒருவர் மாத்திரம் வேதவிதியைத்தவிர்த்து சபிண்டீகரணம் ஏகோதிஷ்டம் ஸ்திரீசேஷம் சூத்திரசேஷம் தினசேஷம் முதலியவைகளை தனஇச்சைப்படி புஜித்து வயோதிகமடைந்தகாலத்தும் கோலூன்றி ஊரூராய்ச்சென்று பராந்நபோஜனஞ்செய்து வருமோர் இரவில் மிதமீறிய ஆகாரத்தால் அதிசாரமுண்டாகி மரணத்திற்கேதுவாகும்சமையம் எமகிங்கரர்கள் பிராமணனுயிரை பாசத்தால்பற்றி தண்டத்தால்மோதியபடி வைவசுவதஞ்சென்று நெருப்புமுதலியநரகங்களில் ஏழுமனுவந்தரம்வரையில் அமிழ்த்தி மழுவைச்சாப்பிடச்செய்தும் மழுத்தம்பங்களை அணையச்செய்தும் மழுச்செக்கில்இட்டு அரைத்தும் இன்னும்பலவிதமாக ஹிம்சித்துப் பின்பு கழுதையாய் ஏழு பன்றியாய் ஐந்து நாயாய்மூன்று இவ்வகையான ஜென்மங்

களை அடையும்படிசெய்து முடிவில் ஒருகாகஜன்மத்தையும் பெறச்செய்தார்கள். அந்தசிவசர்ம்மாவாகியகாக்கை ஆயிரம்வருஷம்வரையில், வருந்தி பெலிபோஜனங்களையருந்தி அனேகவனங்களில் சஞ்சரித்து பிர்ம்மஸ்மசானம் அடைந்து பிர்ம்மதீர்த்தத்தைப்பருகி அதில்ஸ்நானம்பண்ணியவுடன் ஒருபருந்து அந்தக்காக்கையைத்துரத்த காகம்சிவாலயத்தின்னேர்ஓடிற்று. பருந்து பின்தொடர்ந்து துரத்தியதால் காகம் மூன்றுதரம் விமானத்தைச்சுற்றிக் களைத்து சன்னிதியில் விழுந்து உயிர்விடுந்தருவாய். எமபடாள் காக்கையின்உயிரைக் கொண்டு போவதாகப் பற்றினார்கள். சிவகணங்கள் விமானத்துடன் அங்குவந்து எமதூதர்களை இம்சித்துத் துரத்திக் காகத்திற்குத் திவ்வியதேகம் அளித்து இரதத்தில் மிகஅன்போடுஏற்றிக்கொண்டு சிவலோகஞ்சென்றார்கள். எமபடாள் அயர்ந்து தங்கள்அரசனிடஞ்சென்று இக்குற்றத்தைக் கூறினார்கள். அதற்குத்தர்ம்மராஜன் ஹேமூடர்களே சிவதீர்த்தத்தில்படிந்து சிவத்தைமூன்றுபிரதக்ஷணஞ்செய்து சிவசன்னிதியில் நிர்ச்சிந்தையாய் விழுந்த காகஜீவனை நீங்கள்பற்றியதால் சிவதூதர்கள் தண்டித்தார்கள் அவர்கள் தண்டித்ததால் நானுங்களைத் தண்டிக்கவில்லை இனிஅவ்வகை செய்யாதீர்களென்று ஆக்ஞாபித்தார் என்று சூதபுராணிகர் கூறினார்.

25, சிவசர்மா சருக்க முற்றும்.

# ஹேமகிரீடன் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளை நோக்கிப் பிர்ம்மலிங்கத்தின் கீழ்பால் ஒருகுரோசத்தில் விளங்கும் அபிமுகதீசுவரரைத் தெரிசித்தால் முக்திக்குஏதுவாகும் அதன் தென்பக்கத்தில் ஆம்பிரவனமும் அவ்வனத்தில் சுந்தாவனேசுவரர்என்ற இலிங்கமும் இருக்கிறது அதன்பூர்வத்தில் அனேகரிஷிகள் தபஞ்செதுகொண்டிருக்கிறார்கள் பிர்ம்மஸ்மசானம் என்கிற க்ஷேத்திரம் கல்பாந்தத்திலும அழியாது அநாதியாய்விளங்கும். ஒவ்வொருகிருஷ்ணபக்ஷம் சதுர்த்தியிலும் பிர்ம்மகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து பிரம்மபுரீசுவரரைதெரிசித்து வில்வாரண்ணியத்தைப் பிரதக்ஷணஞ்செய்தால் அனேகதடவை பூப்பிரதக்ஷணஞ்செய்தபலனை அடைவார்கள். அத்தலத்தில் விளங்கும் கார்த்திகேயரை ஓர் அரசன் ஆராதித்து சத்ருஜெயம்பெற்றதைச் சொல்வேன் கேளுங்கள். தர்ம்மசிந்தையையுடைய ஹேமகிரீடன்என்னும் சாளுவதேசததாசன் இராஜுவமதில்லாதிருந்தமையால் இராச்சியங்களை வேறு அரசன் அபகரித்துக்கொண்டு ஹேமகிரீடனைத்துரத்திவிட்டான். ஹேமகிரீடன் அனேகதலங்களைத்தரிசித்துக்கொண்டு பிர்ம்மஸ்மசானம்அடைந்து அம்லானகுஜநாயகிசமேத பிர்ம்மபுரீசுவரரையும் சிங்காரவேலரையுந் தெரிசித்து மெய்ப்புளகாங்கிதங்கொள்

ள மிக ஆனந்தித்து பக்தியுடன் உபவாசமாயிருந்து சிங்கார
வேலரைத்தியானித்தபடி அன்றிரவில் துயின்றான். அவனது
கனவில் குறுமுனிக்குபதேசித்த குமாரக்கடவுள் தோன்றி
பக்தியிற்சிறந்த அரசனே உன்னுடைய சத்ருவை எமது மஹா
மாயையால் நாசம்பண்ணிவிட்டோம் உன்னுடைய ராச்சி
யத்திற்குச்சென்று உன் சத்ருவினுடைய தேசங்களையும் கைக்
கொண்டு அரசியற்றுவாய் என்று கூறினார். அரசன் விழித்
து குகப்பெருமானின் உருவைப்பற அவர் உரைத்த நன்மொ
ழிகளையும் மனங்களித்து உன்னிக்கொண்டு உறைந்து பிராதக்
காலத்தில் நித்தியக்கடனை முடித்து சிங்காரவேலரைக் கடம்பு
விசுஷி முதலிய புஷ்பங்களால் அர்ச்சித்துப் பணிந்து தன்தே
சம் அடைந்து முன்போல் தனது இராச்சியத்தையும் முருகக்
கடவுளால் அழிந்த சத்ருவின் சமஸ்தானத்தையுங் கைக்கொ
ண்டு பின்னும் வில்வவனம் அடைந்து ஸ்கந்தசஷ்டி உத்ஸவத்
தை மிகவிமரிசையாய் நடத்தும்படி அபரிமிதமான சாமான்
களைச் சேகரித்து அற்பசி மாதம் பூர்வபக்ஷம் பிரதமைமுதல் ச
ஷ்டிவரையில் உபவாசத்துடனிருந்து சிங்காரவேலர்க்குச்
சர்வஉபசாரங்களுடன் சஷ்டி உத்ஸவத்தை நடத்தி எப்போ
தும் அவ்வுத்ஸவம் நடக்கேறும்படி சிலபூமிகளைத் தானஞ்
செய்து ஆலயத்திருப்பணிகளையும் நடத்தி சன்னிதியில் பல
முறை பணிந்து சாருவதேசம் அடைந்து மனுமுறைதவறாது
அரசு இயற்றி வருடந்தோறும் மனைமகவுடன் ஸ்கந்தசஷ்டி
யில் சிங்காரவேலரைத்தெரிசித்து பிராம்மணபோஜனம்முதலி

யடைந்து வாழ்ந்தான். அந்தக்ஷேத்திரத்தில் சர்வாபீஷ்டத்தையும் தருவதான ஸ்கந்தசஷ்டிவிரதத்தை யனுஷ்டித்து சத்ருசம்ஹார சிங்காரவேலவரைத் தெரிசித்தால் சத்ருவைஜெயிப்பார்கள் அந்தக்ஷேத்திரத்தில ஆருத்திராதினத்தில் பிர்மமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சுவாமிசன்னிதியில் நெய்விளக்கேற்றியவர்கள் சிவஞானத்தை அடைவார்கள். கார்த்திகைமாதம் சோமவாரத்தில் தீபங்கள்ஏற்றினால் அஞ்ஞானம் என்றஇருள்நீங்கி ஞானப்பிரகாசத்தைப்பெறுவார்கள் ஹேரிஷிகளே இந்தக்ஷேத்திரவைபவத்தைக் கேட்டவர்கள் சிவபக்தியில்சிறந்து ஞானத்தை அடைவார்கள் என்றுசூதர்சொன்னார்.

26. ஹேமகிரீடன்சருக்கம் முற்றும்.



# 27. நவதுர்க்கைச்சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே யான்சொல்வதைச் செவன மாய்க்கேளுங்கள். மஹாஸ்மசானத்தின் கீழ்பக்கத்தில் திரிமுக்தமென்றஸ்தலத்தில் நவதுர்க்கைகள் பூஜித்திருக்கிறார்கள். அதேனெனில் முன்னொருகாலத்தில் மஹிஷாசுரனை ஜெயித்த அம்பிகை பிர்ம்மவிஷ்ணுக்களும்நமக்கீடாவாரோ ஈசுவரன்கூடஎம்பெலத்திற்கு ஈடாகாரென்று இமாசலத்தில் நினைத்துக் கர்வமடைந்ததை ஈசன்தெரிந்து ஹே துர்க்கா நீஎல்லோரையும் அவமதிப்பாய்எண்ணியதால் உன்பலம் இழந்து நவரூபமாய் எங்குஞ்சஞ்சரிப்பாயென்று சபித்தார். உடனே தேவிநமஸ்கரித்துத் தங்களோடுற்ற ஏகரூபத்தால் என்றறியாமல் நினைத்துவிட்டேன். எனக்குத் தாங்களே கெதியானதால் சாபந்தீர்த்து ஆளவேண்டும் என்றுபணிந்தார். சிவபிரான் கிருபைகூர்ந்து துர்க்கையைநோக்கி வில்வாரண்யத்தில் லிங்கப்பிரதிஷ்டைசெய்து அமுதலிங்கத்தைப்பூஜித்துத் தபசுபண்ணினால் சர்வபலமுள்ள ஏகரூபம் அடையலாமென்று அருளினார். தேவிநவதுர்க்கைரூபங்கொண்டு பூவுலகில்வில்வவனத்தில் ஏகசக்தியோடு லிங்கபிரதிஷ்டைசெய்து பூஜித்து இரவுபகல் சந்தியாவேளையென்கிற மூன்றுகாலத்திலும் அமுதலிங்கத்தை நூறுவருடம் பூஜித்து

வருகையில்ஈசன்ரூபீகரித்துநவதுர்க்கைகளைப்புன்சிரிப்புடன் நோக்கி நீங்கள்ஏகரூபம்அடைவீர்களென்று அருளியதும் தேவி ஏகரூபமாகி சுவாமிநான்சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூஜித்த அவ்விலிங்கத்திலும் நீர்சாந்நித்தியமாயிருந்து அன்பர்கட்குச் சர்வசித்திகளையுந் தரவேண்டும். நானேகமான இத்தலத்தில் தபசுசெய்யின் சீக்கிரத்தில் அருள்தரவேண்டும் என்னால் உண்டுபண்ணிய முக்திதீர்த்தத்தில ஸ்நானம்பண்ணினால் முக்திக்கு ஆதாரஞானத்தைத் தரவேண்டும அதில் ஹீனஜெந்துக்கள் அகஸ்மாத்தாய் மூழ்கினாலும பதவி அடையவேண்டும். அதன்கரையில் தர்ப்பணஞ்செய்தால் வமிசவிருத்தியடையவேண்டும், அற்பசிமாதம் சுக்கிலபக்ஷம் நவமியில்முக்திதீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்தால் கலியின் உபாதையடையாமல் மஹாபாக்கியங்களைப் பெறவேண்டும். அற்பசிமாதம் நவமியில் அவ்விலிங்கத்தைப்பூஜித்து நெய்விளக்கிடின்ஞானம்அடையவேண்டும். என்று கேட்டுக்கொண்டபடி அருளுவதாய்த் திருவாய்மலர்ந்து ஏகரூபமான உமையுடன் இலிங்கத்துள் மறைந்தருளினார்.

ஹேமரிஷிகளே நவதுர்க்கைகளால் பூஜித்த அவ்விலிங்க தெரிசனத்தால் ஞானமங்கள ஜெயத்தையடைவர்கள். அதன் தென்புறத்தில் யானையால் காண்பிக்கப்பட்ட ஒருதலம்இருக்கிறது அதன்மான்மியத்தையும் கூறுவேன்கேளுங்கள் ஆதி ஸ்ரீதிருநாவுக்கரசுஸ்வாமிகளும் திருஞானசம்பந்தமூர்த்திகள்.

வாமிகளும் சிவஸ்தலயாத்திரைசெய்துவரும்போது சோமவிநயகர் யானைரூபமாகச்சென்று அழைத்துவர அப்போது கெஜபுரியென்னும் அந்தஸ்தலத்தில் கிராமத்துடனொருயாமமாகிழலில் சிவநாமத்தைச்சொல்லி உட்கார்ந்தார்கள், யானைமறைந்துவிட்டது. அதைக்கண்டு அவர்களும் அவர்கள் அடியார்களும் ஆச்சரியப்பட்டுத் துதித்தபோது வெள்ளைவஸ்திரம் குண்டலம் திரிபுண்டரம்ருத்திராக்ஷம் யக்ஞோபவீதம் சந்தனம் தரித்து மிக்கஅழகுள்ளபிராமணவடிவாய் ஈசுவரன் தோன்றி நீங்கள்மிகக்களைத்திருக்கிறீர்கள் தீர்த்தபானம்பண்ணலாம் வாருங்களென்று அழைத்துக்கொண்டுபோய் ஒருதடாகத்தையும் இலிங்கத்தையுங் காண்பித்து மறைந்துவிட்டார் அப்போது அவர்கள் பரவசமடைந்து சிவபிரானைத்துதித்து த்திருவருளைவியந்து பிராம்மணவடிவாய்த்தோன்றி மறைந்ததுசுந்தரவனை சுவாரென்றறிந்து பலமுறைதுதித்து ஈசனுற்காட்டிய சுந்தரதீர்த்தபானம்பண்ணிக் கடவுளையடைந்து அமுதபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய்து அபிராமிஅம்பாள்சமேதஅமுதலிங்கத்தைத்தெரிசித்து அப்பர்சுவாமிகளால் ஒவ்வொருதேவாரத்திலும் யானைஎன்னும்பதங்கள் அமைந்தஒருபதிகமும் அவ்விருவர்களால் இன்னும்சிலபதிகங்களும் பாடித்துதித்து அவர்களையுபசரித்தஅழைத்த குங்கிலியக்கலயநாயனர்கிரஹத்தில் திருவமுதுசெய்து சிலநாள் அங்குவசித்து திருமயானம்முதலியஸ்தலங்களைத்தெரிசித்துப் பதிகம்பாடிக்கொண்டு சென்றார்கள். சிவனுற்காட்டப்பட்

ட தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் மரணகாலத்திலும்கஷ்ட
உண்டாகாது சுந்தரலிங்கத்தைத் தெரிசித்தால் சன்மார்க்
முக்தியடைவார்கள் என்று நைமிசாரணிகளுக்குச் சூத
கூறினர்.

நவதுர்க்கைச் சருக்கம்.

# இரத்நகைடன் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளை நோக்கி ஹேரிஷிகளே யிரெத்ந
கைடன்என்ற அரசனுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறே
ன் கேளுங்கள் முன்ஒருகாலத்தில் தண்டகதேசத்தில் சத்
ருமத்திலும் யோகத்திலும் பரோபகாரத்திலும் பக்தியிலு
சிறந்த ரெத்னகைடன்என்ற ஒருஅரசன் அசுவமேதயாகஞ்
செய்யநினைத்துத் தனதுகுருவாகிய தால்பியரிஷியிடஞ்செ
ன்று பணிந்து தாங்கள்தலைமையாயிருந்து அசுவமேதயாகம்
நடத்தவேணும்என்று கேட்க அவர்சம்மதித்து அனேகதபசி
களையும் பிராம்மணர்களையும் வரவழைத்து மிகவிமரிசையாக
யாகத்தை நடத்தியதைக் காவேரிதீரத்தில்வசிக்கும் பிராம்ம
ணரும் அங்குசென்று ஐசனியப்பெருக்கையும் தீபத்தையும்

சத்குணத்தையுங்கண்டு மகிழ்ந்து அநேகதானங்கள்தரப்பெற்று நரங்கள்வசிக்கும் பொன்னிக்கரையில் புலிமுதலியதுஷ்டமிருகங்கள் விசேஷமாயுண்டு அவைகளால்துன்பமடைகிறோமென்றும் அவடத்திற்குத்தாங்கள்வந்து அத்துன்பத்தை நிவர்த்திக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதால் அவ்வரசன் யாகம்முடிந்த மூன்றுமாதம் புத்திரனை இராச்சியத்தில்வைத்துத் தான் அநேகசேனைகளுடன் தெற்குநோக்கிப்புறப்பட்டு அங்கங்குள்ள சிவஸ்தல தீர்த்தங்களில் வசித்து முழ்கி ஹரிஹரதெரிசனமும் அநேகதானங்களும் செய்து துலாத்தில்இரவிவரும்போது காவேரிஉற்பத்தியில்மூழ்கி விஷ்ணுவைத்தெரிசித்து கெணபதியையும் அகஸ்தியரையும் இபாணித்து மந்திரிமுதலானசைன்யங்கள்வேட்டையாடச் சமுத்திரசங்கமம்வரையில் இருபாலுமுள்ள சிவஸ்தலவிஷ்ணுஸ்தலங்களைத்தெரிசித்து அநேகதானங்களைச்செய்துவருகையில் மிகவுந்தழைந்து உயர்ந்து மணங்கமழவிளங்கும் வில்வவனத்தைக்கண்டு அதனுள் அநேகபக்ஷிக்கூட்டங்களும் மிருகஜெந்துக்களும் வேதபாராயணிகளும் வசிப்பதாகத் தொனியால்தெரிந்து வனத்துள்பிரவேசித்து அதன்மத்தியில் ஓர்அற்புதமான ஆலயத்தையும் அமுதமபோன்றதடாகத்தையும் சர்வஜீவாதாரமாய்விளங்கும் அமுதலிங்கத்தையும் அபிராமசுந்தரியையுங் கண்டு ஆனந்தபரவசமடைந்து பணிந்து அங்குள்ள ரிஷிகளையும் தெரிசித்து தீர்த்தங்களிற்படிந்து ; அபிராமிசமேத அமுதகடேசுவரரை பலவர்க்கங்களால்அபிஷேகித்துப்

பூஜித்து அனேகதருமங்களைச்செய்து வசித்துவருகையில் ஐந்தாநாள் ஸ்வர்ணமயமான ஒருபுலியைக்கண்டு அதைத்துரத்திப்பிடிக்கமுயன்றபோது அம்மிருகம் கையில்அகப்படுவதுபோலசமீபத்திலிநின்றும் வெகுதூரத்திலபலவாய்க்காணப்பட்டும் வலையில்அகப்படுக்கையால்பிடிக்கநெருங்கும்போது அநேகசைனியங்களைத்தும்சம்பண்ணிஓடியும் மிகஅலைத்ததால் அரசன்களைத்து பிடிக்கமுடியாதென்றெண்ணிச் சமீபத்தில்வந்தபோது பாணத்தால் எய்தான். உடனே அந்த மிருகமானது அரசனால்எய்த பாணம்தைத்து இரத்தம்பெருகிய கோலத்துடன் சிவலிங்கரூபமாய்த் தோன்றிற்று. அதைக்கண்ட அரசன் பயந்து அடிக்கடிநமஸ்கரித்து சுவாமி என்னுடையஅபராதத்தை க்ஷமிக்கவேண்டும். வேட்டையாடும்படிபுறப்பட்டு இவ்வனத்தில்வந்தஎன்னை யாட்கொள்ளும்வண்ணம் ஜோதிஸ்வரூபமிருகவடிவாய்த்தோன்றியதென்று அறியாமல் பாணத்தால் எய்துவிட்டேன் தயாநிதே மன்னிக்கவேண்டும் என்றுதுதித்து நிர்ச்சிந்தையாய் நிற்கும்போது ஈசுவரன் விருஷபாரூடராய்த்தோன்றி ஹே அரசனே கவலைப்படவேண்டாம் நீ பக்தியில்சிறந்தவன் உன்னையாட்கொள்ளும்வண்ணமே மிருகவடிவாய்த்தோன்றி இவ்விளையாடலைச்செய்தோம். நீஎய்தஅம்பானது எமக்கு அனேகபுஷ்ப்பங்களால் அர்ச்சித்ததை ஒக்கும். ஜோதிப்புலியாய்த்தோன்றி உன்னால்எய்த அம்பின்வடுவும் இரத்தக்கசிவுடன் இலிங்கவடிவாகியது யாமென்று நீயறியும்பொருட்டேயா

குர். எமதுவடிவைப் பக்தரன்னியில் மற்றயாராலும் கா
வுந் தீண்டவும் முடியாது. நீ சஞ்சலம் அடையவேண்டா
நாம்மிகமகிழ்ந்தோம். உனக்குவேண்டியதைக்கேளென்று
மாசமேதன் திருவாய்மலர்ந்தருளினார்.

உடனே அரசன் நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து ப
தரக்ஷகா முக்திக்கான ஞானம் அருளவேண்டும் என்று பிர
த்தித்தான், ஈசுவரன் எமக்கு ஆலயம் அமைத்து விமலசரஸ்
ன்றதீர்த்தம் உண்டாக்கி பூஜித்து சுதாபுஷ்க்கரணியில ஸ்நா
ஞ்செய்து அமுதலிங்கத்தையும் மண்டலம் ஏககாலமாக
சித்தமாத்திரத்தில் ஞானமாகிற அறிவில் பேரறிவாய் விள
குவோம் என்று அனுக்கிரகித்து இலிங்கத்துள் மறைந்தரு
ஞர். அரசன் சிவாக்ஞைபின்வண்ணம் தீர்த்தஸ்தாபனமு
ஆலயத்திருப்பணியுஞ்செய்து ரெத்னகைடேசுவரர் என்று
ச்சித்து சாஙகமாய்ப்பூஜித்து நித்தியபூஜை நடக்கும்படி தி
ட்டஞ்செய்து சேனைகளைத் தன் இராச்சியத்திற்கு அனுப்பி மு
காலங்களிலும் அமுதபுஷ்க்கரணிஸ்நானஞ்செய்து அமுத
ங்கத்தைப்பூஜித்து ஞானம் அடைந்து முக்திபெற்றான். ரு
ஷிகளே இன்னும் அந்தஇலிங்கத்தில் பார்வதியும் உதி
த்சிவும் தோன்றுகிறது என்று சூதபுராணிகர் வழுத்தினர்,

இரத்தினகைடமஹாராஜன் சருக்கம் முற்றும்.

# 29. மூர்த்தி தல தீர்த்த சருக்கம்,

நைமிசாரண்யவாசிகள் சூதபுராணிகரைநோக்கி அதிர
சியமாயும் மேன்மையாயுமுள்ள வில்வவனமான்மியத்தை
ாங்கள் அறியும்படி கிருபைகூர்ந்து உரைத்தீர் அமுதலிங்
த்தின் பூஜை பிரதக்ஷணம் நமஸ்காரம் தெரிசனம் தியான
அமுதபுஷ்கரணியின்ஸ்நானம் கெடபுரியின்வாசம் இவை
ளைச்செய்யும முறைமைகளையும் தெரிந்துநடக்கும்படி உ
ரத்தருளவேண்டும் என்று வினவினார்கள் சூதர் ரிஷிகளை
நாக்கி சிவபூஜையின்பலன் சர்வாபீஷ்டங்களையும் தரும் சா
தானமாயக்கேளுங்கள் ஈசுவரனிடத்தில் அன்புருகி ஏகாக்
ரசித்தமாதல் மிகவும் அபூர்வம். ஜடசம்பந்தஜீவன்களுக்
5 யௌவனம் மனைவி மனைதனம் வாசஸ்தானம் மகவு இவை
ள்எல்லாம் ஸ்திரமாயிராது. பூர்வபுண்யவசத்தின் அளவாய்
ண்டாகி வாழையின்நீர்போல் போய்விடும். ஆனதால் அனி
தியபதார்த்தங்களில் இச்சையுறாது நித்தியவஸ்துவினருரு
ருத்திரனிடத்திலேமனதைச்செலுத்தி நித்யத்துவம்முதலிய
ர்வமங்களத்தையும் அளிக்கும்படியான சிவபூசைசெய்வது
ளிதில்கிடைக்கும் பெருஞ்செல்வமாகும். ஈசுவரன் திக்தேச
ாலமில்லாதவர். மனோவாக்கிற்குஎட்டாதவர். களங்கமில்லா
வர்கிரிகையற்றவர் எங்கும்நிறைந்தவர் அவருடையபூஜையா

ல்பெறுதலொன்றும் பூஜையன்னியில் பெறுவதொன்றும் இல்லை
அன்புஞானம் இரண்டும் இல்லாமல் கோடிகோடி மந்திரங்களோ
தி கோடிகோடி புஷ்பங்களால் கோடிகோடி காலம் பூஜித்தா
லும் அருள்பூரணமாகாது. இலிங்க அர்ச்சனைக்கு ஈடு வேறொ
ன்றும் இல்லை. இலிங்கார்ச்சனையும் நற்றலவாசமும் புண்யதீ
ர்த்தஸ்நானமும் சத்சங்கத்தால் கிடைக்குமேயன்றி வேறொன்
றால் பெறார்கள் இந்நான்கும் சிவலோகத்தை அடையும்படி
செய்யும். மஹாபாபிகள்கூட சத்சாவகாசத்தால் மூன்கூறிய
மூன்றும் பெற்று முக்தியடைவார்கள். அரைக்ஷணமாவது
சிவசாதககாரியமாயிருந்தால் அநேககாலம் சிவலோகத்தில்
வசிக்கும்படியான எதுவை உண்டாக்கும். சிவவிஷயமாய் ஒவ
ரேநால் விராகனிடையாவது அதில் பாதியாவது தானஞ்செய்
தால் ஜீவவிஷயமாய் ஆயிரம் விராகனிடை தானஞ்செய்தபய
னைத் தரும். மனுஷியர்கள் தன்சக்திக்குத்தக்கபடி குருபூ
ஜை பிராம்மணபூஜை சிவபூஜைகளைச் செய்யவேண்டும் சரீ
ம் அனித்தியமுள்ளது. வயோதிகமும் இந்திரியமூவுதலும் வ
ருவதற்குள் சிவத்தை அர்ச்சிக்கவேண்டும். சரீரசக்திகுறை
றால் சக்திசகிதமாகிற சிவத்தைத் தியானிக்கவும் துதிக்கவு
பூஜிக்கவும் முடியாமல் மனம்வாக்குக்காயம் என்னும்மூ
பொருளும் ஓர்மையுற்றுநில்லாது அலைந்து அழிந்துவிடும்
சிவகாரியத்திற்கு விக்கினஞ்செய்பவர்கள். பூமியுள்ளளவை
யில் எரிநரகில் வருந்துவர்கள் சிவத்திரவியம் என்றுதெரி
தும் அதைக்கிரகிக்க இச்சித்தவர்களுக்கு மநுஸ்மிருதியில்

ராயச்சித்தம் விதிக்கவில்லை. அமுதீச அபராதிகள் அடை
யும் நரகங்கட்குக் கரையில்லை. தர்மராஜன் செய்யும் த
ண்டனைகளால் கல்பாந்தத்தில் ஒரு சமையம் விமோஜ
னமாவதும் அரிதாகும். அபராதத்தைச் செய்த அதேஜெ
ன்மத்தில் அப்பாபவிமோஜனத்தின் பொருட்டு அமுதீசுவரனை
ஒருமாத்திரைப்பொழுதேனும் ஒவ்வொருநிமைப்பொழுதாக
ஒருஉசுவாசநிசுவாசகாலம்வரையிலேனும் தியானிக்கப்பெற்
றால் அவ்வபராதம்நீங்கிமுத்திபெறுவர்கள். சிவத்துரோகிகளு
க்குப் பலவிதரோகங்கள் உண்டாகும் சிவத்துரோகஞ்செய்பவ
களின் குலம் மூன்று அல்லது எழுதலைமுறைக்குள் சூன்யமா
கும். பிரதிஷ்டிலிங்கம்புதலிய லிங்கபூஜாபலனால் அமுதலிங்க
பக்தியும் அவ்விலிங்கங்களின் அபராதபாபத்தால் பிர்மராந்த
ரத்தின் அமுதீசத்துரோகமும் செய்யப்பெறுவர்கள். அமுத
லிங்கத்தை யடைந்தார்க்கும் அமுதலிங்கத் துரோகிகட்கும்
மறுபிறப்பில்லை. இடையறாதேற்றி அமுதலிங்கத்தை யடை
ந்தாரையும் நற்சிந்தையற்ற அமுதீசத்துரோகியையும் தர்ம
ராஜன் தீண்டார். மஹாத்துரோகிகளை அபமிருத்யுபற்றிப் பி
சாசத்துவமுளிக்கப் பிரளயகாலங்களில் அப்பிசாசுகளை சூல
த்தாற்குத்திச் சொருகிப் பனிரண்டு சூரியர்களின்மத்தியில்
நட்டு வெதுப்பிப் பின்னும் அபமிருத்யுக்களிடம் உதவிவிடு
வர், பாசமென்னும் அரவொடியால் மூடப்பட்ட பசுவா
னதும் சந்தக்கல் உலகென்னும் இருப்புப்பாறையில் சிவத
வமென்னும் தங்கரேணுக்கள் ஒட்டிக்கவசமாம்படி. உருண்டு

பின்னும் சேற்றிலாழ்ந்து எங்குமாய்விளங்கும் பொற்காந்தம
லையையகன்று தன்புறவண்ணம் குருவருளென்னும் பொற்
காந்தசத்தைக்கிரகித்துப் பசுவென்னும் மிகமிருதுவாகியதங்
கப்பாறையில்உருண்டு அயத்தாட்களைப்போக்கிப் பரிசுத்த
மாய் ஞானமென்னும் ஜோதியால் தங்கமலைவிளங்கும்தருவாய்
பரத்துடன்ஒன்றி நித்தியானந்தசுகத்தைப்பெறாமல் தூலம்
என்னும் சம்மட்டியை சூக்குமமென்னுங்காம்பால்பற்றி அ
யசத்துஅறும்வரையில் காய்ச்சிக் காய்ச்சி அயப்பாறையில்
வைத்து மோதும் சாரணர்என்னும் தருமராஜனாகிய கொல்ல
ன் கைப்படுவது மதியீனத்தாலன்றோ. மேலும் அம்பிபருத்
யுவாகிறகடலில் உடைந்து ஜலம்புகுந்துகொண்டேடமிதக்கும்
கப்பலையொத்த ஜடத்தைததாங்கிய ஆத்மாக்கள் காற்றுப்
பாய்ரவில் நீளமாயுள்ளதின் முனையை உள்ஓட்டையில் அ
மைத்துப் பின்வழிபிதுங்காதுஇருத்தி அதன்மேல் நங்கூரத்
தையூன்றிக் கட்டலையமிழ்த்தும்சரக்குகளை நீக்கிப் பின்அணி
யிற்றங்கிக் கரைமுகமநோக்குப்படி சுக்காணைப் பற்றிநி
ன்றுசிறுதோணியோடு பெருநீரிற்றவும் ஆயசத்தமாகிற சி
வபூஜையை அதிதுரிதமாய்ச்செய்து முக்திபெறாது சிவத்
துரோகஞ்செய்வது அக்கப்பல் கரைமோதாது சுக்கானை மு
ன்அணியின்முன் இறக்கி நங்கூரமிட்டு அக்கப்பலின் ஓட்டை
யை அடைப்பதாய் மண்ணைக்கரைத்தூற்றுவதே ஒக்கும்
மற்றையதலச்சிவத்துரோகிகளை காலன்உடனே தண்டிப்பா
ர். அழுதீசத்துரோகிகளைமரணாந்தத்திற்குள் அழுதீசத்

பாணம்முதிர்ந்து முக்திக்குவருவாரோ என்ற அச்சத்தால்
நெருங்காதுமரணார்தமுன்னிலையில் அபமிருத்யுவால்தூலஜெ
-த்தை மூலாதார முதல்மூளைவரையில் அணுவணுவாய்ச்சி
தைக்கச்செய்து பிசாசத்துவத்தை அடைந்தவுடன் பாசத்
தால் நெருக்கக்கண்டத்திற்சுற்றி உரோமத்துவாரங்களால்
வழியும்படி நவத்துவாரங்களிலும்மழுவையூற்றி கபப்பாறை
களாலடைத்து சூலத்திற் சொருகி அக்னிமண்டலத்தில்
ட்டி வெதுப்பிப் பின்னும்அக்கட்டுடன் அபமிருத்யுக்களி
ன் வசப்படுத்துவார்.

அமுதலிங்கத்தைசதாதியானிப்போர் பெறுஞ்சம்பத்து
ளை நெடுநாள்புகன்றாலும் முடிவுபெறாது பூவுலகத்தில் ரூப
மும் சம்பத்தும் சத்குணமும் உடையவர்கள் பூர்வஜென்மத்
தில் சிவகைங்கரியம் செய்தவர்களாகும். கூன்குருடு முத
லிய அங்கஹீனங்கள் வயிற்றுவலிமுதலியரோய்கள்உடைய
வர்கள் பூர்வஜன்மத்தில்சிவத்துரோகஞ்செய்தவர்களாகும்.
பூர்வஜன்மத்தில்சிவசிந்தையுள்ளவர்கள் அழகுகுணம்வாய்ந்த
மனைவி பசு பரி கிரகம் தனம் ஏவலாள் குணம் சீலம் திடசரீ
ரம் சுபுத்திரர்கள் சந்துஷ்டி சிங்காரத்தோட்டம் இவைகள்
எல்லாம் அடைவார்கள். இவைகள் யாவும் இருந்தும்சந்து
ஷ்டி இல்லாதவர்கள்சிவகாரியத்தில் முயலாது ஜீவ
யவுள்ளவர்களாகும் சிவசிந்தையன்னியில் செய்யுந்தபசு
விரதம் ஹோமம் ஜபம் இவைகள்பலனைத்தராது குருடன்

தன்சாயலைப்பார்ப்பதற்குக் கண்ணாடியைக் கையிலேந்துவதை
ஒக்கும். சிவத்துரோகஞ்செய்பவர்கள் கல்பாந்தம் வரையில்
கருநரகை மாறிமாறி யடைந்து பின்புசிருஷ்டியுண்டாகும்
போது மயானத்தில்மரமாகமுளைத்து இண்டுமுதலியமுட்
கொடிகளைத்தாங்குவார்கள். சிவத்தியானம் தெரிசனப்
பூஜைஇவைகளைச்செய்பவர்கள் நித்யம் ஆனந்தம்முதலியவை
களைப் பெறுவர்கள் பூரணமாயும் பாவனாதீதமாயும பிர்ம
விஷ்ணுருத்திரரூபமாயும் ஜீவஜீவனையும் சர்வஜீவன்களையுந்
தமதுஉந்திபிற்கொண்டகாரணரூபமாயும் ஞானமாயும் சர்ம
மாயும் ஞானபூமியாயும் சர்ம்ம பூமியாயும் ஞானபூமியில் நிஷ்
களமாயும் கர்மபூமியில் சகளமாயும் ஊர்த்துவநடனகதரிசி
கட்கு ஞானாதாரமோக்ஷமாயும் அதோநடனதெரிசிகட்குக்க
ர்மாதாரமாயாரூபமாயும் ஜீவ ஆதாரமாயும் ஜடாதாரமாயும்
அத்துவிதமாயும் ஏகமாயும் சூன்யம் அல்லாததாயும் விளங்
கும் நித்தியவஸ்துவின் அருள்வடிவாய்க்காணும் இடத்தை
இலிங்கமாக்கிப் பகலில் தினந்தினம் ஆவாஹனஸ்தாபனஞ்
செய்து தாம்அதனுள் உத்தியாபனமாகப்பூஜித்துத் தம்முள்
உத்தியாபனஞ்செய்வது பார்த்திபபூஜைபென்றும் சரலிங்கம்
என்றும் பெயர். பிர்ம்மவிஷ்ணுக்களும் அண்டபிண்டங்க
ளும் லயஉர்ப்பத்திக்கு இடமாயுள்ள சக்திசிவஞ்சேர்ந்து ஜோ
திவிளங்கும் ஸ்திரவஸ்துவில் ஏகமாய்ப்பூஜிப்பது ஸ்திரலிங்
கம்என்றும் உடையவர்பூஜையென்றும் பெயர். இவ்விரண்டு
விதபூஜைக்கும் தாம்சக்திமயமாகிசிவத்தைப்பூஜிப்பதும் மேல்

மூகமாய்முன்னடி சூரியபூஜைசெய்வதும் அப்பூஜையின்
முறைமையாகும் மிருத்திகை விபூதி அக்ஷதை உருத்திராக்ஷ
ம்வெல்லம கெந்தம் கோமயம் மாவு அல்லது அன்னம் முதலி
யபரிசுத்தமும் மனோரம்மியமாயும் உள்ளவஸ்துவை இலிங்க
மாக்கி பூஜிக்கும் பார்த்திபபூஜைவிதியும் இரத்தினக்கல்முத
லியவைகளில் பூஜிக்கும ஸ்திரலிங்கபூஜாவிதியும் மந்திரபூர்வ
ர்மாய் நித்தியகம்மவிதியில சவிஸ்தாரமாய்கூறபபட்ட அவ்
விதம் தினம்தினம் வழுவாது மரணாந்தமவரையில் பூஜித்
தால் அந்தியத்தில் தர்மமராஜாவின் பாசமாகிற கயம்நீய்ந்து
நித்தியத்துவமபெறுவர்கள். பூஜிப்பதில் அன்புகுறையுமாயி
ன் மறுமூன்று வரு இருபத்தொன்றுவதுஜென்மத்திலேனும்
நித்தியத்துவம்பெறுவார்கள். சிவசக்தியைவழுவாது பூஜை
செய்பவர்கள் நித்தியத்துவம் பெறுமவரையில் சக்தி சிவ
த்தின் அனுக்கிரகத்தால் புத்திரமித்திரகளத்திராதிகளுடன்
சௌபாக்கியத்தையடைந்து சத்சாவகாசம்ஓங்கி மகிழ்வுறு
வர்கள். முன்கூறியபார்த்திபலிங்கம் நூற்றெட்டு ஆயிரத்
தெட்டு பதினாயிரம் இலக்ஷம் கோடி தினம்தினம்அமைத்துப்
பூஜிப்பவர்கள் பக்திஓங்கிப் பூஜிக்கும்அளவாய் சித்திகளும்
மதண்டனை நீங்குதலும் ஆயுளவிருத்தியும் அடைவார்கள்.
இந்திரநீலஇலிங்கத்தை விஷ்ணுபூஜித்து வைகுந்தாதிபத்திய
த்தைப் பெற்றிருக்கிறார். மாணிக்கலிங்கத்தை இந்திரன்
பூஜித்துத் தேவராஜாவாகி சத்ருஜெயம் பெற்றிருக்கிறார். சுவ
ர்ண இலிங்கத்தைக் குபேரன் பூஜித்து அளகாபுரியென்னும்

உத்தரதிக்கிற்கு அதிபதியானார். ஸ்படிகலிங்கத்தை வருணன் பூஜித்து மேன்மையடைந்தார் இன்னும் அனேகர் சிவபூஜையால் மேலான சித்திமுத்திகளைப் பெற்றிருக்கிறார்கள் மூன்றுலகங்களிலும்சிவபூஜையன்றியில் முக்திபெற்றவர்கள் இல்லை. தினந்தோறுமசிவபூஜையன்றியில் புஜிக்கலாகாது. சிவபூஜைசெய்து சிவார்ப்பணஞ்செய்யாத அன்னத்தைப் புஜித்தால் மலப்புழுவிற்குச சமானமாகும். சிவபூஜையால் பக்திவளரும் ஞானமுதிக்கும சாலன அனுசான் நிருவிகற்பம் பெறலாம் சிவத்தைமறந்தகாலமே வினையென்னும் ஆகாமியம் வளர்ந்து சஞ்சிதம்பெருகுமகாலமாம். அவ்வாகாமியத்தால் காலதண்டனையும் மரணஜனனமும் உண்டாகும். கற்பமுடிவில் சர்வதேவாதிகளும் லயமாய்விடுவார்கள். மறுபடியும் விராட்சொரூபம்தோன்ற இடத்தில்விஷ்ணுவும் வலக்கிர்சமிருகமும் வுருத[illegible]காயத்திரி [illegible]ங்கலியமந்திரதேவதைகளுட் வேதங்களும் தலையில்ஆறு அங்கங்களும் வயிற்றில்தாபரசங்கமங்களும் சர்வஜெசத்தும் உதிக்கும் எப்படியுண்டாகுமோ அப்படியேபண்ஜலத்திலும்ஜலம்அனலிலும்அனல்காற்றிலும் காற்றுஆகாயபூமியிலும் ஆகாயவெளிசிதாகாயத்திலும் அவ்வவதிதேவதைகளுடன் முறையேலயமாகும். உற்பத்திக்கும் லயத்திற்கும் அமுதலிங்கமே இடமாயிருக்கும். எந்தகற்பங்களிலும் அழியாத சர்வப்பிராணிகளையும் கோயிலாகவுடைய அவ்வமுதலிங்கம் சர்வமயமாயுள்ளதாயினும் மெலாமயமாயாசத்திற்கட்டுருந்து [illegible]

திரிநிலைகூடியும் பஞ்சப்பிர்மஸ்தாபனமும் பெற்று காமிக விதிவழுவாது கொண்ட உத்தமர்களே அமுதலிங்க பிரத்தியக்ஷபூஜைக்கு உரித்தாகுவர் அன்பர்களுக்கு மனோரம்மியத்தை விளக்கும்படி பிர்ம்மரந்திர தலத்தில் விளங்கும் அமுதலிங்கத்தைமுன்னால்விதிவழி அடைந்துநித்தியம்பூஜிக்கஇயலாதவர்கள் முன்கூறிய அஷ்டவிதலிங்கங்களில் மனது அடங்கிப்பூஜித்து அந்தப்பலனால் அமுதலிங்கத்தைப் பிரத்தியக்ஷமாய்ப்பூஜிக்கப்பெறுவர்கள். அமுதலிங்கத்தைப் பூஜிப்பவர் சர்வஜீவன்களையும் தன்னுயிர்போற் கொள்ளல்வேண்டும் அமுதீசர் ஆலயத்தைப் பிரதக்ஷணஞ்செய்தால் அசுவமேத பலனையடைவர்கள் சோமசூத்திரபிரதக்ஷணஞ்செய்தால் ஆயிரம் வாஜபேயயாகபலனும் நூறுசாந்திராயனவிருதபலனும் [illegible]கள். அடிப்பிரதக்ஷணம் நமஸ்காரப்பிரதக்ஷணம் அங்கப்பிரதக்ஷணம் செய்வாரால் சர்வசாம்பிராஜ்ஜியத்தையும் அடைவார்கள் சனிப்பிரதோஷகாலத்தின் சந்தியாவேளையில் சோமசூத்திரப் பிரதக்ஷணம்செய்தால் மற்றையகாலங்களில் செய்வதைப்பார்க்கிலும் கோடிபங்கு விசேஷபலனை யடைவர்கள் அவர்கள் சர்வசம்பத்துக்களையும் பெற்றுபின்புசாரூப்யமடைந்து சர்வமும்தன்மயமாய்க்காணுவர்கள் அவர்கள்முன் அமுதீசர் சந்திரஜடாமகுடதிரிநேத்திர காளகண்ட சதுர்ப்புஜவரதாபயஹஸ்தத்துடன் உமாசமேதராய் எக்குமாய்க்காணைப்பய்ம் சாயுச்சியபதத்தானம் கடாக்ஷிப்பர் வில்வவனத்தில் திரிகரணைக்கங்கரியங்கள் செய்தால் அப்தோர்யாமம்என்ற யாக

பலனை அடைவர்கள் சிவபூஜைக்காக மனிதர்களால் உண்டா
க்கிய தீர்த்தஸ்நானம் ஒருசாந்திராயணபலனைத் தரும் அரக்கா
ளாலாக்கியது ஒருகிரிச்சிரபலனைத் தரும் தேவர்களாக்கிய ஆ
மூன்று கிரிச்சிரபலனைத்தரும் ஈசுவராலுற்றப்பட்டது
கோடிகிருச்சிரபலனைத்தரும இரவில்மாத்திரம்புஜித்தால் பாத
கிருச்சிரம்என்றுபெயர் ஆல புரசு வில்வபத்திரங்கள் குசோத
கம் இவைகளில் ஒவ்வொன்றைத்தினமசாப்பிடுவது பர்ணகி
ருச்சிரம் என்றுபெயர். புண்ணாக்கு நெய் மோர் ஜலம் இவை
களை நாளுககொன்றாய்ச்சாபபிடுவது சௌமியகிருச்சிரம்
என்றுபெயர் ஹவிஸ் சாப்பிட்டு மூன்றுநாள் உபவாசமிரு
ந்தால் அதிகிருச்சிரமென்று பெயர். இருபத்தோருதினம்
பகல்மாத்திரஞ்சாப்பிட்டுப் பனிரண்டுநாள் உபவாசமிருந்
தால் பாரகம் என்றுபெயர் மூன்றுதினம் காலமேசாப்பிட்டு
மூன்றுதினம் இரவில்புஜித்து மூன்றுதினம் உபவாசமிருந்
தால் பிராஜாபத்தியம என்றுபெயர் கோமூத்திரம் பால் தயிர்
நெய் குசோதகத்தை ஒவ்வொருதினம் ஒவ்வொன்றாய்ச்
சாப்பிட்டு ஒருதினம் உபவாசமிருந்தால் சாந்தபனம் என்று
பெயர். சாந்தபனதிரவியங்களை நாளுக்கொன்றாய்ச் சாப்
பிட்டு ஆறுதினம் உபவாசமிருந்தால் மஹாசாந்தபனம
என்றுபெயர் நெய் பால் ஜலத்தை மூன்றுதினம் உஷ்ணமாகச்
சாப்பிட்டு ஒவ்வொன்றையும் மும்மூன்றுதினம் ஜலம் பால்
நெய் வரிசையுடன் உஷ்ணமாகச்சாப்பிட்டு மூன்றுதினம்
வாயுவைச்சாப்பிடுவது தக்தகிருதம் என்றுபெயர். இவைக

ளைச்சாப்பிடும்அளவு நாள்ஒன்றுக்கு பால்பலம்ஒன்று நெய்
பலம்இரண்டு ஜலமபலம்ஒன்றும்ஆகும் கோமூத்திரத்தினால்
காயாமணியைச்சமைத்துச்சாப்பிடுவது ஆன்னிகக்ருச்சிரம்என்
றுபெயர்இதுசரீரத்தையும்சுத்திபண்ணும் கையையுயரத்தூக்கி
நின்றுபகலில்காற்றைச்சாப்பிட்டு இரவில ஜலத்தில் இருப்ப
துபிராஜாபத்தியம என்றுபெயர் சுக்கிலபக்ஷமுதற்கொண்டு
ஒவ்வொருகவளமாய் ஏற்றிப் பௌர்ணமியில பதினைந்துகவ
ளம் சாப்பிட்டு கிருஷ்ணபக்ஷத்தில் ஒவ்வொருகவளமாய்க்
குறைந்துச்சாப்பிடுவது சாந்திராயணம் என்றுபெயர் இவ்
விரதகாலத்தில் மூன்றுவேளையும் ஸ்நானஞ்செய்யவேண்டும்
காலையிலும் மாலையிலும் நான்குகவளம் சாப்பிடுவது சிசுசா
ந்திராயணம் என்றுபெயர் காலையிலுமத்தியானத்திலும்
எட்டுக்கவளம் சாப்பிடுவது அதிசிசுசாந்திராயணம் என்று
பெயர் மூன்றுகவளமஒரேவேளையாக இரண்டுபக்ஷம சாப்பி
ட்டால் சந்திரலோகத்தை யடைவாகள. சோமவாரத்தின்
முதற்தினபானுவார உச்சியிற்புஜித்துசோமவாரஉபவாசத்து
டன்மனமுதற் பரிசுத்தமாகச் சந்தியாவேளையில் நந்தியடிவல
த்தில் முன்னமர்ந்து பால் தயிர் நெய் கெங்கை கூட்டி அத்து
டன் அக்ஷதை திலம் கடுகு குசாங்கூரம் கலந்து இருகையே
ந்தி அர் [illegible] ரித்து உட்சென்று உட்கிரின் அளவாகும
கொர்ப்பக்கிரஹமத்தியில் லிங்கமாய் சகளமாய்விளங்கிச்
சர்வாண்டங்களையும் இரக்ஷிக்கும் அபிர மகந்தரி அன்பர்த
ட்டுஞ்சோதிமூர்த்தி அருளும் வண்ணம் அபாயசரணமாய் அமர

விளங்கும் அமுதீசரைத் தெரிசித்து சாக்கிரக்குன்றூ சுத்த பூமியிற்றுயின்று செவ்வாய் உதயத்துள் அமுதபுஷ்கரணியில் படிந்து ஆத்மார்த்தபூஜைமுடித்துப் பாரணை செய்வது சோமவாரவிரதமாகும். சோமவாரவிரதம் அனுஷ்டித்து விதியோடுபிர்மரந்திரத்தலத்தில் உத்தியாபனஞ்செய்யப்பெற்றோர் மகிமை அளவிடற்கரிதாகும். திரிலோகங்களும் ஏகாதிபத்தியமாய் ஆளப்பெறுவார்கள் அவர்கள் எண்ணியபடியெல்லாம் ஆண்பெண்ணாகவும் பெண் ஆணாகவும் உலகங் கல்பொன்னாகவும் நரகம் சொர்க்கமாகவும் விஷம் அமுதமாகவும் தீசீதளமாகவும் இருள்பிரகாசமாகவும் ஆகும் அவர்களுடைய கிருபைபெற்றவர்களும் மனோபீஷ்டம் பெறுவார்கள். சோமவாரவிரதம் அனுஷ்டித்துப் பனிரண்டு வருஷகாலம் அமர்ந்து பிர்மரந்திரதலத்தில் உத்தியாபனம் செய்யவியலாமல் முன்விதிவழி உத்தியாபனஞ்செய்யப்பெறினும் பதினாறுபேறும் அஷ்டமாசித்தும் நான்குபதவிகளில் பக்தியளவாயும் பெறுவர்கள். இதரதலத்தார்ந்து அமுதீசத்தியானமாய்ச் சோமவாரவிரதம அனுஷ்டித்து முன்பு அமர்ந்த தலத்திலேயே உத்தியாபனஞ் செய்யப்பெறினும் சர்வகாமனுபலன்களையும் பெறுவார்கள அமுதபுஷ்கரணியில ஸ்நானஞ்செய்து சாந்தசித்தராய் ஒரு கிஷ்க்கபாவனு உத்தமபிராமணனுக்குத் தானஞ்செய்தால் இதரதலங்களிற் செய்வதற்பார்க்கிலும் [illegible] கோடி மடங்கதிகமான பலனை யடைவார்கள். வேதார்த்தனும் க[illegible]திரியாளருக்குத் தானஞ்செய்தால் பத்துக்கோடிபங்கும் யக்ஞஞ்செய்யும் [illegible]

ருமப்பிராமணர்களுக்குத் தானஞ்செய்தால் நூறுகோடி பங்கும்
சிவபக்தர்கட்குத் தானஞ்செய்தால் ஆயிரங்கோடி பங்கும் சிவ
தீக்ஷையான பிராமணர்களுக்குத் தானஞ்செய்தால் பதினாயிரங்
கோடி பங்கு மேலான பலனையும் பெறுவர்கள். சிவதீர்த்தக்
கரையில் உத்தமபிராமணர்களுக்கு கோடிபசு இதாதலைத்தில்
தானம்பண்ணும் பலன்களை அமுதபுஷ்கரணிக்கரையில் ஒரு
பசுதானஞ்செய்தால் பெறலாம். அமுதபுஷ்கரணிக்கரையில் பரிசுத்
தமனதுடன் உத்தமபிராமணருக்கு ஒருகவளமன்னம்
தந்தால் அந்தக்கவளத்தின் ஒவ்வொரு அன்னத்திற்குக் கோடி
வருஷமாக கைலாசத்தில் வசிப்பர்கள். சிவக்ஷேத்திர
வாசமும் சிவதீர்த்தஸ்நானமும் சிவபூஜையும் நரர்களுக்குப்
பூர்வஜன்மபுண்ணியவசத்தால்தான் அன்புமுதலிய நற்றைய
சௌபாக்கியங்களும் கிடைக்கும் எளிதில்கிடைப்பதரிது. எப்
பொழுதும் சிவபூஜைமுதலிய மூன்றும் செய்யப்பெற்றவர்கள்
சாயங்காலத்தில் அமுதீசதரிசனஞ் செய்தால் மஹாபாதகங்
கள்முதலிய தோஷங்கள் நீங்கிச் சகலாபீஷ்டங்களையும் பெ
ற்று எமவாதையகற்றுவர்கள். சந்தியாகாலத்தில் மிகபக்தி
யாளர்மாத்திரம் காணும்படி நந்திஸ்தானம்வரையில் சலக்கும்
ஒலிபிரும்மமாய் நடிக்கும் வீரதாண்டவதெரிசனஞ்செய்ய
ப்பெற்றோர் நித்தியத்துவம் பெறுவர்கள் அமுதவீரதாண்டவ
தெரிசனம் இடையறாதெற்றும் அன்பர்கள் பெறுவரேயன்றி
சாமான்ய பக்தியாளர்கள்தெரிசிக்கப்பெறார்கள். அமுதலிங்க
த்தைப் பரிசுத்தமாகிய மார்க்கண்டேயதீர்த்தத்தால் அபிஷே

கித்தால் அக்ஞானமும் பாபமும் நீங்கும். காராம்பசுவினுடைய பஞ்சகவ்வியமும் குசோதகமும் மந்திரபூர்வமாய் ஒருகாலம் அபிஷேகித்தாலும் பிர்ம்மஸ்நானபலன் அடைந்து பாபம் விடப்பட்டு நெடுநாள் சிவலோகத்தில் வசிப்பார்கள்; நூறுபங்கு மேன்மையாகிய பஞ்சகவ்வியத்துடன் ஒரேபசுவின் பால்தயிர் அபிஷேகித்தால் ஐயமின்றி பிர்ம்பஸ்நானபலன் அடைவர்கள். அமுதலிங்கத்தில் காராம்பசுவின்நெய்யைத் தடவினால் ஆயிரக்கோடிவருஷம்வரையில் முன்சம்பவித்த பாபங்கள் நசிக்கும் சுவர்ணபாரணம் வஸ்திரச்சூட்டுவோர் நெய்அபிஷேகித்தபலனை யடைவர்கள் ஒருமரக்கால் பால் அபிஷேகித்தாலும் வெள்ளிஇரதத்தில் ஆரோகணித்து சோமலோகத்தை யடைவர்கள். கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியில் புத்துருக்குநெய் அபிஷேகித்தால் இருபத்தொருதலைமுறைவரையில் உள்ள வமிசபிதிர்க்கள் சிவலோகத்தை யடைவர்கள். அபிஷேகித்தவர்கள் பதினாயிரம்வருஷம்வரையில் வேதபாராயணராகவும் யோகவானாகவும் ஆவார்கள். எண்ணெ பிஷேகித்தால் க்ஷயம்முதலிய மஹாரோகங்களும் பிர்மஹத்தியும் நீங்கும். தயிர் அபிஷேகித்தால் லக்ஷ்மிகடாக்ஷம் பெறுவர்கள். தேன்அபிஷேகித்தால் சரீரசம்பத்தும் வித்தையும் கருப்பஞ்சாறு அபிஷேகித்தால் கின்னரலோகத்தையும் சந்தனம் அபிஷேகித்தால் கீர்த்தியுடன் கந்தர்வபோகமும் எலுமிச்சம்பழம் அபிஷேகித்தால் நல்லமனதும் இளநீர்அபிஷேகித்தால் நவலோகமும் பெறுவர்கள். தமரத்தம்பழம் அபிஷேகித்

தால் மேகரோகமும் ஈரல் குடல்களைப்பற்றியபாசியும் நீங்குவ ரஸ்தாளிப்பழம் அபிஷேகித்தால் ருத்திரலோகமும் பெறுவார்கள். [illegible] பிதிர் சிராத்த தினங்களில் எண்ணெயபிஷேகித்தால் நரகவாச மாயுள்ள பிதிர்க்களும் மிக திருப்தியுடன் சொர்க்கத்தை யடைவார்கள் சுத்த கெங்கை யபிஷேகித்தாலும் வெந்நீரபிஷேகித்தாலும் நெய்யபிஷேகித்தாலும், பலன் சமமாகும். பக்தியுடன் இம்மூன்றுஞ் செய்வித்துப்பூஜித்தால், ஆயிரம் அசுவமேதபலனைப்பெறுவர்கள் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியில், நெய்அபிஷேகிப்போர் உபவாசமாயிருத்தல் வேண்டும் விதிப்படி சங்காபிஷேகஞ் செய்வித்தால் மேற்கூறிய எல்லாவற்றையும் பெறுவதுடன் முக்தி பெறுவர்கள், திருநீறு அபிஷேகித்தால்,சாரூப்பியத்தையும்,புஷ்ப ஜெல அபிஷேகத்தால் சூரிய லோகத்தையும் சொர்ண ஜெல அபிஷேகத்தால்,குபேர லோகத்தையும், இரத்தின ஜெல அபிஷேகத்தால் இந்திரலோகத்தையும்,வில்வம்சேர்ந்த ஜெல அபிஷேகத்தால், சத்திய லோகத்தையும் வெள்ளைச்சர்க்கரை யபிஷேகித்தால், மோக்ஷத்திற்கேதுவாகும் ஞானமும் பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ சேர்ந்தசந்தனாபிஷேகத்தால், இஷ்டபோகம் அனுபவித்து சாயுஜ்யமும் வடிக்கட்டின தீர்த்தத்தால்தாரையாக வியோமவியாபினம்என் [illegible] முரித்து அபிஷேகித்தால் பக்திவளர்வும்பெறுவர் மண்

கலசத்தால் அபிஷேகிப்பதற்கு தாம்பரபாத்திரம் நூறுபங்கும்வெள்ளிப்பாத்திரம் லக்ஷபங்கும் சொர்ணப்பாத்திரம் கோடி பங்கும் அதிகபலனாகும் சமுத்திரத்து தீர்த்த வலம்புரி, அல்லது இடம்புரி அல்லது சுந்தசங்கத்தாலேனும அபிஷேகித்தால், அனந்த விசேஷ பலனாகும் அதனால் பெறும் பலன்களை பரமசிவனாற்றான் ஒதலாம் தைலத்தினாலபிஷேகம்பத்துப்பங்கும் நெய்பதினாயிரம்பங்கும் அசுபதி செங்கை கோடிபங்கும் அதிகபலனைத்தரும் யெவை, கோதுமை, வில்வபத்திரம் சேர்ந்த, ஜெலத்தினால் அபிஷேகித்துப், பிறகு சுத்த ஜெலத்தினால், அபிஷேகித்தால் உத்தமர்களுக்குப்பதினாயிரம் பசுதானம் பண்ணினபலனையும் சாயுச்சியத்தையும் அடைவார்கள். புஷ்பஞ்சேர்ந்தஜலத்தினால் ஆர்க்கியம் செய்வதைப்பார்க்கிலும் சந்தனம் சேர்த்தது பத்துபங்கும்பஞ்சகவ்வியார்க்கியம் நூறுமடங்கும் விசேஷபலனைத்தரும் கெங்காஜெலம் பால்குசாக்கிரம் நெய் தயிர் அக்ஷதைஎள்ளுகடுகு இவைகள்சேர்ந்த அஷ்டாங்கஅர்க்கிய அபிஷேகத்தால் பதினாயிரம்வருஷம் ருத்திரலோகவாசம்பெறுவர்கள். இன்னும்அதன்பலன்கள் அநேகம் உள்ளது மரப்பாத்திரார்க்கிய ஜெலத்தைப்பார்க்கிலும் மண்பாத்திரம்பத்துப்பங்கும்தாம்பரம்நூறுபங்கும்வெள்ளிபிலக்ஷம்பங்கும் சொர்ணம் கோடிபங்கும் அதிகமாகும் பூரசிலையும் தாமரை இலையும்செப்புப்பாத்திரத்திற்கு ஒக்கும், அமூர்த்திசர்க்கு அபிஷேகம் அர்க்கியம்அர்ச்சனை நைவேத்தியம் தூபதீபம் ஸ்தோத்திரம் தன்

ஆல் இயன்றமட்டும் செய்பவர்கள் மேலானபலன்களையடை
வார்கள். வேதபாரகாளுக்கு அநேகம்வெள்ளிப்பாத்திரம்தா
னஞ்செய்வதைப்பார்க்கிலும் சிவாபிஷேகத்திற்கு ஒருமண்பா
த்திரமேனுங்கொடுப்பது நூறுபங்குவிசேஷமாகும் புஷ்பங்
கள் தன்னாலுண்டாக்கியதோட்டத்திலெடுப்பதுஉத்தமம். வ
னத்திலெடுப்பதுமத்திமம பிறர்தோட்டத்திலெடுத்தால் தா
ன்பெறும்பலனில் பாதி தோட்டத்தாரைச் சேரும். கந்தல்
புழுக்கடி நாகரம் இல்லாதபுஷ்பங்கள் உத்தமம். சிவனு
டைய வேதபாரகாளுக்குப் பதினாயிரம்பாரம் சொர்ணதான
ம்பண்ணினபலனை ஒருபுஷ்பார்ச்சனையால் அடையலாம். வி
ல்வார்ச்சனையால் மூன்றுஜென்மபாபம்நீங்கிச் சிவலோகத்தை
யடைவர்கள். கருஊமத்தை கண்டங்கத்திரி தாமரை அல
ரி மந்தாரம் நந்தியாவர்த்தம் ஜாதி வெள்ளெருக்கு நீலோற்
பலம் காட்டுவாகைப்புஷ்பங்களும் நாயுருவி குசபுஷ்பமும்
அர்ச்சித்தால் இஷ்டசித்தியை அடைவார்கள், ஆயிரம்நீலோ
ற்பலம் அர்ச்சித்தால் பக்திவளரும். வீரதாண்டவரின்
குஞ்சிதபாதத்தில் நீலோற்பலம் அர்ச்சித்தால் வாலாம்பிகை
யின் கிருபை பூர்ணமாகும். நீலோற்பலமாலையாற்றின் கால
னது பயங்கரஉருவம் தோன்றாது. அமுதீசனைக் கருஊமத்
தைப்பூவால் அர்ச்சித்தால் உத்தமர்களுக்கு கன்றுடனிலக்ஷ
ம்பசுதானம்பண்ணினபலனும் ஸாயுஜ்யமும் பெறுவர்கள்,
கண்டங்கத்திரிப்பூவால் பக்தியோடுஅர்ச்சிக்கின் பதினாயிரம்
பசுதானம்பண்ணினபலனும் சிவபதமும் பெறுவார்கள், நக

யுருவிப்பத்திரத்தில் வலத்துள்கலந்து மார்க்கண்டேயதீர்த்தத்துடன் அமுதலிங்கத்தின் சிரசில் சாற்றினால் பதினொன்று இந்திரப்பட்டம்வரையில் இந்திரனுடைய ஆசனத்தில் இந்திரனுடன் வீற்றிருப்பார்கள். ஒருபடிசம்பாஅரிசியால் சருபாகமாய் செய்து சதுர்த்தசியில் நிவேதித்தால் அதிலுள்ள ஒவ்வொருஅன்னத்திற்கு ஆயிரம்யுகமாகச் சிவலோகத்தில் வசிப்பார்கள். மாசிமாதம் சதுர்த்தசியில் அன்னாபிஷேகஞ்செய்தால் சிவலோகத்தைப் பெறுவர்கள். அமுதீசஅபிராமசன்னிதியில் பசுவின்நெய்யால் தீபம்ஏற்றினால் அக்ஞானஇருள்நீங்கி ஞானப்பிரகாசமாகி சூரியனையொத்தவிமானத்தில் ஆரோகணித்துக் கைலாசம்அடைந்து நெடுநாள்வசித்துப் பூவுலகில்உலவவிரும்பின் பிராம்மணனாகவாவதுசக்கிரவர்த்தியாகவாவது விளங்குவர். கார்த்திகைமாதம் சோமவாரத்தில் அலங்கிருதமாய் அனேகதீபாராதனைகள் இடின் சர்வவியாபகத்துவம் பெறுவர்கள் சோமவாரம் திரயோதசி சதுர்த்தசி பௌர்ணமி இவைகளில் நெய்விளக்கிடின் அத்தீபம் எதுவரையில்எரிகிறதோ அவ்வளவின் ஒவ்வொருநிமிஷத்திற்கு ஆயிரம்யுகமாகப் பதினாயிரம்சூரியர்களையொத்த இரதத்தில் தன்குலத்தவர்களுடன் ஆரோகணித்துச் சிவலோகஞ்சென்று வசிப்பார்கள். அரிசிமாவில் பசுவின்நெய் சர்க்கரை தேன் கலந்து நெய்யூற்றித் தாமரைநூலால் விளக்கிடின் தீர்க்காயுசும் தீர்க்கமாங்கல்யமும் இஷ்டசித்திகளும் பெறுவார்கள். கோதுமைமாவால் இடின் புத்திரகளத்திராதி [illegible] அஷ்டல

மிகடாக்ஷம்பெருகி பறை சந்தோஷசௌக்கியத்துடன் வாழ்ந்து பின்பு சிவலோகத்தை யடைவார்கள். அளவிலாக் கோடிஜன்மப் சிவபத்தியானநெசெய்தால இந்தஸ்வயம்புக்ஷேத்திரத்தில் நற்சிந்தையோடு வசிப்பதற்கு எதுவுண்டாகும் ஜெம்பூத்வீபில இதற்குச்சமமான வேறுதலம கிடையாது. மூர்த்தி தலம் தீர்த்தம் இம்மூன்றும் அமுர்தமாய்விளங்குவது இவ்வில்வாரண்யமேயாகும், ஸ்வயம்புக்ஷேத்திரங்களில் மிகவிசேஷம்சுதாகெடபுரம். அதேனெனில் அமுர்தமீதில் ஸ்வயம்புவாயுதித்ததாலாகும். இதரக்ஷேத்திரங்களில் நெடுநாள்வசிக்கும்புண்யபலனை இத்தலத்தில் மாத்திரைபொழுதில் பெறலாம். பக்தியுளவாய் அரைமாத்திரை நிமைப்பொழுது வசித்தும் பெறலாம். இதற்குசமமானதலம் இதுவரையில் உண்டானதும்இல்லை இனியுண்டாகப்போகிறதுமஇல்லை. !! [illegible] க்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலும் இலிங்கங்களிலும் மிகவிசேஷமுள்ளது வில்வாரண்யமாகும்.!! [illegible] பஞ்சபூத ஜடத்தைத்தாங்கிய எவ்வித்ப் பிராணிகளும ஒருக்ஷணமேனும் இத்தலததில நிச்சிந்தையுடன் வசித்தால் சிவஞானத்தையடைந்து முக்திபெறும், அமுர்தகடத்தின் தெரிசனத்தால் காலமிருத்யுவின் உபாதியுண்டாகாது. அபமிருத்யுவை ஜெயிக்கலாம் அமுர்தலிங்கத்தை ஏகாக்கிரசித்தமாய் எக்காலத்திலும் உள்ளத்திருத்தினால் காலமிருத்யுவையும்ஜெயித்துநித்யம்பெறலாம் மற்றைய

சலங்களைப்பார்க்கிலும் வில்வாரண்யத்தில்செய்யும்தபம்புண்ணிய பலன்கள் கோடிபங்காய் வளரும். அமுதலிங்கத்தைச் சதா தியானிப்பவர்கள் கல்பபரியந்தம் கருவடையார்கள். அமுதலிங்கத்திற்கு அச்சமின்றி அபராதஞ்செய்தவர்கள் கல்பபரியந்தமாறிமாறிக் கருநரகேயடைவர்கள் பூவுலகில் ஜென்மங்கொள்ளார். அமுதபுஷ்கரணிஸ்நானத்தால் அமுதப்பிராசனஞ்செய்தபலனும் அந்தீர்த்தரகசியதொர்தயாயுள்ள சர்வஸ்தலங்களிலுமுள்ள தீர்த்தங்களில்ஸ்நானஞ்செய்தபலனையும் ஞானத்தையும் அடைவர்கள். இந்தமூன்றும் தெய்வாதீனத்தால் கிடைக்குமேயொழிய இலகுவிற் கிடைக்கப்பட்டாது. இத்தலவாசமும் அமுதபுஷ்கரணி தீர்த்தஸ்நானமும் அமுதலிங்கதெரிசனமும் செய்து ஆத்மார்த்தபூஜையாக அமுதலிங்கத்தை உன்னி சாஸ்திரபூஜைசெய்து நித்யத்துவம்பெற இயலாதவர்கள் சந்தியாவேளையில் அமுதீசனைத்தெரிசித்தேற்றியேனும் மற்றையதலங்களில் அமர்ந்து தியானித்தேனும் மிருத்யுஞ்செயமூலாறக்ஷரத்தை மனமலையாது ஸ்மரித்தேனும் இம்முன்னூலைப்பூஜித்து வாசித்தேனும் உண்போர் சர்வமங்களத்தையும் பெறுவர்கள். காலையில்எழுந்து அமுதபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய்து பக்தியுடன்புஷ்பங்களையெடுத்து தூபதீபமிட்டு விதிப்படிபூஜித்து த்தியானிப்பவர்களின் அன்பிற்கீடாய் கரும்பும் அதன்இரசமும் பாகும் கண்டாயும் அமுதீசர் உள்ளத்துறைவர். இத்தலத்தில் மூன்றுநாள்வசித்து அமுதபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய்து அபிராமியம்பாளையும் அமுதீசுவ

ரரையும் தெரிசித்தால் சர்வக்ஷேத்திரங்களிலும் வசித்துச் சர்வதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து சர்வமூர்த்திகளையும் தெரிசித்த பலனும் ஞானமுதுண்ணவும் பெறுவர்கள். மூன்றுநாள் அல்லதுமூன்றுகாலம் அத்தலத்தில் வசிக்கவும் அமுதபுஷ்க்கரணியில்தோயவும் அமுதீசுவரனைப்பூஜிக்கத்தெரிசிக்கவும் கூடாவிட்டாலும் பக்தியுடன்ஒருசாயரக்ஷைகாலம் வழுவாது அமுதீசர்ஆலயஞ்சென்று தெரிசித்தால் மேற்கண்டபலனையடைவர்கள். ஜீவன்கட்குஇனிதில்அமுதும் நொடியில் எமதண்டனையும் சிரேஷ்டமாகும் ஞானமுதைப்பெறவும் எமதண்டனையையாற்றிக்கொள்ளவும் பிர்ம்மரந்திரதலத்தில் அமுதீசரை அவர் அருள் அருவுருவத்தியானத்தால் அடைந்தாலன்றியவேறுசெவ்விதத்தாலும் முடியாது. மரணகாலத்தின் தொண்ணூறுநாழிகையளவின்முன் ஒருமாத்திரைப்பொழுதேனும் அமுதீசஉருவத்துடன் அபிராமசுந்தரியையும் ஓர்மையுறஉள்ளத்தமர்த்தி மறவாதாரைக் காலன் அணுகான். அமுதீசர் சக்தியுடன் ரூபாதீதமாகி ஞானானந்தாமுதைப் பொழிவர். அவ்வமுததாரைகளால் பூமத்தியில் ஆயிரம்இதழ்களையுடைய ஆத்மமென்னும் கமலம் தம்முருக்கண்டு மேல்விரிய அவ்வாறே சூக்ஷ்மாதார ஹிருதயகமலமும் ஸ்தூலாதார உந்திக்கமலமும் ஓங்கிக் காரணசகஸ்திரதளமலரில் ஒன்ற விரூபாசமுத்திரமாகிய அமுதீசரின் ஸ்தூலமாகிய சகஸ்திரமலர் கிரியாதாரமாகிய அதிசூக்ஷ்ம அமுததாரையின்வழிஓங்கிஞானமயமு சர்வகாரணபூரணமுற்கெடத்துள்படிந்து காலங்களற்ற

நித்தியமாக்கிநிஷ்க்களமாகும். மரணகாலத்தில் மறவாச்சிந்தையுற்றுப் பேரின்பம்பெறும்படி இந்திரியநழுவுதல் உண்டாவதற்குமுன் திரியாக்ஷரத்தொனிவிளங்கும் சகஸ்திரசங்கங்களால் அபிஷேகம் விதிமுறைசெய்து தெரிசித்து அன்பைவளர்ப்போர் அமுதீசரை மறவாச்சிந்தையுடன் சர்வசித்திகளும் பெறுவர்கள். விந்துநாதம் ஒன்றுதகருவும் ஞானமும் தாயின்றிசிசுவும் யோகமும் தாரகமின்றிச்சடமும் கிரியையும் தன்னியப்பாலடை முதலிய வின்றிதாரகபானமும் சரிதையும் உண்டாகாது கருப்பத்திற்குத்தாயும் சிசுவிற்குத்தாரகமும். தாரகத்திற்கு தன்னியம்பாலடை மிடமுமுதலியதுபோலவே சரிதையாதியாதாரமாகும் ஆனதால்மனோமயமாய் அலையாது அமுதீசபக்தியாய் உஷக்காலத்தில் அமுதபுஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து அமுதகெணபதி அபிராமசுந்தரி வில்வவிருக்ஷம் நந்திகேசுவரர் மஹாவிஷ்ணு நடராஜமூர்த்தி ஸ்கந்தர் பாபஹரேசுவரர் புண்யவர்த்தனர் வில்வநாதர் சக்ஷிணாமூர்த்தி நவசக்திசொரூபமாகியபிஞ்சிலம் தர்மராஜா வீரதாண்டவர் சோரகணேசர் நாதமய அந்தப்புர அபிராமசுந்தரி அமுதகடேசுவரரையுந்தெரிசித்து இருமுறைவலம்வந்து சண்டிகேசுவரதெரிசனஞ்செய்து நந்திகேசுவரர் முன்நமஸ்கரித்து அபிராமசுந்தரியையும் பணிவெண்டு நான்கு அல்லது இரண்டு முறைவலம்வந்து நமஸ்கரித்துத்தன் மனது அறியாதுசெய்த அபராதபிராயச்சித்த நிமித்தம் அகோராஸ்திரமும் பஞ்சாக்ஷரமும் ஜபித்து வெ

ளிவந்தேனும் மேற்கூறியமூர்த்திகளைத்தியானித்து அமுதீசனு பிராமஸ்யாளேயுடன் வீதிவலம்வந்தேனும் எதிர்க்காலேசுவரர் இராமநாதீசுவரர் அனுமந்தேசுவரர் சப்தமங்கைசுவரர் சாம்புவேசுவரர் மிருகண்டேசுவரர் நாகேசுவரர் கைலாசநாதர் பிரமதீசுவரர் அபிமுக்தீசுவரர் சுந்தரவனேசுவரர் பிம்மபுரீசுவரர் சோளீசுவரர் ரெத்னகைடேசுவரர் மார்க்கண்டேயரின்பூர்வ ஆறுஜன்மங்களில் பூஜித்த அஷ்ட பார்க்கலிங்கத்தையும் தினம்தெரிசித்தேனும் அல்லது சிந்தித்தேனும் மார்க்கண்டேயர் தர்ம்மராஜா இவர்களைச்சிந்தித்தால சுபுத்திரவானும் கீர்த்திமானும் மஹாசௌபாக்கியவானுமாய் சந்துஷ்டியுடன் ஜீவன்முத்தனாய் சிவஞானவிதேககைவல்ய மோக்ஷசாம்பிராச்சியப் பேரானந்தத்தை யடைவர்கள். சர்வஜீவன்களினிடத்தும் அறிவிற்சறிவாய் அழியாது அகலாது அறிதற்கரிதாய் நிறைவாய் உள்ளும்புறம்பும் ஆனந்தமயமாயும்நாதசேதியமயமாயும்மந்திரபாவனமயமாயும் அருள்வடிவாயும் அமர்ந்து போதத்தைவிளக்கும் அமுதலிங்கம் அபிராமசுந்தரியோடு விளங்கும் பிர்ம்மரந்திரம்என்கிற வில்வவனமான்மியத்தைக் கேட்பவர்கள் வியாசாதிரிஷிகளால் தெரிந்த இந்தமுன்னூலை வாசிப்பவர்கள் பூஜிப்பவர்கள் கேட்க வாசிக்க அவாவுடையவர்கள் இடையறாது அமுதீசனைச் சிந்தித்து எற்றிமதி கீதிவாய்ந்தகுணவான்களையடுத்து இம்முன்னூலை அவர்களால்சொல்லக் கேட்டு அவ்வாறு துதிப்பவர்கள் திடசரீரமும் தீர்க்காயுசும் புத்திரப்பேறும் இடம்பொருள் ஏ

வலும் சாதுரங்கப்பயிற்சியும் பக்திவிளைவும் மாருமகிழ்வும் பெற்றுச் சர்வவினைகளும் அற்று ஞானப்பிரகாசமோக்ஷசாம பிராப்தியவைபவநித்தியமங்களபேரானந்தவாழ்வை அடைவர்கள். இந்தநூல்மிகமேன்மையுடை இரகசியமுமானதால் உத்தமபக்தர்கட்கன்றி ஏனர்கட்குரைக்கலாகாது தினம்பூஜித்துவாசிப்பவர்கள் சர்வசித்திகளுடன் நித்தியானந்தம்பெறுவர்கள். என்றுசூதபுராணிகர்புகன்று அருணேசரையும் அபிராமசுந்தரியையும் சிந்தித்து மூன்றுமுகூர்த்தகாலம் நிர்பி. தையுற்று ஹரஹரஹரவென்றரற்றி சிரமேற்கைகூப்பி மெய்ப்புளகாங்கிதங்கொள்ள ஆனந்தபாஷ்பம்பொழிய அங்கைகொட்டி மிருத்யுஞ்செயாபாகிகௌரிபதேயென்று அனேகமுறைதுதித்து ஆனந்தத்துடன் நடித்தார். நைமிசாரண்யவாசிகள் அனைவரும் மஹாகுதூகலத்துடன் சப்தசாகரகூரவாரம்போல் சிவஸ்மரணைசெய்து மெய்மயிர்பொடிப்ப விழிநீர்பெருக கரதாளமிட்டு நெடுநேரம் ஆனந்தகீர்த்தம்புரிந்து ஏகாக்கிரசித்தமாய் அபிராமசுந்தரியையும் அமுதலிங்கத்தையும்போற்றிச்சூதபுராணிகரைப் புகழ்ந்தார்கள்.

[illegible]

ஆசிரியர்திருவடியேதுணை.

## சிவமயம்.

திருக்கடவூரில் அபிராமசுந்தரியின் பூரணகிருபைபெற்ற அபி
ராமப்பட்டர் என்கிற பாரதிவம்சத்தில் முன்னோர்களாற்செய்தரு
ளிய பாடல்களில் இப்போதுள்ள பிர்ம்ம ஸ்ரீ நாராயணபாரதிகள்
சர்வத்திரளும் துதிக்கும்படி கிருபைகூர்ந்து வெளியிட்ட

## ஸம்ஹாரமூர்த்தி பதிகம்

சுடர்மணிக்குழையு மலர்க்கரத்துழையுந் தும்பிகளிடைப்
டைதுழையுந், தும்பைமாலிகையும் வம்புவார்சடையுந் தண்டவெ
ண்பிறையுமுந்நூலும், நடனபங்கயமுங் கிரணகங்கணமுமநங்
கைபங்கமர்ந்தசுந்தரமும் நயனமூன்றுடைய கோலமுங்கண்டோர்
நமனையுங்காணவல்லர்களோ, கொடிபலதொடுத்த நெடியமாமணி
பொற் கோபுரம்பாரிடந்தொடுத்துக் கொழுந்துவிட்டெழுந்து வா
னிலவெறிப்பக் கொண்டல்வந்துதவியேநிலவும், கடிமலர்த்தடமுஞ்
சுருதியோதிடமுங் கன்னிமாமாடமுஞ்சூழ்ந்த கனவளஞ்சிறந்த
கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (1)

தண்டமுங்கபிறுஞ் சூலமும்புனைந்த தழலுமிழ்கண்களும்வளைத்
தந்தமுஞ்சிவந்தகுஞ்சியுங்கரிய சைலமேயனையமேனியுமாய, அண்
டயசமனைக் கண்டுளமயங்கி யறிவழிந்திருவிழிகளும்பஞ் சடைந்து
வாய்புலர்ந்து மெய்ம்மறந்திடும்போ தம்பிகைதன்னுடனொருவாய்
வண்டுகள்முரன்று முகைமுறுக்குடைந்து மதுமழைபொழிந்துநாத
னோர்ந்து மடல்விரிந்தலர்ந்து பொன்னிறம்பொதிந்த மண்டலங்கொ
ன்றைவார்சடையாய், கண்டவருளமுங் கண்ணுமேகவருங் கனதன
வனிதையர்நெருங்குங் கனவளஞ்சிறந்த கடவையம்பதியாய் கால
னைக்காய்ந்ததற்பரனே. (2)

தனபதிநிகராய்ச் செல்வமேபெறினுஞ் சதமகன்போகமே பெறினுந் தாரணிசுமந்த சேடனே நிகராய்த் தசகதோரறிவெலாம்பெறினும், அனகனேநிகரா யழகுதாம்பெறினும் அருமறைக்கிழவனானாலு மையநின் கடைக்கண் ணருட்டவறியபே ரங்கையோடேந்தி நின்றுழல்வார், பனகக்கணத்தா யளப்பருங்குணத்தாய் பார்வதி வாமபாகத்தாய் பவளநன்னிறத்தாய் தவளநீறணிதத்தாய் பரிபுரமலம்புபொற்பதத்தாய், கனகமுந்துகிலுந் தாளமும்வயிரக் கலன்களும் நிலந்தொறுமிடைந்த கனவளஞ்சிறந்த கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (3)

தந்தையைமனையைப் பொக்கலைத்துணையைத் தாயையென்குதலைவாய்ச்சேயை தனத்தையெளவனத்தை யின்பமோகத்தைத் தையனல்லான்பெறுந்திறத்தை, யந்தியும்பகலும் விரும்பிமெய்சோம்பி யாழ்கடற்படுதிரும்பாவி யலக்கழிந்தேனைப் புலப்படத்திருத்தி யாட்கொளநினைந்திலாயன்றே, சிந்தைநைந்துருக வின்னிசைபடித்துச் சிலம்பொலியாரவேநடித்துச் செழும்புனற்சடைமேற் கங்கையை முடித்துத் திருவெணீறுடலெலாந்திமிர்ந்து, கந்தைசோவணந்தோற் பொக்கணந்தாங்கிக் கபாலமொன்றேந்திநின்றவனே கனவளஞ்சிறந்த கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (4)

வஞ்சகக்கிணறாய்த் துன்பவாரிதியாய்வறுமையென்பதற்கிருப்பிடமாய் மறம்பொதிகுடிலாயசத்தியவிதையாய் மயல்வினைகழனியாய்ப்பாவ, சஞ்சிதமாயசருக்கரைப்புரமாய்ச் சங்கடநோய்களஞ்சியமாய்த் தலைதுமொழித் திரியுமென்றனக்குன் றண்ணருள்கிடைக்குமோவறியேன், நஞ்சமும்பகுவாய்ச்சுடிகை முள்ளெயிற்று நகைமணிப்பாந்தளோடேய்ந்த நளிரிளம்பிறையு மிளிர்செழுஞ்சடையாய் நங்கையர்முழுமதிமுகத்தைக், கஞ்சமென்மலர்கள் கண்டுவாயொ

ங்குங் கந்தமூர்த்தியதடஞ்சூழ்ந்தகனவளஞ்சிறந்த கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (5)

பிரமனுஞ்சலிக்கத் தாயர்சஞ்சலிக்கப் பேதையர்கண்டசங்கதிக்கப் பிணிகளும்பகைக்க மூப்புவர்தலைக்கப் பின்றொடர்ந்தாசைசென்றிழுக்கத், தருமனும்வெறுக்க நரசமூமொறுக்கத் தாரணிசுமந்துநொந்திளைக்கச்சகடெனச்சுழலுங் கறங்கெனக்கொடியசடலமேயெடுக்கானிலக்கோ, குறுமணியமைசமும் புதுமலர்த்தடத்திற் கோட்டிளமேமாட்டுமாமேதிக் குலங்கள்போய்ப்படிந்து நலங்கிளர்செழுந்தேன் குவளைமென்றொழுக்கியதோற்றங், கரியமாகடலிற் புகுந்துநீருருந்துங் காளமேகங்களோவெனலாய்க் கனவளஞ்சிறந்த கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (6)

செயல்பணிவிடையாய் செப்பலைந்தெழுத்தாய்த் திரிதலேவலம்புரிதலுமாய் சிந்தையின்னினைவே தியானமாயுண்டு தெவிட்டனைவேதனைச்சிறைப்பாய்த், துயிறல்வந்தனையாய்த் திருவுளத்துவந்துதுள்ளுவெண்விடையின்மேலேறித தொண்டரும் விசும்பிலண்டருங்காணத் தோகையோடெனக்குவந்தருள்வாய், வயல்வரம்புறைந்தநடைச்சியர்முகத்தைமதியமென்றதிசயமிகுந்துவரும்பகலிடத்துமிரவினுங்குவளை வாயொடுங்காமலேவிளங்கும!! கயனெடுந்தடமுங்கமுகமூங்கமுகைக்காட்டியகன்னலும்பொதிந்த! கனவளஞ்சிறந்தகடவைபம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. !! (7)

மறுகுவெஞ்சினத்தர் தெறுமவகுணத்தர் வஞ்சகம்பொதிந்தநெஞ்சகத்தர்! வழக்கமொன்றில்லாப் பிழக்கருமூடர் மதியிலாப்பதிதர்காலனுங்கிப்!! பொறுமையிற்றருமனெறியினிற்சேடன் புலமையிற்குரியமுனிவன்! புரந்தரனெனவு திறந்தாமடசழ்ந்து பொருதவ

ம்போக்கினனன்றே!! வெறிமலர்ப்பிரசஞ்சொரிந்துவண்டினங்கள்மி டைந்துமாமுகிலினைக்கிழித்த! மேலிடந்திரளி பசும்புரவிகளாய் விளங்கியே விண்டலமுகட்டைக்!! கறுவினின்றோங்கிச் செறியுமைந்தருக்கள் கற்பகத்தருவினையொப்பாய்க் கனவளஞ்சிறந்த கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (8)

நெஞ்சகங்குழைந்து பணிவிடைக்கிசைந்து நீறொடுகண்டிகை புனைந்து! நிலவுபொற்கோயி லதைவலம்புரிந்து நெகிழுமென்றன் மலரெடுத்த!! வஞ்சமாமயக்கி மயங்குமைம்புலனை மாற்றலர்வலிமையைக் கவர்ந்துன்!! மலர்ப்பதத்திருத்தி யலக்கணைத்துரந்தி மகிமிகு வாழ்வளித்திடும்மாஞ்!! சுஞ்சகவெனுநற் றாயமூன்றெழுத்தைச் சுகிர்தமாய்க்கொண்டருச்சனைசெய் தொண்டர்களுறவைக்கொண்டுனைப்பணியச் சுணக்கறுமெனக்கருள்புரிவாய், கஞ்சமென்மலர்மிதஞ்சுகம்பசக்கக்கார்மயிலோரமாய்கடிகருங்கனவளஞ்சிறந்தகடவையம்பதியாய்காலனைக் காய்ந்ததற்பரனே. (9)

மைக்கயல்விழியால் மயக்கியுள்ளுருக்கி மஞ்சளால்முகத்தினை மினுக்கி, மணிநகைபெருக்கி யானையுண்டாக்கி வளரிளமுலைத்துகிலிறுக்கி, பக்கல்வந்தமர்ந்துமென்மொழிபகர்ந்து பரவசம்போலமேல்விழுந்து, படிறுளமுணர்ந்தே யசத்தியமுரைத்துப் பறித்திடக்குறித்த பாவையர்க்காய்த், துக்கசாகரத்தி லழுந்திநாடோறும் தோதகப்பட்டபாதகனைத், துய்யசெங்கமலச் செய்யதாளிணைக்கே தொண்டுகொண்டாற் குறையுறுமோ, கைச்சழங்காடுந் திறத்தினைநிகராய்க் கமலமென்மலர் மிசையறுகாற் களிப்பரிசுழலுங் கடவையம்பதியாய் காலனைக்காய்ந்ததற்பரனே. (10)

சம்மார மூர்த்தி பதிகமுற்றும்.

னிற்றுபதேசமுட்கொண்டு, மனந்தனைத்தள்ளி யெனதுர
னெனுமான மில்லாமலே துரத்தி யிந்திரியவாயில்களை யிறுக
ப் புதைத்துநெஞ் சிருளறவிளக்கேற்றியே, வானந்தமான விழி
யன்னமேயுன்னை யென் மனத்தாமரைப்போதிலே வைத்து
வேறேகவலையற்றுமேலுற்றபர வசமாகியழியாததோர், ஆ
னந்தவாரிதியி லாழ்கின்றதென்றுகா ணுகிகடவூரில்வாழ்வே
யமுதீசரொருபாக மகலாதசுகபாணியருள்வாமி யபிராமி
யே .(5)

நீடுலகங்களுக் காதாரமாய்நின்று நித்தமாய்முத்திவடி
வாய் நியமமுடன்முப்பத் திரண்டறம்வளர்க்கின்ற நீமனைவி
யாயிருந்தும், வீடுவீடுதோறு மோடிப்புகுந்துகால வேசற்
றுமெல்ச்சையும்போய் வெண்டுகிலரைக்கணிய விதியற்றுநிர்
வாணா வோடுமுங்கொண்டு கைக்கேகோர், ஓடோதிநாடெங்கு
முன்னந்தளர்ந்துநின் றனையத்தனுசியம்மா வுன்கணவனெங்
கெங்கு மையம்புகுந்தேங்கி யுழல்கின்றதேதுசொல்வாய், ஆ
டுகொடிமாட மிசைமாதர்விளையாடிவரு மாதிக—வூரில்வாழ
வே யமுதீச ரொருபாக மகலாத சுகபாணி யருள்வாமி யபி
ராமியே. (6)

பல்குஞ்சரந்தோட் டெறும்புகடையானதொரு பல்லுயி
ர்க்குங்கல்லிடைப் பட்டதேரைக்குமன் றற்பவித்திடு கரு
ப்பந்தனிற்சீவனுக்கும், மல்குஞ்சராசரப் பொருளுக்குமிமை

யாத வானவர்குழாத்தினுக்கும் மற்றுமொரு மூவர்க்கு மி
யாவர்க்குமவரவர் மனச்சலிப்பில்லாமலே, நல்குந்தொழிற்பெ
ருமை யுண்டாயிருந்துமிகு நவநிதியுனக்கிருந்தும் நானொருவ
ன்வறுமையிற் சிறியனானலெனைப்புரக்கை கடனல்லவோ, அ
ல்கலந்தும்பர்நா டளவெடுக்குஞ்சோலை யாதிகடவூரில்வாழ்வே
யமுதீச ரொருபாக மகலாத சுகபாணி யருள்வாமி யபிரா
மியே. (7)

வாடாம லுயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர வருண்ம
ழைபொழிந்தின்ப வாரிதியிலேநின்ன தன்பெனுஞ்சிற
கால் வருந்தாமலே யணைத்துக், கோடாமல்வளர் குஞ்சரக்
தொட்டெறும்புநடை கொண்டகருவாணஜீவ சோடிகள்த
னக்குப்பொசிக்கும்பொசிப்பினைக் குறையாமலேகொடுத்து,
நீடாழியுலகங்களியாவையுந் திருவுந்தி நெட்டுதரிலே தரிக்கும்
நின்னையகிலங்களுக் கன்னையென் றோதாமல் நீலியென் றோது
வாரோ, ஆரணான்மறையின் வேள்வியா லோங்குபுகழாதி
கடவூரில்வாழ்வே யமுதீச ரொருபாக மகலாத சுகபாணி ய
ருள்வாமி யபிராமியே. (8)

மறிகடல்களேழையுந் திகிரியொருநான்கையு மாதிரக்க
ரியெட்டையு மாகமானதையு மாமேருவானதையும் மா
ர்மமானதையுமோர், பொறியரவுதாங்கிவரு புவனமீரே
ழையும் புத்தேளிர்கூட்டத்தையும் பூமகளையுங்கிரிராயனை

ருமறையினிற் புலியாடையுடையானையு, முறைமுறைகளாயி ன்ற முதிகளாய்ப்பழைமை தலை முறைகள் தெரியாதநின்னை மூவுலகிலுள்ளவர்கள் வாலையென்றறியாமல்மொழிகின்றதே துசொல்வாய், யறிவுடையபேர்மனத் தானந்தவாரியே யாதிக டவூரில்வாழ்வேயமுதீச, ரொருபாக மகலாத சுகபாணியரு ள்வாமியபிராமியே. (9)

மகரவார்குழல்மே லடர்ந்துகுமிழ்மீதினில் மறைந்துவா ளைத்துரந்துமைக்கயலைவென்றுநின் செக்கமலவிழியருள்வர மபெற்றபேர்களன்றோ, செகமுழுதுமொற்றைத் தனிக்கு டைகவித்துமேற் சிங்காசனத்திலுற்றுச் செங்கோலுமனுநீ தி முறைமையும்பெற்றுமிகு திகிரியுலகாண்டுபின்பு, புகழ்மு யதைராவதப்பாகராகிநிறை புத்தேளிர்வந்துபோற்றியபோ கந்தவேந்திர னெனப்புவியினிற் புலோமிசையொடுஞ்சு கிப்பார், அகரமுதலாகிவளர் ஞானசொரூபியே யாதிகடவூரில வாழ்வே யமுதீச ரொருபாக மகலாத சுகபாணி யருள்வாமிய பிராமியே. (10)

வெ.

தூயதமிழ்ப்பாமாலை சூட்டுதற்குமும்மதனல் வாயைங் கரன்றுள் வழுத்துவாம் நேயர்நிதம் எண்ணும்புகழ்க்கடவூ ரெ ங்களபிராமவல்லி நண்ணும்பொற்பாதத்தினன்கு (11)

சங்கையொடு துப்பையு மணிந்தவர்வியக்குங் கலாமதி டைதிகழ் வதனமுங் கருணைபொழிவிழிகளும் விண்முகிலைக்

ள்வெளிறெனக் காட்டியகருங்கூந்தலும், சங்கையில்லாதொ
ளிரு மாங்கல்யதாரணமாக தகதகமணிமிடறுமிக்கச் சதுர்பெரு
குதுங்கபாசாங்குசமிலங்குகர தலமுமவிரலிலணியுமுரவும் பு
ங்கவர்க்கமுதருளுமர்த்தகுஜங்களும் பொலியுமவமணிநூபுரம்
பூண்டசெஞ்சேவடியுமிவ்வடியனேனிதம் போற்றியெனவா
ழ்த்தவிடைமேல், மங்களமிகுநசின்பதியிலெழுந்தருளவந்தருள
செய்வளர்திருக்கடவூரில் வாழ் வாமிசுபநேமிபுகழ்நாமிசிவ
சாமிமகிழ் வாமி யபிராமியுமையே. (1)

சந்திரசடாதரி முகுந்தசோதரி துங்க சலசலோசனமா
தரி சப்பிரமபயோதரி சுமங்கலி சுலக்ஷணி சாற்றருங்கருணா
கரி, ஆநதரி வாராகி சாம்பவி யமரசோதரி யமலை ஜகஜால சூ
த்ரி அகிலாத்மகாரணி விநோதஜயநாரணி யகண்டசின்மயபூ
ரணி, சுந்தரி நிரந்தரி துரந்தரி வரையராஜ சுகுமாரி கௌ
மாரியுத் துங்ககல்யாணி புஷ்பாஸ்திராயபுஜபாணி தொண்
டர்கட்கருள் சர்வாணி, வந்தரிமலர்ப்பிரம ஞானந்துதி வேத
வொலி வளர்திருக்கடவூரில் வாழ் வாமிசுபநேமி புகழ்நாமி
சிவசாமி மகிழ்வாமி யபிராமி யுமையே. (2)

வாசமலர் மருவளக பாரமுந் தண்கிரண மதிமுகமுமை
யில் விழிகளும் வள்ளநிகர் முலையுமன நடையு நகைமொ
ழிகளும் வளமுடன்கண்டு மின்னார், பாசபந்தத்திடை மன
ங்கலங்கித்தினம் பலவழியுமெண்ணி யெண்ணிப் பழியாவு

மின்னதென் றறியாமல் மாயாப்ரபஞ்சவாழ் வுண்மையென்
றே, ஆசைமேலிட்டு வீணாக நாய்போற் றிரிந்தலைவதல்லாம
லொன்றனம்புயப்போதெனுஞ் செம்பதந்துதியாத அசடன்
மேற்கருணை வருமோ, மாசிலாதோங்கிய குணாகரிபவானி
சீர் வளர்திருக்கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ் நாமிசிவ
சாமி மகிழ் வாமியபிராமி யுமையே, (3)

நன்றென்று தீதென்று நவிலுமிரண்டின் முறையின்ற
தேயுலகி லுள்ளோர் நாடுவார் முசுயமாயடியேனு மவ்விதம் நா
டினேனடினேனும், இன்றென்றுசொல்லாமல நினது திருவு
ள்ளமிதங்கியருள்செய்குவாயே லேழையே னுய்குவேன்
மெய்யான மொழியிதனை யறியாததுண்டோ, குன்ற
செல்லாமுறைந்தென்றுமன்பர்க்கருள் குமார தேவசேனையளி
த்த குமரிமாகத வருணிவியலிபைரவி கருணை குலவுகிரிராஜபு
த்ரி, மன்றல்மிகுநந்தனவனங்கள்சிறையளி முரல்வளர்திருக்
கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ்நாமிசிவசாமிமகிழ்வாமிய
பிராமியுமையே, (4)

ஒருநாளிரண்டுநாளல்லநா, னுலகத்துதித்தவின்னாள்
வரைக்கு, மொழியாதகவலையாற்றீராதவின்னல்கொண்டுள்
ளந்தளர்ந்துமிகவும், அருநாணியற்றிட்ட விற்போலிருக்குமிவ்
வடிமைமீதிற் கருணைகூர்ந் தஞ்சேலெனச்சொல்லி யாதரிப்
பவர்களுனையன்றியிலை யுண்மையாக, இருநாழிகைப்போது

ய வேண்டாது சிறிதிட்டு இவ்வகிலபுவனத்தையு மியற்றிய
ருளுந்திறங் கொண்டநீ யேழையே னினைவல் தீர்த்தருளல
ரிதோ, வருநாவலூரர் முதலோர்பரவு மினியபுகழ் வளர் திரு
க்கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ் நாமிசிவசாமிமகிழ்வாமிய
பிராமியுமையே (5)

எண்ணிக்கையில்லாததுன்பங்கள்மென்மேலு மேலிட்
டொறுக்கவந்தோ எவ்விதமுளஞ்சகித்துய்குவே னிப்பொ
ழு தெடுத்திட்டஜென்மமிதனில், நண்ணியெள்ளளவுசுகமான
தொருநாளினும் நானனுபவித்ததில்லை நாடெலாமறியுமிது
கேட்பதேனின்னுளமு நன்றாயறிந்திருக்கும், புண்ணியம்
பூர்வஜெனனத்தினிற்செய்யாத புலையனெனுலுநின் பூரண
கடாக்ஷவீக்ஷண்ணியமுஞ்செய்தெனது புன்மையையகற்றிட்ரு
ள்வாய், மண்ணவர்கள்விண்ணவர்கணிதந்தொழும் பரவுமிசை
வளர்திருக்கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ்நாமிசிவசாமிமகி
ழ்வாமியபிராமியுமையே (6)

தெரிந்தோவலாதுதெரியாமலோவிவ்வடிமை செய்திட்
டபிழையிருந்தாற் சினங்கொண்ட தோர்கணக்காகவையா
துனின் றிருவுளமிரங்கிமிகவும், பரிந்துவந்தினியெனும்பாழ்
வினையிலாழ்ந்தினற் படாதுநல்வரமளித்துப் பாதுகாத்த
ருள்செய்யவேண்டுமெண்டாண்டவுயிர் பரிவுடனளித்தமுதல்
வி புரந்தரன்போதன்மாதவனுகியோர்கள்துதி புரியும்பதா

ம்புயமலர்ப் புகலிபுராந்தகிபுரந்தரிபுராதனி புராணிதிருபு
வனேசுவரி மருந்தினு நயந்தசொற்பைங்கிளிவராகியெழில வ
ளர்திருக்கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ் நாமிசிவசாமிம
கிழ்வாமியபிராமியுமையே (7)

வஞ்சகக்கொடியோர்களநட்பவேண்டாமலு மருநதி
னுக்காவேண்டினு மறந்துமோர்பொய்மொழி சொலாமலுந்தீ
மையாம் வழியினிற்செல்லாமலும், விஞ்சுநெஞ்சதனிற்
பொறாமைதரியாமலுமவிணவாபபுரியாமலு மிக்கபெரியோ
ர்கள்சொலுமவர்தஸைதள்ளாமலும வெகுளியவைகொள்
ளாமலுந, தஞ்சமெனநினதுபையாதமலர்துதிக்கிடத் தமிய
னுக்கருள்புரிநது சர்வகாலமுமெனைககாத்தருளவேண்டி
னேன் சலககயல்கள்விழியயபனோய, வஞ்சியர்செவ்வாய்கிரு
வாவியாம்பன்மலரும் வளர்திருக்கடவூரில்வாழ் வாமிசுப
நேமிபுகழ்நாமிசிவசாமிமகிழ்வாமியபிராமியுமையே, (8)

எனதின்னவின்னபடி யென்றுவேறொருவர்க்கிசைத்தி
டவுமவர்கள்கேட்டிவ்வின்னல்தீர்த்துள்ளதநிதங்கிரன்மைகள்
செயவு மெள்ளவுமுடியாதுகின், னுனதாருவுங்கடைசகண்
ணருட்சிறிதுசெயி னுதவாதநான் மணச்சஞ்சமோங்குமாற்று
யர்சொர்ன்னமலையாத மதுவன்றி புயரகலாவனக்கஙளக்,கண
முடனளித்துமுப்பத்திரண்டறமுங் கவினபெறச்செய்யு நின்
னைக் கருதுநலலடியவர்க்கெளிவந்துகதியினிற் கார்த்திரசஷித்

நீர்ந்து, வனசமிகு நின்பாத நம்பினேன் வந்தருள்செய் வாய் திருக்கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ் நாமிசிவ சாமிம கிழ்வாமியபிராமியுமையே. (9)

கருநீலவடிவமாம் மாதேவியுங் கண்டகனகண்டவெம்பாச முங் கைக்கொண்டு கண்டபாகாலனு முனைதிரக்கமார்க்கண்ட ன்வெருண்டு நோக்கி, கருநீலகண்டனுறு திருப்பதியையுள்ள த்திலன்புகொண்டர்ச்சனைசெய வரனுமவிலிங்கபிளப்பதி ன்றோன்றி யவிர்செய்சூலத்தினூன்றிப், பெருநீலமலை யெனக் கிடந்திலனைவென்விழப் பிறங்குதாளாலுதைத்துப் பே சுமுனிமைந்தனுக் கருள்செய்ததனை கரியபேரருளின்வண்ண மலவோ, வருநீலமடமாதர்விழியென்னமலர்வாவிவளர் திருக் கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ் நாமிசிவ சாமிமகிழ்வாமியபி ராமியுமையே. (10)

சகலசெல்வங்களுந்தருமிமையகிரிராஜ தனயைமாதேவி நின்னைச் சத்யமாய்நித்ய முள்ளத்திற்றுதிக்குமுத்தமருக்கிர ங்கி மிகவும் அகிலமதில்நோயின்மைகல்வி தனதானிய மழகு புகழ்பெருமையிளமை யறிவுசந்தானம்வலிதுணிவுவாழ்நாள் வெற்றியாகுநல்லூழ்நுகர்ச்சி, தொகைதரும்பதினாறுபேறு ந்தந்தருட் கடாக்ஷவாழ்வளிப்பாய், சுகிர்தகுணசாலி பரி பாலியனுகூலிதிரிசூலிமங்களவிசாலி, மகவுநானீதாயளிக்கொ ணாதோமகிமை வளர்திருக்கடவூரில்வாழ் வாமிசுபநேமிபுகழ் நாமிசிவசாமிமகிழ்வாமியபிராமியுமையே. (11)

## சம்மார மூர்த்தி பதிகம்.

அந்தரத்தமரர் மந்தரத்தையொலியலைகடற்றலை நிறுத்திநின் றழலுறக்கடைய வதனிடத்துடையவமுதமுற்றடையுமண்ணலரா, கந்தரத்திடை கறுப்பினர் கௌரி கணகளித்திடமுறப்பினர் காலகாலகடவூரர்கோலமது கண்டுதண்டனிடவல்லபேர், பங்கயாசையவமான சிந்தனை பழிப்பசத்தியமனைப்பயப்படிறுவஞ்சனை யனர்த்தமால்கொடுமை பாபமீறுகொலை சஞ்சலந் தொந்தபோகமவ்வேகமாசுசதி துயரமுடமுமூவைரநீள் தோதகங்குடிலமைகுணந்தவறுசோகமுந்தவிருவார்களே, (1)

வெங்கபத்துரியர் பங்கயர்க்கரியர் வேதவம்பரியர்நீதிலர் வீரர்விஞ்சுகர்விநோதர்கஞ்சுகர் வெற்றிமால்மகிழுமத்தரெர், கங்கைத்தர்மிகு வெங்கணைத்தலைவர் களத்திசைந்தபொருவீர்த்தனர் காலகாலகடவூரர்கோலமது கண்டுதண்டனிடவல்லபேர், திங்கள்வெண்குடைகவிப்பமுப்முரசு சென்றுசென்றெதிரொலிப்பவெண் டிசைபரக்குமமர் கைமுகிட்டவிகலெவ்வருந்திறையளப்பமேல், மங்கைமார்கௌரிசாலசெப்பவெடுமகரதோரண வளப்பபாய் மத்தயானைமிசை வெற்றியாளரான வையகந்தனி லிருப்பரே, (2)

திருகுவெள்ளெயிறு வரிநெடுங்கயிறு செய்யகுஞ்சியொடு நஞ்செனச் சீறுகோபமுடனேறுச்சவிழி தெறுமிடிச்சுரல் முழக்கியே, கருமலைக்குநிக ரெருமையிற்பெரிய காலமலைககுவடு போல்வருங் காலகாலர்கடவூரர்கோலமது கண்டுகண்டனிடவல்லவர், பொருமழுப்படையிலங்குசெஞ்சடைபொருந்துவெள்விடைதிருந்துவெண் பூதியாரமொரு தோகைபாமழல் பொங்குநாகமணி கங்கணம, பெருகுகங்கைநதி மூழுவிளங்குவெதி பிஞ்சுமாமதி கொழுந்தழற் பெய்திபெற்றிபெறுமொற்றைநெற்றிவிழி பெற்றிருபப ரடையாளமே, (௧)

பெண்ணிடம் பரிபுரத்தினு ரொலி பிறங்கிடும் பரிபுரத்தினர் பிறைமுடிக்கு ளணிகங்கையார்மறைப் பொருளைவைத்துளணிகங்கையார், கண்ணிரைந்தகொரு மூன்றினருரிய கைலைதாழ நகமூன்றினர் காலகாலகடவூரர் கோலமது கண்டுதண்டனிடவல்லவர், மண்ணளந்த சரணர்க்குமென்முளரி மாலையாபரணருக்குமோர் வச்சிரத்திறைவருகு வெண்டிகிரி மாத்திரத்துறைவருக்குமே, விண்ணவர்கமிகுபண்ணவர்க்கு முயர் வித்தகர்க்கு மதியொத்துவாழ்மெய்த்தவத்து நிலைபெற்றவர்க்கு மலர்மேலிருப்பரடையாளமே. (௨)

உரககுண்டலர் நெருங்கிவிண்டல ருறைந்தவண்டுமூர. கொன்றையார் உத்தரீகமல ரொப்பிலாதநிலை யொத்த ெ

ம்பியலைமங்கையார், கரகபாலர்திரி சூலர் நீலமணி கண்டர்
புண்டரிகவாடையார் காலகால கடவூரர்கோலமது கண்டு
தண்டனிடவல்லபேர், விரகமானதி லுணங்கிடாருடல் வேத
னைப் படவறிகிலார் வெகுளியானது செறிந்திலாருலகை
வேண்டியினையை வணங்கிடார், நாகமென்பதினி லெய்திடார்
கரும நல்லதல்லதவர் செய்திடார் மேனிருந்த திசைகண்டிடாரி
ருதினாளுமேபகுதியாவரே. (5)

தலையிருக்குமொரு வலிகனுக்குமது சூதனுக்குமனு
நீதிசேர் தொல்புவிக்கரசனுக்கு மிக்க தமிழ் சொல்லுமோர்
புலவனுக்குமெய்க், கலையனுக்குமதி நடுவனுக்குமுனிகாத
லர்க்கு மினிதருள்செயுங் காலகால கடவூரர்மேவிவளர் கை
லை போலவரு மயிலனார், முலையரும்பிவருபனசமே யினிய
மொழியுமின்ப முறுபனசமே முதலைதயொத்தமணி மூர
லைவணிகள் மொய்த்ததோள்களிலமைவரலை, சிலையிரண்டனைய
புருவமேயிரதி தேவியொத்தவளுருவமே திருமிடற்ற
ழகு சங்கமேயமுத சிந்துமாணடி டசங்சமே. (6)

விதிசிரத்தைய ரிபழியரஞ்சுகனை வேளுரத்தைகெயரி வி
ழியர்மா மேருவிற் கையினர் நேர்கடுக்கையினர் வேள்விபிற்
பணியும் வள்ளலார், கதிரவன்றனைது தந்தமம்புவியி லுதிர
வன்பொடு புடைத்திடுங் காலகாலகடவூரர் மேவிவளர் லைக
லைபோலவரு மயிலனார், மதியினஞ் சமுமிருக்குமோகரிய ம

ஞ்சுமாலிகை கரிக்குமோ வாளராவழுத மூறுமோ கனக வரையிலே புளகமீறுமோ, எதிர்கலை படலதிருத்துமோ விடையி லெகுமே கலைபொருந்துமோ. (7)

இகலமிந்த வருபகைமையினர் புரமெரித்திடுங் கொடிய பகைமையினர் எரிமழுப்படை வலத்தினர் முடியிமேலது ப்பியா லத்தினர், சகனமண்டல முழுநவி சின்றுவிக் காதெறுதத தொருதாணுவார் காலகால கடவூர்மேவிவளர் கைலைபோ லவருமயிலனர், முகபதிக வைபுகலுவார் ஞானிகள் பொய்த்து முத்துவமை நவலுவார் முலையினுக்கு வமைபகரு வாரினி யமொழியினுக்கு வமைமொழிகுவார், நகையினுக்கு வமை கூறுவார் சரணடையினுக்கு வமைபேசுவார் நபமதிநிள மை சொல்லுவாரெவருநீ வறிந்தவர்களில்லையே. (3)

சிறைபனத்தனைறை பெழுவனத்தமிவர் இணைமனத்தி டையியானமே செய்துதங்கள்வயமெய்து தற்கரிய தேவ தேவர்பரிபூரணர் கறைமிடற்றலைவரலைகடற் பரியர்கதிதருங்கு ரவை வெருவிலார் காலகாலகடவூரர்கோலமது கண்டுகைதொ ழுதுகொண்டு காணெறிதிரைப்பறை முழுகக்கியங்கை துணிவி க்கு வார்சிலைவளைக்கி நீ விருதலைக்கு மளிநாணிறுக்கிமுனை யூர்ந்து மீனைரணையமுழுங்கி வேள்,வெறிமலர்க்கணை யெடுத்த துங்கொடிய வேகமாயதுதொடுத்தது மெய்யினிற் படவிடுத் தனுஞ் செவியிலவிண்டு விண்டு சொலவேணுமே. (9)

குயில்மொழிப்புணர் முலைக்கருங்கண்ணொரு கோதைபாதி
புறை சோதியார் கொக்கரித்து வருதக்கனாருயிர் குறை,
தெழுந்திடுமறத்தினார், கைலைநாதர் கணநாதர்பூதியணிநா
யகமுமாயினோர் காலகாலகடவூரர்கோலயது கண்டுகை
தொழுது வண்டுகாள், அமிலினுங்கொடிய வம்பினான்மதுர
பாரவாரமிசைமேவிநா லந்தரந்தனிலசைந்து நின்றடருமம
ம்மிசுகொடியதீயினால் துயில்துறந்து மெய்மறந்து வாடி மிக
சோக பாகபிறந்துளத் தோதகப்படவு நாணகப்படுதல் சொல்
லுயிர்பதனைவெல்லவே. (10)

## கள்ள விநாயகர் பதிகம்.

பங்கயத்தாளு மொருநான்குதோளு மபடாமுகமும்,
திங்களின் கோடும் வளர்மோதகத்துடன் செங்கையிலே, அங்
சசயாசமு மாகிவந்தென்றனை யாண்டருள்வாய், வெங்கய
மேசடவூர் வாழுங்கள்ளவிநாயகனே. (1)

உண்ணும்பொழுது முறங்கும்பொழுது மொருதொழி
லப்பண்ணும்பொழுதும் பகரும்பொழுது நின்பாதத்திலே,
ண்ணுங்கருத்துத் தமியேனுக் கென்றைக்குநல்குவையே
விண்ணும்புகழ்கடவூர் வாழுங் கள்ளவிநாயகனே. (2

தொன்றையாகினு மெண்ணியபோதுன னிணைக்கமல
, பாதம்பரவிய பேர்கட்கலாது பலித்திடுமோ, பேதந்தெரி
மறையோர்தமது பெருந்தெருவில், வேதம்பயில் கடவூ
ாழுங்கள்ளவிநாயகனே. (3

அரனென்பவனையும் அம்புயந்தோனையும் ஆழிசங்கு, க
னென்பவனையுங் கைதொழவேண்டுவான் கால்தொழுவார்,
இரவும்பகலு மியலிசைநாடக மென்றுநன்றால் விரவுந்தமிழ்
கடவூர்வாழுங்கள்ளவிநாயகனே. (4)

துதியேனெனினுந் தொழுகேனெனினும் முற்றுண்ட
ர்தலை மதியேனெனினும் வணங்கேனெனினும் வலியவந்து,
இபேதரும்வழி காட்டிடுவாய் நின்கருணையினால். விதிமேபு
ரழ் கடவூர்வாழுங் கள்ளவிநாயகனே. (5)

நாகந் துரகம் பலபணியாடை நவநிதிகள் பாகஞ்சுமெ
ன்மொழியாள்போகமும் உன்றன் பாதத்திலே, மோகந்திக
ழப்பணிந்தோர்க்கல்லாமல் முயன்றிடுமோ மேகம்பயில் கட
வூர் வாழுங்கள்ளவிநாயகனே. (6)

இளங்குஞ்சரச்செழுங் கன்றெனச்சொலி யேத்திந
ன்றாய், உளங்கசிந்தங்கையாற் குட்டிக்கொண்டோர்க்குக்கு
றையுமுண்டோ வளங்கொண்டமூவர் தலைமதித்தே தமிழ்
மாலைகொண்டு, விளங்கும் புகழ் கடவூர்வாழுங் கள்ளவிநாய
கனே. (7)

கண்டாயுதத்தையுஞ் சூலாயுதத்தையுந் தாங்கியென்னைக், கண்
ணாவிகொள்ள நமனை வரும்வேளையிற் காத்திடுவாய், வண்டா

நபாயஞ் செழுமைகசசோலை வளப்பமுடன், விண்டாவிய மடவூர்வாழுங் கள்ளவிநாயகனே. (8)

பூவருந்தங்கள் தொழிமேலபுரிந்திட முந்திமுந்தித் தாவருமமெய்ற்பிலை தாங்கியுன்ஞானத்தைச் சாற்றிலர், தேவரும்போற்றியமுதவே யுனையன்றித் தெய்வமுண்டோ மேவருஞ்சீர் மடவூர்வாழுங் கள்ளவிநாயகனே (9)

மைப்பொருவாரணை மாமுகனீதிகளிலை வாய்ந்ததாதிக் கப்பொருளெயென்று கைதொழுவோர்க்குதன் கருணைவைப்பா ய், அப்பணியுமருத்திசாமசிற பிராமியர்மா மெய்ப்பொருளோ மடவூர்வாழுங் கள்ளவிநாயகனே. (10)